# தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை

நான்காம் தொகுதி

பதிப்பாசிரியர்
த.கோ.பரமசிவம்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

# தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை

## நான்காம் தொகுதி

( 1501 முதல் 2000 நூல்கள் வரை )


பதிப்பாசிரியர்

**முனைவர் த. கோ. பரமசிவம்**

தலைவர், ஓலைச்சுவடித்துறை

தொகுப்பாசிரியர்

**முனைவர் வே. இரா. மாதவன்**

**புலவர் ப. வெ. நாகராசன்**



**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு: 79–4 ISBN 81–7090-032-1

திருவள்ளுவர் ஆண்டு-2018-கார்த்திகைத் திங்கள்-நவம்பர் 1987

பதிப்பாசிரியர் : **முனைவர் த. கோ. பரமசிவம்**

பதிப்பு : முதற் பதிப்பு

**விலை** : உரு. 85-00

**அச்சு** : சர்மாஸ் சானடோரியம் அச்சகம்,
புதுக்கோட்டை.

இந்நூல் மையஅரசின் தில்லி தேசிய ஆவணக்காப்பகம் வழங்கிய நல்கையின்வழி வெளியிடப்பெறுகிறது.

Published with the financial assistance of National Archives, Govt. of India, New Delhi.

# தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

**முனைவர் ச. அகத்தியலிங்கம்**
எம். ஏ., பிஎச்.டி. (கேரளா)
பிஎச்.டி.(இந்தியானா,அமெரிக்கா)
துணைவேந்தர்

## அணிந்துரை

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு பணிகளில் பண்டைத் தமிழ்ச் சான்றுகளைப் போற்றிப் பாதுகாப்பதும் அவற்றை வெளி உலகுக்குத் தெரியப்படுத்துவதும் ஒன்றாகும். தமிழகம் பழங்கால ஓலைச்சுவடிகளுக்குப் பெயர் பெற்ற ஒரு இடம் ஆகும். ஆயிரக் கணக்கான ஓலைச்சுவடிகள் தமிழகத்திலே இருப்பது வேறு எந்த நாட்டிலும் காணமுடியாத சிறப்பாகும். எனவே இவ்வோலைச் சுவடிகளைப் பாதுகாத்து அழியாத செல்வங்களாக வைப்பதும் இவற்றை அச்சில் வெளிக்கொணர்வதும் இன்றியமையாத ஒரு நல்ல தமிழ்ப் பணியாகும். இத்தமிழ்ப் பணியைக் கருத்தில் கொண்டுதான் தமிழ்ப் பல்கலைக் கழகம் இதற்கெனத் தனி ஒரு துறையைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த ஒரு சில ஆண்டுகளாகத் தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித் துறையின் வாயிலாக 3,000 க்கும் அதிகமான சுவடிகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை நல்ல மனம் கொண்ட அன்பர்கள் பலரால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டவை.இவை அனைத்திற்கும் விளக்க அட்டவணை ஒன்று தயாரித்து வெளியிடும் திட்டத்திற்குத் தில்லி தேசிய ஆவணக் காப்பகம் ரூ. 1,25,000 அளித்து உதவியது.

இத் திட்டத்தின் வாயிலாக உருவாகியுள்ள நூல்களே இப்போது வெளிவருபவை. இரண்டாயிரம் சுவடிகளைப் பற்றிய விவரங்களை இந்நான்கு தொகுதிகளும் கொண்டுள்ளன. இது நிச்சயமாகத் தமிழ் ஓலைச்சுவடி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அறிஞர்களுக்கும் பொது மக்களுக்கும் பயன்படுவதாகும்.

இத் திட்டத்திற்கு நல்கை வழங்கிய தில்லி தேசிய ஆவணக் காப்பகத்தார்க்கும் இத்திட்டத்தில் இயக்குநராகவும், பதிப்பாசிரிய ராகவும் இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர்களுக்கும் அதன்பின்னர் இத்திட்டத்தை நிறைவேற்றிய முனைவர் த. கோ. பரமசிவத்திற்கும் என்னுடைய பாராட்டுக்கள்.

தொகுப்புப் பணியில் ஈடுபட்ட முனைவர் வே. இரா. மாதவன், புலவர் ப. வெ. நாகராசன், மற்றும் இத்திட்டம் நிறைவேற ஒத்துழைப்பு நல்கிய அலுவலர் அனைவர்க்கும் என் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரியன.

தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.
நவம்பர் 13, 1987

ச. அகத்தியலிங்கம்

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | அணிந்துரை | |
| 2. | பதிப்புரை | க—உ௰உ |
| 3. | மாற்றுச் சுவடிகள் காணும் இடங்கள் | உ௰௩—உ௰௫ |
| 4. | தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை<br>(1501 முதல் 2000 நூல்கள் வரை) | 1—602 |
| 5. | நூலாசிரியர் அகரவரிசை | 603—605 |
| 6. | நூற்பெயர் அகரவரிசை | 606—614 |
| 7. | பொருட்பகுப்பு அகர வரிசை | 615—617 |
| 8. | பொருள்வாரி எண்ணிக்கை | 618 |
| 9. | பிழை திருத்தம் | 619—622 |

# தில்லி, தேசிய ஆவணக்காப்பக நல்கைத் திட்டம்—1986-87

## இத்திட்டத்தில் பணியாற்றியோர்

1. பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை
   *முன்னாள் சுவடிப்புலத் தலைவர்*

2. முனைவர் த. கோ. பரமசிவம்
   *தலைவர், ஓலைச்சுவடித்துறை*

3. முனைவர் வே. இரா. மாதவன்
   *விரிவுரையாளர், ஓலைச்சுவடித்துறை*

4. புலவர் ப. வெ. நாகராசன்
   *தொழில் நுட்ப உதவியாளர், ஓலைச்சுவடித்துறை.*

# பதிப்புரை

இந்நூல் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஓலைச்சுவடித்துறையிலுள்ள தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணையின் நான்காம் தொகுதியாகும். இதன்கண் 1501 முதல் 2000 வரையிலுள்ள நூல்களின் விரிவான விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணையின் முதல் தொகுதியில் 1 முதல் 500 வரையிலான நூல்களின் விளக்கமும், இரண்டாம் தொகுதியில் 501 முதல் 1000 வரையிலான நூல்களின் விளக்கமும், மூன்றாந் தொகுதியில் 1001 முதல் 1500 வரையிலான நூல்களின் விளக்கமும் இடம் பெற்றுள்ளன. முதல் தொகுதியில் பேரா. மு. சண்முகம் பிள்ளையவர்களின் அரிய முகவுரைப் பகுதி இடம்பெற்று அத் தொகுதியை அணிசெய்தல் காணத்தகும். அம் முகவுரை இவ்வாண்டைய நல்கைத்திட்ட நூல்களாம் நான்கு தொகுதிகளுக்கும் ஒட்டு மொத்தமாக அமைந்த சிறப்பினையுடையது.

இந் நான்காம் தொகுதியில் சுவடி விளக்கமுறை முதலியன எல்லாம் முதல் தொகுதியிற் போலவே அமைக்கப்பெற்றுள்ளன. இத்தொகுதியின் தொகுப்புப் பணியினை முனைவர் வே. இரா. மாதவன், விரிவுரையாளர் அவர்களும், புலவர் ப.வெ. நாகராசன் தொழில் நுட்ப உதவியாளர் அவர்களும் மேற்கொண்டிருந்தனர். இத் தொகுதியில் இடம்பெற்றுள்ள சுவடிகளுள் பெரும்பாலன அன்பர்களின் அன்பளிப்பாகப் பெறப்பட்டனவேயாம். சுவடிகளை வழங்கிய அப் பெரியோர்களின் பட்டியல் இப் பதிப்புரையின் நன்றியுரைப் பகுதியில் காணத்தகும் சிறப்புடையதாம்.

இத்தொகுதியில், பிற தொகுதிகளில் அமைந்துள்ள பின் இணைப்புகளான நூலாசிரியர் அகரவரிசை, நூற்பெயர் அகர வரிசை, பொருட் பகுப்பு வரிசை ஆகியவற்றுடன் நான்கு தொகுதிகளிலும் இடம்பெற்ற சுவடிகளின் மொத்தப் பொருட் பகுப்புப் பட்டியலும் இணைக்கப்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாம். இத் தொகுதியுடன் இவ்வாண்டைய நல்கைத் திட்டம் நிறைவுபெறுகிறது.

சுவடி விளக்க அட்டவணைப் பணி தொடரும் பணியாகும். சுவடிகளும் நூல்களும் வந்து சேரச்சேர இவ் அட்டவணைத் தொகுதிகளைப் போன்றே தொடர்ந்து தொகுதிகள் வெளியிடப்

பெறும். தேசிய ஆவணக்காப்பகம் இதுவரை சேர்ந்துள்ள தமிழ்ச் சுவடிகள் முழுவதற்கும் விளக்கஅட்டவணை வெளியிடும் வண்ணம் நான்கு தொகுதிகளுக்கும் நல்கை வழங்கி ஊக்குவித்தது. ஓராண்டுக்கு வழங்கிய நல்கையை இத்துறையின் வேண்டுகோளுக்கிணங்க ஒன்றரை ஆண்டுக்காலமாக நீட்டித்து, இத் திட்டம் சிறப்பாக நிறைவுறுமாறு துணைசெய்தது. இவ்வாறே, இனித் தொடர்கின்ற சுவடி விளக்க அட்டவணைகளுக்கும் தேசிய ஆவணக் காப்பகம் நல்கை வழங்கிச் சிறப்பிக்கும் என்று நம்புவோமாக.

## நான்காம் தொகுதியின் சுவடிகள்

முன்தொகுதியில் அமைந்த முறை போன்றே இத் தொகுதியிலுள்ள சுவடிகளும் ஆசிரியர் வகையிலோ, நூல் வகையிலோ, நூற்பொருள் அடிப்படையிலோ, ஏடுகளின் அளவு எண்ணிக்கை வகையிலோ அடைவு செய்யப் பெறாமல், வந்து சேர்ந்த தொடர்ச்சியின் வண்ணமே தொடர்எண் இடப்பெற்று இங்கு அட்டவணை செய்யப்பெற்றுள்ளன என்பது முதற்கண் அறியத்தக்க செய்தியாம்.

இத் தொகுதியில் இலக்கண இலக்கிய நூல்களோடு மருத்துவம் சோதிடம், நாட்டுப்புறவியல், தத்துவம் போன்ற பொருள்களில் அமைந்த சுவடிகளும் இடம்பெற்றுள்ளன. அவை முழுமையான நிலையிலும், குறைநிலையிலும், நல்லநிலையிலும், பூச்சியரிக்கப் பட்ட நிலையிலும் எனப் பல நிலைகளில் காணப்படுகின்றன. திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் – 1618, முந்திரிலக்கம் – 1626, பார்த்தசாரதி சதகம் – 1641, எண் சுவடி – 1662, அரிச்சுவடி – 1665, கொன்றைவேந்தன் – 1538, 1544, 1805, உலகநீதி – 1531, 1545, 1602, 1613, 1630, ஞானக்குறள்–1835 போன்ற சிறு நூல்கள் முழுமையாகவும் நல்லநிலையிலும் காணப்படுகின்றன.

அகத்தியர் வைத்தியம் 1500–1676, சட்டைமுனி நிகண்டு– 1682, தேவாரம்–1714, 1921, 1925, அருணாசல புராணம்– 1775, திருவிளையாடற் புராணம் – 1794, ஞானவாசிட்டம் – 2000, இலக்கண விளக்கம் – 1861, இராமர் அசுவமேதயாகம் – 1707, தருமர் அசுவமேதயாகம் – 1772, திருவாசகம் – 1850, 1876, விநாயக புராணம்–1869, கூர்ம புராணம்–1865, கந்த புராணம் – 1866, கும்பகோணப் புராணம் – 1868 போன்ற பெரிய நூல்களும் முழுமையான நிலையில் காணப்படுகின்றன.

இந் நான்காம் தொகுதியில் உள்ள சுவடிகள் அளவில் பலதரப் பட்ட வகையில் உள்ளன. விக்கினேசுவரன் தோத்திரம் – 1991 என்னும் நூல் ஒரு ஏட்டையே கொண்டு ஒரு பக்கத்திலேயே முடியும் சிறு நூலாகும். இவ்வாறே கடலை அவுல் பத்தியம்–1634, கஜேந்திரமோட்ச கீர்த்தனை – 1960 போன்றன ஓரேட்டை மட்டுமே கொண்ட நூல்களாம். தேவாரம்–1714, 400 ஏடுகளையும், அகத்தியர் வைத்தியம் - 1500-1676, 380 ஏடுகளையும், விநாயக புராணம்–1869, 416 ஏடுகளையும், இலக்கண விளக்கம்– 1861, 423 ஏடுகளையும் கொண்ட பெருநூல்களாகக் காணப் படுகின்றன.

தனிப்பாடல்கள் பல சேர்ந்த தொகுதிகளாகச் சிலநூல்கள் காணப்படுவதும் இங்குக் குறிக்கத்தக்கதாம். தனிப்பாடல்கள் என்ற தலைப்பில் 1517, 1520, 1526, 1551, 1553, 1554, 1557 எனத் தொடர்ந்து 19 நூல்களாக உள்ளன. இவற்றில் அச்சுக்கு வராத பல நல்ல பாடல்கள் காணப்படுகின்றன. தனிப்பாடல் களைத் தேடித் தொகுத்து எழுதும் வழக்கம் இருந்ததை ஒரு சுவடியின் குறிப்பு புலப்படுத்துகின்றது.

'வீரப்பன் சுந்தரன் பலகவிச்சுவடி'–1615 என்ற அக்குறிப்பு நூலின் தலைப்புக்கு வழிசெய்தலும் நோக்கத்தகும். பெரும்பாலும் தோத்திரங்களாகக் காணப்படும் அத் தொகுப்புகளில் பாடல் களுக்கு மூலனூரு வஞ்சிநாயகியம்மன்பேரில் கொச்சகம், முருக னுக்கு விருத்தம், கருடப்பத்து, சரசுபதிபேரில், நாட்டுராயன்பேரில் பதிகம் போன்ற தலைப்புகள் காணப்படுகின்றன. இக் குறிப்புகள் பாடல்களை இனங்கண்டு கொள்வதற்குப் பெரிதும் பயன்தருவன வாக உள்ளன. இத்தகு தனிப்பாடல்களும் ஆய்வுசெய்து வெளி யிட வேண்டிய தகுதி கொண்டனவேயாம்.

## அச்சு விவரம்

இத் தொகுதியின் சுவடிகளுக்கும் அச்சான விவரம் தரக்கூட வில்லை. அச்சு நூல்களின் விவர அட்டவணை முழுவதுமாகக் கிடைக்கப்பெறவில்லை. மேலும் திட்டப்பணியின் காலம் வரை யறுக்கப் பெற்றதால் உரிய காலத்திற்குள் முடிக்கவேண்டிய கடப் பாடு கருதி அச்சுவிவரம், மாற்றுச்சுவடிகள் காணும் இடங்கள் ஆகியன தரப்பெறவில்லை. இக்குறை அடுத்த பதிப்புகளில் நிறைவு செய்யப்பெறும்.

இத் தொகுதியில் இடம்பெற்றுள்ள சுவடிகளுள் பெரும்பாலன அச்சான நூல்களாகத் தோன்றுகின்றன. இலக்கணத்தில், இலக் கணச் சூடாமணி-1801 என்னும் நூலொன்று அச்சுருக்காணாத நூலாகத் தோன்றுகிறது. 111 ஏடுகளைக் கொண்ட இச்சுவடி ஆய்ந்து பதிப்பித்து வெளியிடுவதற்குரியதேயாம். இலக்கிய நூல்களுள் தோத்திரங்கள் சிலவும் சிற்றிலக்கிய வடிவில் அமைந்த சுவடிகள் சிலவும் அச்சுருக்காணாத நூல்களாகத் தோன்றுகின்றன. இரங்கநாயகி நாச்சியார்வாது-1836, அப்பைய நாயகர் வளமடல் 1799, ஆண்புத்திமாலை-1953, பெண்புத்திமாலை-1954, பார்த்தசாரதி சதகம்–1641, வாசல்வளப்பம்-1632, நாட்டு வளப்பம்–1633, சுப்பிரமணியர் வளையலீடு-1975 போன்றன இங்குக் குறிக்கத்தக்கன.

மருத்துவம், சோதிடம், நாட்டுப்புறவியல் போன்ற பொருள் களில் அமைந்த நூல்கள் பெரும்பாலும் அச்சுருக்காணாத நூல் களாகவே தோன்றுகின்றன. தத்துவ நூல்களும் இத்தகைய நிலையினவே. இவ்வகை நூல்களுக்கெல்லாம் முறையான நூல் விவர அட்டவணை கிடைக்கப்பெறவில்லை. ஆதலின் ஒருநூல் அச்சானதா இல்லையா என்பதை அறிந்து கொள்வதும்அரிதாகவே உள்ளது. அச்சு நூல்களுக்கெல்லாம் தொடர்ந்து விவர அட்ட வணை வெளிவருமேல் இவ்வகைச் சுவடி ஆய்வுகளுக்குப் பெரிதும் பயனுடையதாக விளங்கும்.

இத் தொகுதியில் அமைந்த சுவடிகளுள் இலக்கணம் 12, உரை நடை இலக்கியம்-14, காப்பியம்-33, சிற்றிலக்கியம்-44, சைவத் திருமுறைகள்-12, சோதிடம்-20, தத்துவம்-19, தலபுராணம்-19, திவ்வியப்பிரபந்தம்-1, நாட்டுப்பாடல்-28, நீதி நூல் - 37, பதினெண்கீழ்க்கணக்கு-6, பல்வகை நூல்கள்-63, பிற தோத்திரங்கள்-3, மருத்துவம்-44, மாந்திரீகம் -13 என்ற அளவில் சுவடிகள் இடம் பெற்றுள்ளன.

## பழநி சிற்றிலக்கியங்கள்

இந் நான்காம் தொகுதியில் பழநி மலை முருகன் மீது பாடப் பெற்ற சிற்றிலக்கியங்கள், நாட்டுப்புறப்பாடல்கள் சில இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும். இவற்றுள் பெரும் பாலன அச்சுருக்காணாத நூல்கள் எனலாம்.

பழநி வேலவர் கும்மி–1501, பழநி ஆண்டவர் கும்மி-1563, பழநி வேலவர் ஆனந்தக்களிப்பு-1564, 1590, பழநிமலைக்கண்ணி 1587, பழநிக்காவடிப்பாட்டு-1592, பழநியாண்டவர் கும்மி-

பதிப்புரை

1953, பழநியாண்டவர் தாய்மகள் ஏசல்-1593 போன்ற நூல்கள் வெளிப்படையாகப் பழநி மலையைக் குறித்த தலைப்புடன் விளங்குவனவாம்,

தலைப்பில் 'பழநி' என்ற பெயரை விடுத்துப்பொதுப்படையாக, சுப்பிரமணியர்மாலை சுப்பிரமணியர் தோத்திரம் என்ற வகையில் தலைப்பைக் கொண்டு விளங்கும் நூல்கள் சிலவும் பழநி மலை முருகனுக்கு உரியனவாகக் காட்சியளிக்கின்றன. சுப்பிரமணியர் கும்மி-1609, சுப்பிரமணியமாலை-1512, 1525, 1586 1666, உதயராகம்-1957 போன்ற சுவடிகள் இத்தகையன, இவையேயல்லாமல் தனிப்பாடல்களாகக் காணப்படும் சுவடிகளிலும் பழநியாண்டவர் பதிகம், பழநிவேலவர் மேல் பதிகம், பழநிப் பிள்ளையார் பதிகம் என்ற தலைப்புகளில் பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் தொகுத்து வெளியிடுவது தமிழுக்கும், முருக பக்திக்கும் வளம்சேர்ப்பதாம்,

## பட்டயங்கள்

இத் தொகுதியில் பட்டயங்கள் சில இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க வரலாற்றுச் செய்தியாகும், பெரும்பாலும் கல்வெட்டுகள் செப்புப்பட்டயங்கள் போன்றன முதலில் ஓலையில் எழுதப்பெற்றுப் பின் கல்லிலும் செம்பிலும் வெட்டப்பெற்று நிலை நிறுத்தப்பெறுவன. அரச ஆணைகள் பல 'இதனைக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க' என்ற முடிவுரையுடன் காணப் பெறுதல் நோக்கத்தகும். ஆயின், இங்குள்ள பட்டயங்களில் பெரும்பாலன செப்புப் பட்டயங்களைப் பார்த்து எழுதிய சுவடிகளாகக் காணப்பெறுகின்றன. மன்றாடியார் வம்சாவளி-1569 என்னும் சுவடியின் பிற்குறிப்பில், 'தமிழ் பிரபவ வருஷம் ஆனி மாதம் 29ஆம் தேதியில் செப்பேட்டினுள்ளபடிக்கு நகல் எழுதினது சாமிப்புலவனார் எழுதினது' என்னும் செய்தி உள்ளது. இது மேற் கூறியதை உறுதிசெய்யும் சான்றாக உள்ளது. மூல ஓலைகள் என்று சொல்லமுடியாதவண்ணம் படி ஓலைகளாகவே இவை காணப்பெறுகின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட படிகள் தேவைப் படும்போது செப்புப்பட்டயம் ஒன்றைப்பார்த்து ஓலைகளில் படி எடுத்துப் பாதுகாத்திருப்பர், பலர்வசம் கொடுத்திருப்பர் என்று எண்ணும்படி இவை தோன்றுகின்றன.

விசயநகரப்பேரரசு காலத்திய வழக்கு ஒன்றை (கொங்கு தேச 24 நாட்டுக்கு நதிகளான வாணிநதி, காவேரி நதி, காஞ்சிமாநதி, நல்லமங்கை நதி, ஆன்பொருனை நதி, மீன்கொல்லி நதி, சிற்றாறு, குடகையாறு, நனங்காஞ்சிநதி, நல்லாறு, உப்பாறு ஆக 11 ஆறு

களில் அணைகட்டுவதற்கு ஏற்பட்ட சிக்கலை மதுரை உக்கிர வீர குமார பாண்டியன் முன்னிலையிலும் மீனாட்சி சன்னிதியிலும் திருவுளச் சீட்டு எழுதித் தீர்த்த அச்சுததேவராயர் காலத்திய வழக்கு) தென்கரை நாட்டுப் பட்டயம்–1513 எடுத்துச்சொல்கிறது. ஆயின் அது முற்றுப்பெறாத குறைச்சுவடியாக — குறைச் செய்தியைத் தருகிறது. எட்டு ஏடுகளையே கொண்ட அது பதப்படுத்தப்பெறாத ஓலைகளால் எழுதப்பெற்றுள்ளது.

திருவரங்கம் கோயிலைச் சார்ந்த திருமலைதாதாசாரிய சுவாமிகள் தாராபுரம் தாலுகா கொம்மாபாளையத்திலிருக்கும் சுப்பத்தாசனுக்குச் செய்யவேண்டிய சேவைகள்குறித்து எழுதிக்கொடுத்த விருதுசமய பட்டயம் ஒன்று கோடி கன்னிகாதானம் ஜீயர் பட்டயம்–1552 என்னும் பெயரில் இடம் பெற்றுள்ளது. இது 'திருமலைத்தாதாசாரிய சுவாமியாரவர்கள் ஸ்ரீரங்கநாதசுவாமி கோயில் முன்னே எழுதிக்கொடுத்த திருமுகப்பட்டயம்' என்னும் வாசகத்துடன் நிறைவுபெறுவதாகக் காணப்படுகிறது.

கொங்குப்புலவர் பட்டயம் – 1576 என்னும் சுவடி கொங்கு நாட்டின் கவுண்டர்களிடையே நடைபெற்ற ஒப்பந்த உறவுமுறை ஒன்றை விளக்குவதாகக் காணப்படுகிறது. 32 கிராமத்துக் கவுண்டர்கள் ஊற்றுக்குழி தீர்த்தமலையாண்டவர் சன்னிதியிற் கூடியிருந்து தென்திசை வேளாளர்க்குப் புலமையாளராகப் புலவர் ஒருவரை நியமித்து — சுள்ளிபாளையம் சேனாபதிப் புலவனை நீக்கல் செய்து வைத்து — கொடுமணலிலிருக்கும் பழனிப்புலவன் மகன் சென்னிமலைப் புலவனை நியமித்த செய்தி — ஒப்பந்தம் எழுதிய வரலாற்றைக் கூறுவதாக இது காணப்படுகிறது. எனினும் இது குறைப் பட்டயமாக இருப்பது வருத்தந்தரும் செய்தியாகும். வாரக்க நாட்டுப்பட்டயம் – 1578 என்னும் சுவடியும் கொங்குக் கவுண்டர்களிடையே காணப்படும் வழக்கமான திருமணத்தில் வாழி பாடும் புலவர்க்குச் சீர் வரிசை செய்வதைச் சுட்டுவதாக உள்ளது. இது முழுமையானதாகும்.

இருபத்து நான்கு நாட்டுப்பட்டயம்–1581 என்னும் சுவடி செப்புப் பட்டயத்தைப் பார்த்து எழுதிய குறிப்பைப் புலப்படுத்துவதாகும். இது, கொங்கு நாட்டின் திருமணங்களில் கம்பர் வாழி பாடுவதற்காகப் புலவர் மூவரை நியமித்து அவர்களுக்குச் செய்ய வேண்டிய சிறப்புகளைக் குறிப்பிட்டுக் கையொப்பமிட்ட செய்தியைக் குறிப்பிடுவதாகும். தேவப்பராயர் காலத்தில் இப்பட்டயம் உருவான செய்தியும் இதனால் அறியப்படுகிறது. '24 நாட்டாரவர்களும் இந்தப்படிக்கு எழுதிக்கொடுத்த தாம்பூர சாசனப் பட்டயம்' என்று அது முடிகிறது. மற்றொரு சுவடி இதே பட்டய

தின் படியாகக் (1595) காணப்படுகிறது. அது கம்பர் – சோழ அரசன் இவர்களுக்கிடையே நடைபெற்ற நிகழ்ச்சிகள், அவர் சோழ அரசன் அம்பினால் இறந்தார் போன்ற செய்திகளைச் சுட்டுகிறது.

பொன்னிவாடிப் பட்டயம் – 1607 என்பதும் கிட்டத்தட்ட இது போன்றதொரு செய்தியைக் கூறுவதாக உள்ளது. திருமணத் தின்போது வாழி பாடும் புலவருக்குக் கொடுக்கவேண்டிய மரியாதைகள் பற்றிய விவரங்களைத் தருகிறது.

தென்கரைநாட்டுப் பட்டயம் – 1619 என்னும் சுவடி 24 நாட்டாருங் கூடி முடிவு எடுத்த செய்தி ஒன்றைக் கூறி, அது மதுரை மீனாட்சியம்மன் நிலவறை மண்டபத்திற்குத் தென் பாரிசத்தில் கற்றூணில் எழுதப்பெற்றுள்ளது என்ற செய்தியைத் தருகிறது. மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் நிலவறைகள் இருக்கும் செய்தி இப்பட்டயத்தால் தெளிவாகிறது.

திருமுருகன் பூண்டி பட்டயம் - 1644 என்னும் சுவடி கி. பி. 1704 ல் எழுதப்பெற்ற செப்புப்பட்டயம் ஒன்றின் படியாகக் காணப்படுகிறது. இது அவிநாசி ஊரில் சொக்கலிங்கநாயக்கர் காலத்தில் நடைபெற்ற அறம் ஒன்றைச் சுட்டுவதாக உள்ளது. நிலங்களை விற்று (அதன் நாற்புற எல்லைகளைக் குறிப்பிட்டு) அதனால் வரும் பொருளால் நிறுவியதாக அது காணப்படுகிறது. அவிநாசிக்குக் கந்தமாபுரிப்பட்டணம், முதலைவாய்ப்பிள்ளையை அழைத்துக் கொடுத்தருளிய முத்தித்தலம் என்னும் பெயர்கள் இருப்பதை இப்பட்டயத்தால் அறியமுடிகிறது.

இவ்வாறு பல்வேறு வகைப்பட்ட சமுதாயச் செய்திகளை வெளிப்படுத்துவனவாக இப்பட்டயங்கள் காட்சி தருகின்றன.

## மருத்துவச் சுவடிகள்

இந்நான்காம் தொகுதியிலும் மருத்துவச் சுவடிகள் கணிசமான அளவில் இடம்பெற்றுள்ளன. செய்யுள் நூல்கள் முதலாக உரை நடை நூல்கள் வரையிலான முழு நூல்களும் குறை நூல்களுமாக அவை காணப்படுகின்றன. அவற்றுள் அச்சுருக்காணாத நூல் களாகப் பெரும்பாலும் காணப்படுபவை உரைநடையிலான நூல் களேயாகும். ஏனெனில் அவை பெரும்பாலும் முறையான நூலாக அமையாமல் பல நூல்களிலிருந்து பொழிப்பாகத் திரட்டி யும், அனுபவ மருத்துவக் குறிப்புகளாகத் தொகுக்கப்பட்டும் தனித்தனியே சுவடிகளாக அமைக்கப்பட்டனவாம். எனினும்

அவ்வகை நூல்களிலும் பல அரிய செய்திகள் பொதிந்துள்ளமையை நாம் காணலாம்.

நோய் தீர்க்க வேண்டுமெனில் நோய் இன்னது என்பதை முதலில் உணர்ந்தால்தான் உரிய மருந்தைக் கொடுத்துக் குணப் படுத்த முடியும். இதைத்தான் வள்ளுவரும் 'நோய்நாடி நோய் முதல் நாடி' என்று கூறுகிறார். எனவே, நோயின் குணத்தை விளக்குவதைச் சில சுவடிகள் சிறப்பாக மேற்கொண்டிருத்தலை நாம் இத்தொகுதியிலும் காணலாம். வாதசுரத்தின் இலக்கணம்—அந்நோய் படுத்தும்பாடு — அதை எவ்வாறு உணர்வது, முடிவு செய்வது என்பதையெல்லாம் ஒரு சுவடி கோடிட்டுக் காட்டுகிறது. மருத்துவ நூல் — 1757-ல்

> 'வாதசுரத்தின் குணம்: சாவது—துணிவது பயப்படும், துணுக் கென்பதும், ரோமகங்ளை நெறிப்பதும், நடுங்குவதும் தலை நோக்காடும், சீழ்ச்சதுவும், கைகால் விலாவும் கோடாலி போட்டுப் புளுக்குறாப் போல (பிளப்பது போல) நோவதும்' தண்ணீர் தாகமுண்டாகும், தொப்புள் மூத்திரம் கடுக்கும்'

என்னும் விளக்கம் எளிமையாக நோயறியும் விதத்தைச் சுட்டுதல் காணலாம்.

அரைக்கீரையின் பயனை, மருத்துவ நூல்—1758 ஒன்று பின் வரும் வெண்பாவால் கூறுகிறது.

> 'காய்ச்சல் குளிர்சன்னி கைநோய் பலபிணிக்கும்
> வாய்ச்சகறி தானாய் வழங்குமே — காச்சமில்லாது
> எல்லவர்க்கும் நல்ல இதமாம் இதமென்றே
> சொல்லும்அரைக் கீரைச் சுவை'

உண்ணும் உணவே மருந்தாகும். உணவே மருந்து—மருந்தே உணவு என்னும் சித்த மருத்துவக் கொள்கையை இப்பாடல் விளக்குதல் காணலாம். கீரையில்தான் எவ்வளவு மருத்துவக்குணங்கள்- உயிரூட்டச் சத்துகள் பொதிந்துள்ளன!

இவ்வாறே மருந்துசெய்முறை-1937 என்னும் சுவடியில் தூது வளையின் பயனை இரத்தினச் சுருக்கமாக, அதே வேளையில் தெளிவாக நாம் காணமுடிகிறது.

> 'தூதுவளைகற்பம்: தூதுவளை சமூலங்கொண்டுவந்து
> நிழலில் உலர்த்திப் பொடி செய்து கொள்ளவும்.
> இப்பொடி நெய்யிற்கொள்ள உடம்பு பெருக்கும்.
> தேனிற்கொள்ள உடம்பு மெலியும். இப்பொடி
> வெண்ணெயிலிட்டுக் காய்ச்சிக்குடிக்க தாதுவிர்த்திக்கும்'

முடக்கொற்றான் பயனை, 'மலசலம் கட்டினால் முடக் கொற்றான் தழை கொண்டுவந்து அரைத்து விளக்கெண்ணையில் கொதிக்கவைத்துக் கொடுக்க மலசலம்விடும். கைகண்டது' என்று சுருக்கமாகக் குறிக்கிறது அச்சுவடி.

இவ்வாறு எளிய முறைகளைக் கூறும் சுவடிகளுடன் பாடல் வடிவில் அமைந்த மருத்துவச் சுவடிகளும் பெருமளவில் காணப் படுகின்றன. புரிந்து கொள்வதற்கு அரிய நிலையினைக் கொண்ட அச்சுவடிகள் முறையான தலைப்பில் அமைந்த நூல்களாம்.

அகத்தியர் 50,–1944, அகத்தியர் ஞானம் 100–1690, அகத்தியர் முப்பூ சூத்திரம் 50–1945, அகத்தியர் வைத்தியம் 1500-1675,இராமதேவர் சூத்திரம்-1817,குணவாகடம்-1736, கோரக்கர் அட்டகர்மம்-1808, சட்டைமுனி நிகண்டு-1682, தட்சிணாமூர்த்தி வைத்தியம் 1200–1813, தன்வந்தரி குண வாகடம்-1731, போகர் அட்டாங்கம்–1887, மச்சமுனி 800-1684, மருத்துவ அகராதி–1715, 1939, ரோமரிஷி-1767 போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்க சிறப்புடையன.

மருத்துவ அகராதிகள் சிலவும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. அவை எளியநடையில் அமைந்தனவாகக் காணப்படுகின்றன. உரைநடையில் அமைந்த மருத்துவ அகராதி–1715, 123 ஏடுகளைக் கொண்ட அளவினது. அவ்வக ராதி, அகத்திற்பால் – முலைப்பால், அகக்காள் – உள்வயிரமுள்ள மரம் எனச் சொல்லுக்குச்சொல் விளக்கம் தருவதோடு தொகை யளவிலும், 'காடுபடுந்திரவியமாவது: இறால், தேன், அரக்கு, மயிற்பீலி, நாபி' என்று பொருள் தருவதைக் காணலாம். இவ்வாறே மற்றொரு அகராதி – 1939, 'புண்டரீகம் என்பது தாமரை,'சம்பழம் என்றும் பழம் என்றும் எலுமிச்சம் பழத்திற்குப் பேராம், பஞ்சாங்கம் என்பது அஞ்சுவகை' என்ற நிலையில் பொருள் விளக்கம் தருகிறது.

இவ்வகை மருத்துவ நூல்களையெல்லாம் ஆய்ந்து வெளியிடு வது அறிஞர்தம் பொறுப்பும் கடமையும் ஆகும்.

## நாட்டுப்புறப் பாடல்கள்

முன்தொகுதிகளில் அமைந்த முறையிலேயே இத்தொகுதியிலும் நாட்டுப்புறப் பாடல்கள் சில பாவடிவிலும் சில உரைநடை வடிவி லும் சில இரண்டும் கலந்த நாடக வடிவிலும் இடம்பெற்றுள்ளன. முத்துநாச்சிசண்டை – 1646, புலந்திரன்தூது – 1648, 1653,

ஆரவல்லி கதை — *1649, 1667*, அபிமன்னன் சுந்தரி மாலை — *1655, 1668, 1908*, முத்தாலம்மன் வில்லடிப்பாட்டு – *1710*, பெருமாளம்மானை–*1748*, பாரத அம்மானை – *1750*, அல்லி அரசாணிமாலை – *1802*, பராபரக்கும்மி – *1787*, மாமியார் மருமகள் சிந்து–*1528*, வைகுந்தக்கும்மி–*1535, 1562*, புகையிலைக்கும்மி–*1539*, ஒயில் கும்மி–*1550*, கண்ணகையம்மன்பந்தடி–*1992*, சோமேசர் ஊஞ்சல்–*1606*, வள்ளித் திருமணக்கும்மி–*1624*, ஞானரத்தினக் குறவஞ்சி – *1962*, இலட்சுமிபார்வதி தர்க்கம்–*1969* போன்றன பா வடிவின.

இலட்சுமி பார்வதி தர்க்கம் என்னும் நூல் பள்ளுப் பாடல்களில் வரும் ஏசல்போல் காணப்படும் இனிய நாடகப் பாங்கைக் காட்டுவதாம்.

'மண்ணெடுத்து அடிபட்டு வாணிச்சி பிட்டு
வாங்கித்தின் றாரோடி யுங்கள் சிவனார்'
'குன்றெடுத்துப் பால்தயிர் வெண்ணெய் திருடிக்
குந்திக்குந்தித் தின்றாரோடி யுங்கள் பெருமாள்'

'பாரிலொரு குட்டிக்கு முலைப்பால் கொடுக்கப்
பன்றியாக வந்தாரோடி யுங்கள் சிவனார்'
'காரியமாப் பூமியெல்லாம் மூக்காலே வீழக்
கற்பன்றி யானாரோடி யுங்கள் பெருமாள்'

என்ற வகையில் இலக்கிய நயம் தோன்ற அமைந்தது இவ்வேசல் பாட்டு.

நாட்டுப்புற இலக்கிய வகையில் அமைந்த உரைநடை நூல்களாக 'நாலுமந்திரிகதை–*1556*, விக்கிரமாதித்தன் கதை–*1584 1589, 1755*, அமர சிம்மராசன் கதை–*1506*, மூக்கரைக்கிழவி கதை–*1643*, பஞ்சதந்திர வசனம் – *1570*, தக்கராசன் கதை–*1749* போன்ற சுவடிகள் குறிக்கத்தக்கன. இவ்வகையில் பண்டைய இதிகாசங்களை உரைநடையில் அமைத்த நூல்களான இராமர் அசுவமேதயாகம்–*1707*, தருமர் அசுவமேதயாகம்–*1772*, பகவத்கீதைவசனம்–*1774* போன்றன குறிக்கத்தக்க சிறப்புடையனவாம்.

இவ்வகையிலேயே பாட்டும் உரையுமாக அமைந்த நாடக நூல்கள் சிலவும் குறிப்பிடத்தக்கன. மகாவிந்த நாடகம்–*1651*, வீரமாறன் நாடகம்–*1656*, அரிச்சந்திர விலாச நாடகம்–*1559*, மார்க்கண்டேய நாடகம் – *1515*, கிருட்டின விலாசம் – *1560*, வீரகுமார நாடகம் – *1829*, குருசேத்திர நாடகம் – *1834* போன்றன இவ்வகையில் அடங்குவனவாம். நாட்டுப்புறவியல்

இலக்கியங்களுள் பெரும்பாலன நாடக அமைப்பைக் கொண்டன வாகத் திகழ்தலே இயல்பு. நாடகம் என்ற சிறப்பு அடையுடன் காணப்படுவன நடிப்பதற்காக அமைந்தன. பிற படிப்பதற்காகவும் கேட்பதற்காகவும் தோன்றியன எனக்கருதும் வண்ணம் அவை திகழ்கின்றன.

இவ்வகை நாட்டுப்புற இலக்கியங்கள் இலக்கிய நயத்தை, வரலாற்றைத் தருவதோடு, மொழியியல் செய்திகளான வட்டார நிலை, வழக்குநிலை, காலநிலை போன்றவற்றையும் வெளிப் படுத்துவனவாம். எனவே இவற்றையெல்லாம் ஆய்ந்து வெளிப் படுத்துதல் தமிழறிஞர் கடமையாம்.

## சூரியன் — தமிழாகரன்

சூரியன்தோத்திரம்-1976 என்னும் நூல் சூரியனைத் தமிழா கரனாக விளித்து வணங்குகின்ற முறையைக் காட்டுகிறது. அந் நூலின் பாட்டொன்று,

> சந்தனமும் புனுகுஞ் சமர்பன் னீருடனே
> கொந்தலர் செண்பகமுங் கொண்டுவ ணங்கிடுவேன்
> வந்திடும் வல்பிணிநோய் மாற்றுவ தும்பரனே
> செந்தமி ழாகரனே சிவசிவ சூரியனே.

எனத் துதிக்கிறது. இப்பாடலால் சூரியனுக்குத் தமிழாகரன் என்ற சிறப்புப் பெயரும் இருப்பது தெரியவருகின்ற சிறப்புச் செய்தி யாகும். இப்படி ஒரு பெயர் சூரியனுக்கிருப்பதைத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிட மறந்துவிட்டது போலும்.

## சோதிட நூல்கள்

இத் தொகுதியில் இடம்பெற்றுள்ள சோதிட நூல்கள் பல வகைப்பட்ட செய்திகளைத் தாங்கியுள்ளன. நூற்பெயர் அறிய முடியாத சுவடிகள் சோதிடச் செய்திகள்-1695, சோதிட நூல் 1718, 1853, 1855, 1857-1859, 1869 என்ற பொதுப் பெயரில் சுட்டப்பெற்றுள்ளன. முறையான நூல்களாகக் காணப் படும் நூல்களுள் வருடாதி நூல்-1681 என்பது இடைக்காடர் எழுதிய 60 வெண்பாக்களில் 60 வருடங்களின் பலன்களைக் கூறுவதாகும். வருடபலன்களை உரைநடையில் சொல்லும் சுவடி அறுபது வருட பலன்-1823 என்பதாகும். அட்டவர்க்கம்-1848 சாதக அலங்காரம்-1842, சூடாமணி உள்ளமுடையான்-1846 உள்ளமுடையான்-1849, குமாரசாமியம்-1851, மனையடி சாத்திரம்-1901, சோதிட அரிச்சுவடி-1719 போன்றன குறிக்கத் தக்க பிற சோதிட நூல்களாகும்.

## பிற சமய தத்துவ நூல்கள்

சைவ வைணவ நூல்களைத் தவிர்த்து இஸ்லாமிய கிறித்துவ மதத்தைச் சார்ந்த நூல்கள் சில இத்தொகுதியில் உள்ளன. நூருநாமா-1679, நபிகள் நாயகத்தின் யானைப்பவனியைக் கூறும் யானைவிருத்தம்-1904 மற்றும் வாள் விருத்தம்-1905, பரிவிருத்தம்-1906 ஆகியனவும் குறிப்பிடத்தக்க இஸ்லாமிய நூல்களாம். இவற்றுள் 64 சீர், 32 சீர்களைக் கொண்ட ஓரடிப் பாட்டே இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அருளானந்தர் சரித்திரம் – 1902 என்னும் நூல் 169 ஏடுகளில் அமைந்த உரைநடை கிறித்துவ இலக்கியமாகும். 1647-ல் போர்ச்சுகீசு நாட்டில் லிஸ்போ நகரில் பிறந்து வளர்ந்த அருளானந்தரின் வாழ்க்கை வரலாற்றை விளக்குவதாக இச்சுவடி காணப்படுகிறது.

இவ்வாறே திருமந்திரம் என்ற பெயரில் உடல்சக்கரதிருமந்திரம்–1721, நடுவணைத்திருமந்திரம்-1722, வாசித் திருமந்திரம்–1723, அட்டலோகத் திருமந்திரம் – 1724, திருமந்திர பூரண சூத்திரம் – 1725, அதிசயத்திருமந்திரம் – 1726, இருநூற்றுத் திருமந்திரம்–1727, வழலைத் திருமந்திரம்–1728, நிகண்டுத் திருமந்திரம்–1729 ஆகிய தத்துவ நூல்கள் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் ஆய்ந்து உரையுடன் பதிப்பித்து வெளியிடும் முயற்சியில் அறிஞர் உலகு ஈடுபடுதல் வேண்டும்.

பரதநாட்டிய முத்திரைகளை எடுத்துக்கூறுவது போல 3 ஏடுகளால் அமைந்த நூலொன்று–முத்ராலட்சணம்–1782 என்னும் பெயரில் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளது. கும்பமுத்திரையை,

'மண்டுநீர் பிடித்த வலக்கை இடக்கரங்
கொண்டுமேல் வளைப்பது கும்பமுத் திரையே'

என்றும், நேத்திரமுத்திரையை,

'சேட்டைக னிட்டைமேற் சேர்மூ விரலையும்
நீட்டி விரிப்பது நேத்திர முத்திரையே'

என்றும் கண்ணி வடிவில் விளக்குவதாக இந்நூல் காணப்படுகிறது.

சித்தர் பாடல்களில் எளிமையும் பொருட்பொதிவும் ஒருசேர அமைந்த தத்துவத்தை நாம் காணமுடியும். கடுவெளிச்சித்தர் பாடல்–1956 என்னும் நூலில்,

'பாபஞ் செய்யாதிரு மனமே – நாளைக்
கோபஞ் செய்தே – எமன்
கொண்டோடிப் போவான்
பாபஞ் செய்யாதிரு மனமே'

என்னும் நிலையில் பாடல்கள் அமைந்திருப்பது படித்துச் சுவைத் தற்குரியது.

உதயராகம்-1957 என்னும் நூல் வடமொழியின் சுப்ரபாதம்– பள்ளியெழுச்சிப்பாடல் போன்ற அமைப்பில் காணப்படுவதாம். ஒவ்வொரு பாடலும் 'அட்டமங்கல வள்ளிநாயக அனந்தலோ திருவனந்தலோ' என்று முடிவதாக அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாம்.

## பிற்குறிப்புகள் தரும் சிறப்புச் செய்திகள்

சுவடியின் இறுதியில் காணப்படும் குறிப்புகள் சுவடி உரிமை யாளர் பெயர், சுவடி எழுதப்பெற்ற காலம், எழுதியவர் பெயர் போன்ற விவரங்களைத் தருவதாகக் காணப்படும். சில சுவடிகளில் இக் குறிப்பு நூல் தொடங்குமுன்பும் காணப்படுவதாகும். இக் குறிப்புகள் பல்வேறு அரிய வழக்கங்களை – செய்திகளைத் தெரிவிப்பனவாகவும் அமைந்துள்ளன.

'குப்பணன்நீதி ஒழுக்கம். செல்லப்ப கவுண்டன் எழுதியது'
—1672

எனச் சுருக்கமாகவும் அக்குறிப்புகள் அமையும்.

'விளம்பி வருஷம் ஆவணி மாதம் 7ந்தேதி ஞாயிற்றுக்கிழமை யன்றைக்கு தாராபுரந்தாலுகா தம்பரெட்டிப்பாளையம் கிராமம் பாளையத்திலேயிருக்கும் பொன்னய கவுண்டன் மகன் பெத்தாக் கவுண்டன் நீதி சாரம் எழுதி முடிந்தது. முற்றும்' —1577

என விளக்கமாக அமையும் பிற்குறிப்புகளும் காணப்படும். தமிழ் ஆண்டுகளுக்கு நிகராகக் கலியுக சகாப்த வருடம், சாலிவாகன வருடம், கொல்லம் ஆண்டு ஆகியவற்றைக் கொடுத்து மேலும் விளக்கமாக வரையும் குறிப்புகளும் ஈண்டுச் சுட்டத்தகுவனவாம்.

இவ்வகைக் குறிப்புகள் யார் யாருக்குக் கொடுத்தது என்ற விவரத்தையும் தருகின்றன.

'சார்வரி தை 25 குறுப்பைநாடு கொடுமணல் கிராமம் ஓரத்த பாளையத்தில் இருக்கும் சென்னிமலைப் புலவர் மருமகன் தென் கரை நாடு தூரம்பாடிக் கிராமம் நத்தப்பாளையம் பெரியணப் புலவன் மகன் சாமிப்புலவனுக்குப் படிக்கும்படிக் கொடுத்து

வைத்தது' —1669 என்னும் குறிப்பில் சுவடி அன்பளிப்பாக வழங்கப்பட்ட செய்தியைக் காணலாம். இவ்வாறே எழுதியவரின் கல்விப் பெருமையைச் சுட்டும் குறிப்புகளும் உள்ளன. 'விநோத சாத்திரம் எழுதி நி றை ற வே றி ன து முற்றும். இது எழுதியது இராமலிங்கம் - இலக்கண இலக்கியக் கடல் முழுவதுங் கரைத்துக் குடித்தேப்பமிடும் ராமலிங்கம் பண்டா... எழுதி நிறைவேறியது'—1824 என்னும் குறிப்பில் இதனைக் காணலாம்.

## பாடலால் பிற்குறிப்பு

இத்தகைய குறிப்புகள் அழகியபாடல்களால் அமைவது சில சுவடிகளில் காணப்படும்.

'வளரும் விரோதி சம்வச்சரத் தில்மார்கழி
மாதத்தில் வருதேதி ஒன்பதில்
ஒளிரும் புதன்வா ர மதில்அட்டமி உத்திரத்தில்
ஓங்கு கூடலின் மான்மியம்
நளிரும் பரஞ்சோ திமுனி பாடல்அறு
பத்துநாலு திருவிளை யாடலே
தளர்நுண் ணிடையளப முலைமாதர் மேவிய
சுந்தரரா சன்எழுதி னானே'—1929

## சன்னிதியில் சமய நூல்கள்

சமய நூல்களைப் பெரும்பாலும் திருக்கோயிலின் சன்னிதி களில் வைத்து எழுதுவது என்ற வழக்கம் ஒரு சுவடியின் குறிப் பால் புலப்படுகிறது. நீலகேசி—1716 என்னும் சுவடியின் குறிப்பு,

'ஜயங்கொண்ட....தேசத்து ... கிராமத்து, வெங்கப்பநயினார் குமாரன் வெங்கப்பன் விஜய அன்னங்களய்யருக்கு ஸாஸ்த்ர தானம் பண்ண எழுதினது...கள்ளப்புலியூர் பார்ஸ்வநாதஸ்வாமி ஸந்நிதியிலே எழுதி நிறைந்தது. முற்றும்' என்று காணப்படுகிறது. இது மேற்சொன்ன செய்தியை உறுதி செய்தல் காணலாம்.

## அவையடக்கமும் எழுத்தறமும்

ஓலைச்சுவடிகளில் நூல்களை எழுதுவதற்கென்றே ஒவ்வொரு ஊரிலும் சிலர் சிறப்புற்றிருந்தனர். அவர்களின் தொழில் எழுத்து வேலையே. கூலிக்காக எழுதும் இவர்கள் பெரும்பாலும் அப்படியே படிஎடுக்கும் நிலையிலும், சொல்வதைக்கேட்டுஎழுதும் நிலையிலும் பயிற்சி பெற்றவர்களாவர்.

'எழுத்துவேலை அழகியனாசாரி மகன் கோபாலனாசாரி சுப்பிரமணியனாசாரி மாடசுவாமி சுவடியாகிய சுந்தரானந்தர் சூத்திரம் எழுதினேன்'—1886 என்னுங்குறிப்பில் எழுத்துவேலை என்று தனித்தொழில் ஒன்று இருந்ததை நாம் அறியமுடிகிறது.

அவ்வாறு எழுதுகின்றவர்கள் அவையடக்கமாகச் சிலவற்றைக் கூறிச்செல்வதுண்டு. அதனைப் பிற்குறிப்பில் பொறித்துவைப்பதும் உண்டு;

'அக்ஷய வருஷம் கார்த்திகை மாதம் 4 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை அபிமன்னுயுத்தம் எழுதி முகிந்தது. முற்றும். சம்பூரணம். இதில் எழுத்துக்குற்றம் சொற்குற்றம் இருந்தாலும் பெரியோர்கள் பொறுத்து உட்கொள்ளவேண்டியது' —1657 என்னும் குறிப்பு குற்றம் நேர்வது இயல்பு என்பதையும் அதனைப் படிப்பவர்கள் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்பதையும் வணக்கமாகத் தெரிவிப்பதாகுமன்றோ?

'அடியேன் சுப்பிரமணியன் சுய ஹஸ்த லிகிதமாக அடங்கன் முறையும் சேத்திரக் கோவையும் எழுதி நிறைந்தன. நன்றாக. இது எடுத்து நேசித்துப் பூசித்து வாசிக்கும் நாயன்மார்கள் அடியேனுக்குச் சிவஞானம் உண்டாகும்படி திருவுள்ளத்தில் கொண்டருளும்படி எப்போதும் கேட்டுக்கொள்கிறேன்' —1927. படிப்பவர்கள் கூட நாயன்மார்களாகத் தோன்றுகின்றனர் இந்தச் சுவடிக்காரருக்கு; என்னே அவையடக்கம்!

இவ்வாறே நூல்களுக்கு உரை எழுதியவர்களும் அவையடக்கமாகச் சிலவற்றைக் கூறும் பாங்கைச் சில சுவடிகள் சுட்டுகின்றன.

'இந்நூற்கு உரையெழுதினேனென்று பெயரிட்டு எனதறியாமையுலகுக்கெல்லாம் அறிவித்தலால் இக்குற்றத்தைப் பெரியோர் பொறுத்தருள்க' —1864 என்னும் குறிப்பு அவையடக்கத்தைப் புலப்படுத்தி நிற்கிறது. ஆயின், இவ்வடக்கத்தை வெளியிட்ட புலவர் யார்? அப்பெயர் அக்குறிப்பில் இடம் பெறவில்லை என்பதும் நோக்கத்தக்கது.

இவ்வாறு சுவடியைப் பெயர்த்தெழுதுபவர்கள் படி எடுக்கும் போது இடைச்செருகல்களை நீக்கிப் பிழையறப் பார்த்துத் தணிக்கை செய்து எழுதுவதும் உண்டு. அவ்வாறு எழுதும் போது தாம் மேற்கொண்ட திருத்தங்களைக் குறிப்பிட்டுச் சொல்வதை நேர்மையாகக் கொண்டனர்.

'இவ்வுரையாசிரியர் கருத்துணராது இக்காலத்தார் வேண்டா தனவற்றிற்கு வேண்டுவனவாகக் கருதி இடையிடை மடுத்த தப்புரைகளையும் பாட்டுக்களையும் சொல்வேறுபாட்டாலும் பொருள்வேறுபாட்டாலும் இலக்கண வழுவானும் வாய்பாட்டின் . . த்தானுங் கண்டுதள்ளி எழுதினேன் சிந்தாமணியுரை' —1933 சிந்தமாணியுரையின் பிற்குறிப்பு எழுத்துப்பணியின் அறம் எப்படி யிருக்க வேண்டும் என்பதை எடுத்துரைப்பதாகவும் காணப்படுதல் சிந்தித்தற்குரியதன்றோ?

## அச்சு நூல்களுக்குப் பின்பும் ஓலைச்சுவடிகள்

அச்சுப்பொறியும் அச்சு நூல்களும்,தோன்றிய பின்பும் ஓலைச் சுவடிகளின் பயன்பாடு இந்தியாவில் பெருக இருந்தது. தமிழகத் திலும் ஓலைச்சுவடிகளில் எழுதியும், படித்தும், பாதுகாக்கும் வழக்கம் தொடர்ந்தது. சிறப்பாக, அச்சான நூல்களை—அச்சுப் புத்தகங்களைப் பார்த்து மீண்டும் ஓலையில் எழுதிப்படிக்கும் வழக்கம் இருந்ததைச் சில சுவடிகளின் பிற்குறிப்புகள், முற்குறிப்பு கள் புலப்படுத்துகின்றன. 'கைவல்யநவநீதம்' என்னும் சுவடியில்,

'இஃது கொளத்தூர் வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் கேட்டுக்கொண்டபடி பொய்கைப்பாக்கம் வீராசாமி முதலியாரவர்கள் இளைய சகோதரராகிய அப்பாசாமி முதலியாரால் தமது வித்துவ ரக்ஷாமிர்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

குரோதி வருஷம் பங்குனிமாதம். இதன் விலை ரூ. 5¾ மேற்படி அச்சுப் பொஸ்தகத்தைப் பார்த்துக் கோரிப்பாளையம் பாக்கிய முதலியார்க்காக மதுரை ராமாயணச் சாவடிக் கணக்குத் தவசிக்கோன் மகன் தேவேந்திரன் எழுதினது. பராபவ வருஷம் மார்கழி மாதம் 20 ஆம் தேதி'—1778 என்னும் குறிப்பு காணப் படுகிறது. இது அச்சு நூலைப் பார்த்து எழுதிய விவரத்தைத் தெளிவாகக் குறிப்பிடுதல் நோக்கத்தகுவதாம்.

சூடாமணி நிகண்டு – 1840 என்னும் சுவடியில், 'சூடாமணி நிகண்டு. இஃது பொய்கைப்பாக்கம் ஹரிஹர புத்ர உபாத்தியாயர வர்கள் குமாரராகிய அப்பாசாமி முதலியாரவர்களால் தமது வித்வரக்ஷாமிர்த அச்சுக் கூடத்தில் பதிக்கப்பட்டது. குரோதி வருஷம் மாசி மாதம். இதன் விலை ரூ. 3' என்று காணப்படும் குறிப்பு மேற் சுட்டிய செய்தியை உறுதி செய்தல் காணலாம்.

## நூற்பயனும் தண்டனையும்

இவ்வாறெல்லாம் காணப்படும் பிற்குறிப்புகளில் சுவடியைப் போற்ற வேண்டியமுறை, அதைப் படிப்பதால் வரும் பயன்

அந்நூலைக் களவு செய்தாலோ, திருப்பிக் கொடுக்காமல் மறந்தாலோ நேரும் பழி-பாவம் போன்ற விவரங்களையும் நம்முன்னோர் எழுதிவைத்துள்ளனர்.

'பஞ்ச பாண்டவர்கள் சாந்தாதி அசுவமேதயாகக் கதை எழுதி முகிந்தது.அசுவமேதயாகக் கதையெடுத்தவர்கள் படித்துச் சோடச உபசாரத்துடனே தூபதீப நெய்வேத்தியம் செய்து கெந்தபுஷ்பம் தாம்பூலம் சகலத்திராளுக்கும் கொடுத்து வாழிபடிக்கவும். இவை புண்ணிய கதை. கேட்டவுடனே சகல பாவமும் பரிகாரமாய் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பதம் பெறுவார்கள். எழுதின பேர்களும் படித்த பேர்களும் அன்புடனே கேட்ட பேர்களும் ஆல்போல் தழைத்து அருகது போல் வேர்ஊணி மூங்கில்போல் அன்னசுற்றம் முசியாமல் வாழ்ந்து சுகமே இருப்பார்கள் என்றவாறு.'-1772.

'இந்த ராமாயணக் கீர்த்தனை—ராசிபுரம் வடக்கு வீதி குழந்தை செட்டியார் குமாரனுடையது. ஸ்ரீராமசெயம்.இதைப் படிச்ச பேர்களுக்கு அறிவுண்டாகும், நல்லது'-1826 போன்ற குறிப்புகள் நூல்களின் பயனை-நூலைப் படித்தறிவதால் வரும் நன்மையை விளக்குவதாக அமைதல் காணலாம்.

'இந்த நாலுமந்திரிகதையை எடுத்தபேர்கள் படித்துப் பிரசங்கம் செய்து உடையான் வசம் ஒப்பிவிச்சுப்போடவும்'-1556.

'தாருணவருஷம் ஆடிமாதம் 8 ஆம் தேதி பிடாரப்பகவுண்டன் புத்தூரிலேயிருக்கும் பிடாரப்ப கவுண்டன் மகன் முத்தப்பனுக்கு கிருஷ்ணவிலாசம் எழுதிக்கொடுத்தது. எடுத்தவன் வாசித்துப் பார்த்து உடையவன் வசம் கொடுக்க வேண்டியது'—1560.

'கோயமுத்தூர் சில்லா தாராபுரந்தாலுகா தம்பிரெட்டி பாளையம் கிராமம் பொன்னைய கவுண்டன் மகன் பெத்தாக் கவுண்டன் நீதிசாரம். எடுத்தவன் கொடுக்கவும். நம்ம ஏட்டை எடுத்தவனை விரலைத் தரித்துப் போடுவேன்' —1577.

'இவை எடுத்துப்படித்துவிட்டுக் காதிரு முகியத்தீன் அண்ணாவியார்பள்ளிக் கூடத்தில் வந்து தந்திட வேண்டியது' —1679.

'சேலம் அன்னதானபட்டி மிட்டாவுக்குச் சேர்ந்த பெரிய புத்தூரிலேயிருக்கும் வடிவேல் பண்டாரத்துக் குமாரனும், செங்கோடனுக்குக் கலியாணிக்குக் கணக்குச் சண்முகனுக்குச் சாமிபிள்ளை எழுதிக்கொடுத்த வீரகுமார நாடகம். எவராகிலும் எடுத்துப் படித்துப் போட்டுச் சுவடிக்காரன் கேட்டு படிக்கவும்,

காணாமல் எடுத்துக்கொண்டு போனால் கங்கைக் கரையிலே ஏழு காராம் பசுவைக் கொன்ற தோசத்தினாலே போகக் கடவுள் பார்க்கும்' —1829.

இவற்றையெல்லாம் காணும்போது, இரவல் பெற்ற நூல்களைத் திருப்பிக் கொடுக்காத நண்பர்கள் எக்காலத்தும் இருப்பர் எனத் தோன்றுகிறது. இவ்வாறெல்லாம் எச்சரிக்கை விடும் வழக்கத்தைக் காணும்போது தமிழ் மக்களின் சுவடிஉடைமைப் பெருமையும் சுவடிப்பற்றும் சுவடிக்காதலும் எவ்வளவு உயர்ந்தன என்பது அங்கை நெல்லியென விளங்குமன்றே!

## பெயர் தெரியா நூல்களும் பிழைதிருத்தமும்

இத்தொகுதியில் நூற்பெயர் தெரியாத நூல்களும் ஆசிரியர் பெயர் தெரியாத நூல்களும் கணிசமான அளவில் இடம்பெற்றுள்ளன. அவற்றை இனங்காட்ட வேண்டி அந் நூற் பொதி செய்திகளை — பொருள்களை உட்கொண்ட தலைப்புகளைத் தொகுப்பாசிரியர் வழங்கியுள்ளனர். மருத்துவச் செய்திகள், மருத்துவக் குறிப்புகள், நோயும் மருந்தும், சோதிட நூல், சோதிடக் குறிப்புகள் எனப் பொதுப்பட அத்தலைப்புகள் இலங்குவதைக் காணலாம். ஆசிரியர் பெயர் தெரியாத நூல்களுக்கு ஆசிரியர் பெயர் குறிப்பிடப்பெறவில்லை.

எவ்வளவு நுட்பமாக ஆழ்ந்து கவனித்து வந்த போதும் அச்சுப் பிழைகள் ஏற்பட்டிருப்பது தவிர்க்க இயலாததாகி விட்டது. அப்பிழைகளைச் சுட்டிக் காட்டத் தவறினால் நூற் பாடங்களிலும், எண் குழப்பங்களிலும் ஆய்வாளர் சிக்கித் தவிப்பர். எனவே அவற்றை முறையாக எடுத்துக் காட்ட வேண்டுவதைப் பெருங்கடமையாகக் கருதி இத்தொகுதியின் இறுதியில் பிழைதிருத்தப் பட்டியல் ஒன்றும் இணைக்கப்பெற்றது. ஆய்வாளர் இதனைப் பயன்படுத்தி நூலைச் செப்பமாக்கிக் கொள்ள அன்புடன் வேண்டுகிறேன்.

## நன்றியுரை

ஓலைச்சுவடித்துறையின் நூலக வளர்ச்சிக்கும் சுவடி விளக்க அட்டவணைத் தொகுதிகளுக்கும் மூலகாரணமாக விளங்குவது தமிழன்பர்களின் நல்லெண்ணமே ஆகும். இத்துறைக்கு அவர்கள் தமிழ்ச் சுவடிகளை அன்பளிப்பாக — நன்கொடையாக வழங்காதிருப்பின் சுவடி நூலகம் ஏது? சுவடி அட்டவணைதான் ஏது,

எனவே அவர்களுக்கு முதற்கண் நன்றி செலுத்துவதே சிறப்பாகக் குறிக்கத்தக்கதாம்.

தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித்துறைக்குத் தமிழ்ச்சுவடிகளை அன்பளிப்பாக வழங்கியவர் பலராவர். திருக்கோயில்கள், திருமடங்கள் போன்ற சமய நிறுவனங்கள் முதலாகத் தனிப்பட்ட புலவர் குடும்பத்தினர்வரை இக்கொடையில் இடம்பெற்றுள்ளனர். ஓலைச் சுவடிகளுக்காகத் தனிப்பட்ட ஒரு துறையை உருவாக்கிச் சிறப்பித்திருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின்பால் அவர்கள் நம்பிக்கை கொண்டு தங்களிடமிருந்த சுவடிகளின் பாதுகாப்பு, பராமரிப்பு ஆகியவற்றுடன் அவை வெளிவர வேண்டுமே என்ற அக்கறையில் அவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். அவர்களின் நம்பிக்கையை உறுதி செய்யும் வண்ணம் இத்துறை அவர்களிடமிருந்து பெற்ற தமிழ்ச் சுவடிகளை அறிவியல் முறைப்படி தூய்மை செய்து, பூச்சி நீக்கம் செய்து, காப்பு எண்ணெய் பூசிப் பாதுகாப்பதுடன், இன்று அவற்றின் விளக்க அட்டவணையையும் வெளியிட்டு மகிழ்கின்றது. பின்வரும் அன்பர்கள் இத்தொகுதியிலுள்ள சுவடிகளை அன்பளிப்பாக வழங்கியவர்களாவர்: அவர்கள் அனைவருக்கும் ஓலைச்சுவடித் துறை நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதோடு அவர்கள் பெயரை இங்குச் சுட்டுவதில் பெருமையும் பூரிப்பும் கொள்கிறது.

## சுவடி நன்கொடையாளர் பட்டியல்

(எண்கள்: சுவடிகளின் தொடர் எண்களைக் குறிக்கின்றன)

அடிகளாசிரியர். திரு., சித்தநாதர் ஆதீனம், குகையூர், தெ. ஆ. மாவட்டம். 1375

அரிகிருட்டினன், ஈசன்தங்கு, நாகர் கோவில். 1402, 1403

அருணாசலம், எல். ஐ. சி. காலனி, தஞ்சாவூர். 1367

இதயதாசன், புலவர் கோட்டை, நாகூர். 1422, 1523

இராமராசன், எஸ். கே., வேலூர், சேலம் மாவட்டம். 1556

இராஜன் பாபு. ஆர். எஸ்., வடக்குச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம். 1373, 1383-1392

இளங்குமரன், திருநகர், மதுரை 6. 1421

இளஞ்சேரன். கோவை, நாகப்பட்டினம். 1365, 1366

கணேசபிள்ளை, பூதப்பாண்டி, நாகர்கோவில். 1524

கிருஷ்ணமூர்த்தி. எஸ்., கடைத்தெரு, சிதம்பரம். 1513, 1514

குழந்தை செட்டியார், சுப்பிரமணியபுரம், சேலம்-7. 1446, 1498

கொங்கு ஆய்வகம், சேலம். 1371, 1372

கோவிந்தராஜன். வி.ஆர்., கரந்தை, தஞ்சை–2.
1404-1408, 1538
கோவிந்தராஜுலு. ஆர்., மானோஜியப்பா வீதி, தஞ்சை. 1527
சஞ்சீவி, ந., தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம். 1499-1512
சமூக வியல்துறையினர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
1515-1520, 1537, 1541
சாரதாம்பாள் கதிரேசன், கும்பகோணம். 1542-1555
சையது முகம்மது அண்ணாவியார். கே. எஸ்., அதிராம்பட்டினம்.
1347, 1348, 1525, 1526, 1528
தங்கவேலு. எம்., கூடன்குளம், திருநெல்வேலி மாவட்டம்.
1349-1364, 1521, 1522, 1532
திருநாவுக்கரசு. ப., மேலைக்காவேரி, தஞ்சை மாவட்டம். 1369
திருவரங்கு அருண்மிகு அரங்கநாதப்பெருமாள் திருக்கோவில்.
1397-1399
நஞ்சுண்டன். கு.இரா., தமிழ்ப் பல்கலைக் கழகத் தத்துவ மையம், காஞ்சிபுரம். 1343, 1344
நந்தகுமார். ஜி.ஜி., அண்ணாசாலை, சென்னை-2. 1409-1420
நாகராஜன். கே.எஸ்., சின்னமனூர், மதுரை மாவட்டம்.
1423-1465, 1539
நாச்சிமுத்து. எஸ்.சி., புதுப்பை, பெரியார் மாவட்டம்.
1189-1342, 1529-1531
பரமசிவம். ந., திருத்தரங்கல், காமராசர் மாவட்டம். 1345
மகாலிங்கம். சி., தெற்குவீதி, திருவிடைமருதூர், தஞ்சை மாவட்டம். 1533
மருததுரை. அரு., பார்வதிபுரம், முசிறி, திருச்சி மாவட்டம்,
1374, 1376-1536, 1540, 1379-1382, 1393-1396, 1400, 1401, 1535
மாணிக்க சுந்தரக்குருக்கள், சிவன்கோவில், முசிறி. 1534
மாணிக்கம். வி., அம்மாபட்டி, உடுமலைப்பேட்டை வட்டம்.
1346
வீராசாமிப்பிள்ளை. கே., கீழவயலூர். 1377, 1378
வேங்கடராமையா. கே.எம்., திருப்பனந்தாள், தஞ்சை மாவட்டம். 1370
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள், தஞ்சை மாவட்டம். 1396

தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணையின் தொகுப்புப்பணி மற்றும் பொருள் அடக்க அமைப்பினைத் துறையினருடன் விவாதித்து இந்த வகையில் உருவாக்க, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் பெரிதும் துணைநின்றார்கள். அடிப்படை நிலைகளை அமைத்துத் தந்ததோடு அவ்வப்போது ஊக்கிவந்த அப்பெருந்தகையார்க்கு ஓலைச் சுவடித்துறையின் நன்றி என்றும் உரியதாகும்.

தாம் பொறுப்பேற்றுக்கொண்ட நாள் முதலாக இத்திட்டத்தின் வளர்ச்சி சிறப்பாக அமையவேண்டி, அவ்வப்போது ஊக்கியும் ஆணை வழங்கியும், பாராட்டியும் துணை நின்றவர் மாண்புநிறை துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் ஆவார்கள். அவர்கள் தம் பல்வேறு பணிகளுக்கிடையே இத்தொகுதிகளை உற்று நோக்கிச் சிறந்த அணிந்துரை ஒன்றையும் வழங்கியிருக்கிறார்கள். அவர்களின் அயராத அன்புக்கும் ஆக்கத்திற்கும் இத்துறை பெரிதும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையதாகும்.

தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணைத் தொகுதிகளின் வெளியீட்டுப்பணி, தில்லி தேசிய ஆவணக் காப்பக நல்கைத் திட்டமாக நடைபெற்றுவருகிறது. இத் திட்டத்திற்காக ஆவணக் காப்பகம் ரூ. 1,25,000/- நல்கை வழங்கி ஊக்குவித்தது. எஞ்சிய செலவைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்றுக்கொண்டது. நல்கை வழங்கிச் சிறப்பித்த தில்லி, தேசிய ஆவணக் காப்பக இயக்குநர் அவர்களுக்கு இத்துறை நன்றி பாராட்டும் கடமையுடையதாம்.

நல்கை பெறுவதற்கான திட்ட வரைவினை முறைப்படி அமைக்க ஆணை வழங்கியும், உடனிருந்து ஊக்கியும், திருத்தியும், தொகுப்புப் பணியினைத் திறம்படக் கண்காணித்தும் வந்தவர் முன்னாள் சுவடிப்புலத்தலைவர் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளையவர்கள் ஆவார். அவர்தம் சுவடிக்காதலும் பயிற்சியுமே இத்தொகுதிகளுக்கு மூலமாக அமைந்தன. தாம் பொறுப்பில் இருந்த காலம்வரை, ஏன் அதற்குப் பின்பும் இத்தொகுதிகள் வெளிவருவதில் ஆக்கமும் ஊக்கமும் அளித்து அச்சுப்பணியை உற்றுநோக்கி உயர்த்தியவர் அவரே என்றால் அது மிகையாகாது. முதல் தொகுதிக்கு மிகச் சிறந்த ஆய்வு முன்னுரை ஒன்றை அவர் வழங்கியிருக்கிறார். அந்த ஆய்வு முன்னுரை சுவடியியலை ஒட்டுமொத்தப் பார்வையில் நம் கண்முன் சித்திரமாக்கும் அரிய உழைப்பைக் காட்டுவதாம். அம் முன்னுரை இத்தொகுதிகளுக்குப் பெருஞ்சிறப்பளிப்பதாகும். அவர்தம் இனிய வழிகாட்டலுக்கு என் நன்றியும் வணக்கமும் என்றும் உரியன.

முன்பே குறித்தவண்ணம், இத் தொகுதியின் தொகுப்புப் பணியை மேற்கொண்டும் இடையிடையே என்னுடன் அச்சுப் படிவங்களைத் திருத்தி உதவியும் சிறக்கப் பணி புரிந்தவர்கள் இத் துறையின் விரிவுரையாளர் முனைவர் வே. இரா. மாதவனும் தொழில் நுட்ப உதவியாளர் புலவர் ப. வெ. நாகராசனும் ஆவர். அவர்தம் தொடர்ந்த உழைப்பு என்றும் பாராட்டும் சிறப்புடைய தாம். குறிப்பாக முனைவர் வே. இரா மாதவன் அவர்கள் தாம் நியமனம் பெற்று இத்துறையில் சேர்ந்த நாள் முதலாக இப்பணி யில் கண்ணுங்கருத்துமாக உழைத்தமை பெரிதும் பாராட்டற் குரியதாம். அவர் தொகுப்புப் பணியில் ஈடுபட்டதுடன் அட்ட வணைகள் இணைப்புகள் ஆகியவற்றை உருவாக்கியும் திருத்தியும் பெரிதும் உதவினார். இவர்களின் அயராத உழைப்பிற்கும் ஊக்கத்திற்கும் நான் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இத்தொகுதியை நல்லமுறையில் அச்சிட்டுத் தந்தவர்கள் புதுக்கோட்டை சர்மா சானிடோரியம் அச்சகத்தினர் ஆவர். அச்சகத்தாரின் ஒத்துழைப்புக்குக் குறிப்பாக திரு. வாசுதேவன் அவர்களுக்கு என் நன்றியும் பாராட்டும் உரியன.

இந்தத் தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை தொடரும் பணி யாகும். இத்தொகுதிகள் தமிழ் ஆய்வாளர்களுக்கும், மொழிநூல், வரலாறு முதலியவற்றை ஆராய்வோருக்கும் குறிப்பாகச் சுவடி ஆய்வோருக்கும் பெரிதும் பயன்படவிருக்கின்றன. இத் தொகுதியின்கண் காணப்பெறும் பிழைகளையும் வேண்டிய திருத்தங்களையும் அறிஞர் உலகுசுட்டிக் காட்டுமேல் அவர்களுக்கு பெரிதும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன் ஆவேன்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்,
நவம்பர் 10, 1987.

**த. கோ. பரமசிவம்**

# மாற்றுச் சுவடிகள் காணுமிடங்கள்

1. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
2. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.
3. மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.
4. திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.
5. பிற பல்கலைக் கழகங்கள்
6. ,, ,,
7. ,, ,,
8. தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி, பேரூர், கோவை.
9. பிற கல்லூரிகள்
10. ,, ,,
11. ,, ,,
12. கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு.
13. பிற கல்வி நிலையங்கள்
14. ,, ,,
15. ,, ,,
16. அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை
17. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
18. கீழ்த்திசைச் சுவடி நூலகம், காரியவட்டம், திருவனந்தபுரம்.
19. இந்திய தேசிய நூலகம், கல்கத்தா.
20. பிறஅரசு நிறுவனங்கள்
21. ,, ,,
22. ,, ,,
23. ,, ,,
24. ,, ,,
25. டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகம், திருவான்மியூர், சென்னை.

26. தமிழ்ச் சங்கம், மதுரை.

27. மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

28. பிரஞ்சு இந்திய நிறுவனம், பாண்டிச்சேரி.

29. பிற சுவடி நூலகங்கள்

30. ,, ,,

31. திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.

32. மௌன சுவாமிகள் திருமடம், சிதம்பரம்.

33. கௌமார மடாலயம், திருவாமாத்தூர், விழுப்புரம்.

34. முதல்
45. வரை } பிற மடங்கள்.

46. இந்தியா ஆபீஸ் லைப்ரரி, லண்டன்.

47. வெல்கம் மெடிகல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட், லண்டன்.

48. பிரிட்டிஷ் மியூசியம், லண்டன்.

49. தி லைப்ரரி ஆப் தி ராயல் ஏசியாடிக் சொசைட்டி, லண்டன்.

50. தி லைப்ரரி ஆப் தி ஈடன்பர்க் யூனிவர்சிடி, லண்டன்.

51. நேஷனல் லைப்ரரி ஆப் ஸ்காட்லான்ட், எடின்பரோ, ஸ்காட்லான்ட்.

52. தி ஹன்டேரியன் லைப்ரரி ஆப் தி க்ளாஸ்கோ யூனிவர்சிடி, க்ளாஸ்கோ, ஸ்கட்லான்ட்.

53. ஜான் ரைலாட்ஸ் லைப்ரரி, மான்செஸ்டர், இங்லான்ட்.

54. தி லைப்ரரி ஆப் தி கேம்பிரிட்ஜ் யூனிவர்சிடி, கேம்பிரிட்ஜ்.

55. பாட்லியன் லைப்ரரி, ஆகஸ்போர்டு.

56. தி லைப்ரரி ஆப் தி ஸ்கூல் ஆப் ஓரியண்டல் அண்டு ஆப்பிரிக்கன் ஸ்டடீஸ் ஆப் தி லண்டன் யூனிவர்சிடி, லண்டன்.

57. தி லைப்ரரிஸ் ஆப் தி ட்ரினிடி காலேஜ், டாப்ளின், அயர்லாண்ட்.

58. ஃபிரான்க் ஸ்டேட் ஆர்க்கிவ்ஸ், ஹாலே, ஈஸ்ட்ஜெர்மனி.

59. தி லைப்ரரிஸ் அட்டயூபிங்கன் அண்டு மார்பர்க், பாரிஸ், வெஸ்ட் ஜெர்மனி.

60. பிப்பிளியோதிக் நேஷனல், பாரிஸ், பிரான்ஸ்.

61. நேஷனல் மியூசியம், கோபன்ஹேகன், டென்மார்க்.

62. தி ராயல் லைப்ரரி, கோபன்ஹேகன், டென்மார்க்.

63. பிப்பிளியோதிகா அபோஸ்லிகா வேடிகானா, வாடிகன் சிடி, ரோம்.

64. தி லைப்ரரி ஆப் தி ஜெர்மன் ஓரியண்டல் சொசைடி, ஹாலோ, ஈஸ்ட்ஜெர்மனி.

65. லுதரன் மிஷன் சர்ச் மியூசியம் லிப்சிக், ஈஸ்ட்ஜெர்மனி.

66. ஸ்டேட் அண்டு யூனிவர்சிடி லைப்ரரி, ஹம்பர்க், வெஸ்ட் ஜெர்மனி.

67. அப்சாலா யூனிவர்சிடி லைப்ரரி, அப்சாலா, ஸ்வீடன்.

68. எதினோகிராபிகல் மியூசியம், ஸ்டாக்ஹோம், ஸ்வீடன்.

69. தி லெனின் ஸ்டேட் லைப்ரரி மாஸ்கோ, யு.எஸ்.எஸ்.ஆர்.

70. தி லைப்ரரி ஆப் தி லெனின்கிராட் யூனிவர்சிடி, லெனின் கிராட்.

71. தி லைப்ரரி ஆப் தி ஓரியண்டல்இன்ஸ்டியூட் ஆப் தி யு.எஸ். எஸ். ஆர்அகாடமி ஆப் சைன்சஸ், லெனின்கிராட்.

## குறிப்பு:

சுவடி விவர அட்டவணையில், ஒவ்வொரு நூலின் கீழேயுள்ள 6. **மாற்றுச்சுவடிகள் காணுமிடம்**—என்னும் பகுதியில், முதலில் மேற்காணும் நூலக வரிசை எண்ணும், பின்னர் அந்நூலகத்தில் அதே பெயரில் காணப்பெறும் நூல்களுக்கான எண்களும் கொடுக்கப்பட்டுள்ளமை காண்க.

# தமிழ்ச்சுவடி
# விளக்க அட்டவணை

நான்காம் தொகுதி

# தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை

## நான்காம் தொகுதி

### 1501. பழநி வேலவர் கும்மி

**1. நூலகக் குறிப்புகள்**

அ. தொடர் எண் : 1189–1

ஆ. பொருட் பகுப்பு எண் : ர/33

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. நூலாசிரியர் : . . . . . . . . . .

ஆ. நூற்பெயர் : பழநி வேலவர் கும்மி

இ. பொருள் : நாட்டுப் பாடல்

ஈ. வடிவமும் அளவும் : செய்யுள்

**3. தோற்றக் கூறுகள்**

அ. ஏடுகளின் எண்ணிக்கை : 9 ஏடு; 18 பக்கம்.

ஆ. ஏடுகளின் நீளம், அகலம் : நீளம் 34 செ.மீ.; அகலம் 2·5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளதா : இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. பக்கத்திற்கு எழுதப்பட்ட வரி : ஒரு பக்கத்திற்கு 4-5 வரி.

உ. எழுத்து நிலை : கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சுவடியின் நிலைமை : நல்ல நிலை.

எ. முழுமையா அல்லது குறையா : குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. நூலின் தொடக்கம்

திருமருவுங் குன்றுதோ றாடல் மேவும்
தேவசேனா பதியான செவ்வேள் மீதில்
தருவுடனே மதுரமொழித் தமிழி னாலே
தயவுபெறுங் கும்மிநாட் டியமாய்ப் பாட
பருவமுகி லெனவிருண்டான் கரிய மேனி
படியளந்த பச்சைமால் மருக ரான
கருவுலவுங் கருடதட மருப்புச் செல்வக்
கணபதிதன் னிருசரணங் காப்புத் தானே. (1)

ஆ. நூலின் முடிவு

வேதியர் வாழி புவிவாழி–தமிழ்
வீரரும் வாழி துரை வாழி
ஆதிய தான சிவகிரி மேவிய
ஆண்டி பதமலர் வாழியதே.

இ. முற்குறிப்பு / பிற்குறிப்பு

....................

## 5. பிற செய்திகள்

..................

## 6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

.....................

## 7. வெளியீட்டுச் செய்திகள்

...............

குறிப்பு : தொடர் எண் : 1189–2 முதல் வரும் நூல் வரிசை ஒவ்வொன்றிலும் உள்ள 7 பகுதிகளுக்கான உட்தலைப்புகள் விளக்கமாகக் கொடுக்கப்படவில்லை. மாதிரிப் படிவத்திற்குத் தொடர் எண் : 1189-1 காண்க.

## 1502, பழநி வேலவர் ஆனந்தக் களிப்பு

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1189-2

ஆ. ர/33

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . .

ஆ. பழநி வேலவர் ஆனந்தக் களிப்பு

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 4ஏடு; 8 பக்கம்.

ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. **தொடக்கம்**

கரிமுகவ னடியிணை போற்றி—நல்ல
கலைமகள் சரசுவதி பாதமே போற்றி
திரிபுர மெரிசெய்தாய் போற்றி—எங்கள்
சென்னியங் கிரிவேலர் பாதமே போற்றி
அரியரன் பிரமாவே போற்றி—முனிவர்
அனைவருந் தேவர்கள் சீர்பாதம் போற்றி
சரிவரக் காவடிப் பாட்டு—இடும்பன்
சண்முகர் வேலவர்மேற் சாற்றியே வாரார். (1)

ஆ. முடிவு

தும்புரு நாரதர் பாட—நல்ல
    துந்துமி மேளங்கள் தொனித்து முழங்க
கிம்புரு கின்னரர் மீட்ட—நல்ல
    கீதப்பிர பந்தங்க ளோலக்க மாக
தம்புரு வீணை வாசிக்க—நல்ல
    சத்தரி சிகளும் சரணாரம் போற்ற
அம்பல வாணரும் வந்து—பழநி
    ஆண்டியைக் கண்டு அருள்புரிந் தாரே.

## 1503. இரத்தினசபாபதி மாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1190

ஆ. ய/71

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . .

ஆ. இரத்தின சபாபதி மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 78

3. தோற்றக் கூறுகள்

அ. 39 ஏடு; 78 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. முதலும் முடிவும் உள்ள ஏடுகள் முறிந்துள்ளன.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மழைக்கார் பொழிந்து நன்னீர் கதித்தேறி வரை ..........
குழைத்தொட் டியவச்சிரத் துண்டங் கலமார்பிற்........
விழைத்தர தரவுதயா தனம்தான் மிகுத்துமென்.. .. ..
தழைத்தோங்கு மன்றிகுறை யாதுரத் தினசபா பதி ... ..

ஆ. முடிவு

கதிரோனும் கங்கையும் காசினியோரும் கால மெல்லாம்
சதிராக வந்து மூன்று யிருப்பர்காண் இந்தத் தாரணியிலே
மதுராபுரிச்சொக்கர் மீனாட்சி அம்மன் வரம்மகிழும்
பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்து பலுகுவரே.

## 1504. எண்சுவடி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1191

ஆ. ற/81

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...................

ஆ. எண்சுவடி

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 34 ஏடு; 68 பக்கம்.

ஆ. நீளம் 46 செ. மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. பெரிய, கிறுக்கலான கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத, வளைந்து முறிந்த ஏடுகள்.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1185-3 காண்க.

(தமிழ் எண், எழுத்து போன்றவற்றை எழுதிப் பழகியதாக உள்ளது).

## 1505. வண்ணங்கள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1192

ஆ. ய/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .................

ஆ. வண்ணங்கள்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 3

3. தோற்றக் கூறுகள்,

அ. 10 ஏடு; 20 பக்கம்.

ஆ. நீளம் 40 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6, 7, வரி.

உ. சுமாரான எழுத்து

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆத்தி முடிமேல் அறுகோடு கூவிளம்
நீத்த முடனே பிறைசேர்ச டாதர
அருகக் கடவுளொன நவசித் துருவமொடு
உலவிப் பலிகளொரு பிரமகபாலா

ஆ. முடிவு

ரசனை இளைஞருயிர் உதவும் அபிஷிதம்இது
அரிய தபசுபுரி யினும்லபியாது
இருவர் ஆசையும் இருந்த பதார்த்தமாய்
(இதற்குமேல் எழுதப்படவே இல்லை).

5. பிற செய்திகள்

இதில் முருகக் கடவுள் மீதில் கலவி மகிழ்தல் வண்ணம், சிதம்பரேசுரர் பேரில் கலவிமகிழ்தல் வண்ணம், சுப்பிரமணியர் பேரில் கொம்பில்லாத வண்ணம் ஆகிய மூன்று வண்ணங்கள் உள்ளன. இவற்றில் மூன்றாவதில் 5 கலைகளே எழுதப்பட்டு உள்ளன. இதன் துறையும் "கலவிமகிழ்தல்" எனவே தோன்றுகிறது.

## 1506. அமரசிம்மராசன் கதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1193

ஆ. ம/19

## 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .................
ஆ. அமரசிம்மராசன் கதை
இ. உரைநடை இலக்கியம்
ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 89 ஏடு; 178 பக்கம்.
ஆ. 37 நீளம் செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. சற்றே சிதைந்த நிலை.
எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆரிய தேசமென்றொரு தேசமுண்டு. அந்தத் தேசத்திலே அன்னதானபுரமென்றொரு பட்டணமுண்டு. அந்தப் பட்டணத்திலே அமரசிம்ம ராசனென்றொரு ராசனுண்டு. அந்த ராசாவுக்கு அன்னபூரணி யென்றொரு தேவியுண்டு. அந்தத் தேவிக்கு அழகு சந்திரனென்றொரு குமாரனுண்டு. இவர்களுக்கு அறிவு மிகுந்தவனென்றொரு மந்திரியுண்டு.

ஆ. முடிவு

......விரகேசரி ராசாவானவர் தன்னுடைய சதுரங்க சேனையுடனே வந்து அன்னதானபுரப் பட்டணத்துக்குச் சண்டை பண்ணினதும் தன்னுடைய மந்திரியானவன் சண்டை பண்ணினதும் இது விபரங்களெல்லாம் தன்னுடைய மச்சினன்கிட்டச் சொன்னபோது மச்சினன் கேட்டு வெகு வியாகுலப்பட்டுக்கொ ..........

(இதற்குமேல் ஏடுகள் இல்லை).

## 1507. ஆரவல்லி கதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1194

ஆ. ர/34

2. உள்ளீடு; நூல் விவரம்

அ. ...........

ஆ. ஆரவல்லிகதை

இ. நாட்டுப்பாடல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 230 ஏடு; 460 பக்கம்.

ஆ. நீளம் 47 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5,6 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. முதல் 40 ஏடுகள் இடதுபுறம் முறிந்துள்ளன.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்.

....மறவேன் கோடிகதை முன்னடக்க
....வணங்கி கதைகளும் முன்னடக்க
....அனைவரும் கேட்டருளீர்
....உலகோர் பொறுத்தருளீர்
....பத்திலொன்று சொல்லுகிறேன்.

ஆ. முடிவு

பாண்டவர்கள் வாழி, பஞ்சவர்கள் தான்வாழி
தேவர்களும் வாழி, தென்னவர்கள் தான்வாழி
நீடூழி காலமெல்லாம் நீள்நிலத்தோர் தான்வாழி
மண்ணூழி காலமெல்லாம் மண்டலத்தில் தான்வாழி
ஆல்போல் தழைத்து அருகதுபோல் வேரூணி
மூங்கிற்போலச் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பரே.

## 1508. மதுராபுரி அம்பிகை மாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1195-1

ஆ. ய/73

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. குலசேகர பாண்டியன்
ஆ. மதுராபுரியம்பிகை மாலை
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்.
ஆ. நீளம் 40 செ.மீ.; அகலம் 2·5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. தெளிவான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

**தொடர் எண்: 1111 காண்க.**

## 1509. மூதுரை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1195-2
ஆ. ய/73

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்
ஆ. மூதுரை
இ. நீதிநூல்
ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்.
ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2.5 செ.மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ, நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு
அ. தொடர் எண்: 1150 காண்க.

## 1510. கந்தரனுபூதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1196
ஆ. த/31

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அருணகிரிநாதர்
ஆ. கந்தரனுபூதி
இ. பிறதோத்திரங்கள்
ஈ. செய்யுள் 90

3. தோற்றக் கூறுகள்

அ. 46 ஏடு; 92 பக்கம்.
ஆ. நீளம் 28 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. சற்றே கிறுக்கலான கையெழுத்து.
ஒவ்வொரு பக்கத்திலும் யந்திரங்களும் விளக்கங்களும் எழுதப்பட்டுள்ளன.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1133 காண்க.

ஆ. முடிவு

என்னே நின்னிரு தாள்மலரை . . . .
பொன்னே யெனயான் போதிப் பெறுமே
அன்னே யமுதே அயில்வே லரசே
கொன்னே பிறவிக் குறைபெற் றிலகே. (90)

(முதலடியில் ஓர் அசை குறைந்துள்ளது.)

## 1511. ஏகாதசிப் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1197
ஆ. த/106

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதாச உபாத்தியாயர்

ஆ. ஏகாதசிப் புராணம் : மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 100 புக்கம் வரும்,

## 3. தோற்றக் கூறுகள்

அ. 66 ஏடு; 112 பக்கம்.

ஆ. நீளம் 33 செ. மீ.; அகலம் 2 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்லநிலை, முதல் ஏடு முறிவு.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காதலா லேகா தேசிக் கதைதனைப் புராண மாகத்
தீதிலா விருத்த மாகச் செம்மைசெந் தமிழாற் பாடப்
பாதமே தலைமேற் கொண்டு பாடவே பரிவுடன்
அன்பால்
காதலத் துடனே தோன்றும் ஐங்கரன் பாதங் காப்பே.

ஆ. முடிவு

கூறுவா யென்று சொல்லி
கொற்றவன் றன்னை நோக்கி
ஏறுமொன் றில்லை யென்று
இழந்தனை யாயி யிப்போ
சேருமுன் . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . (53)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1512. சுப்பிரமணிய மாலை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1198

ஆ. ய/74

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. சுப்பிரமணிய மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 15

### 3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்.

ஆ. நீளம் 35 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம். ஆ. முடிவு

தொடர் எண் : 1144 காண்க.

### 5. பிற செய்திகள்

இறுதியிலுள்ள ஒரு தனி ஏட்டில் குதிரை போன்ற உருவங்கள் வரையப்பட்டுள்ளன வேறு சில தனி ஏடுகளும் கலந்துள்ளன.

## 1513. பட்டயம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1199

ஆ. ற/82

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..................

ஆ. தென்கரை நாட்டுப் பட்டயம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்.

ஆ. நீளம் 31 செ. மீ.; அகலம் 2 4 செ. மீ.;

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை. பதப்படுத்தப் பெறாத ஓலைகள்.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுபநமஸ்து. ஸ்ரீ மகா மண்டலீசுபரன் பாஷைக்குத் தப்புவராத கண்டன், ஆரிய தளவிபாடன், ஆரிய மோகந் தவிர்த்தான், துலுக்கர் தளவிபாடன், துலுக்கர் மோகந் தவிர்த்தான், ஒட்டிய மோகந் தவிர்த்தான், பலநாவுக்குக் குறைவராத மன்னன்,..................

ஆ. முடிவு

.........சீட்டு இருந்தது. அந்தச் சீட்டை சபை சுத்திவந்து இவர்கள் சபையில் வைத்தார்கள். அப்போது சபை யார்களும் ராசாக்களும் இன்னும் இருக்கப்பட்ட பேர்களும் இது நல்ல காரியமென்று யோசித்து உக்கிர வீர குமார பாஷ்யனும் மூவ ராசாக்களும் ராயரவர்களும் பரிசித்து ராசன் நாளையில் பிரமாதி வருசம்...............

(இதற்கு மேல் எழுதப் பெறவில்லை.)

## 1514. மூதுரை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1200

ஆ. ள/36

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. மூதுரை

இ. நீதி நூல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்.

ஆ. நீளம் 38 செ.மீ ; அகலம் 2·5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச்செய்திகள்

அ. தொடக்கம். ஆ. முடிவு

தொடர் எண் : 1150 காண்சு.

## 1515. மார்க்கண்டேய நாடகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1261

ஆ. ற/83

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. மார்க்கண்டேய நாடகம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 125 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 53 ஏடு; 105 பக்கம்

ஆ. நீளம் 34 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5,6 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்லநிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சதுமுகனா ருபதேசம் செய்த பின்புசிவ
சங்கரனைப் பூசைசெய்ய மார்க்கண் டேயன்
விதிமுறையாய் நதிதனிலே ஸ்நானம் பண்ணி
விநாயகனைப் பூசித்துப் பூசை செய்ய
மதிகதிர்சூ ழுலகுதன்னில் ஆயிரத்தெட் டண்ட
மாகாசத்தலங்கள் சேவிக்க வேணு மென்று
பதியைவிட்டுக் கடல்சூழ்ந்த பூமி யெல்லாம்
பார்த்திடவே மறையோனும் புறப்பட் டானே. (1)

ஆ. முடிவு

மைந்தன்மார்க் கண்டன் தானும்
    மணமுடன் தம்மை வேலன்
சந்தோச மாகத் தெய்வ
    லோகமே சார்ந்தெந் நாளும்
சுந்தரன் கிருபையாலே
    சுக்கிரன் திசையாய் வாழ்வர்
இந்தநற் கதையைக் கேட்போர்
    யாவரும் வாழி தானே.

இ. பிற்குறிப்பு

சுக்கிலவருஷம் சித்திரை மாதம் 25 ஆம் தேதி திங்கட் கிழமை மார்க்கண்ட நாடகம் எழுதி முடிந்தது. எடுத்தவன் படித்துவிட்டு உடையவன் வசத்திலே கொடுக்கவும். பழநியப்பன் எழுதினது.

## 1516. மகாவிந்தம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1202

ஆ. ந/107

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. மகாவிந்தம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 30 ஏடு; 60 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ ; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4, 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொன்னிற மாக வுற்ற பொருவரை தன்னைச் சார்ந்து
அன்னிறம் பைம்பொன் மேனி ஆனபச்சி யாளைப்பார்த்துத்
தன்னிலே சந்தோ சித்துத் தான்வழி நடக்கும் போது
அன்னதோர் மாயா தாளை அறிவிலோர் குயில்தா
னென்றார். (1)

ஆ. முடிவு

அங்கணா போற்றி போற்றி அரகரா சிவனே போற்றி
சங்கரா சிவனே போற்றி சதாசிவப் பொருளே போற்றி
விமலனார் தேடிக் காணா விண்ணர் கோவே போற்றி
கயிலையங் கிரியாய் போற்றி காமனைக் காய்ந்தாய் போற்றி
பல கலைக் கிறைவா போற்றி பாரத முடித்தாய் போற்றி
சிலையுடன் மழுமா னேந்தும் ...... போற்றி போற்றி.

இ. முற்குறிப்பு

சாமிநாதப் புலவர் மகன் நாச்சிமுத்துப் புலவன் மகாவிந்தம் எடுத்தவர் படித்துவிட்டு மறுபடி உடையான் கையில் கொடுக்கவும்.

## 5. பிற செய்திகள்

ஏடு 23 முதல் 30 வரை வேறு சில பாடல்கள் எழுதப் பட்டுள்ளன. முதலில் உள்ள ஒரு தனி ஏட்டில் தனிவிருத்தங்கள் உள்ளன.

காப்பாக உள்ள மேலேட்டின் இருபுறமும் ஓவியங்கள் எழுத் தாணியால் வரையப்பட்டுள்ளன. இவற்றுள் அன்னம், மயில், கிளி, யாளி, சிங்கம், பல்லாக்கு போன்றவை குறிப்பிடத்தக்கன,

## 1517. தனிப்பாடல்கள்

**1.** நூலகக் குறிப்புகள்

அ. 12[illegible]3

ஆ. ற/84

**2.** உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . .

ஆ. தனிப்பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

**3.** தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 24 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. மிகவும் கிறுக்கலான கையெழுத்து.

ஊ. வளைந்து முறிந்த நிலை.

எ. முழுமை

**4.** சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்பெற்ற வுனதுபொற் பாததா மரைகண்டு
தரிசிக்க நினைவுவேணுஞ்
செகராசர் கவிராசர் கண்டுகொண் டாடவே
செல்வமொடு கல்விவேணும்
ஆர்பெற்ற அவுணர்களை வென்றுவரு வீரமும்
ஆண்மையுண் டாகவேணும்
ஆதலால் நீயெந்தன் மனதில்நின்று அகலாமல்
அநுதினம் வாழவேணும்

கார்பெற்ற சோலையும் நந்தவன மாகப்புரி
கரணநா டகசாலையும்
கன்னல்செந் நெல்கதலி வருகிழமை நெறியுலவு
கனவளமை கூறநாளும்
ஏர்பெற் றிளம்பிள்ளை தன்னில்அருள் வல்லியே
எழுவூரம் மைத்தாயெனும்
எழிலான செல்வியே அரியேறு மங்கையே
இயல்மாய னுடதங்கையே. (1)

ஆ. முடிவு

என்னகுறை செய்தேனோ ஈரோட்டி லிருந்து
தன்னந் தனியே சலித்துத் தவிப்பேனோ
வன்னவடி வேல்முருகா வந்தெனைக் கூட்டிக்கொண்டு
சென்னி மலைவழியே சிவன்மலைக்கும் போவீரோ.

## 5. பிற செய்திகள்

இச்சுவடியில், செல்லாண்டியம்மன் பேரில் விருத்தம், பழநி யாண்டவர் பேரில் மயில்விருத்தம் போன்ற தலைப்புகளில் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

# 1518. வில்லிபாரதம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1204

ஆ. ந/108

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. வில்லிபுத்தூரார்

ஆ. வில்லிபாரதம் : 17 ஆம் நாள் போர்ச்சருக்கம் : மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3 தோற்றக் கூறுகள்

அ. 37 ஏடு; 74 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சங்கையி லாவகை யமபட ராருயிர் தான்பொரு தற்கருகே
மங்கையர் சூழவி ருந்தழு துள்ள மயக்கினும் யான்மறவேன்
கங்கையு நான்மறை யுந்துள வுங்கமழ் கழலிணை யுந்திருமால்
அங்கையின் மீதொளிர் சங்கமு நேமியு மஞ்சன மேனியுமே. (1)

ஆ. முடிவு

இந்த ஐந்து தொழிலும் அறிந்து சாரதி லட்சண மென்று மனு விஞ்ஞானத்திலே அறிந்திருந்தும் நீ கோபித்துக் கொள்ளலாமோ. இனிமேற் கோபத்தை விட்டிட்டு யுத்தம் செய்வீராக வென்று இப்படிப்பட்ட தேறுதலை யெல்லாம் சொன்னான் துரியோதன மகாராசன் என்றவாறு. (52)

## 1519. அண்ணன்மார் கதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1205

ஆ. ர/35

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . .

ஆ. அண்ணன்மார் கதை

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 45 ஏடு; 90 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முத்திவி நாயகனே முக்கணனார் தம்மகனே
சத்திவி நாயகனே தற்பரனே முன்னடவாய்
கந்தனுக்கு முன்பிறந்த கற்பகமே முன்னடவாய்
தந்திமுக முடைய தனஞ்செயனே முன்னடவாய்.

ஆ. முடிவு

இரையுமது சிக்காமல் ஏங்கிமுகந் தான்வாடி
கோரைக்குத்து கொம்புகளும் குறுகிமிகத் தேய்ந்து
அரைவயிறு கத்தாமல் ஆனயிரை சிக்காமல்
காளியுடன் பக்கலிலே கடுகிவந்து தண்டனிட்டு
எனக்குமிரை சிக்காது என்னுடைய ஆண்டவனே.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1520. தனிப்பாடல்கள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1206

ஆ. ம/85

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . .
ஆ. தனிப்பாடல்கள்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 31 ஏடு; 62 பக்கம்.
ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒருபக்கத்திற்கு 5, 6 வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அந்த மானிடன் சண்டையில் நான்பட்ட
நிந்தனை என்ன சொல்வேன்.
காட்டாக் கந்தமூல பலந்தின்னும்
கயம்பு காலனுக்கு மென்ன
கூட்டா சண்டைக் கோலஞ் செய்விளை
யாட்டா மாலிக வானே என்பாட்டா. (அந்த மானிடன்)

ஆ. முடிவு

எண்முகத் திசைக்கதிப சின்னஉள்ளியக் காரா
இமையவான் வருஷ முத்திரம்
இந்துவும்பா னுவும்தீ வட்டிகயி லைமலை
எம்பிரான் உனது சீஷன்
வெண்முகைச் சரோரிகை குயில்கூவு சங்கீதம்
வேதபஞ் சாங்க பார்ப்பான்
விட்டுணுவு சோலைமலை மெய்க்காவல் காரனெனும்
வேலனே பெரியவன் காண

கண்முகங் காதுமுதல் அண்ணாங் குறிப்புங்
கலங்காம லெந்தனைக்
காக்கவந்த பதிப்பழநி யப்பனே எனப்பனே
......... ......... .........
சண்முகனே நம்பினவர் மேல்தர்க்க முடனாடி
......... ......... .........
......... ......... யொருமிக்க எதிராடிவரு
சத்துரு சங்கார வேலே. (6)

## 1521. சனியெண்ணெய்ப் பாட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 1207

ஆ. ற/86

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ........

ஆ. சனியெண்ணெய்ப் பாட்டு

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 27 பக்கம்.

ஆ. நீளம் 30 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முந்திவி நாயகனே முருகா சரசுபதியே
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே முன்னடவாய்
அத்திமுகத் தோனே அரனார் திருமகனே
வித்தைக்கு மூத்தவி நாயகனே முன்னடவாய்.

ஆ. முடிவு

வானோர்கள் உள்ளமட்டும் வாழ்த்து மிகவாழி
சந்திரருஞ் சூரியரும் தானவர்கள் மிகவாழி
உற்ற சனங்கள் உறமுறையுந் தான்வாழி
கேட்டவர்கள் எல்லோரும் கிளைசூழ வாழ்ந்திருப்பார்
சுற்றத்தா ரெல்லாஞ் சுகம்பெறவே வாழியதே
வாழி மிகவாழி வைகுண்டந் தான்வாழி.

## 1522. விவேக சிந்தாமணி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1208
ஆ. ள/37

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .........
ஆ. விவேக சிந்தாமணி
இ. நீதி நூல்
ஈ. செய்யுள் 39

3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆபத்துக் குதவாப் பிள்ளை அரும்பசிக் குதவா அன்னம்
தாபத்தைத் தீராத் தண்ணீர் தரித்திர மறியாப் பெண்டீர்
கோபத்தை யடக்கா வேந்தன் குருமொழி கேளாச் சீடன்
பாவத்தைத் தீராத் தீர்த்தம் பலனில்லை ஏழுந் தானே. (1)

ஆ. முடிவு

ஆவின மழைபொழிய இல்லம் வீழ
அகமுடையாள் மெய்நோக அடிமை சாக
மாவீரம் போகுதென்று வித்தும் தேட
வழியிலே கடன்காரன் மறித்துக் கொள்ள
சாவோலை கொண்டொரு வன்எதி ரேவர
தள்ளாத விருந்துவரச் சர்ப்பந் தீண்ட
கோவேனும் ராசாக்கள் குரைக்கால் போட
குருக்களும்வந் தொன்றாகக் கூடி னாரே. (39)

இ. முற்குறிப்பு

நா. செல்லப்பன் விவேக சிந்தாமணி

5. ..................

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்

.............

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

## 1523. ஆத்திசூடி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1209

ஆ, ள/38

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. ஆத்திசூடி

இ. நீதிநூல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. வளைந்து முறிந்த நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம். ஆ. முடிவு
தொடர் எண் : 1118 காண்க.

## 1524. தண்டலையார் சதகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1210

ஆ. ய/75

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. படிக்காசுப் புலவர்

ஆ. தண்டலையார் சதகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வரமளிக்குந் தண்டலையார் திருக்கோவி
லுட்புகுந்து வலமாய் வந்து
ஒருவிளக்கா கிலும்பசு நெய்யுடன்தாமரை
நூலிட் டொளிர வைத்தால்
கருவிளக்கும் பிறப்புமில்லை இறப்புமில்லை
கயிலாசங் காணி யாகும்
திருவிளக்கிட் டார்தமையே தெய்வமறிந்
திடும்வினையுந் தீருந் தானே. (1)

ஆ. முடிவு

நேற்றுள்ளா ரின்றிருக்க நிச்சயமோ
ஆதலித்து நினைத்த போதே
ஊற்றுள்ள பொருளுதவி அறந்தேடி
வைப்பதறி வுடைமை யன்றோ
கூற்றுள்ள மாலையருந் தண்டலையா
ரேசொன்னேன் குடம்பால் வீசும்
காற்றுள்ள போதெவருந் தூற்றிக்கொள்
வதுநல்ல கருமந் தானே, (40)

இ. முற்குறிப்பு

சின்னப் பழநியப்பன் தண்டலை மாலை

5. ..................

6. ..................

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

## 1525. சுப்பிரமணிய மாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1211

ஆ. ய/76

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .........

ஆ. சுப்பிரமணிய மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 28 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ ; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. முதல் ஏடு இல்லை. பிற நல்ல நிலை,

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கூத்தனை யுதைத்த அரனுட புதல்வர் குமரனே பழனியில்மேவு
நாத்திசை யுகந்து மலையுட னழகு நயினமுந் தோப்புட னழகு
நேத்தியும் பணிதிகோபுரத் தழகும் நீள்மதிக் கங்கையும் அழகும்
பார்த்திடத் தினமும் பரிமள வாசம் பழனியில் சுப்பிரமணியனே.

ஆ. முடிவு

அனுதின முனைநான் மனதினில் நினைந்து
அர்ச்சனை செய்துநான் இருக்க
இனியென்ன மனதுஅறு முகாத ரிசனை
ஈந்திடாம விருப்பதே னய்யா
புனிதமா யுனதுவடி யேன்நான் செய்த
பிழையெல்லாம் பொறுத்தென் முன்கந்தா
மணிமுடி துலங்க அறுமுகா தரிசனை
கொடுத்து மனதுவை சுப்பிர மணியனே. (30)

## 1526. தனிப்பாடல்கள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1212

ஆ. ற/87

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. தனிப்பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 26 பக்கம்.

ஆ. நீளம் 41 செ.மீ; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஐங்கரனே மாலை ஆறுமுக வேலர்மேல்
பொங்கமுடனே தொழுவோம் போதெல்லாம்
மங்களஞ்சேர் நயம்பெறவே பங்கில்வளர்
நற்றமிழ்க் கலைவாணி செயம் செயம் பசிபுவா.

ஆ. முடிவு

சினத்த சூரர்தனைச் செகுத்து தேவர் சிறைமீட்ட
தனக்குமுன் பூசை பெற்ற தாட்டிய கம்பீரா
மனக்கவலை தீர்த்து நித்தம் எனக்குச் செல்வந் தருவாய்
இனித்திருக்கும் தெள்ளா ரமிர்தே இடும்பிரன் சூரா.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 5. பிற செய்திகள்

இச்சுவடியில், பழனியாண்டவர் பேரில் கட்டியம், கணபதி பேரில் பத்தியம், பள்ளிக்குடத்து விநாயகர் பேரில் பத்தியம், சரசுபதி பேரில் பத்தியம், குலமாணிக்கீசுபரர் பேரில் பத்தியம், பெரியம்மன் பேரில் பத்தியம், சின்னம்மன் பேரில் பத்தியம், மூலனூர் வஞ்சியம்மன் பேரில் பத்தியம், வஞ்சியம்மன் பேரில் பத்தியம், வஞ்சியம்மன் கோவில் கறுப்பணண் பேரில் பத்தியம், பழனியாண்டவர் பேரில் பத்தியம், தூரம்பாடிப் பெருமாள் பேரில் பத்தியம், மூலனூர்பெருமாள் பேரில் பத்தியம், கடலைப் பத்தியம், வாழிப் பத்தியம், நாட்டுப்பத்தியம், பள்ளியாண்டவர் பேரில், குடும்பன் பேரில் பத்தியம் ஆகிய தலைப்புகளில் பாடல்கள் உள்ளன.

## 1527. சனியெண்ணெய்ப் பாட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 1213–1
ஆ. ற/88

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..........
ஆ. சனியெண்ணெய்ப் பாட்டு
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்.
ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4, 5 வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு
தொடர் எண்: 1207 காண்க.

## 1528. மாமியார் மருமகள் சிந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 1213–2
ஆ. ற/88

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . . .

ஆ. மாமியார் மருமகள் சிந்து

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4, 5 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை.

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீராய் மகனார் திறமுஞ் சமர்த்துங்கண்டு
ஆராய்ந்து தேடி அழகியபெண் கொள்ளவென்று
தாயுந் தகப்பனும்போய் தன்குலந் தான்பேசி
வாயும் பதறாமல் வகையுடனே கூறலுற்றார்.

ஆ. முடிவு

வந்து விலக்கினர்கள் வரிசைகேட்ட மாமியரை
இந்தப் படிசெய்தால் எல்லவர்க்கும் எளிதல்லவோ
காரியமாய்க் கேட்டுக் கடிதுவந்தாள் மருமகளும்
மாமி மருமகளும் வரிசையுடன் வாழ்ந்திருந்தார்.

இ பிற்குறிப்பு

சுப்பராயன் புத்தகம்.
டின்மத வருஷம் ஆனி மாதம் எழுதியது.

## 1529. அரிச்சந்திர புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1214

ஆ. ந/1^9

### 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. ஆசுகவிராஜர்

ஆ. அரிச்சந்திர புராணம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 54

### 3. தோற்றக் கூறுகள்

அ 10 ஏடு; 19 பக்கம்.

ஆ. நீளம் 37 செ.மீ; அகலம் 2 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சற்றே சிதைவுற்ற நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வல்லியு மகனு மந்த மறையவன் மனையிற் சேர்ந்து
சொல்லிய பணிக ளெல்லாஞ் சோர்வறச் செய்த பின்னை
மெல்லியோர் யாம மென்ன வெழுந்திருந் தேவல் முற்றி
அல்லிரண் டியாமஞ் சென்றால் அளித்தகூ ழுண்டுறங்கும். (1)

ஆ. முடிவு

விலைப்பட் டாய்பட வேவற் வார்ப்படுங்
குலைப்பட் டாய்அன்னை தோழிற் குணர்ந்திட
தலைப்பட் டாய்தமி யென்றி யத்தகா
தலைப்பட் டாயிது வோவிதி அய்யனே. (54)

## 1530. பாகவதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1215

ஆ. ந/110

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ........

ஆ. பாகவதம் : மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 5¹ பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 24 ஏடு; 46 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. கிறுக்கலான வெவ்வேறு கையெழுத்து

ஊ. நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தந்த முறியில் வைத்த
தயிர்பால் வெண்ணெய் யெட்டாமல்
இந்தியு ரலின்மீ தேறி
இளங்கோ பியர்முன் கூத்தாடி
நந்தன் மனையாள் அசோதையிரு
நயனங் களிக்க விளையாடும்
மைந்த னிருதா ளெப்பொழுதும்
மறவா ரென்றும் பிறவாரே.

ஆ. முடிவு

மின்னிடைமே னகைமுதலாம் மடவா ரேத்த
விழுமியதுந் துமிழ்முழங்க விண்ணு ளோர்கள்
பொன்னின்மலர் மழைபொழிய முனிவர் வானோர்
போற்றிசெயத் தும்புருநா ரதர்கள் பாடத்
துன்னுமணித் தாவடங்கள் மார்பி னாடத்
துலங்கநகைத் தேநடிக்குஞ் சுதனை நோக்கி
அன்னைநவ நீதமளித் துவந்து நித்தம்
அளப்பரிய வன்பினுடனமருநாளின் . . . (19)

## 1531. உலகநீதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1216-1

ஆ. ள/39

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. உலகநாத பண்டிதர்

ஆ. உலகநீதி

இ. நீதிநூல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்

ஆ. நீளம் 40 செ மீ; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து

ஊ. பதப் படுத்தப் பெறாத ஓலை, சிதைவுற்ற நிலை,

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1124 காண்க.

## 1532. நீதியொழுக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1216-2

ஆ. ள/39

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . .

ஆ. நீதியொழுக்கம்

இ. நீதி நூல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப்படாத ஏடுகள். சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீதி யொழுக்கம் நெறியுடன் படிக்க
ஆதி விநாயகன் அடியிணை சரணம்.

குடிக்கு வடுப்பட நடவாதே
கூர்மை பரசுடன் கூறாதே
தொல்லை வாக்கியம் பேசாதே
தொட்ட விரதங் குலையாதே.

ஆ. முடிவு

உம்பகட வாலிந்திரனை
உயர்தவ முடைய முனிவர்தமை
சந்திரர் சூரியர் தேவர்தமை
தாரணி தன்னில் வாழப் போற்றி
உந்தியில் யெந்நாளும் நாதர்தனம......
(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1533. மாந்திரீக நூல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1217
ஆ. ழ/32

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ...............
ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரிக நூல்.
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 2 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை.

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஓம் காளி. ஓம் சூலி. ஓம் மாகாளி. ஓம் கபாலி. வலது கையிலே இருக்கும் வளையத்தை இடது கையிலே தொட்டால் சுட்டொருகைச் சுடாதொருகை, ஏறிய ஆடை இறங்கச் சிவா. இதுக்கு எதிரிகட்டுக்கு மந்திரம்.

ஆ. முடிவு

...... மேற்கே யிருக்கும் ஆல மரத்தையும் கண்டேன். ஆல மரத்தடியிலிருக்கும் சுடுகாட்டையும் கண்டேன். சுடுகாட்டில் சுட்டவனையும் கட்டினேன். சுடாதவனையும் கட்டினேன். நாலு திசையுங் கட்டினேன். என்னை எதிர்த்து வந்த எதிராளி ஏவலையும் கட்டினேன். என் கட்டு உன் கட்டாக நிற்கச் சிவ.

## 1534. கல்வியொழுக்கம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1218

ஆ. ள/40

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. கல்வியொழுக்கம்

இ. நீதி நூல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப்படாத ஏடுகள். வளைந்து முறிந்த நிலை

எ. முழுமை.

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம். ஆ. முடிவு

தொடர் எண் : 1114 காண்க.

## 1535. வைகுந்தக் கும்மி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1219

ஆ. ர/36

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. வைகுந்தக் கும்மி

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 24 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை.

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முந்தி யுதித்த விநாயகனே—சிவன்
  முக்கண்ண னாருட தன்மகனே
தொந்திவயிற்று விநாயகனே—நான்
  சொல்லுறேன் பஞ்சவர் பாரதத்தை

ஆ. முடிவு

அத்திபுரத் தையரசாள—நம்மால்
  ஆனதெல்லாந் தம்பி சொல்லுகிறேன்கேள்
சத்திசேர் வைகுந்தம் தேடவேணும்
  சாமிபாதமினி நாட வேணும்
ஆரடா போர்வீமா வில்விசையா தம்பி
  ஆனநகுல சகாதேவா .........

(இதற்கு மேல் எழுதப்படவில்லை)

## 1536. தண்டலையார் சதகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1220

ஆ. ய/77

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. படிக்காசுப் புலவர்

ஆ. தண்டலையார் சதகம்

இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 50

3. தோற்றக் கூறுகள்

அ. 25 ஏடு; 50 பக்கம்.
ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 2 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. சிறிய கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1210 காண்க.

ஆ. முடிவு

கரப்பார்க்கு நல்லகதி வருவதில்லைச்
செங்கோலின் கடல்சூழ் வையம்
புரப்பார்க்கு முடிவிலே சொர்க்கமில்லை
நரகமில்லை பொய்யே தென்றால்
உரப்பார்க்கு நலம்புரியும் தண்டலையா
ரேசொன்னேன் ஒருகை யாக
இரப்பார்க்கு வெண்சோறு பஞ்ச முண்டோ
ஒருக்காலு மில்லை தானே. (50)

## 1537. மூதுரை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1221
ஆ. எ/41

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. மூதுரை

இ. நீதிநூல்

ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 2 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம், ஆ. முடிவு

தொடர் எண் 1150 காண்க.

## 1538. கொன்றை வேந்தன்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1222

ஆ. ள/42

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. **கொன்றை வேந்தன்**

இ. நீதி நூல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத ஓலைகள். வளைந்து முறிந்த நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1110 காண்க.

## 1539. புகையிலைக் கும்மி

1. நூலகக் குறிப்புகள்

அ 1223

ஆ. ர/37

2. உள்ளீடு; நூல் விவரம்

அ. . . . . . . . .

ஆ. புகையிலைக் கும்மி

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 29 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை,
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்கொண்ட கெவுணர் பாதம்
சிறப்புடன் சட்ட திட்டம்
பார்கொண்ட லோக மெல்லாம்
பவுசுடன் வாழ்கச் செய்தார்
பேர்கொண்ட சிறிய தாயார்
பிள்ளாச்சி நீதி செப்பக்
கார்கொண்ட முகத்தான் தொந்திக்
கணபதி காப்புத் தானே,

ஆ. முடிவு

கங்கை குலத்தில் பிறந்த வேளாளன்
கவிதையைக் கேட்டுத் துரைகள் மெச்சி
கனத்தகுடி யாய்ச்சகல சனத்தையும் ரட்சித்து
காரக மானது முண்டா மென்பார். (51)

இ. முற்குறிப்பு

பெரியண்ணப் புலவன் மகன் சாமிப் புலவன் புகையிலைக் கும்மி ஏடு.

## 1540. மீனாட்சியம்மை கலிவெண்பா

1. நூலகக் குறிப்புகள்

அ. 1224-1
ஆ. த/32

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சிதம்பர சுவாமிகள் போரூர்
ஆ. மீனாட்சியம்மை கலிவெண்பா
இ. பிற தோத்திரங்கள்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்.
ஆ. நீளம் 25 செ. மீ.; அகலம் 2 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி
உ. சுமாரான எழுத்து.
ஊ. சற்றே சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே சேயிழையே
காராரும் மேனிக் கனங்குழலே — ஆராயும்
வேதமுத லாகிநின்ற மெய்பொருளே மின்னொளியே
ஆதி பராபரையே அம்பிகையே — சோதியே

ஆ. முடிவு

தந்தென்னை ஆண்டுகொண்டு சற்குருவாய் என்னிடத்தில்
வந்திருந்து புத்தி மதிவிளைத்து — சந்ததமும்
நீயே துணையாக நின்றுரட்சிக் குங்கருணை
தாயேநின் தாளே சரண்.

## 1541. சுப்பிரமணியர் மந்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ 1224–2
ஆ. த/32

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . .

ஆ. சுப்பிரமணியர் மந்திரம்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்.

ஆ. நீளம் 25 செ. மீ; அகலம் 2 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சற்றே சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஓம் அரிதிருமருகா முக்கணன் மகனே
ஆனைக்கிளைய அயில்வேல் முருகா
அடியேன் வல்வினை அகற்றிடும் ஒருகை
திரிபுர மெரியச் சிரிப்பவர் மகனே.

ஆ. முடிவு

இடி இடி இடித்து பிடி பிடி பிடித்து
மறி மறி மறித்து மடி மடி மடித்து
அறுவது அறுத்து துணிதுணி துணித்து
படு படு பட்டு கெடு கெடு கெட்டு
பல பல பறந்தோடிப் போக சுவாகா.

## 1542. சிவவாக்கியர் பாடல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1224-3
ஆ. த/32

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சிவவாக்கியர்
ஆ. சிவவாக்கியர் பாடல்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 20

### 3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்.
ஆ. நீளம் 25 செ. மீ.; அகலம் 2 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சற்றே சிதைவுற்ற நிலை.
எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரியதோந மச்சிவாயம் ஆதிஅந்த மானது
ஆறுகோடி நூறுதேவர் அன்றுரைத்த மந்திரம்
சுரியதோர் அட்சரத்தை உன்னி சொல்லுவேன் சிவவாக்கியம்
தோஷபாவ மாகைமாகை தூரதூர ஓடவே
கரியமால் கருடன்முன்பு யானுரைத்த புன்சொல்லைப்
...... ...... ...... ......
பெரியபேர்கள் சிறியபேர்கள் பெற்றகற்ற பேர்களும்
பேதைநா னுரைக்கின்றேன் பிழைபொறுக்க வேணுமே. (1)

ஆ. முடிவு

உருவுமல்ல அருவுமல்ல ஒளியுமல்ல வெளியுமல்ல
மருவும்வாசம் கெந்தமல்ல மற்றநாடி யுற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல பேசநாதி தானுமல்ல
அரியதாகி நின்றநேர்மை யவர்கா............

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1543. ஆத்திசூடி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1225

ஆ. ள/43

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. ஆத்திசூடி

இ. நீதி நூல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து

ஊ. பதப்படுத்தப் பெறாத ஓலைகள். வளைந்து முறிந்த நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம். ஆ. முடிவு.

தொடர் எண் : 1118 காண்க.

## 1544. கொன்றைவேந்தன்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1226
ஆ. ள/44

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்
ஆ. கொன்றை வேந்தன்
இ. நீதி நூல்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.
ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. பெரிய, கிறுக்கலான கையெழுத்து.
ஊ. பதப்படுத்தப் பெறாத ஏடுகள். வளைந்து முறிந்த நிலை.
எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம். ஆ. முடிவு.

தொடர் எண் : 1110 காண்க.

## 1545. உலக நீதி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1227
ஆ. ள/45

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. உலகநாத பண்டிதர்
ஆ. உலக நீதி
இ. நீதி நூல்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்.
ஆ. நீளம் 42 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. பெரிய கையெழுத்து.
ஊ. பதப்படுத்தப் பெறாத ஏடுகள்.
வளைந்து முறிந்த நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு
தொடர் எண் : 1124 காண்க.

## 1546. உண்ணாமுலை சதகம்

1. நூலகக் குறிப்புக

அ. 1228
ஆ. ய/78

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . .
ஆ. உண்ணாமுலை சதகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 60

## 3. தோற்றக் கூறுகள்

அ. 40 ஏடு; 80 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சற்றே கிறுக்கலான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உலகமதில் மேவிய சராசரத் தெழுங்கையில்
உண்டான பேத மதனில்
உள்ளுயிர தாய்நின்று விளையாடி யுங்கருணை
ஓங்கு பிரணவ உருவமாய்
இலகுதிரி யட்சரச் சடாட்சர வட்டச் சரத்தினில்
இயபஞ் சாட்சரத் தோடு
ஏற்குமைம் பத்தியோ ரட்சரந் தன்னிலும்
இயல்பஞ்ச கர்த்திய முதலாய்ப்
பலபலவி தங்களாய் நின்றபொருள் நீயென்று
பழமறைகள் முறையி டுதலாற்
பகரவினி வேறுமொரு தெய்வமுண் டோசொலும்
பரப்பிரம ஞான வடிவே
தலவியரு ளோங்கார ரீங்கார வல்லிசிவ
சத்தியே அருணை நகர்வாழ்
தார்மேவு அண்ணாமலை ஈசுரர் பாலே
எந்நாளு முலாவிய தாயே
உண்ணாமுலை நாயகியே, (1)

ஆ. முடிவு

பூவினில் மகத்தான சாலைநீர்ப் பந்தலும்
புகழுட னமைத்தல் தருமம்
புட்த்பஞ் சிறந்திரு நந்தவ னப்பயிர்
பொருந்தவே செய்தல் தருமம்
கோவிலணி சிகரகோ புரமண்ட பஞ்செய்யும்
கொள்கையு மநேக தருமம்
கூவந்த டாகங்கள் குழிவுசெய் வித்தல்
கூறவரி தான தருமம்

யாவரில்லா தவர்க்குரிய மணமே செய்வது
மகிமை யுற்ற தருமம்
அன்னசத்தி ரமுடனே நன்னய மடங்களுண்
டாக்குவது உயர்ந்த தருமம்
தாவுபுகழ் சிறந்தோங் குபரி பூரண
தயாபரி யருணை நகர்வாழ்
தாரமே யண்ணாமலை ஈசுவரர் பாலே
எந்நாளு முலாவிய தாயே
உண்ணாமுலைநா யகியே. (60)

## 1547. நீதிசாரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1229

ஆ. ள/46

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ....................

ஆ. நீதிசாரம்: மூலமும் உரையும்

இ. நீதிநூல்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 43 ஏடு; 86 பக்கம்.

ஆ. 35 நீளம் செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அனைத்துல கெங்குந் தானாய் அமரர்கோன் தேவ நாயகி
நினைத்தவ ரிடத்தில் நித்தம் நேசமாய் நெடுமால் பாதம்
மனத்தினி லிருத்தி முன்னாள் மறைவலோர் உரைத்த நீதி
இனத்தினிற் திரட்சி யுள்ளா சாரம் இயம்ப லுற்றேன்.

ஆ. முடிவு

ஸ்ரீயானவளுக்கு லட்சணம், காரிய ந்திலே அடியாளைப் போலவும், புத்தியிலே மந்திரியைப் போலவும், ரூபத்திலே லட்சுமிமா தேவியைப் போலவும், பொறுமைக்குப் பூமா தேவி யைப் போலவும், சினேகிதத்துக்கு மாதாவைப் போலவும், சயனத்திலே வேசியைப் போலவும் இந்த ஆறு குணமுடையவள் பதிவிரதை என்றவாறு. (43)

# 1548. ஏகாதசிப் புராணம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1230

ஆ. ந/111

## 1549. சனியெண்ணெய்ப் பாட்டு

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1231

ஆ. ற/89

### 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. ..........

ஆ. சனியெண்ணெய்ப் பாட்டு

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம்.

ஆ. நீளம் 29 செ. மீ.; அகலம் 2•5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்.

தொடர் எண் 1 1207 காண்க.

ஆ. முடிவு

காசிக்கு போனபலன் கைலாச நாதரைப்போல்
சீரங்க ராயருக்குத் திருநாமம் பெற்றபலன்
மக்கள்பதி னாறுபெற்று பெருவாழ்வா வாழ்ந்திருப்பார்
மூங்கில்போலக் கிளைகிளைத்து முசியாமல் வாழ்ந்திருப்பார்

## 1550. ஒயில்கும்மி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1232

ஆ. ர/38

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. முத்துப் புலவர்

ஆ. ஒயில்கும்மி

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 35 ஏடு; 70 பக்கம்.

ஆ. நீளம் 29 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. சிறிய, அழகிய கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்கொண்டி லங்கிவள ருந்தலைய நாட்டிற்
சிறப்புற்ற ரங்க மலைவாழ்
சிலகார மானமலை மல்லிலிங் கர்பாதம்
தினங்கருத் தில்து தித்துத்
தேவிபெரி யாள்மல ரடியிளம் பிள்ளை
சேவடித னைப்ப ணிந்து
செயலுற்றிடும் பாம்பந கரிலுறை பகவதி
செல்விதன் பொற்ப தத்தை

பேர்கொண்டி டத்துதி ச்சுவண் டைக்குரிய
பெருமாள் தனைப்ப ணிந்து
பின்னுமக ரத்துமுத்தா லம்மனங் கண்ணனூர்
பெருகுமக மாயி சரணம்
பேசரிய பூவாண்டி யுடன்வீர பத்திரன்
பெருமைகாத் தவராயனும்
பிரியமுட னேமனது கந்துபின் முசரியில்
பேச்சியங் காயி வீரன்
பார்கொண்ட கூத்தளை தன்னிலுரை கன்னிமார்
பகரு மீச்சங் காடுறை
பணிமதுரை வீரதுரை யாச்சியும் பேய்ப்புடவி
பந்திவள தேம ராசன்
பண்புடன் எனதுகுல தெய்வமென் றேமிகப்
பணிந்துபின் முகலநகரில்
பரிவுடன் வளர்சலதி சலமதுக் கரைவேணி
பகரைதுரோ பாதையு மாலும்
கார்கொண்ட நாச்சிமா ருங்காளி யம்மனுங்
கதித்தசெல் லாயி கன்னி
கரதநல் லடியுறை கருப்பண்ண ரன்னையுங்
கருத்தினில் மிகத்து தித்து
காசினியிலே ஒயிற்கும் மிகளு ரைக்கவே
கனதிட்டி பில்லி யேவற்
காற்றுமணு காமலே வந்துமுனின் றென்னைக்
காத்துரட் சிக்க நன்றே. (1)

ஆ. முடிவு

கருணைமொழி திருமுகங்க ளாறு வாழி
கரகநிலைப் பன்னிரண்டு கையும் வாழி
இருசரணம் எந்தலைமே லோங்கு நாளும்
இனிதுகவி லையப்பாலு மினிது வாழி
அருள்பெறவே அமரர்சிறை மீட்டாய் எங்கள்
அருநாடு திருவான தாகும் வாழி
மருவளரும் பைங்கடம்பத் தாரும் வாழி
வாழிபெரு மயில்சேவற் கொடியும் வாழி தானே.

## 5. பிற செய்திகள்

இறுதியிலுள்ள காப்பேட்டில்,சில பிறந்த நாள் குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன.

## 1551. தனிப்பாடல்கள்

**1.** நூலகக் குறிப்புகள்

அ. 1233

ஆ. ற/90

**2.** உள்ளீடு: நூல் விவரம்

அ. .................

ஆ. தனிப்பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

**3.** தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

**4.** சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீருறையும் வடகயிலை வரையில்செழித் தோங்கு
சிவனும்பார் வதியும்அருள் சிறந்தபா லகனே
காருறையும் மேகநிற மேனிமால் மருகா
காங்கயவேள் தனக்குமுனே வந்தகா ரணனே
தாருறையுங் கற்பகச்செந் தேன்பாலும் அமிர்தம்
சாலவுகந் தமுதுகொள்ளும் தந்திமுகத் தோனே
பேருறையுந் தவயோகர் புந்தியமர்ந் தோனே
புகழ்பரவும் சரவணையில் சத்திவிநா யகனே.

ஆ. முடிவு

தப்பாமல் அஞ்சுபொன் கொடுத்தனுப்பு அய்யா
தரவுகுறை யொருநாளும் வருவதில்லை அய்யா
வந்துவந்து தினமும் நாங்கள் வரிப்போட்டதில்லை
வன்மையுடன் கடன்குடுத்து வாங்கவு மில்லை.

5. பிற செய்திகள்

இச்சுவடியில், விநாயகன் பேரில், விநாயகன் பேரில் கட்டியம், சுப்பிரமணியர் பேரில், செல்லாண்டியம்மன் பேரில், எழுலூரம்மன் பேரில், மாரியம்மன் பேரில், சரசுபதி அம்மன் பேரில், வாழி, பழநிக் கவுண்டன் பேரில், செல்லப்பகவுண்டன், சின்னய்யகவுண்டன், கடலைப்பாட்டு, கடலைப் பதியம், முத்துக் கவுண்டன் பேரில், கரட்டு முத்துக்கவுண்டன், சாவனைக் கவுண் டன் பேரில், சோளக்காட்டு முத்துக்கண்ணன் பேரில், தூரம் பாடி குமார குள்ளக் கவுண்டன், தூரம்பாடி நாச்சிமுத்துக் கவுண்டன், எட்டிக் கவுண்டன் பேரில், சின்னய்ய கவுண்டன் பேரில், கணபதி நாச்சிமுத்துக் கவுண்டன், பெரியண்ணன்பேரில் குப்பிசகியகவுண்டன் பேரில், ராமக்கவுண்டன் பேரில், புள்ளாக் கவுண்டன் பேரில், நஞ்சப்பக் கவுண்டன் பேரில், செம்பங்காளி, நல்லகுமார கவுண்டன் பேரில் பத்தியம், தீர்த்த கவுண்டன் பேரில், நாட்டு வளப்பம் போன்ற தலைப்புகளில் பாடல்கள் உள்ளன.

## 1552. பட்டயம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1234

ஆ. ற/91

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..................

ஆ. கோடிகன்னிகாதானம் ஜீயர் பட்டயம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்.

ஆ. நீளம் 21 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத ஓலைகள். வளைந்து முறிந்த நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஸ்ரீ ஓது வேத மார்க்க பிரிதி..............சாரிய உபய வேதாந்தாசாரியயூர் கோவில் திருமலைப் பெருமாள் கோவில் ...........குருகோடி கன்னிகா தானம் ஸ்ரீரங்கர் தலம் பூதலம் படைத்த குருபீடம்......கஸ்தாமிபட்டியில்......யாரவர்கள் தாராபுரம் தாலூகா முளையாம்பூண்டிக் கிராமம் கொம்மாபாளையத்திலே யிருக்கும் சுப்பத்தாசனுக்கு எழுதிக் கொடுத்த விருது சமய பட்டயம் என்னவென்றால்......

ஆ. முடிவு

ஸ்ரீ நமோ நாராயணமூர்த்தி கிருபா கடாட்சத்தினாலே பதினாறும் பெற்றுச் சுகமாய் இருப்பார்கள். இந்தப் படிக்கு, திருமலைத்தாத்தாசாரிய சுவாமியாரவர்கள்ஸ்ரீரங்கநாதசுவாமி கோயில் முன்னே எழுதிக் கொடுத்த திருமுகப் பட்டயம்.

## 1553. தனிப்பாடல்கள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1235

ஆ. ற/92

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. தனிப்பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 28 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2.5 செ.மீ

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ, சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாரியம்மன் பேரில் கொச்சகம்

செப்பணிந்த கன்னிதேவி மகமாயி—உன்
பொற்பாதந் தஞ்சமடி பூலோக மாண்டவளே
எப்போது மெனைக்காத்து ஈடேற ரட்சிகண்டாய்
மெய்ப்பான தேவூரு மேவுமுத்து மாரியம்மாள்.

ஆ. முடிவு

கற்கண்டு ரசயிதழிற் பற்குறிக ளேதுசொல்வாய் மகளே
கந்தரெனுந் தென்பழனி—வந்துஉன்னைச் சேர்ந்து
அணைந்தாரோ—அதுகேள்
சொற்கொண்டு கிளியுடனே மிக்கபசை வருத்தி வக்குப்போது
துலங்கு கோவைக் கனியிதென்று
சோங்குகிளி கோதியது தாயே. (4)

## 5. பிற செய்திகள்

இச்சுவடியில், மாரியம்மன் பேரில் கொச்சகம், சூரியன் பேரில், விநாயகன் பேரில், அறப்பளீசுவரர் பேரில், சிவன் மலை யாண்டவர் பேரில் விருத்தம், பழனியாண்டவர் பேரில் தாய் மகள் ஏசல் போன்ற தலைப்புகளில் பாடல்கள் உள்ளன.

# 1554. தனிப்பாடல்கள்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1236

ஆ. ற/93

## 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ................

ஆ. தனிப்பாடல்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 34 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.;

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரவணை துயின்ற மாயன் ஆழிமால் மருகன் நாட்டில்
பரிவுடன் மகாநவமிப் பத்தியம் பாடி வந்தோம்
பெரியவர் நல்லோர் கேட்கப் பிரியமாய் வரிசைநல்கி
அருமையாய் எங்களுக்கு அவல்வெல்லம் அருளுவீரே.

ஆ. முடிவு

மதமுடனே பெரியதன மாக்கிவைத்த பணமே
வையகத்திற் பாடுபட்டுத் தேடிவைத்த பணமே
கதையுடனே கம்புகொண்டு தவிடுவித்த பணமே
கையை விட்டு ஐயய்யோ போறாயோ பணமே.

## 5. பிற செய்திகள்

இச்சுவடியில், மாணிக்கமூர்த்தி பேரில் பராக்குப் பத்தியம், பள்ளிக்குடத்து விநாயகன் பேரில், கோவிற் பிள்ளையார் பேரில், சரசுபதி அம்மன் பேரில், பால்மரத்துப் பிள்ளையார் பேரில், ஆதிநாராயணப் பெருமாள் பேரில், பவளக்கொடி அம்மன் பேரில், சோளீசுபரர் பேரில் பத்தியம், பச்சைநாயகி யம்மன் பேரில், பழனியாண்டவர் பேரில், கதித்தமலை யாண்டவர் பேரில், மாரியம்மன் பேரில் பத்தியம், மன்னாருசாமி பேரில், கன்னிமார் பேரில், அருளுமலை யாண்டவர் பேரில், அப்பச்சி மார் பேரில், கரிச்சிக்குமார் பேரில், நாட்டுப் பத்தியம், பொதுப் பத்தியம், கடலைப் பத்தியம், வாழிப் பத்தியம், லோபிப் பத்தியம் ஆகிய தலைப்புகளில் பாடல்கள் உள்ளன.

# 1555. கதிர்காம மாலை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1237
ஆ. ய/79

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. கதிர்காம மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்.

ஆ நீளம் 32 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத ஏடுகள் நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நித்த முனைத்துதித்து நீணிலத்தோர் கொண்டாடப்
பத்துலட்சங் கோடிதமிழ் பாடவர மேயருள்வாய்
அத்த னறுமுகவா ஆயோன் மருகோனே
கர்த்தனே யெங்கள்கண்டிக் கதிர்காம வேலோனே.

ஆ. முடிவு

மணக்கோல மாய்கையினால் வந்தீர மிதியாமல்
இணக்கோ யவளுமக்கு இட்டமருந் தின்பிசகோ
பிணக்கோ யென்னமக்கு பேசாமல் மோடிபண்ண
கணக்கோதான் சொல்லுங்கண்டிக் கதிர்காம வேலோனே.(20)

இ. முற்குறிப்பு

பாரோர் புகழவரும் பங்குனி உத்திரத்தில்
ஆறாறு வீதிதனி லணுகினார்—நேரே
பணிச்சப்பொன் தரித்துப்பின் கிண்கிணிச் சத்தம்
கிணுக்குக் கிணுக்கென்று கேள்.

பழனியப்பன் கதிர்காம மாலை.

## 1556. நாலுமந்திரி கதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1238

ஆ. ம/20

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..........

ஆ. நாலுமந்திரி கதை

இ. உரைநடை இலக்கியம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 79 ஏடு; 158 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரி.

உ. சற்றே கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அழகாபுரி என்றொரு பட்டணமுண்டு. அந்தப் பட்டணத்துக்கு அழகேந்திரன் என்றொரு ராசாவுண்டு. அந்த ராசாவுக்குக் கோட்டை எப்படி இருக்குமானால் ஒரு பனை பயிர் பிரமாணம். இருப்புக் கோட்டை, செப்புக்கோட்டை, ஈயக் கோட்டை, வெங்கலக் கோட்டை இப்படி நாலு கோட்டையும் முப்பத்திரண்டு தலை வாசலுமுண்டு.

ஆ. முடிவு

கற்றோர் கேட்டோரும் இப்படிக் கொத்தபேரெல்லாம் அறிவும் புத்தியும் மதியும் தீர்க்காயுசாய்த் தயவும் பொறுமை

யும் கல்வியும் செல்வமும் யோகமும் ஞானமும் தவமும் செபமும் உண்டாகி எதிராளிக்கு உத்திரப்பிருதி உத்திரமுஞ் சொல்லி இப்படிக் கொத்த பேர்களையெல்லாம் அம்பாளுடைய கடாட்சத்தினாலேயும் தண்டாயுதபாணி ரட்சிக்கவும்.

இ. பிற்குறிப்பு

தாராபுரந் தாலுகா தூராம்பாடி கிராமம் நயினா கவுண்டன் வலசிலேயிருக்கும் தேவணக் கவுண்டன் மகன் பெரியண்ணன் நாலு மந்திரி கதை. துன்முகி வருஷம் ஆவணி மாதம் 27 ஆம் தேதி எழுதி நிறைவேறினது. முற்றும்.

இந்த நாலு மந்திரி கதையை எடுத்த பேர்கள் படித்துப் பிரசங்கம் செய்து உடையான் வசம் ஒப்புவிச்சுப் போடவும்.

## 1557. தனிப்பாடல்கள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1239

ஆ. ற/94

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . .

ஆ. தனிப் பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 33 ஏடு; 66 பக்கம்.

ஆ. நீளம் 34 செ.மீ.; அகலம் 2 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

குள்ளக் குள்ளனென் குஞ்சரி முகவனே
வெள்ளிக் கொம்பனே விநாயகனைத் தொழும்.
அஞ்சு கரத்தனே ஆனை முகத்தனே
நெஞ்சிலே வைத்து நித்தம் நினைப்பனே.

ஆ. முடிவு

குருஉரைக் காதஉப தேசம் பரிமளங்
கொண்டிருக் காத மலரும்
கூறிய கணவனில் லாததோர் வனிதையுங்
குஞ்சர மில்லாத தளமும்
தருவெடுத் துற்பனமு ரைக்காத மந்திரியைத்
தனையநில் லாத செல்வமும்
சமயகா லங்களுக் குதவாத பந்துவுந்
தனமில் லாதவன் நிலைமையும்
நெறிமுறை யில்லாத வேந்தனுங் கபடத்து
நேமித் தவிசு வாசமும்
நேருடன் பயிர்விளைவு தருகாத பூமியில்
நின்புகழ் சொல்லாத பேரும்
சரிவரப் புவியின்மிசை யிருந்தென்ன காரியஞ்
சாருகமழ் யேது முளதோர்
தாரமே யண்ணாமலை ஈஸ்வரர் பாலே
எந்நாளு முலாவிய தாயே
உண்ணா முலைநா யகியே.

## 1558. மதுராபுரி அம்பிகை மாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1240

ஆ. ய/80

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. குலசேகர பாண்டியன்

ஆ. மதுராபுரியம்பிகை மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1111 காண்க.

இ. பிற்குறிப்பு

ரக்தாட்சி வருஷம் கார்த்திகை மாதம் 18 ஆம் தேதி அம்பிகை மாலை எழுதி நிறைவேறினது. சம்பூரணம்.

## 1559. அரிச்சந்திர விலாசம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1241

ஆ. ற/95

அ. . . . . . . . . . . .

ஆ. அரிச்சந்திர விலாச நாடகம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 30 பக்கம்.

ஆ. நீளம் 30 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தேடியே லோகி தாசன் சிறந்தபுற் றடியின் கீழே
மூடியே தர்ப்பைப் புல்லை முன்னெதிர் கண்டு தானும்
ஓடியே வரும்போ தங்கே உயர்ந்தகோ சிகனார் மாயை
நாடியே கிருஷ்ண சர்ப்பம் நலமுடன் வந்த தன்றே.

ஆ. முடிவு

சூகரத்தின் வடிவெடுத்த சுந்திரா சவுந்திரா
ஏகலோக நாயகாநீ எங்குமே நிறைந்தவா
மேகமாய மறைவில்நின்ற வேதஞான தேசிகா
நாகமீதில் மேவுகின்ற ராமராம ராமனே. (2)

இ. பிற்குறிப்பு

கோயமுத்தூர் ஜில்லா தாராபுரம் தாலுகா முளையாம் பூண்டிக் கிராமம் கவுண்டன் வலசு நாச்சிமுத்துப் புலவன் மகன் அங்கமுத்துப் புலவன்......சாதாரண வருஷம் மாசி மாதம் 10ம் தேதி புதன்கிழமை எழுதியது.... முற்றிற்று.

## 1560. கிருட்டிண விலாசம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1242

ஆ. ற/96

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . .

ஆ. கிருட்டிண விலாசம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 80 ஏடு; 160 பக்கம்.

ஆ. நீளம் 31 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆரணப் பொருளே போற்றி அகிலநா யகனே போற்றி
பாரளந் தவனே போற்றி பாண்டவர் தூதா போற்றி
வாரணம் அழைத்த போது வந்துகாத் தவனே போற்றி
காரண வஸ்து வான கண்ணனே போற்றி போற்றி.

ஆ. முடிவு

இருக்குமந்த வசுதேவர் மந்திரி மாறும்
ஏந்திழையாள் தேவகி ரோகணியுங் கூடச்
சிறக்கவே வடமதுரை தேசந் தன்னில்
செல்வன்போல் வாழ்ந்திருந்து சுகமே கொண்டார்

சிறக்கவே கோவஸ்திரி மதன ரூபன்
சிலமேள வாத்திய முடன்தா னெழுந்து
சுருக்காகத் துவாரகா புரியை நோக்கிச்
சொல்லால் மாயவனும் மறைந்திட் டானே.

இ. பிற்குறிப்பு

தாருண வருஷம் ஆடி மாதம் 8 ஆம் தேதி பிடாரப்ப கவுண்டன் புத்தூரிலேயிருக்கும் பிடாரப்ப கவுண்டன் மகன் முத்தப்பனுக்கு கிருஷ்ண விலாசம் எழுதிக்கொடுத்தது. எடுத்தவன் வாசித்துப் பார்த்து உடையவன் வசம்கொடுக்க வேண்டியது.

## 1561, கணிதநூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1243

ஆ. ற/97

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ........

ஆ. கணித நூல்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 74 ஏடு; 148 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்படைத்த வுந்திச் செழுங்க மலத்தயனைப்
பார்படைக்க வென்று படைத்தருளுங்-கார்படைத்த
யோதமா மேனி யுரவோ னுலகளந்த
பாதமே யிங்கெமக்குப் பற்று. (1)

ஆ. முடிவு

(சில கணக்குகள் எழுதப்பட்டுள்ளன)

## 1562. வைகுந்தக் கும்மி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1244

ஆ. ர/39

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..........

ஆ. வைகுந்தக் கும்மி

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 63 ஏடு; 126 பக்கம்.

ஆ. நீளம் 35 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ, தொடக்கம்

தொடர் எண் : 1219 காண்க.

ஆ. முடிவு

சந்தே......வே வைகுந்தக் கும்மியைச்
சாற்றினேன் எல்லோரும் தான்....
கந்தன்......வாழியதே – நல்ல
கயிலை மலையீசன் தான் வாழி
செந்தமி....னும் வாழியதே – நல்ல
செந்திருமால் உமைதான் வாழி
வாழி வைகுந்தமும் வாழியதே – இந்த
வைகுந்தக் கும்மி முடிந்ததுவே.

# 1563. பழநியாண்டவர் கும்மி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1245–1

ஆ, ர/40

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..........

ஆ. பழநியாண்டவர் கும்மி

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.
ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.
இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம். ஆ. முடிவு
தொடர் எண் : 1189–1 காண்க.

## 1564. பழநியாண்டவர் ஆனந்தக் களிப்பு

1. நூலகக் குறிப்புகள்

அ. 1245-2
ஆ. ர/40

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............
ஆ. பழநியாண்டவர் ஆனந்தக் களிப்பு
இ. நாட்டுப் பாடல்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்
ஆ. நீளம் 40 செ.மீ; அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் ; 1189–2 காண்க.

ஆ. முடிவு

சாதியி லொசந்த கற்பூரம் – சீனச்
 சர்க்கரைக் கற்கண்டு சாம்பி ராணியேலம்
கோதில்லாத தேன்பாலும் நெய்யும் – இளநீர்
 கோழிப்பிச்சன் கனிகதலி மாம்பழமும்
தீதில்லாச் சந்தனம் சவ்வாதும் – நல்ல
 திருநீறு முந்திரிக் கனியும்மாம் பழமும்
சோதிப்பிர காசக் காவடிகள் – வைத்துத்
 தோளில்மே லேறியே வருகிறார் பாரீர். (14)

## 1565. எம்பெருமான் சதகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1246

ஆ. ய/81

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ........

ஆ. எம்பெருமான் சதகம்: மூலமும் உரையும்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 95 ஏடு; 190 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சற்றே கிறுக்கலான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆழ்வார்கள் பன்னிருவர் பாடல் போற்றும்
அரிபத்தர் கோபாலர் கிஷ்ணர் அன்பால்
வேள்வியால் மெஞ்ஞான நெறியி னாலும்
மிக்கதொரு குருகிருபை கடாச்சத் தாலும்
தாழ்வில்லா னெம்பெருமாள் சதகம் நூறு
சாற்றினார் போற்றியென்பா யென்று வண்ணம்
கேள்வியால் அநுதினமும் கீர்த்திப் பார்கள்
கிளர்விட்டுணு வைகுண்டத் துளராய் வாழ்வார்.

ஆ. முடிவு

கருட வாகனமுடைய கேசவனாகிய சுவாமியார்கள் பேரின்பங்களைத் தரப்பட்ட பாதார விந்தங்களைக் கண்டு சேவித்து, ஈடேறும்படிக்குக் குருவானவர் சொல்லப்பட்ட ஏகாந்த உபதேச பொருளை நம்பி யெண்ணுவதே மெஞ்ஞான மாகிறது. அப்படிக் கடைத்தேறப் பண்ணும் எம்பிரான் என்றவாறு. (100)

இ. பிற்குறிப்பு

துந்துபி வருஷம் மார்கழி மாதம் 16 ஆம் தேதி திங்கட் கிழமை பரணி நட்சத்திரம் தசமி ஏகாதசியுங் கூடின சுபதினத்தில் எழுதி முடிந்தது. எம்பெருமாள் சதகம் முற்றும்.

கோயமுத்தூர் ஜில்லா தாராபுரந் தாலுகா தூரம்பாடிக் கிராமம் நத்தப் பாளையம் பெரியணப் புலவர் மகன் சாமிப் புலவர் எம்பெருமாள் சதகம். எழுதி முடிந்தது. முற்றும். சம்பூரணம்.

## 1566. தனிப்பாடல்கள்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1247

ஆ. ற/98

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. தனிப்பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 24 ஏடு; 48 பக்கம்.

ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. சுமாரான கையெழுத்து,

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை.

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சித்த மிளக லையோ செவியுனக்
குக்கேட் கிலையோ
குத்தம் பொறுத்து என்னைக் கொண்டணைத்
தாளொண் ணாதோ
மெத்த வரமே கொடுத்து விளங்கும்
புகழ்ச்சொல் லெனக்குக்
கர்த்தரு டன்நடம் புரியுங் கருணை
வஞ்சிநா யகியே. (1)

ஆ. முடிவு

அய்ய னென்றாற் தீவினைகள்
அணுகா தொருநாள் அணுகாது
அய்ய னென்றாற் சூனியங்கள்
அந்தச் சணமே ஓடிவிடும்
அய்யன் தனக்குக் குடியாகி
அடியேன் துயரம் அகற்றிவிடும்
அய்ய னென்றால் வள்ளிநகர்
அந்தப் புரத்து அய்யாவே. (1)

## 5. பிற செய்திகள்

இச்சுவடியில், மூலனூரு வஞ்சிநாயகியம்மன் பேரில் கொச்சகம், கணக்கு, முருகனுக்கு, விருத்தம், விடுபாட்டு, சினேந்திரமாலை, தனிநாள், பாட்டு, தனிநாளில் பெண் பிள்ளை ருதுவானால் ஆகாத நாள், எழுத்தாணி அங்குலம் பார்க்கப் பட்டது, கருடப்பத்து, சரசுபதி பேரில், நாட்டுராயன் பேரில் சூரியன் பேரில் போன்ற தலைப்புகளில் பாடல்கள் உள்ளன.

# 1567. மதுராயுரி அம்பிகை மாலை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1248

ஆ. ய/82

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. குலசேகரபாண்டியன்

ஆ. மதுராபுரி அம்பிகை மாலை

இ சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 30

## 3. தோற்றக் கூறுகள்

அ. 30 ஏடு; 60 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1111 காண்க.

# 1568. முந்திரி வாய்பாடு

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1249

ஆ. ற/99

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. முந்திரி வாய்பாடு

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பதப்படுத்தப்பெறாத ஏடுகள். வளைந்து முறிந்த நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முந்திரி லக்கம் முதலுடன் படிக்கத்
தந்தி முகத்துத் தாளே சரணம்
எண்ணிய லக்கம் இயல்வுடன் படிக்கக்
கண்ணன் மருகன் கணபதி காப்பு.

ஆ. முடிவு

(கோடி வரை எண்கள் எழுதப்பட்டுள்ளன)

இ. முற்குறிப்பு

கருப்பணன் முந்திரிலக்கம்

# 1569. மன்றாடியார் வம்சாவளி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1250

ஆ. ற/100

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. பழைய கோட்டை சர்க்கரை மன்றாடியார் வம்சாவளி

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 34 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பதப்படுத்தப்பெறாத ஓலைகள். வளைந்துமுறிந்தநிலை

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காங்கயந் தாலுகாக்குச் சேர்ந்த பழைய கோட்டையிலிருக்குஞ் சர்க்கரைக் கவுண்டர் எண்ணப்பட்ட கங்கருடைய வம்சாவளி முதலான வரலாறு என்னவென்றால், பூருவத்திற் கலியுக சகாரத்தம் 807 க்கு மேல் சோழ ராசாத் துரத்தினத்தில் ஆதொண்டச் சக்கரவர்த்தி நாளையிற் தன்னுடைய தேசத்திலே இருக்கப்பட்ட வேளாளச் சாதியிற் கலியாணம் பண்ண வேணும் என்கிறதாக............

ஆ. முடிவு

......எங்கள் வசம் பாரம்பரையிலே, ராச்சியம் பரிபாலனம் பண்ணப்பட்ட பிரவுக்குள் தயவு பண்ணி விட்டா சருவ மானிய முதலானதுகளும் சாரியாக நடப்பி வைக்க வேணும் என்று என்னுடைய மானம் மரியாதை தெரிந்து கார்பரத்தில் சுகிக்க வேணுமென்று, நான் மிகவும் வணக்கமாய் வழங்கிக் கொண்டு யிருக்கிறேன்.

இ. பிற்குறிப்பு

தமிழ் பிரபவ வருஷம் ஆனி மாதம் 29 ஆம் தேதியில் செப்பேட்டினுள்ளபடிக்கு நகல் எழுதினது. சாமிப் புலவனார் எழுதினது.

## 1570. தனிப்பாடல்கள்

**1.** நூலகக் குறிப்புகள்

அ. 1251
ஆ. ற/101

**2.** உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........
ஆ. தனிப் பாடல்கள்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்

**3.** தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்.
ஆ. நீளம் 20 செ. மீ.; அகலம் 2 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

**4.** சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
தொடர் எண் : 1239 காண்க.

ஆ. முடிவு

நீடரவு கிண்கிணிக் கால்அய்ய ருடன்வா
தாடும் நிமலி சூலி
ஏடகலு முலக மெல்லாம் காத்த ளிக்குஞ்
சுந்தரியே எந்தாய் கையில்
சூடகமும் பாடகமும் முதலாயிப் பணிக
ளெல்லாம் துலங்கி நிற்கும்
ஆடரவு விபூசனியே இளம்பிள்ளை தனில்வளரும்
செல்லாண் டியமைத் தாயே, (10)

இ. முற்குறிப்பு

கருப்பண கவுண்டன் பலகவிச் சுவடி.

5 பிற செய்திகள்

'மாரியம்மன் பேரில், சிவன் மலையாண்டவர் பேரில், செல்லாயி பேரில்' என்னும் தலைப்புகளில் பாடல்கள் உள்ளன.

## 1571. நீதிசாரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1252

ஆ. ள/47

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. நீதிசாரம் : மூலமும் உரையும்

இ. நீதி நூல்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1229 காண்க.

ஆ. முடிவு

யாதாமொருவனுக்கு வித்தையுண்டானால் மாதா பிதா பாரி இவர்கள் மூன்று பேருங் கொடுக்கிற சுகத்தைக் கொடுக்கும். எந்தத் தேசத்தில்.........சென்றாலும் கீர்த்தியுண்டாம். லட்சுமி கடாச்சமுண்டாம். வித்தையானி கற்பக விருட்சம் போல் சுகத்தை.........என்றவாறு. (35)

## 1572. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 1253

ஆ. ல/254

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 42 ஏடு; 84 பக்கம்.

ஆ. நீளம் 32 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5, 6 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ: நல்ல நிலை.

எ: முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இந்திரன் தந்த வேப்பிலை இறைவன் தந்த வேப்பிலை மந்திரி தந்த வேப்பிலை மகா தேவன் தந்த வேப்பிலை மண்ணி லிருக்கும் மகாசத்தி பிள்ளையார் தந்த வேப்பிலை முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத் தெட்டு ரிசிகளும் தியானித்து தந்த வேப்பிலை.........

ஆ. முடிவு

வயிற்று வலிக்கு லேகியம் பண்ண ஒரு மண்டலம்: சுக்கு கால் பலம், திப்பிலி கால் பலம், வாய்விளங்கம் கால் பலம், கிராம்பு கால் பலம், சித்தரத்தை கால் பலம், தேசாவாரம் கால் பலம், நல்ல சீரகம் கால் பலம், கருஞ்சீரகம் கால் பலம்,செவியம் கால் பலம், பெருங்காயம் விராகன் எடை, கடுக்காய் கால் பலம் இலவங்கப் பத்திரி கால் பலம், சன்னலவங்கம் கால் பலம் இவை யெல்லாங் கூட்டி இள வெதுப்பா வெதுப்பி இடித்து, தூதுவளை சமூலங் கொண்டு வந்து, ஒரு சாணாய் நறுக்கி இடித்து, அந்தச் சூரணத்தில் 2 பங்கும், இந்தச் சூரணத்தில் ஒரு பங்கும் தேன் விட்டுக் குழப்பி லேகியம் பண்ணிச் சாப்பிடவும்.

# 1573. தேசிங்கு ராசன் கதை

## 1. நூலகக் குறிப்புகள்

அ: 1254

ஆ. ர/41

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ............

ஆ: தேசிங்கு ராசன் கதை

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 27 ஏடு; 54 பக்கம்.

ஆ. நீளம் 44 செ. மீ.; அகலம் 2 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. முதலிலுள்ள சில ஏடுகள் முறிந்துள்ளன;

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பலகலைக ளுணர்ந்தேத்திப் போற்று கின்ற
    பாவாணர்க் குதவிசெய்து பாது காக்கும்
நிலமையுள்ள தவளநிற முடையாள் வாசம்
    நிகழுஞ்ச ரஸ்வதியு பயதாளி றைஞ்சி
அலையெறியுங் கடற்சூழும் புவி.........
    அனங்கனுங் கண்டச்சங் கொ.........
விலையிலா மணிமுடி தேசிங்குரா.........
    வியன்முடி சீர்சரிதை தனை.........

(பாடலடிகள் சிதைந்துள்ளன)

ஆ. முடிவு

அந்த தேசம் ஓலை வந்ததை அறிந்துமே கொண்டார்கள். ஓலையைப் பார்த்து விசன மடைந்தார். உத்தம ஸ்திரீகளுந்தான் பார்த்து மனதுகலங்கி அழுதார். பட்டபுஸ்திரீகளெல்லாம் அந்தப் படியே விசனமடைந்தார் அந்த தேசத்திலே.........

**(இதற்கு மேல் ஏட்டில் இடம் இருந்தும் எழுதப் பெறவில்லை)**

## 1574. கம்பர் வாழி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1255
ஆ. ற/102

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கம்பர்
இ. கம்பர் வாழி
உ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 19

### 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.
ஆ. நீளம் 31 செ. மீ.; அகலம் 2 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சம்புநாத சுவாமி சாத்திரமு வேதநூற்
கம்பநாத சுவாமிக் கன்றளித்தார்—உம்பர்புகழ்
பட்டமூ வாயிரவர் படியதொன்று நாடறிய
கட்டினாங் கணபதிமுன் காப்பு.

ஆ. முடிவு

ஆல்போற் தழைத்து அறுகது போல் வேரூன்றி
நாற்போற் கிளைமிகுத்து நன்றாக மிகவாழ்வீர்
சீர்போன்ற வாகை புனையு மணவாளன் மனையாட்டி
வாகை தந்து நீடூழி வாழி. (19)

## 1575. வில்லிபாரதம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1256
ஆ. ந/112

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வில்லிபுத்தூரர்
ஆ. வில்லிபாரதம்: 13 ஆம் நாள் போர்: மூலமும் உரையும்
இ. காப்பியம்
ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 34 பக்கம்.
ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீடாழி யுலகத்தில் மறைநா லொடைந்தென்று நிலைநிற்கவே
வாடாத கவிராச முனிராச ராசன்மகா பாரதஞ் செய்தநாள்
ஏடாக வடமேரு வெற்பாக வெண்கூரெ முத்தாணிதன்
கோடாக வெழுதம்பி ரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.

ஆ. முடிவு

அப்படி இருவரும் பாணந் தொடுக்கப் பார்த்திருந்து அபிமன்னன் ஒருவனாய் நின்று அத்திரந் தொடுத்துப் பாணம் போட்ட மாத்திரத்திலே அந்தப் பாணங்களினாலே கிருபாசாரி யரும் கிருத வர்மனும் அதிசெயப்பட்டு, எல்லாம் பரிகொடுத்துப் பயந்து ஓடிப் போனார்கள் என்றவாறு. (27)

## 1576. பட்டயம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1257

ஆ. ற/103

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. கொங்குப்புலவர் பட்டயம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. முதல் ஏடு இல்லை. பதப்படுத்தப் பெறாத ஏடுகள். வளைந்தும் முறிந்தும் உள்ளன.

எ. குறை

### 4. சிறப்புச்செய்திகள்

அ. தொடக்கம்

......ண்டரவர்கள் பெரியணகவுண்டரவர்கள், காற்றாங்காணி ரட்டியபாளையம் முத்துக்கவுண்டரவர்கள், வெள்ளைக் கவுண்டரவர்கள், பாம்பாம்பாளையம் சின்னன கவுண்டரவர்கள், முத்தய கவுண்டரவர்கள், அளிப்பிச்சாக் கவுண்டரவர்கள், வெங்கிலப்பாளையம் வேலாயுதக் கவுண்டரவர்கள், செல்லப்ப கவுண்டரவர்கள்........

ஆ. முடிவு

...... குருப்பநாடு தென்திசை வேளாளர் அனைவருங் கூடிப் புலமை நாட்டி வைத்துக் கொண்டோம். இந்தப் படிக்குக் குருப்ப நாட்டு நம்ம உறவுமுறையார்கள் ஊத்துக்குளி கதித்தமலை யாண்டவர் சன்னிதானத்துக்கு வந்திருந்த பேர்களும் வாராமல் இருந்த பேர்களும் இன்னும் சகலமான பேர்களுக்கும் தெரியப்படி யிருக்.........

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

## 1577. நீதிசாரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1258

ஆ. ள/48

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. நீதிசாரம்: மூலமும் உரையும்

இ. நீதி நூல்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 40 ஏடு; 80 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண்: 1229 காண்க.

ஆ. முடிவு

ஆசுபரியவனுக்குத் தரித்திரமும் தரித்திரவானுக்கு வெட்டகம் புரியாமலிருக்கும். அது என்னவென்றால் லட்சுமி பிறந்தகமான திருப்பாற் கடலிலே விஷ்ணுவும் பள்ளிகொண்டிருப்பார். பார்வதி பிறந்தகமான திருப்பாற் கடலிலே மகாவிஷ்ணுவும் பள்ளிகொண் டிருப்பார். பார்வதி பிறந்தகமான பருபதத்திலே மகாதேவர் சபையிலிருப்பார். அப்படிப் போலென்றவாறு. (80)

இ. முற்குறிப்பு

விளம்பி வருஷம் ஆவணி மாதம் 7ந் தேதி ஞாயிற்றுக்கிழமை யன்றைக்கு தாராபுரந் தாலூகா தம்பரெட்டிப்பாளையம் கிராமம் சராராமக்காரம் பாளையத்திலேயிருக்கும்பொன்னயகவுண்டன் மகன் பெத்தாக் கவுண்டன் நீதிசாரம் எழுதி முடிந்து முற்றும். சம்பூர்ணம்.

பிற்குறிப்பு

1840ஆம் வருஷம் ஆவணி மாதம் 7ஆம் தேதி சனிக்கிழமைக்கு இற்றை கோயமுத்தூர்ச் சில்லா தாராபுரந் தாலுகா தம்பி ரெட்டிப்பாளையம் கிராமம் சராராமக்காரம்பாளையத்திலே இருக்கும் பொன்னைய கவுண்டன் மகன் பெத்தாக் கவுண்டன் நீதிசாரம் எடுத்தவன் கொடுக்கவும்.

'நம்ம ஏட்டை எடுத்தவனை விரலைத் தரித்துப் போடுவேன்'

# 1578. பட்டயம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1259

ஆ. ற/104

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. வாரக்க நாட்டுப் பட்டயம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 11 பக்கம்;

ஆ. நீளம் 32 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத ஏடுகள்.
வளைந்தும் முறிந்தும் உள்ளன.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுப நமஸ்த்து ஸ்ரீமகா மண்டலீசுபரன் பாஷைக்குத் தப்பு வராத கண்டன், ஆரிய தள விபாடன், ஆரிய மோகந் தவிர்த்தான். துலுக்கர்தள விபாடன், துலுக்கர் மோகந் தவிர்த்தான். ஒட்டிய தளவிபாடன், ஒட்டிய மோகந் தவிர்த்தான் பல நாவுக்குறை வராத மன்னன்................

ஆ. முடிவு

தற்குறி காளியப்பகவுண்டன் அறிவேன். தற்குறி வையாபுரி கவுண்டன் அறிவேன். பாலார்பதி தற்குறி கஷய கவுண்டன் அறிவேன். தற்குறி மலையர் கவுண்டன் அறிவேன்.

# 1579. மூதுரை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1260

ஆ. ள/49

## 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. மூதுரை

இ. நீதி நூல்

ஈ. செய்யுள் 31

## 3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத ஏடுகள். வளைந்து முறிந்த நிலை

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1150 காண்க.

ஆ. முடிவு

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தில் நிற்குமாம்
அவையெல்லாம் நல்ல மரங்கள் — சபையகத்தில்
நீட்டோலை வாசிக்க நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனே மரம். (31)

## 1580. சாலத்திரட்டு

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1261
ஆ. ற/105

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பீதாம்பர அய்யர்
ஆ. பீதாம்பர அய்யர் சாலத்திரட்டு
இ. பல்வகை நூல்கள்
ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 82 ஏடு; 161 பக்கம்.
ஆ. நீளம் 22 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை,
எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மரத்தினால் நாலடி அல்லது ஐந்தடி உயரமுள்ளதாக நாலு கால்கள் நிறுத்தி, அதுக்குக் கீழும் மேலும் ஓரடி அகலமும் ஒண்ணரையடி நீளமுள்ள பலகையைக் கொடுத்து, அந்தத்தோல் பலகையின் உட்புறத்திற் காந்தத்தைப் பதித்து, கழட்டவும் பூட்டவுமாகச் செய்து அவயங்கள் கொள்ளவும்.........

ஆ. முடிவு

வசியமாக முறை: பொன்னாவாரை வேர் கொண்டுவந்து நறுக்கி நிழலில் உலர்த்தி, குழித் தைலம் வாங்கிக் கல்வத்திலிட்டு

அதனுடன் கோழிமுட்டை வெள்ளையை விட்டு அரைத்து, தலை சன் மாக்சொடியும், புனுகு, பூரம் கோரோசனையும் இவைகளை ஒரு எடையாக நிறுத்தெடுத்து, அதில் சேர்த்துரைத்து வழித்து எடுத்துச் சிமிழில் வைத்துக் கொண்டு வேண்டும் போது திலத மிட்டு வெளியே போனால் ஆண், பெண் சகலரும் வசியமாகிக் கேட்ட பொருள் தருவார்கள். நம்பவும். இணங்கியிருப்பார்.

இ. முற்குறிப்பு

பிரபஞ்ச மிரட்டென்னும் சாலத்திரட்டு பீதாம்பர ஐயர் செய்த வித்தை மந்திரம். மாந்திரீகம், மை விசயமும், கண் கட்டு வித்தை மை விசயமும் ஐங்கோலம் செய்யும் விசயமும் சகலமும் செய்யும் விபரம் அறியவும்.

## 1581. பட்டயம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1262*

ஆ. *ற/106*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. இருபத்து நான்கு நாட்டுப் பட்டயம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறந்தாழ 20 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 24 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத ஏடுகள். வளைந்தும் முறிந்தும் உள்ளன.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருச்சிற்றம்பலம். கலியுக சகாப்தம் 897 க்கு மேற் செல்லா நின்ற பிரமாதி வருஷம் பங்குனி மாதம் 10 ஆம் தேதி சுக்கிர வாரமும் உத்திர நட்சத்திரமும்பெற்ற சுபதினத்தில் நாலு சமஸ்தானத்துக்குக் கர்த்தராகிய விசயநகரப் பட்டணத்தில் தேவப்பராயர் செங்கோல் செலுத்து நாளில்.........

ஆ. முடிவு

இதுக்கு விகாதம் பண்ணின பேர்கள் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோசத்திலே போகவும். மாதா பிதா வைக் கொன்ற தோசத்திலே போகவும். குருவைக் கொன்ற தோசத்திலே போகவும். இந்தத் தருமத்தைப் பரிபாலனம் பண்ணி நடப்பி வைத்த பேர்கள் புத்திர பவுத்திரராய், அசுவமேத யாகம் பெறுவார்கள்.

இந்தப் பட்டயம் எழுதினது. சோழ தேசம் விட்டு கொங்கு தேசத்தில் மூவராசாக்களும் ராயரவர்களும் 24நாட்டார வர்களும் இந்தப் படிக்கு எழுதிக் கொடுத்ததாம். பூரசாசனப் பட்டயம். செல்லாண்டியம்மன் ரட்சிக்கவும்.

# 1582. நோய்க்கு மருந்து

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1263

ஆ. ல/255

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.

ஆ. நீளம் 29 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை. 7ஆம் எண்ணுடன் இரண்டு ஏடுகள் உள்ளன.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வீரியம் உண்டாக மருந்து: கோஷ்டம், சிவந்த ஊமத்தன் விதையும் காராட்டுப் பாலில் அரைத்துப் பதினைந்து நாள் தண்டில் பூசில் நாலு ஆனைத் தும்பிக்கை போலாகும். வீரிய முண்டு. ஆங்காரமுமாச்சுது.

ஆ. முடிவு

கீரித் தோலும் நல்ல பாம்பின் தோலும் சீந்திக் கொடியில் கட்டி ஆலா விறகு, அரசன் விறகு, நாயுருவி விறகு, எருக்கன் விறகு நெருப்பு எடுத்து, இதையெல்லாம் சுட்டு, இந்தச் சாம்பலை, படுக்கிற கட்டிலிலாவது தலைகாணியிலாவது தூவினால் பிரிவார்கள். திட்டம். தாதாவேர், கழுதும்பைவேர் பூசை செய்து எடுத்து எலி மீசை, பூனை மீசை இது நாலும் கூட்டி, குளிசமாடி தலையாணியிலாவது கட்டிலிலாவது வைக்கப் பிரிவார்கள்.

(இதற்குமேல் இடம் இருந்தும் எழுதப்பெறவில்லை.)

## 1583. முந்திரி வாய்பாடு

1. நூலகக் குறிப்புகள்

அ. 1264

ஆ. ற/107

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. …………

ஆ. முந்திரி வாய்பாடு

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 2·6 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4, 5 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத ஏடுகள்.
வளைந்தும் முறிந்துமுள்ளன.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1249 காண்க.

## 1584. விக்கிரமாதித்தன் கதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1265

ஆ. ம/21

## 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ............

ஆ. விக்கிரமாதித்தன் கதை

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 70 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 36 ஏடு; 72 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை. முதல் ஏடு இல்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அந்த யாகத்துக்கு விக்கிரமாதித்தனை அழைப்பித்து, அவன் முகாந்திரமாய் வேதாளத்தை அழைப்பித்து, விக்கிரமாதித்தனை யாகத்துக்குப் பலி கொடுத்துத் தான் ராச்சிய பாரமாள்வோமென்று மனதிலே யெண்ணிக் கொண்டு, சாந்த சிவனென்கிறவன் ஒரு மாதளங்கனி கொண்டு வந்து விக்கிரமாதித்தனைச் சந்தித்துக் கொண்டு அந்தக் கனியைக் கொடுத்துப் போனான்.

ஆ. முடிவு

......அப்போ, பரமேசுவரன் மகா சந்தோஷப்பட்டு உனக்கு என்ன வேணுமென்று கேட்க, எனக்குப் புத்திரன் வேணுமென்று சொல்ல, அப்படியே புத்திரன் கட்டளை பண்ணிப் போனார். அதன் பிறகு ராசா வரம் பெற்றுப் பட்டணமே வந்து ராச்சிய பரிபாலனம் பண்ணுகிற காலத்திலே ராசாவுக்கு ஒரு குமாரன் பிறந்தான். அந்தப் பிள்ளைக்குச் சுரதேவ னென்று

பேரும் இட்டான். அதன் பிறகு ஒரு பெண் பெற்றான். அந்தப் பெண்ணுக்கு ரத்தினாபதி என்று பேருமிட்டு வளருகிற நாளை யிலே பருவமான பிறகு மகா கல்வியானா இருக்கப்.........

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1585. வேழமுகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: *1266*

ஆ: *ற/108*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. வேழமுகம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்;

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத ஏடுகள். வளைந்து முறிந்த நிலை

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

அரனடிபணி ஆரணிகடவுள்
இளம்பிறை சூடி ஈமத் தாட்டி
உம்பர்க் கிறைவன் ஊனமில் லாதவன்
எங்கள் நாயகன் ஏக மூர்த்தி
ஐயம் பகர்ந்தோன் ஒற்றை விடையன்
ஓம் நமசிவாயன் ஔவை பாகன்;

ஆ. முடிவு

வெள்ளை விடையன் வேத நாயகன்
வையகம் படைத்தோன்
ஒருமொழி வாசகன் ஓதிய வேதியன்.

ஔவையார் அருளிச் செய்த வேழமுகம் படித்து முடிந்தது.

முற்றும்.

## 1586. சுப்பிரமணிய மாலை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1267—1

ஆ. ய/83

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. சுப்பிரமணிய மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 33

### 3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 34 பக்கம்.

ஆ. நீளம் 33 செ. மீ.; அகலம் 2 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை.

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்பெருகுந் தென்பழனித் தண்டாபா
 ணிக்கடவுள் செயலி னாலே
பார்பெருகும் பழனிமலைப் பராபரன்மேற்
 பைந்தமிழால் மாலை பாட
கார்பெருகுங் கலைவாணிச் சரசுவதி என்
 வாக்கில்நின்று தயவு செய்யக்
கார்பெருகுங் கணபதியுங் கந்தவேள்
 கமலபதங் காப்புத் தானே.

ஆ. முடிவு

சிரமுடன் ஸ்ரீரியுங் கிங்கிலியுந் தந்தோம்
 திரள்புய அச்சரத் தொளிவும்
சரவண பவனே சயிலொளி பவனே
 சடாச்சரக் கோவையின் முதலா
திரமுடன் வருவாய் திரிபுர பவனே
 திகழொளி பவனே குருநாதா
அரகர பரிபுர பகலொளிர் பவனே
 அரகரா பரனே சுப்பிர மண்ணியனே. (32)

# 1587. பழநிமலைக் கண்ணி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1267-2

ஆ. ய/83

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. பழநிமலைக் கண்ணி

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 33 செ. மீ.; அகலம் 2 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

தொடர் எண் : 1239 காண்க.

ஆ. முடிவு

காட்டுவழி போனாலுங் கள்ளர்பய மானாலும்
கேட்டுவழிக் காலனார் கிட்டிடினும் — நாட்டமுடன்
நம்பிக்கை யுண்டே நமக்கு விநாயகனார்
தும்பிக்கை யுண்டே துணை.

## 1588. தனிப்பாடல்கள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1267–3

ஆ. ய/83

**2. உள்ளீடு; நூல் விவரம்**

அ. ...............

ஆ. தனிப்பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்

ஆ. நீளம் 33 செ.மீ.; அகலம் 2 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை. வலதுபுறம் முறிந்துள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

செப்பணிந்த கன்னி தேவிமக மாயி–உன்
  பொற்பாதந் தஞ்சமடி பூலோக மானவளே
எப்போ தெனைக் காத்து–ஈடேற ரட்சிக்கை
  மெய்ப்பான தேவுரு மேவுமுத்து மாரியம்மா. (1)

ஆ. முடிவு

கடந்தலைந்து யிறந்தென்ம னங்கலங்கி
  யநுதினமும் கண்டு நொந்தேன்
இடஞ்சல்படுந் தமியேனுக் குன்னையல்லால்
  வேறுதுணை யேதுங் காணேன்
தடங்குடப்பொற் றனத்தாயே யெனதுமனத்
  துயரதெல்லாம் தவிர்க்குந் தாயே
அடைந்தவரைக் காத்தருள்வாய் யிளம்பிள்ளைச்
  செல்லாண்டி யம்மைத் தாயே. (4)

## 5. பிற செய்திகள்

இச்சுவடியில் மாரியம்மன் பேரில், கருப்பண சுவாமி பேரில், சுப்பிரமண்ணியர் பேரில், செல்லாண்டியம்மன் பேரில் என்னும் தலைப்புகளில் பாடல்கள் உள்ளன.

# 1589. விக்கிரமாதித்தன் கதை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1268

ஆ. ம/22

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. விக்கிரமாதித்தன் கதை

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 56 ஏடு; 112 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சாலிய வாகனன் சாஸ்த்திரம் நாலாயிரத்து நானூற்றி நாற்பத்தெட்டு வருஷம் செல்லா நின்ற காலத்திலே, உச்சினிப் பட்டணத்திலே, திரிசங்கு ராசா ராச்சிய பரிபாலனம் பண்ணுகிற காலத்திலே ஒரு குமாரன் பிறந்தான். அந்தப் பிள்ளைக்கு விக்கிரமாதித்தனென்று பேருமிட்டு வளருகிற நாளையிலே.........

ஆ. முடிவு

......இந்தக் குறியைக் காண்பித்துப் போட்டுத் தானும் தோழிமாரும் தன்னுட பதியே போனார்கள். அதன் பிறகு ராச குமாரனும் மோக விரகத்தாலே துயரப்பட்டு மந்திரி குமாரனும் தானும் தன்னுட பட்டணமே வந்து சேர்ந்தார்கள். அன்று முதல் அவள் பேரிலே வெறுமையாகச் சோபமுற்று மனம் தளர்ந்திருக் கிறதை மந்திரி குமாரன் கண்டு, ஓகோ ராசாவே நீர் இத்தனை நாளும் போலே சந்தோஷ மாயி.........

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

இ. முற்குறிப்பு

முத்துச்சாமி விக்கிரமாதித்தன் கதை.

## 1590. பழநியாண்டவர் ஆனந்தக்களிப்பு

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1269

ஆ. ர/42

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ...............

ஆ. பழநியாண்டவர் ஆனந்தக்களிப்பு

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்.

ஆ. நீளம் 18 செ. மீ.; அகலம் 2 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ, நல்ல நிலை,

எ. குறை,

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சிவநமசி வாய மென்றோது—எதிரில்
  தெளிவாகி நித்தந் தியானிக்கும் போது
நவகோண சக்கர மீது—நின்று
  நடனம் புரிந்தாளே செகமோக மாது
சுகமான பஞ்சவர்கள் சூது—இந்தத்
  தொல்லுலகி லெப்போதும் நம்பப் படாது
சகமேவுந் தென்பழநி மீது—யோகச்
  சரவண பவாநந்த சாமிதுணை யாமே, (1)

ஆ. முடிவு

சுககாலமோ வயது நூறு—உனக்குக்
  கண்டமென்பது வருந்தொண் ணூற்று ஆறு
நிசமான வார்த்தைகள் தோறும்—அந்த
  நிறையான தொகைநாலுஞ் சரியாச்சு பாரு
அசைவான தசைதூல மேரு—அங்கே
  அழியாதென் றேயுறுதி நிசங்கண்ட தாரு
தசவாயு வொடுங்கிவிடு வீடு—யோகச்
  சரவணப வாநந்த சுவாமிதுணை யாமே. (35)

# 1591. நீதிசாரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1270

ஆ. ள/50

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. ..............

ஆ. நீதிசாரம் : மூலமும் உரையும்

இ. நீதி நூல்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்;

**3. தோற்றக் கூறுகள்**

அ. 11 ஏடு; 22 பக்கம்.

ஆ. நீளம் 40 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. பெரிய கையெழுத்து,

ஊ. வளைந்து முறிந்த நிலை,

எ. குறை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

தொடர் எண் : 1229 காண்க.

ஆ. முடிவு

வித்துவான் அருமையை வித்துவானறியவேணும். அல்லாதார் அறியமாட்டார்கள். அதென்போலவென்னில் மலடியானவள் பிரசூதக வேதனை அறியமாட்டாற்போலென்றவாறு. (22)

இ. முற்குறிப்பு

சின்னப் பழனியப்பன் நீதிசாரம்

## 1592. பழநிக் காவடிப் பாட்டு

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1271-1

ஆ. ர/43

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. …………

ஆ. பழநிக் காவடிப் பாட்டு

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுள் 14

## 3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 2•5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1189–2 காண்க.

ஆ. முடிவு

ஐங்கரன் பொற்பாதம் வாழி — கயிலை
ஆனந்த மூர்த்தியுந் திருவிழா வாழி
செங்கண்மால் பிரமனும் வாழி — நல்ல
சித்தகண நாதருந் தேவர்கள் வாழி
வெங்காரி வேந்தனும் வாழி — பழநி
வெற்றிவே லாயுதனுஞ் சுவாமியும் வாழி
எங்குள தேவரை வாழ்த்தி — நல்ல
இடும்பனங் கடம்பன் பணிந்துகொண் டோனே. (14)

## 1593. தாய் மகள் ஏசல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1271–2

ஆ. ர/43

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. பழநியாண்டவர் தாய் மகள் ஏசல்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சேவலங் கொடிகள் வாழி தினந்தினம் பாடி யாடும்
பூவலங் கார மான புகழ்பெறு முருகர் மீதில்
தாவலங் கார மான தாய்மகள் ஏசல் பாட
நாவலங் கார மான நான்முகன் காப்புத் தானே.

ஆ. முடிவு

தையுநல்லி நவமணியும் தாள் சிலம்பும்
புலம்பு தென்னடி மகளே — எங்கள்
வையகந் தனில்மண் சுமந்த மைந்தர்
திருக்கந்த ரணைந் தாரோ -- அதுகேள்

எதய்வர் தொழுங் கைலாச தேவிபெரி
யம்மனுக்கு முன்னே அப்போ
துய்யமயில் மிரட்டி வந்து சுருக்குடனே
ஒடி வந்தேன் தாயே. (10)

## 1594. தனிப்பாடல்கள்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1271–3

ஆ. ரா/43

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. தனிப்பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்.

ஆ. நீளம் 35 செ.மீ.; அகலம் 2·5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4, 5 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மணமாலை அருமையைப் புனிதர்க ளேயறிவர்
மட்டிக்குரங் கறியுமோ
மக்களுட அருமையைப் பெற்றவர்க ளேயறிவர்
மலடிதான றிவதுண்டோ

கணவனுட அருமையைக் கற்பான மாதறிவள்
கள்ளியானவள் அறிவளோ
கருதுமொரு சந்நிதியின் பாண்ட மென்பதுதான்
களவாணி நாயறியுமோ
குணமான கிளியருமை வளர்த்தவர்க ளேயறிவர்
கொடியபூ னையும்அறியுமோ
குலவுபெரி யோர்களருமை நல்லோர்க ளேயறிவர்
கொடுமுரடர் தாமறிவரோ
மணவாளன் நீயென்று குலவள்ளி பின்தொடர
வனமதிற் தழுவுதலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவுங் குமரேசனே.

ஆ. முடிவு

இந்துமா மதியுஞ் சூடி இறையோனி னருளி னாலே
முந்தியே பிரதோசகால முதல்வனாஞ் சிவனை நோக்கி
நந்திஈ சுரர்க்குப் பூசை நல்கிய வேளை யாச்சு
பந்தியாய் நாங்கள் தானும் பாக்குவெற் றிலைகள்
தந்தோம்
அந்திலா விடுங்க ளய்யா அடியிணை சரணந் தானே;

இ. முற்குறிப்பு

தாராபுரம் தாலூகா முளையம்பூண்டி கிராமம் மேற்படி சரவணக் கவுண்டன் வலசுலேயிருக்கும் முத்துச்சாமிக் கவுண்டன் மகன் பழனியப்பன் கைப்பா......

## 5. பிற செய்திகள்

இச் சுவடியில், சிவன்மலை யாண்டவர் பேரில், முத்துக் கருப்பண சுவாமி பேரில், அருணாசல ஈஸ்வரர், உற்சவர்பாட்டு காவடிப்பாட்டு போன்ற தலைப்புகளில் பாடல்கள் உள்ளன.

முதல், இறுதி ஏடுகளில் சில கோட்டு ஓவியங்களும் எழுதப்பட்டுள்ளன.

## 1595. பட்டயம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1272

ஆ. ற/109

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. இருபத்து நான்கு நாட்டுப் பட்டயம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை

அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5, 6 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத ஓலைகள். வளைந்து முறிந்த நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண்: 1262 காண்க.

ஆ. முடிவு

......சோழராசா கைஅம்பினாலே கம்பர் இறந்து போனார். இந்த ராசா படிபால் வருத்தினைப் பணமும் கம்பர் கையேட்டுக்காரர் செங்குண்ண கோத்திரம் போக கனங்கூட்டம் நஞ்சராயப் புலவன், ராசி கூட்டத்தில் திருக்கைவேற்புலவன், செல்லக் குமாரப் புலவன், இவர்களுடைய முன் பெரியோர்களுக்கு நடந்து வார காலத்திலே எங்கள் முன் பெரியோர்களை சோழ ராசாவானவர் கலியுக சகாப் 87ஆம் வருஷத்தில் ... ... ...

(இதற்குமேல் இடம் இருந்தும் எழுதப் பெறவில்லை.)

## 1596. சூடாமணி நிகண்டு

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1273

ஆ. ச/34

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மண்டல புருடர்

ஆ. சூடாமணி நிகண்டு : 1, 2, 3 தொகுதிகள்

இ. இலக்கணம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 35 ஏடு; 70 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொன்னுநன் மணியு முத்தும்
புனைந்தமுக் குடைநி ழற்ற
மின்னுபூம் பிண்டி நீழல்
வீற்றிருந் தவனை வாழ்த்தி
மன்னிய நிகண்டு சூடா
மணியென வொன்று சொல்வேன்
இந்நிலந் தன்னில் மிக்கோர்
யாவரு மிருந்து கேண்மின். (1)

ஆ. முடிவு;

கிருமியே புழுவே பொட்டுக்
கீடங்கோற் புழுவின் பேரே
பிரசங் கோற்றே னிதிலே
பேசிய தேனின் கூடாம்
விரவிய விலங்கி னீட்டம்
எழுபத்தேழ் விருத்தஞ் செய்தான்
வருகுண பத்தி.........
வணங்குமண் டலவன் தானே. (78)

மூன்றாவது விலங்கின் பேர்த் தொகுதி முற்றும்.

## 1597. சாலத்திரட்டு

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1274

ஆ. ற/110

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பீதாம்பர அய்யர்

ஆ. பீதாம்பர அய்யர் சாலத்திரட்டு

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை;
அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 85 ஏடு; 170 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5, 6 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாத்தியம் செய்யும் சாலம் :

வன்னியர் இனம், பள்ளிகளென்று சாதி, கையில் இரும்பு வளையம் போட்டு இருப்பவர்கள், மரணமானால் அந்த வளைய லுடன் தகனம் பண்ணுவார்கள். அதைப் பார்த்துக் கொண்டி ருந்து மறுநாள் காடாற்று முன்னே அந்த இரும்பு வளையத்தை யெடுத்து வந்து, அதை ஆசாரியிடத்திலே கொடுத்து, பாக்கு வெட்டி செய்து பதனமாக வைத்துக் கொள்ளவும்.

ஆ. முடிவு

மலையாள பகவதி வசியம் :

பிரமதண்டுச் செடிக்கு மங்கள வாரத்தில் காப்புக் கட்டி, பலி, பொங்கலிட்டு, பூசை செய்து, தூப தீபங் காட்டி, பகவதியை நினைத்து வேரைப் பிடுங்கி வந்து, உச்சாடன மையும் கோல மையும் தடவி, பூசையில் வைத்து, மலையாள மந்த்ரம் லட்சம் ஓதி, வேரைக் குளிசமாடிக் கட்டிக் கொள்ளவும். வசியமாவாள்.

இ. முற்குறிப்பு

பிரபஞ்ச மென்னும் பீதாம்பர ஐயர் சாலத்திரட்டு வித்தை யெல்லாம் வேடிக்கை செய்யலாம். இது போக இன்னும் குட்டை ஏட்டிலிருக்கிறது. சாலத் தொழில் வித்தையாடலாம்.

# 1598. செல்லாண்டியம்மை கலிவெண்பா

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1275–1

ஆ. ய/84

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. செல்லாண்டியம்மை கலிவெண்பா

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு, 18 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4, 5 வரி.

உ. பெரிய, கிறுக்கலான கையெழுத்து.

ஊ. ஏடுகளின் ஓரங்கள் முறிந்துள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்மேவுங் கோடீரச் செல்வியே ஆரணங்கே
கார்மேக மாலுக்கிளைய காரணியே — யார்போ...
ஐம்பத்தோர் அட்சரத்தில் ஆறாதா ரப்பொருளே
உம்பரெல்லாம் போற்றும் உத்தமியே — சம்பரமா
...... ...... ...... ......

ஆ. முடிவு

திரிபுரையே ஈசனுடன் சேர்ந்து நடனமிடும்
மரகதமே முத்து வைரமே.........
புரமூன் றெரித்தவளே பொற்பவள வாயாளே
அறம்வளர்த் தாளெனும்நீ அம்மையே.........
கல்விக் கடலே கற்கண்டே தேனமுதே
செல்வியம்மைத் தாயெனும்நீ தேவியே.........
போற்றுஞ் சடாதரியே புத்தமுதே மாரியம்மா
தோகைசுப லட்சணியே ஈஸ்வரியே.........

# 1599. தனிப்பாடல்கள்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1275–2

ஆ. ய/84

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............
ஆ. தனிப்பாடல்கள்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்.
ஆ. நீளம் 36 செ.மீ.; அகலம் 2·5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. பெரிய, கிறுக்கலான கையெழுத்து.
ஊ. ஏடுகளின் வலதுபுறங்கள் முறிந்துள்ளன.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆடக் கண்டது அன்னக் கொடிகள்
அதிரக் கண்டது பொன்மணி சத்தம்
நீடக் கண்டது தான தருமம்
நிலைக்கக் கண்டது வேளாளன் கீர்த்தி
கூடக் கண்டது ஆன்பொரு நைநதி
கொழிக்கக் கண்டது முத்துரத் தினங்கள்
தேடக் கண்டது தொண்டமான் கீர்த்தி
செழிக்கும் தென்கரை நாடெங்கள் நாடே.

ஆ. முடிவு

சத்தமா தாக்கள்சூழ்ந் திருக்கும் நாடு
சாலைதொறும் அன்னமட முள்ள நாடு
சித்தர்கொங் கணவர் சிக்கு நாடு
திருமூலராதிதவஞ் செய்யும் நாடு
மெத்த வேதியர் பரமேசர் பண்டிதர்
விளங்கவே வேதம் ஓதிய நாடு
வித்தை யாகிய வாணர் தமிழை
விளக்குந் தென்கரை நாடெங்கள் நாடே.

## 1600. சூடாமணி நிகண்டு

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1276

ஆ.ச/35

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மண்டல புருடர்

ஆ. சூடாமணி நிகண்டு

இ. இலக்கணம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 54 ஏடு; 108 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4, 5 வரி.

உ. சற்றே கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1273 காண்க.

## 1601. கல்வியொழுக்கம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1277–1

ஆ. எ/51

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்
ஆ. கல்வியொழுக்கம்
இ. நீதிநூல்
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.
ஆ. நீளம் 40 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. பெரிய கையெழுத்து.
ஊ. பதப்படுத்தப்பெறாத ஏடுகள்; வளைந்து முறிந்த நிலை.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம். ஆ. முடிவு
தொடர் எண் : 1114 காண்க.

# 1602. உலக நீதி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1277-2
ஆ. ள/51

## 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. உலகநாத பண்டிதர்
ஆ. உலக நீதி
இ. நீதிநூல்
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்

ஆ. நீளம் 40 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப்பெறாத ஏடுகள்; வளைந்து முறிந்த நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்; ஆ. முடிவு

தொடர் எண் : 1124 காண்க.

# 1103. மகாநவமி பத்தியம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1278

ஆ. ற/111

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. மகாநவமி பத்தியம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரவணை துயின்ற மாயன் ஆழிமா மருகன் நாட்டில்
பரிவு டன்மகா நவமிப் பத்தியம் பாடி வந்தோம்
பெரியவர் நல்லோர் கேட்கப் பிரியமாய் வரிசை நல்கி
அருமையாய் யெங்க ளுக்கு அவல்வெல்லம் அருளு வீரே.

ஆ. முடிவு

உள்ளன்பி லாதபேர் தித்திக்க வேபேசி
உறவாடு உறவும் உறவோ
உபசரித்தன் புடன்பரிமா றிடாத சோறு
உண்பவர்க் கன்ன மாமோ
தள்ளாதி ருந்துகொண் டொருவர்போய்ப் பார்த்துவருந்
தக்கபயிர் பயிரு மாமோ
தளக்காத தன்னொருவன் முன்சென்றி டாதே
நின்றதானந் தானமாமோ......
விள்ளான மான பேண் மேலைவரு
விருப்பமும் விருப்ப மாமோ
வெகுகடன் பட்டபேர் செய்கின்ற சீவனம்
மிக்கசீ வனமு மாமோ
அள்ளாள வருங்கருங் கருணை யாளனே நேயனே
அய்யனே அருமை மதவேள்
அநுதினமு மனதில்நினைத்து சதுரகிரி யில்வளர்
அறப்ப ளீசுபர தேவனே.

# 1604. நீதிசாரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1279

ஆ. ள/52

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............
ஆ. நீதிசாரம் : மூலமும் உரையும்
இ. நீதி நூல்
ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 26 ஏடு; 52 பக்கம்.
ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4, 5 வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை,
எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்
தொடர் எண் : 1229 காண்க.

ஆ. முடிவு

உத்தமனாயிருக்கிறவன் தேடுகிற திரவியம் உத்தமனே பொசிப்பான். துர்ச்சனர் தேடுகிற திரவியம் துர்ச்சனரே பொசிப்பர். அதென்போல வென்னில் மா பழுத்தால் கிளி, குயில்கள் பொசிக்கும். வேம்பு பழுத்தால் காக்கைகள் பொசிக்கும். அப்படிப் போலென்றவாறு. (50)

# 1605. கந்தரலங்காரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1280
ஆ. ய/85

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: அருணகிரிநாதர்

ஆ: கந்தரலங்காரம்

இ: சிற்றிலக்கியம்

ஈ: செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ: 25 ஏடு; 50 பக்கம்

ஆ: நீளம் 33 செ.மீ.; அகலம் 2 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ: சுமாரான கையெழுத்து.

ஊ: நல்ல நிலை.

எ: குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அழித்துப் பிறக்கவொட் டாதயில்
வேலன் கவிதையன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி
லீர்எரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்கவெங்
கூற்றன் விடுங்கயிற்றால்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன்
றோகவி கற்கின்றதே. (1)

ஆ: முடிவு

மொய்தார் குழலியை வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைத்தார் தமைச்சுரர் வாழ்த்தவைப்
போன்வெய்ய வானவர்போய்
கைதா னிருப துடையான்
தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருக னுமையாள்
பயந்த விலஞ்சியமே. (50)

5. ..................

6. ..................

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சிடப்பட்டுள்ளது.

## 1606. சோமேசர் ஊஞ்சல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1281

ஆ. ற/112

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. திருமூலநகர் சோமேசர் ஊஞ்சல்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்.

ஆ. நீளம் 21 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத ஏடுகள். வளைந்து முறிந்த நிலை

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவிருக்குந் தென்கரசை நாட்டில்
வளர்மூல நகரச்செய சோமேசர்
தருவிருக்குந் திருவஞ்சி நாயகிதன்
கிருபையி னால்தனம் பெற்றோர்
அருளுதவும் பூசகுலன் குமாருத்
தொண்டமா ராசன் அன்பா லீன்ற
மருவிருக்குங் கனயோகன் சின்னத்தம்பித்
தொண்டமா ராசன் வரிசை மாதே,

ஆ. முடிவு

சொந்தமா யெந்தனுக்குத் துயரமது தீர்த்து
வந்துதவுங் கண்ணியே மைந்தனே கண்வளராய் — அரி
பிள்ளை யில்லாப் பெருவரடி பெருமைதனைத் தீர்த்து
தெள்ளுமையாய் வந்துதித்த தீரனே கண்வளராய் — அரி
கொள்ளுங் கருமவினை குவலையத்தி லேவிலக்கி
வள்ளலென வந்துதித்த மைந்தனே கண்வளராய் — அரி.

# 1607. பட்டயம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. *1282*

ஆ. *ற/113*

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. பொன்னிவாடிப் பட்டயம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை;
அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்.

ஆ. நீளம் 32 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத ஏடுகள். வளைந்து முறிந்த நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சேஷத்திரிமன் மகாமண்டலேசுபரன், ஆரியதளவிபாடன் பாசைக்குத் தப்பு வராத ராய கண்டன், மூவராய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான். எம் மண்டல மும் ஈழமுந் திரை கொண்டருளிய பூருவ தேசநரபதி. உத்திர தேசத்தில் சமுத்திராதிபதி, ஈழமுந் திரை கொண்டருளிய ராசாதி ராசன், ராசபரமேசுபரன், ராசமார்த்தாண்டன்........

ஆ. முடிவு

அண்டர்தொழு அரவுடை ஈசுபரர்பதம்
　　அநுதினமும் அன்பாய்ப் போற்றும்
தெண்டிரையிற் பேர்விளங்கும் செகசுலகோத்
　　திரத்திற் தீர னான
கொண்டல்நிகர் கரதலனாம் பெருமாள்
　　ஈன்றெடுத்த குமணன் தானும்
வண்டமிழ்க் குதவி செய்யும்
　　பொன்னனைய பூபதியே வரிசைமாலே.

## 1608. முந்திரி வாய்பாடு

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1283

ஆ. ற/114

சு. வி. 9

2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ............

ஆ: முந்திரி வாய்பாடு

இ: பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை:
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத ஏடுகள். வளைந்து முறிந்த நிலை

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு
தொடர் எண் : 1249 காண்க.

## 1609. சுப்பிரமணியர் கும்மி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1284

ஆ. ர/44

2. உள்ளீடு: நூல் விவரம்

அ: .............

ஆ. சுப்பிரமணியர் கும்மி

இ. நாட்டுப்பாடல்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்

ஆ. நீளம் 40 செ.மீ.; அகலம் 2·5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. பெரிய, தெளிவான கையெழுத்து.

ஊ. பதப்படுத்தப்பெறாத ஏடுகள். வளைந்தும் முறிந்தும் உள்ளன. 11ஆம் ஏடு இல்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1189-1 காண்க.

ஆ. முடிவு

தும்புரு நாரதர்கள் பாட – நல்ல
துந்தமி மேளங்கள் தொனித்து முழங்க
கிம்புரு கின்னரர்கள் மீட்ட – நல்ல
கீதப்பிர பந்தங்க ளோலக்க மாக
தம்புரு வீணை வாசிக்க – நல்ல
சத்தரிசி களும்சர ணாரம் போற்ற
அம்பல வாணரும் வந்து – பழனி
ஆண்டியைக் கண்டு அருள்புரிந் தாரே. (8)

இ. முற்குறிப்பு

மொட்டயப்பனென்கிற பெரியதம்பி காவடிக்கும்மி.

# 1610. சிதம்பரக் கும்மி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1285

ஆ. ர/44

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கோபாலகிருஷ்ண பாரதி

ஆ. சிதம்பரக் கும்மி

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. நல்ல நிலை. முதல் ஏடு இல்லை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கருதும் சுருதிக் கெட்டாத சிவ
காமி சுந்தரி வாசலிலே
விருது பேசியே சிறுகுழந் தைகள்
வேதம் படிக்குது பாருங்கடி (5)

நாலு புறத்திலுங் கோபுரம் அதன்
நடுவி லெங்கினு மாளிகையாம்
காலோ ராயிரம் கொண்டொரு மண்டபங்
கட்டி யிருக்குது பாருங்கடி (6)

ஆ. முடிவு

வீட்டுக் கவலைகள் விட்டொழியார் – மெத்த
வீம்புகள் பேசியே வீணலைப்பார்
பாட்டைப் படித்தாலும் சிதம்பரம் – வந்த
பலனி தல்லவோ பாருங்கடி (39)

புத்திர பாக்கிய மெத்தவுண்டாம் – பசும்
பொன்னுமணிப் பூஷணமு முண்டாம்
பத்தியுடன் கோபால கிட்டணன்..
புகலியக் கும்மி யடியுங்கடி (40)

## 1611. ஆத்திசூடி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1286
ஆ. ள/53

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்
ஆ. ஆத்திசூடி
இ. நீதி நூல்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்.
ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 2 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. பெரிய கையெழுத்து.
ஊ. வளைந்து முறிந்த நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம். ஆ. முடிவு

தொடர் எண் : 1118 காண்க.

## 1612. ஏகாதசிப் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1287
ஆ. ந/113

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதாச உபாத்தியாயர்

இ. ஏகாதசிப்புராணம்: மூலமும் உரையும்

உ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்:
அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. இடையில் பல ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச்செய்திகள்

அ. தொடக்கம்

நாமனார் பாதம் போற்றியே செய்து
தாள்தனை வணங்கிய கரத்தில்
காமனார் மழுவும் மலர்தனை யெடுத்து
அடைவுடன் அர்ச்சனை செய்து
நாமுமே புலவர்க் கடிமைநான் சொன்ன
நற்றமிழ்ப் புன்சொல்லு மெனவே
ராமதாசன்எனும் உபாத்திய ருரைத்த
நல்லுரை யாவருங் கேண்மின்.

ஆ. முடிவு

அதுயென்ன யோசனை; உன்னுடைய நந்தவனத்திலே களவு செய்தவன் நானே யல்லாமல் மற்றபடியல்லவே. நம்மைப் பண்ணுகிற ஆக்கினை என்னுண்டோ அந்த ஆக்கினை பண்ணிக் கோவென்று சொன்னான் தவசி......

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1613. உலகநீதி

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1288

ஆ. ள/54

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. உலகநாத பண்டிதர்

ஆ. உலக நீதி

இ. நீதி நூல்

ஈ. செய்யுள்

**3. தோற்றக் கூறுகள்**

அ. 8 ஏடு; 16 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 2•5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. ஏடுகள் வளைந்தும் முறிந்துமுள்ளன.

எ. முழுமை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1124 காண்க.

## 1614. கல்வியொழுக்கம்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1289

ஆ. ள/55

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்
ஆ. கல்வியொழுக்கம்
இ. நீதிநூல்
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.
ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. பெரிய கையெழுத்து.
ஊ. ஏடுகள் வளைந்தும் முறிந்துமுள்ளன.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு
தொடர் எண் : 1114 காண்க.

# 1615. தனிப்பாடல்கள்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1290
ஆ. ற/115

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............
ஆ. தனிப் பாடல்கள்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்;

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

குள்ளக் குள்ளனை குண்டு வயிறனை
வெள்ளிக் கொம்பனை விநாய கனைத்தொழு.
அஞ்சு கரத்தனை ஆனைமுகத்தனை
நெஞ்சினில் வைத்து நித்தந் துதிப்பனே.

ஆ. முடிவு

ஏதமரும்பட்டாலிக் கிறைவா முருகோனே
பாதமலர் தன்னை நிதம்பணிவே னெழுத்தாறால்
வேத முதற்பொருளே விமலா யெனைக்காப்பாய்
சீத மதிதவழும் சிவன்மலையிற் தேசிகனே. (1)

இ. முற்குறிப்பு

வீரப்பன் சுந்தரன் பலகவிச்சுவடி

# 1616. முந்திரி வாய்பாடு

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1291

ஆ. ற/116

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ...........

ஆ. முந்திரி வாய்பாடு

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.

அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. ஏடுகள் வளைந்தும் முறிந்துமுள்ளன.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1249 காண்க.

## 1617. நீதிசாரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1292

ஆ. ள/56

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. நீதிசாரம்: மூலமும் உரையும்

இ. நீதி நூல்

ஈ. செய்யுளும் உரைநடையும்.

அச்சில் ஏறத்தாழ 35 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 26 ஏடு; 52 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. முன், பின் சில ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1229 காண்க.

## 1618. திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1293
ஆ. ய/86

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பகழிக்கூத்தர்

ஆ. திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 101

3. தோற்றக் கூறுகள்

அ. 46 ஏடு; 92 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது;

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூமா திருக்கும் பசுங்களபப்
புயபூ தரத்துப் புருகூதன்
போற்றக் ககன வெளிமுகட்டுப்
புத்தேள் பரவப் பொதியமலைக்

கோமா முனிக்குத் தமிழுரைத்த
குருதே சிகனைக் குரைகடற்குக்
குடக்கே குடிகொண் டிருந்தசெந்திற்
குமரப் பெருமா னைக்காக்கத்

தேமா மலர்பொற் செழும்பொகுட்டுச்
செந்தா மரையில் வீற்றிருக்கும்
தேவைப் படைத்துப் படைப்புமுதற்
சேரப் படைத்துப் படைக்குமுயிர்

ஆமா றளவுக் களவாக
அனைத்துந் தழைக்கும் படிகருதி
அளிக்கும் படிக்குந் தனியேசங்
காழி படைத்த பெருமாளே. (1)

ஆ. முடிவு

விரைத்த டம்பொழில் வரைமணி யாசனத்
திருந்துண் ணவர்போற்ற
வரைத்த டம்புரை மழவிடை யெம்பிரான்
மனமகிழ்ந் திடவாக்கால்
இரைத்த பல்கலைப் பரப்பெலாந் திரட்டிமற்
றிதுபொரு ளெனமேனாள்
உரைத்த தேசிகா செந்தில்வாழ் கந்தனே
யுருட்டுக சிறுதேரே. (8)

**ஆகப்பருவம் 10க்கு விருத்தம் 101;**

## 1619. பட்டயம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1294

ஆ. ற/117

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. தென்கரை நாட்டுப் பட்டயம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பதப்படுத்தப்பெறாத ஏடுகள். வளைந்து முறிந்து முள்ளன. முதலிரண்டு ஏடுகள் இல்லை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஊடையத்தையும் தகர்த்து, ஊரையும் கொள்ளை பண்ணி, சிறிது ராணுவங்களையும் வெட்டி, அவன் தலையும் வெட்டிக்கொண்டு வந்து, எல்லோருங்காணத் தக்கதாய் வைத்த படியினாலே நாங்கள் இருபத்துநாலு நாட்டாருங்கூடி செட்டி வர்த்தகர்கள் பலபட்டடைச் சாதிகளையும் வரவழைத்து ....

ஆ. முடிவு

......மதுரை மீனாட்சியம்மன் நிலவறை மண்டபத்திற்குத் தென்பாரிசத்தில் கற்றூணில் எழுதியிருக்கும்: பார்த்துக்கொள்ளவும். கூடிய செனங்களையும் கொங்குலம்மன் ரட்சிக்கவும். பாக்கு நாடாண்டிக்கு, பெரியதனம் செங்கோட பண்டாரம் ஒப்பிதம். பட்டயத்தில் வந்த காணிக்கை. ஆதாயம் தென்கரைநாடு வேறா உடையானுக்கு ஆனைமலை காளியண்ணன் மூணிலே ஒரு பங்கு கொடுக்கவும்.

## 1620. பரமராசிய மாலை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1295

ஆ. ய/87

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. குருநமச்சிவாயர்

ஆ. பரமராசிய மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 28 பக்கம்.

ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. 1 முதல் 6 வரை, 12, 13, 17, 18, 19, 25 க்கு மேல் ஆகிய ஏடுகள் இல்லை. பிற சுமாரான நிலை,

ஏ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாற்கலை யுணர்ந்து நான்மறையோதி
  நால்வகை யாகிய யுண்மை
மார்க்கமு மறிந்து மாதவம் புரிவார்
  மலரடி வணங்கவே தருவாய்
சீர்க்கவி தெரிந்து சீரடி யார்க்குச்
  சிந்தையி லிருளணு காமல்
பார்க்கர னெனவே விளங்கிடும் பொன்னம்
  பலவனே பரமரா சியனே. (13)

ஆ. முடிவு

தனிமுதற் கடவு ளானவ னென்றும்
  சற்குரு வானவ னென்றும்
கனியவர்க் கருளுங் காட்சிய னென்றுங்
  கனவிலுந் துதிக்கவே தருவாய்
மனிதரைச் சுரரை மூவரைப் பலரை
  மண்ணினை விண்ணினைப் படைத்த
பனிமதிக் கிரண நீள்முடிப் பொன்னம்
  பலவனே பரமரா சியனே. (50)

# 1621. வீடணன் அறிவுரை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1296

ஆ. ந/114

## 2. உள்ளீடு: நூல் விபரம்

அ. திருவழுந்தூரன்

ஆ. வீடணன் அறிவுரை

இ. காப்பியம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மதத்தினால் வலிய வீரன் மன்னனுக் கிளைய தம்பி
விதத்தினா லிலங்கை யாண்ட விபீஷணன் சொன்ன புத்தி
செகத்தினில் நல்லோர் கேட்கத் திருவழுந் தூரன் சொன்ன
கதைக்குநான் முகத்தோன் மாது கந்தனுங் காப்புத் தானே. (1)

ஆ. முடிவு

வெடிமுர சார்க வேந்தன் வேதியன் மறையோர் சாற்ற
படிமலை யெடுத்த தோளின் பராக்கிரமஞ் சொன்னா யண்ணே
கடிமல ரொத்த மேனி களபகத் தூரி மார்பன்
வடிசிலை தொட்ட போது மடிந்ததுன் னிலங்கை தானே. (40)

# 1622. தாய்மகள் ஏசல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1297

ஆ. ய/88

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. பழநியாண்டவர் தாய்மகள் ஏசல்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 23 ஏடு; 46 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பல ஏடுகள் சிதைந்தும் முறிந்துமுள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் — வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியாச னத்தில்வைத்த தாய்.

ஆ. முடிவு

......சொல்லி யிருவருஞ் சண்டைப் பிடியாய்த் தேவேந்திர னிடத்தில் செல்லுமளவிலே ......சிவநாமமே மேனியல்லால் நானிலத்தில் வேறுளதோ நாரியர்களே ........மேக ராசியுஞ் செய்து கையில் பிளவுதான் கொடுத்து வேணதுந் தந்தார் .. ....தன்னில் நாங்கள் அக்காளும் தங்கையரும் போலே வாழ் கின்றோம்.

முற்றும்.

# 1623. ஆத்தி சூடி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1295

ஆ. ள/57

சு. வி. 10

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. ஆத்திசூடி

இ. நீதிநூல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. வளைந்து முறிந்த ஏடுகள்.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1118 காண்க.

## 1624. வள்ளித்திருமணக்கும்மி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1299

ஆ. ர/46

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. வள்ளித்திருமணக்கும்மி

இ. நாட்டுப்பாடல்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 17 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை,

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தென்புறக் குன்றினில் மேவுங் — குருபர
தேசிகன்மேற் கும்மிப் பாட்டுரைக்கச்
சிகரத்திரு மகரக்குழை சிகைமைப்புகழ் வடிவைக்கருள்
தில்லைவி நாயகன் காப்பாமே. (1)

ஆ. முடிவு

காதுகுத்திப் பஞ்சுதக்கை யிட்டுச் — சின்னக்
காலுக்குக் காலாழி பீலி யிட்டுக்
கதிருக்கிணை மதியைப்புனை கமலத்திரு வதனத்திலே
கன்னத்தைக் கொஞ்சியே முத்தமிட்டார். (30)

# 1625. விவேக சிந்தாமணி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1300

ஆ. ள/58

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. ............
ஆ. விவேக சிந்தாமணி
இ. நீதி நூல்
ஈ. செய்யுள்

**3. தோற்றக் கூறுகள்**

அ. 15 ஏடு; 30 பக்கம்.
ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. பெரிய, தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1208 காண்க.

இ. முற்குறிப்பு

இவை, முளையாம்பூண்டியில் இருக்கும் கணபதி கவுண்டன் மகன் முத்துக் கவுண்டன் குமாரன் குழந்தையப்பன் விவேக சிந்தாமணி.

## 1626. முந்திரிலக்கம்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1301
ஆ. ற/118

## 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. ..............

ஆ. முந்திரிலக்கம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை:

அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது;

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து;

ஊ. வாரிப் பதப்படுத்தப்படாத இரட்டை ஓலைகள். நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண்: 1249 காண்க;

ஆ. முடிவு

நூறு நூறாயிரம்—கோடி;

இ. பிற்குறிப்பு

முத்துச்சாமி முந்திரிலக்கம்;

## 5. பிற செய்திகள்

இது பள்ளி மாணவர்கள் பயிலும் வாய்பாட்டேடு;

## 1627. வீடணன் அறிவுரை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1302

ஆ. ற/115

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருவழுந்தூரன்

ஆ. வீடணன் அறிவுரை

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 50

### 3. தோற்றக் கூறுகள்

அ. 26 ஏடு; 52 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 24, 25 ஏடுகள் முறிந்துள்ளன. சுமாரான நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1296 காண்க.

ஆ. முடிவு

இசைதவ மறியா மாயன் இராமனை இலக்காய்ச் சொன்னாய்
வசையன்றி வழக்குச் சொன்னாய் மானிடர் இருவர்க் கஞ்சித்
தசைதரு தவங்கள் மூன்றும் தகுமறை உரைகள் நான்கும்
பசைதரு கதிரோன் கண்ட பனிக்குலம் ஆகும் கண்டாய். (50)

இ. முற்குறிப்பு

சின்னப்பழனியப்பன் விபீஷணப் புத்தி.

## 5. பிற செய்திகள்

சுவடியின் தொடக்கத்தில் ''நாடிய பொருள் கை கூடும்'' என்னும் கம்பரின் வாழ்த்துப் பாடல் எழுதப்பட்டுள்ளது.

# 1628. கதிர்காம மாலை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1303

ஆ. ய/39

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. கதிர்காம மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 28

## 3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள்; பத்திக்கு 4 வரி.

உ. எழுதப் பழகும் மாணவரின் கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. வாரிப் பதப்படுத்தாத இரட்டை ஓலைகள். சுமாராக உள்ளது.

எ. குறை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

பாரோர் புகழவரும் பங்குனி உத்திரத்தில்
ஆராரோ வீதிதனில் அணுகினார் — நேரே
பனிச்சப்பொன் தரித்துப்பின் பதப்பிக்கிண் கிணிச்சத்தம்
கிணுக்குக் கிணுக்கென்று கேள்.

ஆ. முடிவு

மன்னிமையால் என்மேல் மனம்வைத்த நாள்முதலாய்ச்
சொன்னீர் இதைமறந்து தோகைதனக் குள்ளானாள்
பன்னீர் தனக்குப் பணி நீரகராமோக
கன்னிநிக ரோகண்டிக் கதிர்காம வேலோனே. (28)
(மூன்றாம் அடி தெளிவாக இல்லை)

(இதற்குமேல் எழுதப்படவே இல்லை)

இ. முற்குறிப்பு

பே. கருப்பணன் கதிர்காம மாலை.

## 1629. நீதிசாரம்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1304
ஆ. ள/59

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. ............
ஆ. நீதிசாரம்; மூலமும் உரையும்
இ. நீதிநூல்
ஈ. செய்யுளும் உரைநடையும்;
**அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்;**

## 3. தோற்றக் கூறுகள்

அ. 43 ஏடு; 86 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பருதி மதியிலகும் பார்மிசையோர்க்கு எல்லாம்
தருமநெறி நீதிதனைச் சாற்ற — கருதியொடுந்
துங்க வெளுத்தய்ந்துகர சுந்தரப்பொற் செஞ்சடையில்
கங்கைசுதன் தந்திமுகன் காப்பு.

(இவ்வெண்பாவின் மூன்றாம் அடி விளங்கவில்லை.)

ஆ. முடிவு

பூலோகத்தில் உள்ள மனிதர் இந்த நீதிசாரத்தைப் படித்தாலும் கேட்டாலும் இந்தப் படிக்கு நடந்து வாழ்ந்திருப் பார்கள். கடல் சூழ்ந்த பூலோகத்தில் அஷ்ட பாக்கியத்துடனே வாழ்ந்து பின்பு தெய்வப் பதவியைப் பெற்று அப்பால் ஆதிபர வஸ்துவாகிய மகாவிஷ்ணுவின் பாதார விந்தத்தில் போய்ச் சேர்ந்து முத்திபெறுவார் என்றவாறு. (87)

இ. முற்குறிப்பு

சாமிநாதப் புலவர் நீதிசாரம்.

பிற்குறிப்பு:

சாமிநாதப் புலவர் மகன் நாச்சிமுத்துப் புலவன் நீதி சாரம். எடுத்தவன் கொடுக்கவும்.

## 1630. உலக நீதி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1305

ஆ. ள/60

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. உலகநாத பண்டிதர்

ஆ. உலக நீதி

இ. நீதிநூல்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள்; பத்திக்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது; வாரிப் பதப்படுத்தப்படாத இரட்டை ஓலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்: ஆ. முடிவு:

தொடர் எண்: 1124 காண்க.

இ. முற்குறிப்பு

நல்லாக் கவுண்டன் மகன் பழனியப்பன் உலக நீதி. விரோதி வருஷம்.

### 5. பிற செய்திகள்

ஈற்றில் ''வெள்ளைக் கலை உடுத்தி'' என்னும் கலைமகள் வாழ்த்து எழுதப்பட்டுள்ளது.

## 1631, மகாநவமிபத்தியம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1306–1*

ஆ. *ற/119*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. மகாநவமிபத்தியம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2•5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. எழுதிப்பழகும் மாணவனின் கையெழுத்து கிறுக்கலானது.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1278 காண்க.

ஆ. முடிவு

அதிகால மேமகா கணபதித னைப்பணிந்து
அகல்வதை மறக்கவேண்டாம்
அதிகமயல் கொண்டுநல் கற்புடைய வனிதைமேல்
ஆசையது வைக்கவேண்டாம்

துதிபரவு தாய்தந்தை குருவுடன் பெரியோர்கள்
சொல்லதனை இகழவேண்டாம்
சோர்வுற்ற கொலைகளவு பொய்யுடன் அகந்தையும்
சொப்பனத் தினிலும் வேண்டாம்

நிதிமமதை யால்பர தேசியர்க்கு அன்னமது
நேராது இருக்கவேண்டாம்
நீணிலம் தனைஆளும் அரசரை வணங்காமல்
நேருடன் பகைக்கவேண்டாம்

சதியதுவ ராமல்இப் படிமனித ருக்குஇயல்பு
சாற்றினோம் தருமநெறிகாண்
தார்மேவும் அண்ணாம லையீசு பரர்பாலே
எந்நாளும்உலவிய தாயே உண்ணாமுலை நாயகியே.

(ஈற்றடியில் சீர்கள் மிக்குள.)

இ. முற்குறிப்பு

பழனிச்சாமி மகாநவமி பத்தியம்;

## 1632. வாசல் வளப்பம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1306–2*
ஆ. *ய/119*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............
ஆ. வாசல் வளப்பம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்;
அச்சில் ஏறத்தாழ 1 பக்கம் வரும்;

### 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்;
ஆ. நீளம் 41 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாசல் இந்த வாசல்இது — அம்மை
 மகராசன் வாசல்இது அம்மை
தேசம்புகழ் துரியோதனன் — அம்மை
 சிறப்புள்ள வாசல்இது அம்மை.

ஆ. முடிவு

அரவக் கொடித்துசம் படைத்தார் — அம்மை
 அரசன் துரியோதனன் தான் அம்மை.

## 5. பிற செய்திகள்

துரியோதன மன்னனின் வாசல் வளம் கூறும் இப்பாடல் ஏதாவது ஒரு சிற்றிலக்கியத்தின் ஒரு பகுதி போலும்.

# 1633. நாட்டு வளப்பம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1306–3

ஆ. ற/199

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. …………

ஆ. நாட்டு வளப்பம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்.
அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்.
ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நன்றாக உள்ளது.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எந்தனது நாடுதன்னைக் கேட்கவந்தாய் அம்மை
இருப்பிடத்தைச் சொல்லுகிறேன் விருப்பமுடன் கேளும்.

ஆ. முடிவு

வரைமுறைகள் தவறார்கள் எந்தனது நாடு
வானவர்கள் ஆளுவதும் எந்தனது நாடு.

## 5. பிற செய்திகள்

இப்பாடல் ஏதேனும் குறவஞ்சி போன்ற ஒரு சிற்றிலக்கியத்தின் பகுதி போலும்.

# 1634. பத்தியம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1306–4
ஆ. ற/119

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............
ஆ. கடலை அவுல் பத்தியம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்

ஆ. நீளம் 41 செ.மீ.; அகலம் 2·5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காலமே எழுந்திருந்து தீர்த்தம்மிக ஆடிக்
கணபதியைப் பூசைசெய்து கைதொழுவோம் நாங்கள்
சாலவே உமைநாடி நாங்கள்வந்து பாடத்
தயவுடனே அய்யருக்குப் பணமதுவும் தந்து
வாலவிக்கி னேசுரர்க்குத் தூபமது தனக்கு
வரிசையுடன் எங்களுக்குக் கடலைஅவுல் பணமும்
சோலியது செய்யாமல் வரிசையுடன் நல்கும்
சுகமுடனே பரிசனங்கள் சுற்றமுடன் வாழ்வீர்.

ஆ. முடிவு

சங்கரனும் உமையவளும் தான்விளங்கி வாழி
சரஸ்வதியும் நான்முகனும் தழைத்தோங்கி வாழி
பங்கயஞ்சேர் லட்சுமியும் நெடுமாலும் வாழி
பரிவான புரந்தரனும் இந்திராணி வாழி
மங்கைவள்ளி தெய்வானை காங்கயனும் வாழி
வளர்மதியும் கதிரோனும் வையகமும் வாழி
திங்கள்தொறும் மும்மாரி சிறந்தோங்கி வாழி
தேவர்களும் மானிடரும் சிறப்பாக வாழி.

## 1635. இராசகோபால மாலை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1307

ஆ. ள/61

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ............

ஆ. இராசகோபால மாலை

இ. நீதி நூல்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. மிகக் கிறுக்கலான கையெழுத்து.

ஊ. ஈற்றேடு முறிந்துள்ளது. சுமாரான நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தண்டலை மலரின் தேனை தனித்தனி வனத்தில் வாழும்
வண்டது அறியு மல்லால் மண்டுகம் அறிந்தி டாது;
கண்டது கடத்துந் துறமக் கசடர்க்கு நல்லார் பொல்லார்
அண்டது தெரியாது அய்யா ராசகோ பால மாலே. (1)

ஆ. முடிவு

.........வந்த சொல்லு மதனைச்சொல் லாம்என்று எண்ணி
......... ...... தொட்டு மாலைஎன்று உரைத்தேன் அய்யா
.........பிள்ளை பார்த்துத் தான்எது சொன்னா லும்தான்
.........பொறுப்பீர் அய்யா ராசகோ பால மாலே. (30)

## 1636, எண்சுவடி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1308

ஆ. ற/120

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. எண்சுவடி

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்.

ஆ. நீளம் 42·5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. வாரிப்பதப்படுத்தப்படாத இரட்டை ஓலைகள்.
கடைசி 5 ஏடுகள் முறிந்துள்ளன,

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நெடுமால் திருமருகா நித்தன் மதலாய்
கொடுமா வினையறுக்குங் குன்றே — தடுமாறாது
எண்முப் பதுவாயும் என்சித்தத் தேநிற்கப்
பண்உத் தமனே பணி.

ஆ. முடிவு

புதனுக்கு (15 நாழிகைக்குமேல் ராகு 3¾)
வியாழத்துக்கு 18 ,, ,,
வெள்ளிக்கு 11 ,, ,,
சனிக்கு 7½ ,, ,,
ஆக வாரம் ஏழுக்கு ராகு.........(ஏடு முறிவு)

இ. முற்குறிப்பு

மு. கருப்பணன் எண் சுவடி.

## 1637. நெஞ்சறி விளக்கம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1309

ஆ. ள/62

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கணபதிதாசர்

ஆ. நெஞ்சறி விளக்கம்

இ. நீதிநூல்

ஈ. செய்யுள் 50

### 3. தோற்றக் கூறுகள்

அ. 26 ஏடு; 52 பக்கம்.

ஆ. நீளம் 33 செ.மீ.; அகலம் 2·5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. ஓரளவு கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சுமாராக உள்ளது.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வஞ்சக மனத்தின் ஆசை மாற்றிய பெரியோர் தாளில்
கஞ்சமா மலர்இட்டு ஏத்தும் கணபதி தாசன் அன்பால்
நெஞ்சறி விளக்க ஞான நீதிநூல் நூறும் பாடத்
குஞ்சர முகத்து மூலக் குருபரன் காப்ப தாமே.

ஆ. முடிவு

ஓம்எனும் பிரண வத்துள் உதித்தஐந்து எழுத்தும் ஆகி
ஆம்எனும் கரபீ டத்து அமர்ந்திடும் வாசி கண்டு
ஊம்எனும் மௌனம் உற்றே ஊறிடும் மதுப்பால் உண்டு
தாம்எனும் நாகை நாதர் தாண்டவம் பார்ப்பாய் நெஞ்சே.(50)

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

# 1638. சிவன்மலையாண்டவர் பதிகம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1310-1

ஆ. ய/90

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. சிவன்மலையாண்டவர் பதிகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 12

## 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 43 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள். பத்திக்கு 4 வரி,

உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஏதம்அறும் பட்டாலிக்கு இறைவா முருகோனே
பாதமலர் தன்னைநிதம் பணிவேன் எழுத்துஆறால்
வேத முதற்பொருளே விமலா எனைக்காப்பாய்
சீத மதிதவழும் சிவன்மலையில் தேசிகனே. (1)

ஆ. முடிவு

அருமா மறையோனும் ஆதி சதாசிவனும்
குருமா முனிவணங்கும் குமரா பரம்பொருளே
மருமேவும் பட்டாலி மாநகரி லேஅதிபா
திருவே நிறைந்திலங்கும் சிவன்மலையில் தேசிகனே.

# 1639. செல்லாண்டியம்மை பதிகம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1310-2

ஆ. ய/90

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. இளம்பிள்ளை செல்லாண்டியம்மை பதிகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 10

## 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்.

ஆ. நீளம் 43 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கார்இணங்கும் குழல்அழகும் பிறைநுதலும்
இருகுழையும் கழுநீர்க் கண்ணும்
பூரணசந் திரமுகமும் மணிவடமும்
கொடியிடையும் புயங்கள் நான்கும்
வார்இணங்கும் கனதனமும் மலர்பதங்கொண்டு
எனைஆளாய் வந்தா யெந்தாய்
ஆரணங்கள் புகழும்இளம் பிள்ளைதனில்
வளரும்செல் லாண்டி யம்மைத் தாயே. (1)

(ஈற்றடி மிக்கு வந்துள்ளது)

ஆ. முடிவு

நீடரவக் கிண்கிணிக்கால் அய்யருடன்
வாதாடும் நிமலி சூலி
ஏடகலும் உலகமெல்லாம் காத்தழிக்கும்
சுந்தரியே எந்தாய் கையில்
சூடகமும் பாடகமும் முதலான
பணிகள்எல்லாம் துலங்க நிற்கும்
ஆடரவ பூஷணியே இளம்பிள்ளை
தனில்வளரும் செல்லாண்டி யம்மைத் தாயே.

(ஈற்றடி மிக்கு வந்துள்ளது)

# 1640. தனிப்பாடல்கள்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1310-3

ஆ. ய/90

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. தனிப்பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 25

## 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 43 செ.மீ.; அகலம் 2·5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

குள்ளக் குள்ளனை குண்டு வயிற்றனை
வெள்ளிக் கொம்பனை விநாயக னைத்தொழு.

ஆ. முடிவு

ஆறாறு நூறு வயதான பின்பு
அடியேன்நி னைந்த படியே
வேறேது சிந்தை நினையாமல் உந்தன்
வீடுஆரும் செல்வம் அருள்வாய்
சூரேசர் போல எமதூதர் என்னைத்
தொட்டோடி கட்ட வருமுன்
மாறாத தோகை மயில்மீதில் ஏறி
வரவேணும் எந்தன் அருகே. (1)

## 5. பிற செய்திகள்

இச் சுவடியில் உள்ள பாடல்கள் சில சிற்றிலக்கியங்களின் பகுதிகளாகலாம் எனத் தோன்றுகிறது.

## 1641. பார்த்தசாரதி சதகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1311
ஆ. ய/91

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .............
ஆ. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சதகம்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 101

### 3. தோற்றக் கூறுகள்

அ. 51 ஏடு; 102 பக்கம்.
ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி.
ஊ. நன்றாக உள்ளது.
எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவல்லிக் கேணிவளர் ஜெய்பார்த்த சாரதிமேல்
பருவநல்ல நீதிதமிழ் பாடுதற்குக் — குருவல்லி
தருணமிது காக்கச் சவுரி தமிழ்விளங்கக்
கருணைபுரி வேங்கடந்தான் காப்பு.
(இவ்வெண்பாவின் தளை தட்டுகிறது.)

ஆ. முடிவு

சிங்கார மாயிலகும் கருடன் மீது
சிறப்புடனே பன்னிருவர் ஆழ்வார் சூழப்
பொங்குதிருப் பாற்கடலில் சேடன் மீது
புகழுடனே பள்ளிகொள்ளும் ரங்க நாதன்

செங்கண்மால் திருவல்லிக் கேணி தன்னில்
திகழ்பார்த்த சாரதியே சிறியேன் தன்னைப்
பங்கம்இலாது அருட்கரையில் சேர்க்க ஓங்கும்
பார்த்தனுட சாரதியைப் பணிகு வாயே. (100)

5. பிறசெய்திகள்

இந்நூலாசிரியரின் பெயர் சௌரிராஜன் என இருக்கக்கூடும்.

## 1642. விவேக சிந்தாமணி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1312
ஆ. ள/63

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............
ஆ. விவேக சிந்தாமணி
இ. நீதி நூல்
ஈ. செய்யுள் 40

3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்.
ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. 16, 18 ஆகிய இரண்டு ஏடுகள் காணப்படவில்லை; உள்ளவை நல்லநிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1208 காண்க.

# 1643. மூக்கரைக் கிழவி கதை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1313

ஆ. ம/23

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. மூக்கரைக் கிழவி கதை

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்.

ஆ. நீளம் 44 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. வாரிப் பதப்படுத்தப்படாத இரட்டை ஓலைகள். 7ஆம் ஏட்டிற்குமேல் காணப்படவில்லை. உள்ளவரை நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அழகாபுரி என்று ஒரு பட்டணம் உண்டு. அந்தப் பட்டணத்திலே வீரசூரன் என்கிற வேடன். அந்த வேடன் தன் வீட்டிலே சாதம் சாப்பிட்டுப் போட்டு வாயிலே பாக்குப்போட்டுக் கொண்டு மதுரையிலே போய் வெற்றிலை போடுவான்;

ஆ. முடிவு

அப்போது கிழவிக்குக் கோபமாகி, ''அடா, அதாசூரா என் முன்னாலே வாராதே ஓடிப் போடா'' என்று அதட்டினாள். அது கேளாமல் ரொம்பவும் முடுகி வாரவனைக் கண்டு இந்த மூக்கரைக் கிழவி தன் நாசிக் காற்றினாலே பெருமூச்சு விட்டாள். அப்போது அந்த நாசிக் காற்றானது இந்த அதாசூரனைத் தூக்கிக் கொண்டு போய் ஏழு திருப்பாற் கடலுக்கு அப்பால் போட்டு...........

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

## 1644. திருமுருகன் பூண்டி பட்டயம்

### 1 நூலகக் குறிப்புகள்

அ. 1314

ஆ. ற/121

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. திருமுருகன் பூண்டிப் பட்டயம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 42 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து. அடித்தல் திருத்தல் மிகுதி.

ஊ. வாரிப் பதப்படுத்தப்படாத இரட்டை ஓலைகள். சற்றுச் சிதைந்துள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்:

ஸ்வஸ்தி ஸ்ரீமந் கொண்டேரி ஆளுடைய நாயனார் திருவுளப்படிக்கு ஸ்ரீமந் மகாமண்டலேசுவரன் ஆரிய தளவிபாடன் ஆரிய மோகம் தவிர்த்தான் ஒட்டிய தளவிபாடன் ஒட்டியமோகம் தவிர்த்தான் ஆறிலொன்று கடமை கொண்டு அருள்பெருகி அன்பு கூர்ந்து ஆதுரசாலையும் அந்தணர் வேள்வியும் வேதவொலியும் விழாவருள் வீதியும்...........

ஆ. முடிவு

இந்த சாசனம் எழுதினவன் மண்டல புருஷன் திருக் கணக்கன் முருகநாத பிள்ளை கையெழுத்து. செவயன்பதிக்கு அதிபன் சித்திரமேழித் தலைவன் பயிசலி கோத்திரத்து வீர விக்கிரம சோளியாண்டா கவுண்டர் கை ஒப்பிதம். அவிநாசிக் கவுண்டன் ஒப்பிதம். பெரிய கெல்லியண்ண கவுண்டன் ஒப்பிதம். நல்ல காளியப்ப கவுண்டன் ஒப்பிதம். சிவமயம்.

## 5. பிற செய்திகள்

வழக்கமான ''ஸ்வதத்தாத் த்விகுணம் புண்யம்'' என்னும் சுலோகம் கிரந்த லிபியில் உள்ளது. இக்கிரய சாசனத்தின் காலம் சாலீவாகன சகம் 1626 ரக்தாட்சி வருஷம் ஐப்பசி மாதம் 15ஆம் தேதி. (கி. பி. 1704 அக்டோபர் இறுதி அல்லது நவம்பர் முதல் வாரம்) ஆனால் இச்சுவடி 280 ஆண்டு பழமையுடையதன்று. மிகப் பிற்பட்ட காலத்துப் படியே.

# 1645. பரமராசிய மாலை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1355

ஆ. ய/92

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. குருநமச்சிவாயர்

ஆ. பரமராசிய மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 100

## 3. தோற்றக் கூறுகள்

அ. 44 ஏடு; 88 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.: அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சுமாராக உள்ளது, 43ஆம் ஏட்டிற்கு மேல் ஏடுகள் காணப்படவில்லை,

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவணா மலையில் குகைநமச் சிவாய
தேசிக வடிவமாய் இருந்தும்
கரவின்நா யடியேன் சென்னிமேல் உனது
கழலிணை வைத்தவாறு உளதே
விரவினால் உயிரைப் புதல்வரைப் பொருளை
வேண்டிய வேண்டியது அனைத்தும்
பரவினாற் புகழ்வை அளித்திடும் பொன்னம்
பலவனே பரமரா சிகனே. (1)

ஆ. முடிவு

சிரத்தலம் தனிலே வைத்தசே வடியும்
தேசிக ராயெழுந் தருளி
கரத்தலம் தனிலே தந்தவொண் பொருளும்
கண்டுகண் களிக்கும்நாள் உளதோ
வரத்தநல் புலியூர் மகத்தல மடந்தை
மகாநடம் கண்டனன் இனியான்
புரத்தலங் களில்போய் அலைந்திடேன் பொன்னம்
பலவனே பரமரா சியனே. (86)

(இதற்குமேல் ஏடுகள் காணப்படவில்லை.)

## 1646. முத்துநாச்சி சண்டை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1316*

ஆ. *ர/47*

### 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. ..................

ஆ. முத்துநாச்சி சண்டை

இ. நாட்டுப்பாடல்

ஈ. செய்யுள்.
அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 40 ஏடு; 80 பக்கம்

ஆ. நீளம் 42 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முந்திமுந்தி விநாயகனே நல்ல
    முருகுழலாள் சரஸ்வதியே
கந்தனுக்கு முன்பிறந்த நல்ல
    கச்சிக் கணபதியே முன்நடவாய்.

ஏடறியேன் எழுத்தறியேன்
    ஏட்டில்வகை தொகையறியேன்
பாடறியேன் படிக்கறியேன்
    பாட்டில் வகைதொகை நானறியேன்.

ஆ. முடிவு

இத்தனை நாள்வரைக்கும் அத்தைமகன்தான்
இப்போது எனக்கு உடன்பிறப்பு
என்னுட ஆசைநீ மைத்துனனே
எள்அளவு ஆசைகள் வைப்பதில்லை
அவளைநீ விவாகம் செய்துகொள்அய்யா
அச்சினமே நீயும் இப்போது.

(இதற்குமேல் எழுதப்பட்டதாகவே தெரியவில்லை.)

## 1647. நோய்க்கு மருந்து

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1317

ஆ. ல/256

### 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. ............

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 135 ஏடு; 270 பக்கம்:

ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. முதல் 4 ஏடுகளும் இடையில் சில ஏடுகளும் காணப்படவில்லை. சற்றே சிதைந்த சுவடி.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரையாப்புக்கு மருந்து: தாதளம் பூண்டு, உப்பு இரண்டும் நாலு பாகமாக நாலு ஆறு நாளிலே நசியமிடவும். உள்ளுக்குக் கீழாநெல்லித் தழை அரைத்து மூன்று கொட்டைப் பாக்கத்தனை விடிகாலைக்கும் மத்தியானத்திற்கும் அந்திக்கும் மூன்று உண்டையும் பல்லில் படாமல் விழுங்கவும்.

ஆ. முடிவு

கெண்டை பிரட்டினால் சின்னித்தழை துவைச்சு வறுத்து ஒற்றிடத் தீரும். சூனியத்துக்குக் குண்டியைப் பிடித்தால் வேலிப் பருத்திச்சாறு சற்று ந(க்)கத் தீரும்.

# 1648. புலந்திரன் தூது

## 1. நூலகக் குறிப்புகள்

அ. *1318*

ஆ. *ர/48*

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

இ. புலந்திரன் தூது

உ. நாட்டுப்பாடல்

ஈ. செய்யுள்.
அச்சில் ஏறத்தாழ *100* பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. *134* ஏடு; *268* பக்கம்.

ஆ. நீளம் *41* செ. மீ.; அகலம் *2.5* செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு இரு பத்திகள். பத்திக்கு *4* வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. புல ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. குறை

4. சிறப்புச்செய்திகள்

அ. தொடக்கம்

முந்தி விநாயகனே முக்கணனார் தன்மகனே
சந்தி விநாயகனே சங்கரனார் தன்புதல்வா
ஒற்றைநல்ல கொம்பா ஒருசொல்லு வாசகனே
வித்தைக்கு நல்ல வேதம் உடைபோனே.

ஆ. முடிவு

ஏந்திழை யாட்காக ஏழ்ஊரு நான்விடுவேன்
காணி அளித்துக் கடைகெட்ட பஞ்சவ.........
பேருசொல்லி வந்ததுக்குப் பிடரியிலே.........
அந்த மொழிகேட்டு அருச்சுனனின் புத்திரனார்.
(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1649. ஆரவல்லி கதை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1319

ஆ. ர/49

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. ஆரவல்லி கதை

இ. நாட்டுப்பாடல்

ஈ. செய்யுள்.
அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 224 ஏடு; 448 பக்கம்

ஆ. நீளம் 42 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள். பத்திக்கு 4 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. முதல் இரண்டு ஏடுகளும், 224க்கு மேல் இருக்க வேண்டிய ஏடுகளும் காணப்படவில்லை. சுமாரான நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கற்றவரை நான்வணங்கிக் கதைகளுமே முன்நடக்க
அடியேனும் பாடுகிறேன் அனைவோரும் கேட்டருளீர்.
உண்மையுடன் பாட உலகர்மனம் பொறுத்தருளீர்
பாண்டவர்கள் பாரதத்தைப் பத்திலொன்று சொல்லுகிறேன்.

ஆ. முடிவு

மதனகிரிப் பட்டணத்து மன்னவர்கள் எல்லோரும்
அவர்கள் தம்பதியில் அழகாக வீற்றிருந்தார்
.........தன்மபுரம் தார்வேந்தர் பஞ்சவர்கள்
ஆயன் அருளாலே அனைவோரும் வீற்றிருந்தார்
சிங்கா சனத்தில் சிறப்பாக வீற்றிருந்தார்.

# 1650. ஏகாதசிப் புராணம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1320

ஆ. ந/116

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதாச உபாத்தியாயர்

ஆ. ஏகாதசிப்புராணம்; மூலமும்உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 91 ஏடு; 182 பக்கம்.

ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 2•5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் ; 1197 காண்க.

ஆ. முடிவு

தண்டமிழ்ப் புலவோர் போற்றும் சச்சிதா னந்தா போற்றி
வண்டுறை குழலாள் சேரும் மாதுமை பாகா போற்றி
தெண்டிரை யுலகம் போற்றும் செல்வமா தாவே போற்றி
அண்டர்மா முனிவர் போற்றும் அரகரா சிவனே போற்றி. (88)

இ. பிற்குறிப்பு

நள வருஷம் பங்குனி மாதம் 28 ஆம் தேதி தென்கரை நாடு 12 கிராமத்துக்கும் அண்டநாடு 32 கிராமத்திற்கும் தென் பொங்கலூர்நாடு 8கிராமத்துக்கும் புலமை செங்குந்த கோத்திரம் ராசி கூட்டம் திருக்கைவேற் புலவர் அவருடைய பிதாகளாகிய பெரியணப்புலவன் குமாரன் சாமிப் புலவன் ஏகாதசிப் புராணம் எழுதி முடிந்தது. ஏகாதசி யன்றைக்குச் சம்பூரணம்.

குருவே துணை.

## 5. பிற செய்திகள்

இவ்வுரையாசிரியரின் பெயர் ராமதாசர் என்றும் இவர் மூலனூர் காசிப கோத்திரம் பரமேஸ்வர பண்டிதரின் சீடராகிய அரசப் பிள்ளை என்பவரின் மைந்தர் எனவும் அறியப்படுகிறது.

## 1651. மகாவிந்த நாடகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1321

ஆ. ற/122

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. வாலகேசன்

ஆ. மகாவிந்த நாடகம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 90 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 127 ஏடு; 254 பக்கம்.

ஆ. நீளம் 33 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 127ஆம் ஏடு முறிந்துள்ளது. பொதுவாக நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருதுணைசேர் அத்திபுரத்து அரசு செங்கோல்
திக்குவிச யஞ்செலுத்தித் தரும ராசன்
பரமபதம் உதவுகதி தரும்வை குண்டப்
பதிஉலவு சரிதைநா டகத்தைப் பாட
புரம்மூன்றை எரித்தவனே காளி ஈன்ற
புத்திரனே சரிந்ததொந்திப் பொருளே எந்தன்
கரம்இரண்டுக்கு உதவியதாய் நிற்க வேணும்
கடவுள்சுர விகடதடக் கடவு ளானே,

ஆ. முடிவு

மைக்குழலும் பஞ்சவர்கள் — திரு
வைகுண்டத்தே போன கதை
...... ...... ......
மூன்று முரைத்ததுவும்
கரியதுயில் வெளுத்தவும் — சுரைக்
காய்கசப்பு.........(ஏடு முறிந்துள்ளது.)

(இதற்குமேல் எழுதப்படவே இல்லை.)

## 5. பிற செய்திகள்

இந்நூல் கலி 4928 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் (கி. பி. 1827) அமுதகவி வாலகேசன் என்பவரால் இயற்றப் பட்டது என அறியப்படுகிறது.

# 1652. வில்லிபாரதம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ: 1322

ஆ: ந/117

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: வில்லிபுத்தூரர்

ஆ: வில்லிபாரதம்: கண்ணன் தூது: மூலமும் உரையும்

இ: காப்பியம்

ஈ: செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 37 ஏடு; 74 பக்கம்:

ஆ: நீளம் 35•5 செ.மீ.; அகலம் 2•5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. மிக மிகச் சிதைவுற்ற நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(முதலில் ''நீடாழி உலகத்து'', ''பொருப்பிலே பிறந்து'' என்னும் இரண்டு விருத்தங்களும் உள்ளன. தொடர்ந்து,)

தம்தம் உரியில் அவர்வைத்த தயிர்பால் வெண்ணெய் எட்டாமல்
குந்தி உரலின் மீதேறி இளங்கோ வியர்முன் கூத்தாடி
நந்தன் மனையாள் அசோதைஇரு நயனம் களிக்க விளையாடும்
மைந்தன் இருதாள் எப்போதும் மறவார் என்றும் பிறவாரே.

ஆ. முடிவு

நம்முடை தங்கையே கேளாய் உன்னுடைய விரித்த கூந்தல்............விரிக்கப் போறது துரியோதனனாதியர் அந்தப்புரத்துத் தேவியார் அளகபாரம்..............திருவுளம் பற்றினார் கிருஷ்ணதேவன் என்றவாறு. (50)

(இதற்குமேல் எழுதப்பட்டதாகவே தெரியவில்லை.)

# 1653. புலந்திரன் தூது

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1323

ஆ. ர/50

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. புலந்திரன் தூது

இ. நாட்டுப்பாடல்

ஈ. செய்யுள்.

**அச்சில் ஏறத்தாழ 90 பக்கம் வரும்.**

## 3. தோற்றக் கூறுகள்

அ. 136 ஏடு; 272 பக்கம்.

ஆ. நீளம் 46·5 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள். பத்திற்குக் 4, 5 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. 1, 2, 3, 19, 80, 81, 82, 85, 134 முதல் 137 ஆகிய ஏடுகள் முறிந்துள்ளன. 41ஆம் ஏடு காணப்படவில்லை. மிகப் பழுதுற்ற சுவடி.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1318 காண்க.

ஆ. முடிவு

புனந்திரனார் தூது பொறுமையுடன் கேட்டு(டார்கள்)
பாடினவர் தான்வாழி படித்தார் கிளைவாழி
கேட்டவர்கள் எல்லாம் கிளைபொருந்தி வாழ்ந்திடு(வீர்)
காதாரக் கேட்டவற்குக் கனபவுசும் உண்டாகும்;
(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

# 1654. செல்லாண்டியம்மன் கப்பல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1324

ஆ. ய/93

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. இளம்பிள்ளை செல்லாண்டியம்மன் கப்பல்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 15

## 3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 24 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவிளங்கு தென்முளையாம் பூண்டி மேவு
திரிபுரைமெஞ் ஞானிபர தேவி மாரி
மருவிளங்கு குழலிவட பத்ர காளி
வாலைஇளம் பிள்ளையுமை மீதில் நாளும்
தருவிளங்கும் செந்தமிழால் கனிவு கூர்ந்து
தரணிபுகழ் கப்பல்நா டகமே சொல்ல
உருவிளங்கும் மதகரிமா முகவன் செய்ய
உபயசர ணாரவிந்தம் காப்ப தாமே.

ஆ. முடிவு

சித்திரஞ்சேர் புவனமெங்கும் ஒன்றாய் நின்ற
சிவனுடனே நடனம்புரிந்து இலங்கும் வீர
சத்திமக மாயிவட பத்ர காளி
தருணமயில் வாகனனை ஈன்ற செல்வி
வித்தகிமெஞ் ஞானிசிவ சத்தி மாரி
விமலிமுளை யாம்பூண்டி நகரில் வந்த
தத்தைமொழி இளம்பிள்ளை மாது தானும்
தாரணியில் நீடூழி வாழி தானே.

## 1655. அபிமன்னன் சுந்தரி மாலை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1325

ஆ. ர/51

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. அபிமன்னன் சுந்தரி மாலை

இ. நாட்டுப்பாடல்

ஈ. செய்யுள்:
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 145 ஏடு; 290 பக்கம்.

ஆ. நீளம் 44·5 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்தி. பத்திக்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாயன்மகள் சுந்தரியாள் மாலையிடும்......
நேயமுடன் வார்த்தை நிகழ்த்தவே — தூயவெள்
வாரணனாம் மால்மருகன் வார்கழலைப் போற்றிசெயக்
காரணனாம் வேழமுகன் காப்பு.

ஆ. முடிவு

பார்த்தவர்கள் எல்லோரும் பாங்குடனே தான்வாழி
சூழ்த்தசபை தான்வாழி தொல்புவியோர் தான்வாழி
ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழியதே.

இ. பிற்குறிப்பு

விளம்பி வருஷம் ஆனி மாதம் 29 ஆம் தேதியில் சுந்தரி யம்மானை எழுதி முடிந்தது. முற்றும்.

## 1656. வீரமாறன் நாடகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1326

ஆ. ற/123

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. வீரமாறன் நாடகம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 80 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 90 ஏடு; 180 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2•5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5, 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. முதல் 17 ஏடுகள் இடப்புறம் முறிந்துள்ளன; 90க்கு மேல் இருக்கவேண்டிய ஏடுகள் காணப்படவில்லை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

. . . .     . . . .     . . . .   மங்களம்
வெங்கமல வாணி கிறு......ணியற்கு மங்களம்
வேண்டி எழுத்தாணி கொண்ட விநாயகற்கு மங்களம்
பங்கயப்பொற் பாதனுக்கு பார்அளந்த மாயவற்கும்
சங்குசக்ர அவதார சவுந்தரிய ராசனுக்கு மங்களம்.

ஆ. முடிவு

மடந்தை யகவல்

அளித்திடு மென்றீர் அன்புடன் நானும்
களிப்புடன் இன்று கண்மணி கேளாய்.

வசனம்

விசைநகர் ஆளும் வீரசூரேந்திரன் திசைதர என்ன தீர்மானம் செய்தார்; செய்துமே செங்கோல்.........

(இதற்குமேல் எழுதப்பட்டதாகவே தெரியவில்லை.)

## 1657. வில்லிபாரதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1327

ஆ. ந/118

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. வில்லிபுத்தூரார்

ஆ. வில்லிபாரதம்: பதின்மூன்றாம் போர்ச்சுருக்கம்:
மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 106 ஏடு; 212 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரி.

உ. பலவிதமான கையெழுத்து. தெளிவானது. பிழைகள் மிகுதி.

ஊ. 54, 55, 82–87 ஆகிய ஏடுகள் முறிந்துள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சங்கையி லாவகை யமபடர் ஆருயிர்
தளர்பொழு தற்கருகே
மங்கையர் சூழவி ருந்துஅழுது உள்ளம்
மயக்கினும் யான்மறவேன்
கங்கையும் நான்மறை யும்துள வும்கமழ்
கழல்இணை யும்திருமால்
அங்கையின் மீதுஒளிர் சங்கமும் நேமியும்
அஞ்சன மேனியுமே.

ஆ. முடிவு

கடோற்கசன் துரியோதனனடைக்குப் போனதுவும், தர்மராசா சொன்ன விசேஷம் சொன்னதுவும் அருகே இருந்தபேர் சொன்ன விசேஷமும், அவர்களைத்தான் உறுக்கி முனிந்து பேசினதும் அடைவுடனே சொன்னான் கடோற்கசன் என்றவாறு (256)

பதின்மூன்றாம் போர்ச்சருக்கம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

அக்ஷய வருஷம் கார்த்திகை மாதம் 4ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அவிமன்னுயுத்தம் எழுதி முகிந்தது. முற்றும் சம்பூரணம். இதில் எழுத்துக்குற்றம் சொற்குற்றம் இருந்தாலும் பெரியோர்கள் பொறுத்து உட்கொள்ள வேண்டியது.

## 1658. கம்பராமாயணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1328

ஆ. ந/119

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கம்பர்

ஆ. கம்பராமாயணம்: வீடணன் அடைக்கலப்படலம்: மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்; அச்சில் ஏறத்தாழ 80 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 115 ஏடு; 230 பக்கம்.

ஆ. நீளம் 33 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. ஓரளவு தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(முதலில் ''நாடிய பொருள் கைகூடும்'' விருத்தம். தொடர்ந்து)

நீயயன்மு தற்குலமி தற்கொருவ னின்றாய்
ஆயுமறை யைப்பொருளு ணர்ந்தறிவை மைந்தா
தீவினைந யப்புரிதல் செய்வினைதி ருந்தாய்
ஏயின்முதற் றொருகைவிற்றுனையவெய்யோய்

(ஈற்றடியில் சில அசைகள் குறைகின்றன.)

ஆ. முடிவு

சொல்ல அரிதாகிய அழகுபொருந்திய அயோத்தியா புரியிலே உண்டான பிள்ளைகள் நாலுபேருக்கும், விபீஷணா! வனவாசம் வந்த இடத்திலே குகனும் சுக்ரீவனும் நீயும் ஆக மூன்று பிள்ளைகள் ஆனோமே. ஆகையால் என் தந்தை தசரத ராசனுக்கு ஏழுபுத்திரரானபடியினாலே தேவர்களும் பெற அரிதாகிய பரமசாயுச்சியம் கிடைத்திருக்குமே விபீஷணா! சிரஞ்சீவி! சிரஞ்சீவி! (86) அடைக்கலப்படலம் முற்றும்,

இ. பிற்குறிப்பு

ரௌத்ரி வருஷம் மார்கழி 25ஆம் தேதி திங்கட்கிழமை 25 நாழிகைக்கு மூலம் அமாவாசையில் எழுதினது விபீஷணன் அடைக்கலப்படலம். தென்கரை நாடு செங்குந்த கோத்திரம் ராசி கூட்டத்தில் திருக்கைவேல் புலவர் குமாரன் மந்திரிப் புலவர் அவருடைய மகன் பெரியணப்புலவர். அவருடைய மகன் சாமிப்புலவர் விபீஷணன் அடைக்கலப்படலம் முற்றும் எழுதினது

## 1659. பாகவதம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1329

ஆ. ந/120

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. வரதராஜ அய்யங்கார்

ஆ. பாகவதம்: குழலூது படலம். மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 30 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 50 ஏடு; 100 பக்கம்.

ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 3செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

### அ. தொடக்கம்

பொன்னிறமா மெனப்புவனம் படைத்துக் காத்துப்
புயல்நிறமாய்த் தழல்நிறமாய்த் துடைத்துப் போர்த்து
முன்னிறமாய்த் திளைத்துயர்ந்து விளங்கி னாரை
முடுகிடவே நீண்டவட விலைமேல் முந்தித்
தொன்னிறமாம் அண்டரண்டம் எண்ணில் கோடி
துலங்கிடவே வயிற்றமைத்துத் தூய தாய
தன்னிறமாய்க் குழவியெனப் பொலிந்து தோன்றும்
தலைவனிரு தாளிணையெம் தலைமேற் கொள்வாம்.

### ஆ. முடிவு

எண் தவர்கள் ஆனந்த வாரி சோர வியர்த்திடவே இனிது மகிழ்ந்திருக்கும் நாளில்—எண்ணிக்கை பொருந்திய முனீசுவராள் ஆனந்தக் கடலில் மூழ்கிப் பரவசமடைந்து தோத்திரம் செய்யும் படியாய் மிகுந்த சந்தோஷத்தோடும் கூடியிருக்கும் நாளில் என்பது கருத்து. (58)

### இ. முற்குறிப்பு

விய வருஷம் கார்த்திகை மாதம் 10 ஆம் தேதி.

### பிற்குறிப்பு

சர்வஜித்து வருஷம் ஆனி மாதம் 23 ஆம் தேதி எழுதினது.

## 5 பிற செய்திகள்

இவ்வுரை ஆசிரியர் பாண்டிய நாட்டு வேளாளர் குலத்தில் வந்த முத்துசாமிக் கவிராயரின் புதல்வரான செண்பகப் புலவர் என அறியப்படுகிறது.

## 1560. கூளப்ப நாயக்கர் காதல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1330

ஆ. ய/94

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..................

ஆ. கூளப்பநாயக்கர் காதல்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள். 152 கண்ணி

### 3. தோற்றக் கூறுகள்

அ. 20 ஏடு; 40 பக்கம்.

ஆ. நீளம் 44 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. முதல் ஆறு ஏடுகளும் 14, 18, 19 ஆகிய ஏடுகளும் முறிந்துள்ளன. 19ஆம் ஏட்டிற்கு மேல் காணப்படவில்லை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பேராரும் பெஞ்சைப் பெரியநா கேந்திரன்மேல்
சீராருங் காதல்என.........வேரிதரும்
அக்கினித ரச்சொலமுன் நப்பணைவ லத்தில்வரு
கைக்கி............வுள் காப்பு.

ஆ. முடிவு

வாளையொத்த செங்கருங்கண் மானார் மதராசன்
பாளையத்தைக் கொள்ளையிடப் பண்பாய் மலர்பறித்தார்,(151)

அங்குநின்ற பெண்களெலாம் அங்கங்கே போய்மறைய
இங்குநின்ற பேதை இனம்பிரிந்த மான்போலே. (152)

## 1651. நீதியொழுக்கம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1331

ஆ. ள/64

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ..................

ஆ: நீதியொழுக்கம்

இ. நீதிநூல்

ஈ. செய்யுள்.
அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 37·5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்தி. பத்திக்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. வாரிப் பதப்படுத்தப்படாத இரட்டை ஓலைகள்.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீதி யொழுக்கம் நிலையுடன் படிக்க
ஆதி விநாயகன் அடியிணை காப்பு,

ஆ. முடிவு

எல்லா நீதி இப்படியே இம்மை தன்னில் செய்வார்கள்
உண்மை யாக நீதியுடன் ஊழிக் காலம் வாழ்வார்கள்.

அரகரா அவ்வையார் அருளிச் செய்தாள்நீதி யொழுக்கம் படிச்சு முடிஞ்சுது.

இ. முற்குறிப்பு

ராமணன் நீதியொழுக்கம்.

## 1662. எண் சுவடி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1332

ஆ. ற/124

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. எண்சுவடி

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து. பிழைகள் மிகுதி.

ஊ. வாரிப் பதப்படுத்தப்படாத இரட்டை ஓலைகள்.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம். ஆ. முடிவு

தொடர் எண்: 1308 காண்க.

# 1663. மாந்திரீக நூல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1333

ஆ. ழ/33

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. …………

ஆ. பெயர் தெரியாத மாந்திரீக நூல்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை,
அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு, 6 பக்கம்.

ஆ. நீளம் 38.5 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. வாரிப் பதப்படுத்தப்படாத இரட்டை ஓலைகள், வலப் புறம் முறிவு.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

(பல பிரயோகங்களுக்குரிய 11 இயந்திரங்கள் (சக்கரங்கள்) இதில் எழுதப்பட்டுள்ளன.)

## 1664. சூடாமணி நிகண்டு

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1334

ஆ. ச/36

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மண்டல புருடர்

ஆ. சூடாமணி நிகண்டு: 1,2 தொகுதிகள்

இ. இலக்கணம்

ஈ. செய்யுள்.
அச்சில் ஏறத்தாழ 35 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 29 ஏடு; 58 பக்கம்;

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. முதல் ஏடு காணப்படவில்லை. சுமாரான நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(வ)ருமுறை திவாக ரம்போல் வைத்துப்பிங் கலந்தை தன்னில். (6)

ஒருங்குள பொருளும் ஓர்ந்திட் டுரைத்தனன் விருத்தந் தன்னில்
இருந்தவை நல்லோர் குற்றம் இயம்பிடார் என்ப தெண்ணித்
திருந்திய கமல மூர்த்தி திருப்புகழ் புராணஞ் செய்தோன்
பரந்தசீர்க் குணபத் திரன்தாள் பணிந்தமண் டலவன் தானே. (7)

ஆ. முடிவு

தொறுவியர் பொதுவி யாச்சி சூழ்ந்திடுங் குடத்தி மற்ற
திறைபுணர் இடைச்சி முல்லை நிலத்திற்பெண் ணாகு மென்ப
குறைவருங் கான நாடன் குறும்பொறை நாட னோடு
முறைசெயும் அண்ணல் தோன்றல் முல்லையிற் றலைவர் நாமம்.
(71)

(இது இரண்டாவது தொகுதியின் 71 ஆம் பாடல். இதற்குமேல் எழுதப்படவே இல்லை.)

## 1665. அரிச்சுவடி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1335*

ஆ. *ற/125*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. அரிச்சுவடி

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்.

ஆ. நீளம் 41 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 1 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. வாரிப் பதப்படுத்தப்படாத இரட்டை ஓலைகள், வலப் புறம் சற்றே சிதைவு.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

(இச்சுவடியில் தமிழ்நெடுங்கணக்கு முழுவதும் எழுதப் பட்டுள்ளது.)

## 1666. சுப்பிரமணிய மாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1336

ஆ. ய/95

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. சுப்பிரமணிய மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்;

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 15ஆம் ஏடு முறிவு, இதற்குமேல் ஏடுகள் காணப்பட வில்லை. சுமாரான நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1144 காண்க.

## 1667. ஆரவல்லி கதை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1337

ஆ. ர/52

### 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. ..............

ஆ. ஆரவல்லி கதை

இ. நாட்டுப்பாடல்

ஈ. செய்யுள்.
அச்சில் ஏறத்தாழ 175 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 172 ஏடு; 344 பக்கம்.

ஆ. நீளம் 41.5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்தி. பத்திக்கு 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. முதல் 5 ஏடுகளும் ஈற்றில் 2 ஏடுகளும் முறிந்துள்ளன;
125, 126, 143 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீராரும் பூவுலகில் செல்வமிகு நெல்லூரில்
ஆரவல்லி சூரவல்லி ஆண்டிருந்தாள் பட்டணத்தை
பேரான பஞ்சவர்கள் பூவுலகில் வென்றகதை
கூறியே பாடுகிறேன் (கு)ஞ்சரமும் காப்பாமே;

ஆ. முடிவு

நீடூழி காலமெல்லாம் நீணிலத்தோர் தான்வாழி
ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரூணி
மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பார்;

## 1663. அபிமன்னன் சுந்தரி மாலை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1338*

ஆ. ர/*53*

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ............

ஆ. அபிமன்னன் சுந்தரி மாலை

இ. நாட்டுப்பாடல்

ஈ. செய்யுள்.
அச்சில் ஏறத்தாழ *100* பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. *144* ஏடு; *288* பக்கம்.

ஆ. நீளம் *43* செ. மீ.; அகலம் *2.5* செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்தி. பத்திக்கு 4 வரி.

உ. சற்றுக் கிறுக்கலான கையெழுத்து.

ஊ. *144*ஆம் ஏடு காணப்படவில்லை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : *1325* காண்க.

## 1669. விநாயக புராண வசனம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1339*

ஆ. ம/*24*

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. …………

ஆ. விநாயக புராண வசனம்

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 168 ஏடு; 336 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரி.

உ. தெளிவான எழுத்து.

ஊ. 123, 126 ஆகிய ஏடுகள் முறிந்துள்ளன. 138 முதல் 140 வரை ஏடுகள் காணப்படவில்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இப் புவியில் நைமிசாரணியத்தில் சவுனகர் முதலான ரிஷிகள் எல்லோரும் பனிரெண்டு வருஷம் வேள்வி செய்யும்போது இந்த வேள்வி பார்க்கிறதற்கு வந்த சூதருக்குப் பூசை செய்து, ஆசனம் போட்டு, இருத்திவைத்து ரிஷிகள் எல்லோரும் சூதரைப் பார்த்து ஒரு வாக்கியம் கேட்கிறார்கள்.

ஆ. முடிவு

அப்ப விஷ்ணுவுக்கும் பிரமாவுக்கும் ஒன்றுபடுத்திப் பிரமாவுக்கு நூல் கொடுத்துப் பிரமன் ஆக்கினோம். அப்படியாகும் நூலினுடைய மகிமையென்று சொல்லிக் கணபதி பட்டணம் போய்ச்சேர்ந்தார். திருச்சங்கரனும் இந்த விரதம் இருந்து பலம் அன்னம் புனம் மூன்று நிலைமை பெற்றான் என்றவாறு.

இ. பிற்குறிப்பு

சார்வரி தை 25 குறுப்பை நாடு கொடுமணல் கிராமம் ஒரத்தப்பாளையத்தில் இருக்கும் சென்னிமலைப்புலவர் மருமகன் தென்கரை நாடு தூரம்பாடிக் கிராமம் நத்தப்பாளையம் பெரியணப்புலவன் மகன் சாமிப்புலவனுக்குப் படிக்கும்படிக் கொடுத்து வைத்தது. வைத்துப் பூசைபண்ணிக் கொண்டு இருக்கவும். சுகமாய் சிரஞ்சீவியாய் இருக்கவும்.

## 5. பிற செய்திகள்

இச் சுவடி முன்சொன்ன தேதியில் எழுதப்பட்டதன்று. முன்பே இருந்த சுவடி அந்தத் தேதியில் சாமிப்புலவனுக்குப் பயன்பாட்டிற்காக அளிக்கப்பெற்றது.

# 1670. பஞ்சதந்திர வசனம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1340

ஆ. ம/25

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. பஞ்சதந்திர வசனம்

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 168 ஏடு; 336 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. *41, 136,. 141, 160–162* ஆகிய ஏடுகளும், *174*க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை; *123, 116* ஆகிய ஏடுகள் முறிந்துள்ளன. சிதைவுற்ற நிலை:

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாடலீபுரம் என்றொரு பட்டணம் உண்டு. அது எப்படி என்றால் அன்னம் சிறுத்து அழகு பெருத்தாற் போல(வும்),...... சத்தம் பெருத்தாற் போலவும், சாயங் காலத்தில் சந்திரன் உதய மானாற் போலவும், வருஷ சகா.........பெருத்தாப் போலவும், சிவலிங்கம் சிறுத்து மோட்சம் பெருத்தாற் போலவும், சாலக் கிராமம் சிறுத்து..............போலவும், தீபம் சிறுத்துக் காந்தி பெருத்தாப் போலவும்...... ...... ......

ஆ. முடிவு

எப்போதும் போல சிங்க ராசாவின் கிட்ட பிரதானியா யிருந்து கொண்டு சுகத்திலே இருந்ததென்று விஷ்ணு சர்மனான வன் சுகதரிசன மகாராசாவின் குமாரர்களுக்குச் சொன்ன மித்திர பேதகம் என்கிற........

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

# 1671. முந்திரிலக்கம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. *1341*

ஆ. *ற/166*

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. முந்திரிலக்கம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. வாரிப் பதப்படுத்தப்படாத இரட்டை ஓலை.

எ, முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம். ஆ. முடிவு.

தொடர் எண் : 1249 காண்க.

# 1672. நீதியொழுக்கம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1342

ஆ. ள/65

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. நீதியொழுக்கம்

இ. நீதிநூல்

ஈ. செய்யுள்.
அச்சில் ஏறத்தாழ 4 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்தி. பத்திக்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. வாரிப் பதப்படுத்தப்படாத இரட்டை ஓலைகள்; நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீதி யொழுக்கம் நிலையுடன் படிக்க
ஆதி விநாயகன் அடியிணை காப்பு.

ஆ. முடிவு

எல்லா நீதியும் இப்படியே
இம்மை தன்னில் செய்வார்கள்
உண்மை யாக நீதியுடன்
ஊழிக் காலம் வாழ்வார்கள்.

இ. முற்குறிப்பு

குப்பணன் நீதி ஒழுக்கம். செல்லப்ப கவுண்டன் எழுதினது.

## 1673. நவரத்ன சிந்தாமணி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1343-1

ஆ. ட/215

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............
ஆ. நவரத்ன சிந்தாமணி 800
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 806

## 3. தோற்றக் கூறுகள்

அ. 121 ஏடு; 242 பக்கம்.
ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.
உ. மிகக் கிறுக்கலான கையெழுத்து.
ஊ. பல ஏடுகளில் துளைகள் விழுந்துள்ளன.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுழியின்முனை இடைபின் துரியதுரியா தீதத்தில்
பொழியும் ரவிமதியைப் போற்றுவாம் — சுழியின்முனை
அகரம் மதில்இலகும் ஐம்பத்தோர் அட்சரத்தில்
புகழும் மூலக் கணபதியைப் போற்றுவாம். (1)

ஆ. முடிவு

மெய்தும்சுழி இடைபிங்கலை மிகவும்தொழுது அடியேன்
விதிதன்செயல் மதிதந்தைசெய் விந்தின்விளைவு அதனால்
நெய்தும்பொருள் ......தமிழ்க் கவிதன்பொழி அமிர்தம்
நீடாழிசூழ் புவனங்களி ......விமலர் கமல
மொய்தும்வளர் பரிபூரண மூவஞ்சுநூர் ஞானம்
முழுதும்பல கலைஆய்ந்துஎண் ணூறாமுடி மொழிமேல்
வய்தும்ஒரு நூறுசொச்சமும் வசனிப்பது மணியாய்
ம......மகி தலமேவிய மனமேமகிழ்ந் தனரே. (806)

முற்றும்

(இப்பாடலின் பொருள் விளங்கவில்லை.)

இ. பிற்குறிப்பு

பவ சித்திரை 23 சுக்கிர வாரம் பகல் எழுதி நிறைந்தது.

இவை கருவூர். சுப்பராய முதலியார்.........குமாரன் க. செங்கல்வராய முதலியால் எழுதி முடிந்தது.

5 பிற செய்திகள்

இந்நூல் திருவள்ளுவர் ஞான வெட்டியான் 1500-ன் சுருக்கம் என அறியப்படுகிறது,

## 1674. கவனமணி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1343-2

ஆ. ட/215

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ........

ஆ. கவனமணி 108

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 108

3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 28 பக்கம்:

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. மிகக் கிறுக்கலான கையெழுத்து.

ஊ. ஏடுகளில் ஆங்காங்கு துளைகள் விழுந்துள்ளன. பழுதுற்ற நிலை,

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

### அ. தொடக்கம்

வேதாந்தம் எண்ணூறுஅதன் மொழிவிசிதம் ஒருநூறும்
மேவுந்தமிழ்க் கவிசொச்சமும் விதியாய்இவை அருளும்
நாதாந்தசின் மயமேவிய நவரத்தின பீடம்
நவகண்டம்சு ரேழும்புகழ் நவசித்தர்கள் மகிழும்
பாதாம்புய நாதாக்கள்தன் பரிபூரண கமலம்
பதினெண்பல கலையாய்ந்துநூல் பாடப்பணிந் தோதும்
தாதாவெனும் பொதிகைக்கிரி தலம்வாழ்குரு முனிவர்
தவழ்பொற்றிரு வடிவேதொழுது அர்ச்சித்து ஓதுவனே. (1)

### ஆ. முடிவு

நவரத்ன மொன்பதுமி லங்குமொழி தமிழ்க்கவிதை
நவகண்ட புவன மவைசூழ்
நகரிலகு மகிதலமி ரேழுபுகழ்.........
ஞானம் மூவஞ்சு நூறில்
சிவகுருமெஞ் ஞானஅகத் தீசர்அரு ளாலும்
திருவள்ளுவ னென்னும்பே ரதனால்
திகிரிகடல் அகிலமிவை முனிரிஷித போதனர்கள்
சித்தர்பதி னெண்மர் மகிழும்
நவமறைநன் னூல்விசித ரத்னசிந்தா மணிச்சாத்
திரம்எண் ணூற்றி யாறும்
சரிதையில் விளங்குமதி அமிர்தமழை பொழியவும்
சதாகோடி யுகவரை யும்வாழ்
கவனமணி சொச்சமொரு நூறுமிவை யெட்டுகவி
கைவல்ய பாட லுரையும்
கனகமணி யசைவிலது இடைபின்சுழி பரிபூரண
கருணா கடாட்ச முற்றே. (108)

### இ. பிற்குறிப்பு

திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய 1500க்குச் சுருக்கம் நவரத்ன சிந்தாமணியைச் சார்ந்த சொச்ச கவுன வயசு 100 முடிந்தது. இவை கருவூர் சுப்பராய முதலி வைத்தியர் குமாரன் க. செங்கல்வராய முதலியால் எழுதி முடிந்தது.

## 1675. சாற்றுக் கவிகள்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1343-3

ஆ. டி/215

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பதினெண் சித்தர்

ஆ. குருநூல் 1200க்குக் கொடுத்த சாற்றுக்கவிகள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 33

### 3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. மிகக்கிறுக்கலான கையெழுத்து.

ஊ. ஏடுகளில் ஆங்காங்கு துளைகள் விழுந்துள்ளன.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விநாயகர் வணக்கம்: வெண்பா

இக்கடிகணத்தில் ஒன்றும் இடையூறு வராமல்
முக்கணன்தான் பெற்ற முதல்வனே-இக்குமொழி
கானக் குறவள்ளி காவலற்கு முன்பிறந்த
ஆனை முகனே அருள். (1)

(இவ்வெண்பாவின் முதலடி திருத்தமாக இல்லை.)

ஆ: முடிவு

சரிகை யொடு கிரியை சமர்த்துள்ள யோகமொடு
பரிதைசிவ ஞானம் பகர்ந்ததனால்—இக்கவிதை
அண்டர்பவ முனிவர்வரர் இந்தசித் தர்முதல்
கண்டகுரு நூலிது காண்பார்; (33)

சாற்றுக் கவிகள் முற்றும்.

## 5. பிற செய்திகள்

1876 ஆம் வருடத்துக்குச் சரியான தமிழ் தாது வருஷம் சித்திரை மாதம் 30 ஆம் தேதி கருவூர் சுப்பராய முதலியார் வைத்தியர் குமாரர் கருவூர் செங்கல்வராய முதலியார் எழுதி நிறைந்தது.

# 1676. அகத்தியர் வைத்தியம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1344

ஆ. ல/257

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வைத்தியம் 1500

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 1509

## 3. தோற்றக் கூறுகள்

அ. 380 ஏடு; 760 பக்கம்.

ஆ. நீளம் 30 செ.மீ.; அகலம் 3·5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

பாகுடன் கணேசன் பாதம் பணிந்துமுக் குணங்க ளாய்ந்து
வாகடச் சுவடி யெல்லாம் வகைவகை தொகுத்துப் பார்த்து
ஆகம விதியின் நூலால் அடந்திடும் நோய்கட் கெல்லாம்
போகநல் மருந்து சொல்வாம் புலத்தியா பொருந்திக் கேளே. (1)

ஆ: முடிவு

கிரமமாய்ச் சொல்லி.........சூத்திரத்தி லப்பா
கிஞ்சுதங்க ளொன்றுமில்லை கெட்டி கெட்டி
கிரமமுள்ள பேர்க்கு வாக்கதைக்.........
......... நூல்காட் டாதே
கிரமமுள்ள அவுசதங்கள் கருக்க ளெல்லாம்
கிரத்தினோ மடக்கமில்லைப் பாடு மில்லை
கிரமமுள்ள தைலங்கள் சொல்லி விட்டோம்
கிண்ணாதன வெளிதருவார் கண்டு போற்றே. (1509)

முற்றும்.

## 5. பிற செய்திகள்

பிற்பகுதியிலுள்ள ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளன.

# 1677. நோய்க்கு மருந்து

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1345

ஆ. ல/258

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . .

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்.
அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 52 ஏடு; 104 பக்கம்.

ஆ. நீளம் 20·5 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 1, 9, 14, 15, 20, 25, 26, 28, 29, 31, 34, 36, 38, 40, 42, 45, 46, 52, 56, 58, 59, 71–74, 76, 78-80, 82, 83 ஆகிய ஏடுகளும் 84க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கொள்ளக்குரண்டு விரா்கனிடை இரண்டு நேரம்
குலவுகரப்புப் புளிக்கசப்பு குழிநீர் மாற்றி
உள்ளடையில் மண்டிலம்கொண்டு இருக்கத் தீரும்
ஓங்குயினி சூலைகண்ட மாலை புற்று
வெள்ளெலும்பு ருக்கிப்புண் கபால சூலை
மிகக்கொடிய பவுத்திரமும் மேக வாதம்
புள்ளிருக்கு வேளூரில் உமையாள் பாகர்
புகழ்சிர சூரணத்தைப் பூரிக்கி றோமே.

(இப்பாடலின் தெளிவான வடிவம் விளங்கவில்லை.)

ஆ. முடிவு

கணைக்கு நெய்:..............பொன்னாங்காணி வேர், தூதளம் பழம், அம்மான் பச்சரிசி, தாளிப்பூ, செப்பு நெருஞ்சி, நீர்ப்பூலாவேர், உள்ளங் குளிர்ந்தான் வேர், கருஞ்சூரை வேர், நாகராஞ்சி வேர், நாய்க் கடுகுவேர், அவுரி...........

(இதற்குமேல் ஏடுகள் காணப்படவில்லை.)

## 1678. இராமாயண வசனம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1346

ஆ. ம/26

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. இராமாயண வசனம்

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 250 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 260 ஏடு; 520 பக்கம்.

ஆ. நீளம் 43.5 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 24, 76-80, 85, 106, 119, 151, 172-185, 214, 225 245, 246, 259-261, 264-267 ஆகியஏடுகளும் 295க்கு மேல் இருக்கவேண்டியனவும் காணப்படவில்லை. மிகப்பல ஏடுகள் முறிந்துள்ளன. மிகமிகப் பழுதுற்ற சுவடி.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வடகலையான கிரந்தம் தென்கலையான தமிழ் கன்னடம் தெலுங்கு.................யிருபத்தொரு தெய்வத்தைக் காரணமே தென்றால் பிரமா ஈரேழு பதினாலு.........சிருஷ்டிப்பன்.

ஆ. முடிவு

சந்தோஷமாயிருந்தளவில் சீதையைப் பார்த்து பிரமா ஒரு.........பெருமையும் உறுதியும் நலமும் நாட்டவரும் லோகமும் அறியத்தக்கதாக............செய்வித்தவனல்ல அதை நீ மனசிலே கண்டு அவரைக் குற்றஞ் சொல்லாதே நீ..............தேறுதலைச் சொல்லி இருந்தளவில் ராமர் தேவர்களையும் அனுப்பி விருமாவையும்...போகாமலிருந்தோமாகில் பரதன் அக்கினி பாய்வான். அதுக்கு முன்னே ஒருவரைப் போ.........

(இதற்குமேல் ஏடு முறிவு. மேல் ஏடுகள் இல்லை.)

# 1679. நூரு நாமா

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1347

ஆ. ற/127

## 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. அமிர்தகவி செய்யிது முகம்மது அண்ணாவியார்

ஆ. நூரு நாமா

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 100

## 3. தோற்றக் கூறுகள்

அ. 30 ஏடு; 60 பக்கம்

ஆ. நீளம் 22·5 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 18 ஏடுகளுக்கு மேல் வலது கீழ்ப்புறம் சிதைந்துள்ளது. சுமாரான நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அல்லா ஒருவனுக்கே எல்லாப் புகழ்ச்சியும். அலகமந்து லில்லல் திறப்பில ஆலமீ. ஒலயாக்கு பத்துவில் முத்தக கீன். அஸ்ஸலாத்து ஒவ்ஸலாமும் அலாற் சூலிலாதி அலா செய்யிதின் முகம்மதின். ஒ ஹாலி ஹிவ அஸஹாபிஹி அஜமயீ நூருநாமம் சொல்லால் எழுத்தால் தொகுத்துஇனிது உரைக்கத் துய்யோனே உன் காவல் நீ துணை செய்வாயே.

ஆ. முடிவு

வசல்லல்லாகு அலாகை ரி கலகிகீ செய்யிதினா முகம்மதிவை ஆலிஹி வஸகுபிஹி அஜீமயீன்.

இ. முற்குறிப்பு

நவரத்தினக் கவி. இவை எடுத்துப் படித்துவிட்டுக் காதிரு முகியத்தீன் அண்ணாவியார் பள்ளிக் கூடத்தில் வந்து தந்திட வேண்டியது.

# 1680. பாச்சா ராவுத்தர் பவனி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1348

ஆ. ய/96

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சீவரத்தினக்கவி. முகம்மது மீரா லெப்பை அண்ணாவியார்

ஆ. அய்யம்பேட்டை பாச்சா ராவுத்தர் பவனி

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள். அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 40 ஏடு; 80 பக்கம்.

ஆ. நீளம் 26 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீரோங்கும் ஆதிமுதற் சிற்பரனைத் தான்போற்றிப்
பேரோங்கும் வாஷ்ச்சா பிரபலிகம்—நேரோங்கச்
செய்யதமி ழாற்பவனி செப்பவே என்றும்உள்ள
துய்யபெரி யோனே துணை.

ஆ. முடிவு

கற்றவர்க்கே நிதம் வாழி. மோகக்காதல் கொள்ளும் திருக்கன்னிக்கும் வாழி. நித்தியசுப சோபன வாழி. வாழ்ச்சா நிருபதி வாழ்கவே நீடூழி வாழி. அகமதற்கே வாழி. நபிமகு மூதர் அடிபணி வாஷ்ச்சாயி வாழி; அகம்மதற்கே வாழிவாழி. முற்றிற்று.

இ. முற்குறிப்பு

யுவ கார்த்திகை 13 சனிக்கிழமை விசாகம் கூடிய சித்தியோகத்தில் அய்யம்பேட்டை பாஷ்ச்சா ராவுத்தர் பேரில் அண்ணாவியார் பாடிய பவனி. அண்ணாவியார் நூருமுகம்மது எழுத்து.

பிற்குறிப்பு:

யுவ கார்த்திகை 28 ஞாயிறு ரோகிணி கூடிய அமிர்த யோகத்தில் அதிவீரராமன்பட்டினம் அமுர்தகவி செய்யது முகம்மது அண்ணாவியார் பேரன் நவரத்னகவி காதர் முகை யித்தீன் அண்ணாவியார் அவர்கள் பிள்ளை நூரு முகம்மது அண்ணாவியார் எழுதி முற்றிற்று.

## 1681. வருடாதி நூல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1349

ஆ. வ/56

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இடைக்காடர்

ஆ. வருடாதி நூல்

இ. சோதிடம்

ஈ. செய்யுள் 60

### 3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்;

ஆ. நீளம் 27•5 செ. மீ.; அகலம் 3 செ. மீ;

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது;

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி;

உ. தெளிவான கையெழுத்து;

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதி பிரவத்தில் அம்புவியில் மானிடர்க்குச்
சோதனையாத் துன்பசுகந் தோன்றுமே—நீதி
தருபசுக்கள் மேயத் தரணிமழை உண்டாம்
பருத்தியுப்பு ஆமணக்குப் பாழ். (1)

ஆ. முடிவு

அச்சயத்தின் மாரிவிளைவு அற்பமெனச் சொன்னாலும்
நற்செயத்தைக் காட்டும் நலமுண்டாம்—இச்செகத்தில்
மாரியுண்டு வெள்ளாண்மை வாழ்வுறவே தான்விளையும்
சீரிணங்க ஓங்கும் திரு.

## 1682. சட்டைமுனி நிகண்டு

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1350

ஆ. ல/259

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சட்டைமுனி

ஆ. சட்டைமுனி நிகண்டு

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 1243

### 3. தோற்றக் கூறுகள்

அ. 158 ஏடு; 316 பக்கம்.

ஆ. நீளம் 29 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்த மில்லாத நிர்க்குணத்தை நோக்கி
அடுத்துநின்ற உண்மனைத்தாய் பதத்தைப் போற்றிப்
பாதியந்த மாகநின்ற உமையாள் சொன்ன
பாங்கான சின்மயத்தின் கருணை யாலே
ஊதியந்த வாதமென்ற நூலுக்கு எல்லாம்
உசரவைத்த நாகமணிக் கிரீடம் போலச்
சாதியந்தக் குணத்தோடு நிகண்டு சொல்லச்
சச்சிதா னந்தவெளி காப்புத் தானே. (1)

ஆ. முடிவு

நாட்டினேன் செயவீரம் வராக வித்தை
நலமான உப்பினுட உறுதி சொன்னேன்
பூட்டினேன் வாசத்தில் பூதம் சொன்னேன்
புகழாக இருபத்து அஞ்சு அங்கம்
ஆட்டினேன் பலநூல் இல்லை இல்லை
ஆச்சரியம் அதுநிகண்டின் தொகையைக் கேளு
நீட்டினேன் ஆயிரத்து இருநூற் றின்மேல்
நேராக முப்பத்து ஒன்று முற்றே. (1243)

இ. முற்குறிப்பு

1057ஆம் வருடம் வைகாசி 32 ஆதித்த வாரம் ரேவதியன்று அழகப்பபுரம் தவசி ஆசாரி குமாரன் இராமசாமி ஆசாரி விசையராமபுரம் வெள்ளைக்கண்ணு முக்கந்தர் குமாரன் சம்மந்தமூர்த்தி முக்கந்தருக்கு எழுதின சட்டை முனியார் நிகண்டு.

பிற்குறிப்பு

1057 சித்திரபானு ஆடி 19 புதன்கிழமை பூரட்டாதி அன்று முடிந்தது.

## 5. பிற செய்திகள்

நூலை அடுத்து 3 ஏடுகளில் இரசம், கந்தகம், மனோசிலை, தாளகம். நாகம், பாஷாணம், நாபி, காந்தம், துத்தம், குக்கில், அயப்பொடி, அப்பிரகம், தாம்பிரம், நேர்வாளம் ஆகியவற்றின் சுத்திகரிப்பு முறைகள் கூறப்பட்டுள்ளன.

# 1683. நோய்க்கு மருந்து

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1351

ஆ. ல/260

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 60 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 93 ஏடு; 186 பக்கம்.

ஆ. நீளம் 24·5 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காலாக்னி ருத்திரன் சன்னி பதின் மூன்றுக்கும் :
நாவி, கெந்தி, வெண்காரம், ரசம், மிளகு ஆக மருந்து சரி எடை ஊமத்தஞ்சாறு கொண்டு ஒருநாள் ஆட்டி வழித்து உருட்டி ஆறி உலர்ந்த பின்பு மறுபடி தூளாயாட்டிச் செப்பில் அடைத்துக் கொள்ளவும். குண்டுமுத்து எடை தூக்கி இஞ்சிச் சாற்றில் முலைப்பால் சேர்த்துக் கொடுக்க சன்னி பதின்மூன்று, முத் தோஷமும் தீரும்.

ஆ. முடிவு

வாந்திக்குச் சருவ கருக்கு :
சுக்கு, மிளகு, இஞ்சி, கடுகு, ஓமம், வசம்பு, பிரண்டைக் கொடியும் சுண்ணாம்பும் வைத்துத்தட்டி அதையும் போட்டுத் தீப்பரத்திக் கருக்கி சாராயத்தை விட்டு இறக்கிக்கொண்டு கால் துட்டு காயத்தை வாங்கிப் பொடிசெய்து போட்டுக்கொடுக்கவும். தாகமானால் தென்னங்குறும்பல் பிரண்டை ஒன்றும் நெல் பொரியும் ஒரு துண்டு சுக்கும்போட்டுத் தண்ணீர் கொடுக்கவும்.

இ. முற்குறிப்பு

விசயராமாபுரத்தில் இருக்கும் வெள்ளைக்கண்ணு மூக்கந்தர் மகன் சம்மந்தமூர்த்தி முக்கந்தன் வயித்தியச் சுவடி.

## 1684. மச்சமுனி 800

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1352

ஆ. ல/261

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மச்சமுனி

ஆ. மச்சமுனி 800

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 800

### 3. தோற்றக் கூறுகள்

அ. 118 ஏடு; 236 பக்கம்.

ஆ. நீளம் 31 செ.மீ.; அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9,10 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்:

எதுவான திரிபுருடர் ...... ......
...... ...... ...... ......
பொதுவாகு மென்றுகொடுத் தனுப்பு சித்தி
பூதலத்தி லாகிறுசனம் புகலக் கேளு
மதுவாகும் யநமசிவா வயநமசி யென்று
மைந்தனே சிவயநம சிவயநம வென்று
அதுவாகும் நமசிவய வென்று மாட்டு
அரையினில்நீ அடைக்கஆகி துசன மாமே; (26)

ஆ: முடிவு

வித்தகத்தோன் பதத்தானை வெளிவி டாதே
வேதாந்த மனோன்மணித்தாய் பாதத் தாணை
சித்தருக்காம் இந்தஎண்ணூறு பெருநூல் அப்பா
சிவஞானம் தங்குகின்ற பெரியோர்க் காகும்
மத்தொருத்தர் இந்நூலைப் பதனம் பண்ணி
வைத்தாலும் வாதமுத்தி வாய்க்கு மப்பா
பத்தருக்குப் பாடிவைத்த சதமெட் டான
பதிவாரும் பெருநூல்மெஞ் ஞானம் முற்றே.

மச்சமுனி எண்ணூறு முகிந்தது. முற்றும்.

இ: பிற்குறிப்பு

இந்த எண்ணூறெழுதி முகித்தேன் அம்மையடியான்;

## 5. பிற செய்திகள்

சுவடி ஏட்டெண் 1 இல் தான் தொடங்குகிறது. இதுதான் தலைப்பேடு ஓம் நன்றாக முதலியன காணப்படுகின்றன. ஆனால் முதலில் 26 ஆம் பாடல் தான் எழுதப்பட்டுள்ளது.

# 1685. நோய்க்கு மருந்து

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1353

ஆ: ல/262

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: …………

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 80 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 79 ஏடு; 158 பக்கம்.

ஆ. நீளம் 18 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச்செய்திகள்

அ. தொடக்கம்

வாதம் 80க்கும் :

சீர்பெறு மட்ட வர்க்கம் திசைமூல கஞ்சா மாயில்
ஏர்பெறு கோட்டம் இந்து இலந்தைகார் அகில்நீர் குன்றி
பதமுறும் துத்தி வித்து பரியகா றடைய தூபம்
மதமுறும் குக்கில் கன்னி மணமுன்னை சதுரக் கள்ளி. (1)

ஆ. முடிவு

ஆட்டிநீ யென்குறுணி நீரில்இட்டு அக்கினியில்
மாட்டியரைக் குறுணியாக்கி வார்த்திடுவாய் நெய்யங்கே
அறுகாலப்பா யுறச்சேரு பொன்முசுட்டை வாய்விளங்கம்
தீட்டியதோர் செவ்வியமும் தேவதாரு சித்தரத்தை
வீளிவேர்தோல் சுகமான வெப்பாலை மிளகுதானே.

(இப்பாடலில் யாப்பு வடிவம் விளங்கவில்லை)

# 1686. சுந்தரானந்தர் சூத்திரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1354-1

ஆ. ல/263

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சுந்தரானந்தர்

ஆ. சுந்தரானந்தர் சூத்திரம் அதிகம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 31

## 3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்.

ஆ. நீளம் 14·5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நன்றாக உள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரிஓம் அரகரா அக்களவு மாகி
அதிலேதான் சுழித்தவிரு சுழியு மாகித்
தெரியாத பொருளாகிச் சித்தரியு மாகிச்
சிவமுமாய்ச் சத்தியுமாய் இரண்டு மொன்றாய்த்
தெரியாத நிர்மூடர் இதைய றிந்தால்
தாயான மவுனத்தை அறிவா னய்யா
விரிகமலத் தொன்றாகி நின்ற மூலம்
வேதாந்தம் சித்தாந்தம் வெளிவிட் டேனே. (1)

ஆ. முடிவு

சாறான அண்டத்தின் தயிலம் சற்றே
சண்ணடா வெள்ளுள்ளித் தயிலம் சற்றே
கூறான நிம்பெண்ணெய் மையில் போட்டுக்
காய்ச்சியே நெய்யெடுத்துக் கொஞ்ச மிட்டுக்
கூறார்கள் வெகுசுருக்கு வொன்று சொல்வேன்
சுகமாக ஆகாசத் தூள்க ழஞ்சு
வீறான தோஷங்கள் ஓட வேதான்
விரவிநன்றாய் உள்ளுக்குச் செலுத்தி டாயே. (31)

## 1687. பஞ்சபட்சி சாத்திரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1354-2
ஆ. ல/263

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............
ஆ. பஞ்சபட்சி சாத்திரம்
இ. சோதிடம்
ஈ. செய்யுள் 58

### 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.
ஆ. நீளம் 14.5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நன்றாக உள்ளது.
எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விதிவழிதான் பொய்த்திடினும் வேதம் பிரணவத்தினும்
புதிதில்லா தாதிமதி பொய்த்திடினும்—பதிவான
பஞ்சபட்சி அஞ்சும்இந்தப் பாருலகில் பொய்யாது
நெஞ்சே இதுநிசமாம் நேர்.

ஆ. முடிவு

மணிக்கட்டு வல்லூறு வன்முழங்கை யாந்தை
கணித்தமுழங் காலதுவே காகமாம்—வணிக்கைபெறும்
வாரணமாம் கெண்டை வளர்தோள் மயிலென்றே
பூரணமாய்ச் சொன்னார் புரிந்து. (58)

## 5. பிற செய்திகள்

இச்சுவடியில் இதனை அடுத்து மூன்று ஏடுகளில் சில மாந்திரீகச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

# 1688. வடபத்திரகாளி மாலை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1355

ஆ. ள/97

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. குமரதாசன்

ஆ. வடபத்திரகாளி மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 32

## 3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 24 பக்கம்.

ஆ. நீளம் 16·5 செ.மீ.; அகலம் 2·5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்பூத்த ஞான வடபத்ர காளிதன் சேவடிக்கே
ஏர்பூத்த முப்பத் திரண்டொரு மாலை இயம்புதற்கே

சு, வி, 15

வேர்பூத்த கொங்கை வலவைதன் பாகத்தில் வீற்றிருக்கும்
கார்பூத்த யானை முகப்பிள்ளை யார்பதம் காப்பதுவே.

ஆ. முடிவு

சூலாயு தக்கரமும் வச்சிர மாமணித் தோடணிந்த
பாலார் மதியும்செந் தாமரைப் பாதம் பணிந்துதொழும்
கோலா கலன்குமர தாசன் செழுந்தமிழ் கூர்ந்துகொண்ட
வாலா யளகை வடபத்ர காளி மனோன்மணியே. (32)

## 1689. ஞான விளக்கம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1356
ஆ. ட/216

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............
இ. ஞானவிளக்கம்
உ. தத்துவம்
ஈ. செய்யுள் 51

### 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.
ஆ. நீளம் 21·5 செ. மீ.; அகலம் 4 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 10, 11 வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீருயர்ந்து பார்த்துரைக்கும் பெரியோர் பாதம்
சென்னியின்மேல் கொண்டடியேன் சிரசு மீது
ஆருயர்ந்து பார்த்துஅறு முகனைப் போற்றி
அருந்தமிழால் அறுமுகனை அன்பாய்ப் பாடக்
காருயருங் குழல்வள்ளி பங்கன் எங்கோன்
கலாபமயில் ஏறிவிளை யாடு சோலை
சூருதிசூர் நின்றதுரை யைப்............
சூரியனும் சந்திரனும் தோதம் ஆமே. (1)

ஆ. முடிவு

வீடுகட்டி ஒன்பது வாசல் விட்டு
மேற்கூரை விதைத்துக் கருந்தோலாலே மேய்ந்துணர்ந்து
மாடுகொண்டு மும்மலக் காடுழுது ஞான
மானை வெள்ளை வயலில் பாய்ச்சித்
தேடரிய வயல்விளைந்து அமுது மேவச்
சிதம்பரவி லட்சமது செருகிச் சின்ன
சூடுகொண்ட திருவிடுதுரையைப் பிறக்கிச்
சூரியனும் சந்திரனும் தோத்தம் ஆமே. (51)

## 1690. அகத்தியர் ஞானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1357

ஆ. ட/217

2. உள்ளீடு நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் ஞானம் 100

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 69

## 3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு; 36 பக்கம்.

ஆ. நீளம் 20·5 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை,

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
　　பூமியென்றும் திகிரியென்றும் படைத்த வாறும்
காரணமாய்த் தேவியெங்கும் நிறைந்த வாறும்
　　கற்பமுண்டு ரிஷிகள்சா காத வாறும்
வாரணமாய்ப் பறவையொடு நாற்கால் சென்மம்
　　மானிடங்க ளூருகின்ற குலத்தின் வாறும்
பாரதமாய்ப் புல்லதாய் விருட்ச மாகப்
　　பாதாள சாகரமும் படைத்த வாறே.

ஆ. முடிவு

தானென்ற வாலையிலே மூன்றெ ழுத்தைச்
　　சொல்லார்......ஈந்தாலும் ஞானம் பேசார்
ஏனென்ற ...... ...... ......
　　எழும்பியதோர் மால்தொடுத்து எண்ணிப் பாரு
தேனென்ற ...... மூன்றெழுத்தும் பாரு
　　திரமான வாலையிதை யறிவோன் சித்தன்
வானென்ற வாலையிலே அஞ்செழுத்தைக் கூட்ட
　　மகத்தான அநாகத்தின் வீடே தாமே. (69)

(இதற்குமேல் எழுதப்படவே இல்லை.)

## 1691. சத்துரு சங்கார மாலை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1358
ஆ. ழ/34

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............
ஆ. சத்துரு சங்கார மாலை
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள் 50

### 3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு; 44 பக்கம்.
ஆ. நீளம் 16 செ.மீ.; அகலம் 3·5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முத்திரை யாச்சுது முகையத்தி னென்றசொல் நெஞ்சகத்தே
பத்திரை யாச்சுது பரமானந்த மாச்சுது பிசாசுகளைத்
தத்திர மாச்சுது தராதலமா பயல்தனக்குக்
கைத்திர மாச்சுது முகியதின் அச்சரம் திசைநாலும் கட்டுதற்கே.

(இப்பாடலின் யாப்பு விளங்கவில்லை.)

ஆ. முடிவு

தெளிவிதம் ஒன்பது விசுமிலகில மதலை துவராம
வளிவிதம் வந்தவார்த்தை தெரிந்தறி வாலை வரும்

பழிவிலகும் பரமானந்த சோதியைப் பாவித்துவைக்கும் என
வழியைத் துலக்கும் முகியதின் சாயபு வாலிபதியே. (50)

(இதுவும் மந்திரம் போலும். யாப்பு விளங்கவில்லை.)

5. பிற செய்திகள்

முதல் 37 பாடல்களுக்கு (அல்லது மந்திரங்களுக்கு உரிய யந்திரங்கள் வரையப்பட்டுள்ளன.)

## 1692. மாந்திரீக நூல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1359

ஆ. ழ/35

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரீக நூல்

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 7 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்.

ஆ. நீளம் 17•5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை;

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ரக்தஜ்வால ஜடாதரம் சசிதரம் தே
சொர்ணமயம்தே நிர்வாணம் தே
சூல கபால பாச டமருக கரம் த்ரிநேத்ரம்
ஆனந்த கோலாகலம்
சுவானவாகனம் வந்தே சர்வபூதப்ரேத
பிசாச நாசம் சர்வ த்ருஷ்டி நாசம்
சர்வசத்ரு நாசம் சர்வ துன்பம் நாசம்
வங் வங் வடுகயா சித்தித்தா
ஆங் ராங் ரிங் ரோங் சருவ ராதக்கிறப்பியும்
சருவ விக்கி னெக்கிறபடியும் உதைபட் சுவாகா.

ஆ. முடிவு

ஓங்கு மருள் பிரகாச சடாமுடி ரூபா ஹ்ரீம் ஹ்ரீம் சிவ சிவா வா ஹ்ரீம் ஹ்ரீம் ஆ ஆ இ ஈ உ ஊ நமசிவய நமசிவய நமசிவய இருளீசுர தேவதாய நமா.

இ. முற்குறிப்பு

விசயராமபுரத்தில் இருக்கும் வெள்ளைக்கண்ணு முக்கந்தன் மகன் சம்மந்த மூர்த்தி முக்கந்தன் படித்து வருகிற சுவடி.

# 1693. மாந்திரீக நூல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1360

ஆ. மு/36

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரீக நூல்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை.
**அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.**

## 3. தோற்றக் கூறுகள்

அ. 58 ஏடு; 116 பக்கம்.

ஆ. நீளம் 12 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கம் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கிலியும் சிரஸே சுவாகா சவ்வும் கிகாய வவுஷட் ஐயும் கவசாய ஹூம் கிலியும் நேத்ரத்ரயாய வஷட் சவ்வும் அஸ்த்ராய பட்

மூன்று கோண நடுவே முளரியாய் மூலமந்திரத்து ஆதார பீடமாயாணற யோரிதளதிலே யுகண்ட மாயம்மையோகமதிலே யடங்குமே தூண்டு சூல கபாலத்தினாளையும்......

ஆ. முடிவு

எமதூதர் காலனாணை ஓடு. சிதம்பர சக்கரத்தின் ஆணை ஓடிப்போ. போகாதிருக்கில் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் குத்திக் கொலைகொண்ட தோய்யிருக்கும். ஓடு ஓடு ஓம் காளி ஓம் பிடாரி ஓம் நமசிவாயா.

## 5. பிறசெய்திகள்

இச்சுவடியில் சில யந்திரங்கள் உள்ளன.

# 1694. மாந்திரீக நூல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1361

ஆ. மு/37

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............
ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரீக நூல்
இ. மாந்திரீகம்
ஈ. உரைநடை..
அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 27 ஏடு; 54 பக்கம்.
ஆ. நீளம் 18 செ. மீ.; அகலம் 4•5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ராச மோகனம் :

வறசியாதாபசிலோலாடோவயிதாதற்சதுகரம்கூவுக்காணி பாதகோகெம்பம் கிறகணம் ஸோாம சூரியயோ வெறபோ கபாயா தற்சியா வீறா தறா வேணியில பகுர்சோ தேவசா நின்மகீ; பிற சோதரில.........

ஆ. முடிவு

ப்ராணப்ரதிஷ்டை :

அஸ்யப்ராண இஹப்ராண அஸ்ய ஜீவ இஹ ஜீவ அஸ்ய ஸர்வேந்த்ரியாணி அஸ்ய வாங்மனச க்ஷுர்ஸ்ரோத்ர ஜிஹ்வா க்ராண சப்த ஸ்பர்ஸ ரூபரஸ கந்த இஹைவ கெத்தியம் சுகம் சிரம் திஷ்டந்து சுவாகா.

## 5. பிற செய்திகள்

இச்சுவடியில் மந்திரங்களுக்கு உரிய யந்திரங்கள் இடம் பெற்றுள்ளன.

## 1695 சோதிடச் செய்திகள்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1362

ஆ. வ/57

### 2. உள்ளீடு: நூல் விவரம்.

அ. ..................

ஆ. சோதிடச் செய்திகள்

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 30 ஏடு; 60 பக்கம்.

ஆ. நீளம் 18 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 9 முதல் 32 வரை இருக்க வேண்டிய ஏடுகள் காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சந்திரன் தனிலே தான்தனக்கு நாள் வரும் 300
விந்தையாம் கன்னி சேர்வள் விமரநோக்க உண்டு
முந்திய காரியங்கள் நினைந்தது முடியும் இனிமேல்
இந்திரன் தன்னை இனிதுடன் மைந்தருண்டு.

ஆ. முடிவு

பூரட்டாதிக்கு 11, 25, (நாள்கள்) 3 மாசத்தில் மாறும்
உத்திரட்டாதிக்கு 7. 14. 15 நாளில் தீரும்.
ரேவதிக்கு 6. 8

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

5. பிற செய்திகள்

ஏட்டின் இறுதியில் ஒரு பக்கத்தில் கபாலநீர் முழுக்குக்கு வேண்டிய மருந்துச் சரக்குகளின் பட்டியல் உள்ளது.

## 1696. பூசைவிதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1363
ஆ. ற/128

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..........
ஆ. பூசை விதி (சைவம்)
இ. பல்வகை நூல்கள்
ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 71 ஏடு; 142 பக்கம்.
ஆ. நீளம் 11 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. சுமாராக உள்ளது.
எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருமஞ்சனக் குடத்தை எடுத்துக் கொண்டு போய்க் கழுவி அத்திர மந்திரத்தினாலே நிர்க்கணாதி சுத்தி பண்ணிக் கவச மந்திரத்தினாலே பரிவட்டத்தால் மூடிப் பஞ்சப்பிரமங்களினாலே வடித்துக் கொண்டு வந்து ஆசாரத்திலே வைத்து வேறே செலவெடுத்து வட்டகை செம்பு அத்திர மந்திரத்தினாலே விளக்கிக் கழுவி ......

ஆ. முடிவு

ஓம் ஆங் காலாக்னி ருத்ராய சிவாய என்று வலது கால் பெருவிரலிலே அங்குஷ்டத்தினாலே செலத்தை விட பின்பு விபூதி பூசிக் கரநியாசம் அங்கநியாசம் பரிகை முத்திரையினாலே சூழ வளைந்து வாமதேவ மந்திரத்தினாலே ஒன்பது பிரகாரம் சுத்திச் சேவிப்பான்.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

# 1697. மாந்திரீக நூல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1364
ஆ. ழ/38

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............
ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரீக நூல்
இ. மாந்திரீகம்
ஈ. செய்யுள்.
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்.

ஆ. நீளம் 20 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10, 11, 12 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சொல்லாதே அச்சணிப்பேய் முப்பத் திரண்டு
திரிலோகம் வென்றுவரும் திறத்தைக் கேளு
வல்லாமை அட்டகர்மம் எட்டுக் கும்தான்
வணங்காத தொழில்கைவல்ய மாக்கி வைக்கும்
எல்லார்க்கும் தெரியாது கர்மம் ஒன்று
குறுக்கேஒரு நாலுபேர் அச்சணிப்பேய் அப்பா
பொல்லாத கர்மத்துக்கு அதிகம் என்றும்
புலத்தியனே அச்சணியைக் கேளு.

ஆ. முடிவு

விழியாமல் உறங்கையிலே களவாண் டாலும்
மெல்லியரைப் புணர்ந்தாலும் ஆர்கண் டாலும்
பழியார்கள் உன்னையே உதறிப் பேசார்
படுத்திருப்போம் வாருமென்பார் பாவை நல்லார்
தெளிவாக மனந்துணிந்த கள்ள னாகத்
திரிந்தாலும் திருடமனம் செலுத்தி னாலும்
வழயாகும் ஊழூழிக் காலம் எல்லாம்
மையைப்பத் திரமாக வைத்திருந்து தொழிலைச்செய்யே

# 1698. மாந்திரீக நூல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1365

ஆ. மூ/39

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரீக நூல்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 10 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்.

ஆ. நீளம் 16·5 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

என்னாணை உன்னாணை பராசக்தி தன்னாணை என்னையும் உன்னையும் படைக்கப்பட்ட பரமசிவன் தன்னாணை பலிக்க மந்திரம் பலிக்க சுவாகா.

ஆ. முடிவு

அட்டமோகினிக்கு உரை :

அரிஓம் நாம் சொல்லி பிச்சி தொட்ட பிச்சி வனத்தில் பிச்சி முட்டில்சென்று கெண்டியில் தண்ணீர்கொண்டு நூற்றொரு தரம் சுத்தி சுத்துகிறதுக்கு மந்திரம்—அத்தி ஞாவல் அரி காரி பிணகரு முள அரயாலு நாகப்பூவும் போகவும்.

## 1699. அட்சர விளக்கம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1365–1

ஆ. ட/218

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. …………

ஆ. அட்சர விளக்கம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 25

### 3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்.

ஆ. நீளம் 24 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. அழகிய தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியாம் குருவினுட பாதம் போற்றி
அடிவணங்கிச் சொல்லுகிறேன் அன்பாய்க் கேளு
நீதியுடன் குருவினிடம் மொழிஅ றிந்து
நிர்மயத்தில் அருளாலே கிருபை கூர்ந்து
சாதிகுலம் ஆண்பெண்ணி ரண்டாம் வண்மை
தாக்குறேன் அரிஹரி…மு கலக்கூ மட்டும்
சோதியொளி போலவும்தான் எழுத்தின் வண்மை
சொல்லுகிறேன் குருவருளாச் சொல்லு வேனே.

ஆ. முடிவு

முத்தப்பா நகாரத்தில் சிகாரம் சுத்து
நலமான மகாரத்தில் வகாரம் சுத்து
சுத்தப்பா சிகாரத்தில் யகாரம் சுத்து
சுகமான வகாரத்தில் நகாரம் சுத்து
வத்தப்பா யகாரத்தில் மகார மிட்டு
வளமான அஞ்செழுத்துக் குயிரும் ஆச்சு. (25)
(இப்பாடலில் ஓரடி குறைகிறது.)

இ. பிற்குறிப்பு

இந்தச் சாத்திரத்திற்கு மேல்பிரதி பார்த்துக் கொறைச்சல் சேர்மை பார்க்க வேண்டியது. சிவகிருபை. வைத்தியம் கோவிந்த சாமிப் பிள்ளை.

## 5. பிற செய்திகள்

இந்நூலின் தொடக்கத்தில் திருவள்ளுவர் அருளிச் செய்த அட்சர விளக்கம் என உள்ளது.

# 1700. அகத்தியர் ஞானம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1366–2

ஆ. ட/218

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் ஞானம் 9

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 9

## 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 24 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சத்தியே பராபரமே ஒன்றே தெய்வம்
சகலஉயிர் ஜீவனுக்கும் அதுதான் ஆச்சு
புத்தியினால் அறிந்தவர்கள் புண்ணி யோர்கள்
பூதலத்தில் கோடியிலே ஒருவன் உண்டு
பத்தியினால் மனமடங்கி நிலையில் நிற்பார்
பாழிலே மனதைவிடார் பரம ஞானி
சுத்தியே அலைவதில்லை சூட்சம் சூட்சம்
சுழியிலே நிலையறிந்தால் மோட்சம் தானே.

ஆ. முடிவு

சத்தியமே வேணுமடா மனிதன் ஆனால்
சண்டாளம் செய்யாதே தவறி டாதே
நித்யகர்மம் மறவாதே நேமம் விட்டு
நிஷ்டையுடன் சமாதிவிட்டு நிலைபே றாதே
புத்திகெட்டுத் திரியாதே பொய்சொல் லாதே
புண்ணியத்தை மறவாதே பூசல் கொண்டு
கத்தியதோர் சள்ளிட்டுத் தர்க்கி யாதே
கர்மியென்று மறவாதே கதிரொளிதான் முற்றே. (9)

அகத்தியர் ஞானம் ஒன்பது முற்றும்.

## 1701. அகத்தியர் ஞானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1366-3

ஆ. ட/218

சு. வி. 16

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் ஞானம் 6

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 6

## 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்;

ஆ. நீளம் 24 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை;

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சொல்லுகிறேன் சூட்சத்தின் மகிமை கெஞ்ச
   சுருதிவெளிக் கெட்டாத சூட்ச மப்பா
வெல்லுவையோ சொல்லுதற்குப் பிள்ளாய் பிள்ளாய்
   வேதாந்தஞ் சித்தாந்த மறைக்குள்ளே
அல்லுபக லத்தமதா மேருநுனி உச்சி
   ஆதித்தன் சந்திரனும் அந்தப்பர வெளியில்
நில்லுமயிர்ப் பாலமுண்டு நெருப்பாற் றுக்கு
   நேராக யகரம்நடுக் கொம்பு தானே. (1)

ஆ. முடிவு

நிலைத்துநின்ற சுழிமுனையைக் கட்டி நின்றால்
   நேராகத் துவாரத்தில் பளிச்சென் றாப்போல்
இலைக்குறட்டால் எரித்ததூந்தங் கம்போற் கம்பி
   எழும்புமப்பா பளிச்சென்று பிரகா சிக்கும்

துலைக் குழியால் முலைக்குவிவந்து அமிர்தம் உண்ணும்
சோதியாம் அம்பரத்தின் செயல்ஏது என்றால்
அலைத்துவிட்டு ஆதியந்தம் இல்லா திடத்தில்
அயனென்று கூட்டிநின்ற விடந்தான் காணே. (6)

முற்றும்

## 1702. அட்சர விதி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1366-4

ஆ. ட/218

### 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. ............

ஆ. அட்சரவிதி

இ. தத்துவம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 2 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு, 4 பக்கம்.

ஆ. நீளம் 24 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. தெளிவான அழகிய கையெழுத்து.

ஊ. நல்ல நிலைமை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முதலாவது தற்புருஷ சச்கரத்தின் பஞ்சாக்ஷர மந்திர முந்தின தற்புருஷமான கிழக்குச் சக்கரத்தால் மந்திரம் சொல்லுவது. யவசிமந,

ஆ. முடிவு

ஓம்யிரையுஞ் சிரையும் சிவயநம இது செபிக்க புஷ்பக விமானம் வரும். உச்சாடனம். வல்லாளன் திருவேத்த சாம வயிரவன்.

## 1703. மருத்துவ நூல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1367

ஆ. ல/264

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .................

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 60 ஏடு; 120 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கேளுமகோ தரம்கிராணி பவுத்திரம் மூலம்
கெடியான ......ணங்கள் வைசூரி விக்கல்
வேளுமே பலபலவாம் வியாதி நாமம்
விளங்குகின்ற சாத்தியமும் அசாத்தி யந்தான்

பாளுமே பண்டிதன்தன் குணமும் ரோகி
பக்குவமும் ரசவர்க்கம் மூலி வர்க்கம்
காளுமே கடைச்சரக்கு குணமுந் தானும்
கழாயமொடு சூரணங்கள் கற்கந் தானே. (6)

ஆ. முடிவு

சிக்கான பதினைஞ்சு சூலை தன்னில்
சிறப்பான குணாகுணத்தின் செயலைச் சொன்னேன்
அக்கான ...... ...... சூலை யாறு
ஆகாத குணங்கண்ட முதிரி சூலை
உக்கான உக்கார சூலைசி லேட்டுமசூலை
உறுதிகுன்ம ...... ...... சூலை
நிக்கான நிதம்பமாஞ் சூலைஅ சாத்தியம்
நீங்குசாத் தியநலமாஞ் சூலை யென்னே. (240)

சூலை நிதானம் முற்றும்.

## 1704. பெரியபுராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1368
ஆ. ஊ/47

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. சேக்கிழார்
ஆ. பெரியபுராணம்
இ. சைவத்திருமுறை
ஈ. செய்யுள் 4286

### 3. தோற்றக் கூறுகள்

அ. 270 ஏடு; 540 பக்கம்.
ஆ. நீளம் 30 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 15 வரி.

உ. மிகச் சிறிய அழகிய தெளிவான கையெழுத்து.

ஊ. மிக மிகப் பழுதுற்ற நிலை. ஓர் ஏடு கூட நன்றாக இல்லை. இடையிடையே ஏடுகள் காணப்படவும் இல்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

....................மணிமுழ வோசையும்
கீத ஓசை...ய்க்கிளர்..............(87)

பல்லி யங்கள் ........ ஒலியுடன்
செல்வ விதிச் ........ .....ரொலி
மல்லல் யானை யொலியுடன் மாவொ....
எல்லை யின்றி எழுந்....யெங்கணும். (88)

(இது திருநகரச்சிறப்பின் மூன்றாம் திருவிருத்தம்)

ஆ. முடிவு

ஆறு பெருகி யிருகரையும் ..... ...... எழுவதுபோல்
வேறு நாவா யோடங்கள் மீது ...... மிகைப்ப
நீறு விளங்கும் திருமேனி நிருத்த ...... தன்பின்
ஊறு நெறியாற் செலவுரியா தரி ............

(இதற்குமேல் ஏடுகள் இல்லை. இது கழறிற்றறிவார் புராணம் 133ஆம் திருவிருத்தம்.)

# 1705. நோய்க்கு மருந்து

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1369

ஆ. ல/265

## 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ..........

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 149 ஏடு; 298 பக்கம்.

ஆ. நீளம் 8·5 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. மிகக் கிறுக்கலான கையெழுத்து.

ஊ. பல ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரையாப்புக்கு :

சேங்கொட்டை சேர் 1, ரசம் விராகன் 1, பழம்புளி பலம் 2, சித்திர மூலவேர் சூரணம் பலம் 1, எள்ளு பலம் 1 எல்லாம் பச்சையாய் இடித்துப்பின்னக்காய் திட்டம் சாப்பிடவும் இச்சா பத்தியம்.

ஆ. முடிவு

சயம், இருமலுக்கு :

கடுக்காய்ப்பொடி பலம் $\frac{1}{8}$, மிளகுபொடி பலம் $\frac{1}{8}$, கரண்டி சீவக்காய் வைத்து அதில் கோழிமுட்டை ஒன்று வெள்ளைக் கருவை விட்டு இந்தபொடி . . . .

(இதற்குமேல் ஏடுகள் காணப்படவில்லை.)

## 1706. வில்லிபாரதம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1370

ஆ. ந/121

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. வில்லிபுத்தூரர்

ஆ. வில்லிபாரதம்: படையெழுச்சிச் சருக்கம் முதல்

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 1522

### 3. தோற்றக் கூறுகள்

அ. 181 ஏடு; 362 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 43ஆவது ஏடும் 182க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. ஏடுகளில் நிறைய துளைகள் விழுந்துள்ளன.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

படர்ந்த கானகம் திரிந்து மீண்டன்புடன்
பணிந்த பஞ்சவர்க்காக
கடந்த ஞானிகள் கடவுளர் காண்கிலாக்
கழலிணை சிவப்பேறத்
தொடர்ந்த நான்மறை பின்செலப் பன்னக
துவசமா நகர்த்தூது
நடந்த நாயகன் கருமுகில் வண்ணமென்
நயனம்விட் டகலாதே. (1)

ஆ. முடிவு

என்ன அம்முனி தன்இணைத் தாள்மலர்
சென்னி மீதும் விழியினும் சேர்த்திடென்று
உன்னி ஆண்மைக்கு உவமையில் லாதவன்
பொன்ன கர்க்குஅங்கு உணர்வொடும் போயினான். (232)

(இது 18ஆம் போர்ச்சருக்கம். இதற்குமேல் ஏடுகள் காணப்படவில்லை.)

## 1707. இராமர் அசுவமேதயாகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1371

ஆ. ம/27

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. இராமர் அசுவமேதயாகம்

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 247 ஏடு; 494 பக்கம்.

ஆ. நீளம் 42·5 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5, 6, 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. எட்டு என்னும் ஏட்டெண் தவறாக இருமுறை கொடுக்கப்பட்டுள்ளது. சுவடி நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வரப்பட்ட ராக்ஷத சேனைகள் பேரில் அநேக அத்திரங்களைப் பிரயோகப் படுத்தினான். அந்த அத்திரங்களும் வில்லை விட்டு வெளிப்பட்டுஅக்கினிச் சுவாலைகளுடன்அதிக வேகத்துடன் வந்து ராக்ஷதாள் பேரில் விழுகிற போது அந்த ராக்ஷதாள் எப்படி விழுந்தார்கள் என்றால்......

ஆ. முடிவு

இராமகீர்த்தனை இரவும் பகலும் பாடிக் கொண்டு குசலவர்கள் கையில் செலவுபெற்று கிஷ்கிந்தா மலையிலே போய்ச் சேர்ந்து இராமவாக்கியம் மறவாமல் படிக்குப் பாடிக்கொண்டிருந்தார். குசலவர்களும் அநுமந்தாதிகளைப் போல பிள்ளைகள் பேரன்மாருடனே வம்ச விருத்தியாய் அநுமன் நாராயணருக்கு அன்பர்களாய் சுகமாய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இ. பிற்குறிப்பு

கர வருஷம் மார்கழி மாதம் 9 ஆம் தேதி புதன்கிழமை தினம் 6 மணிக்கு எழுதி முகிந்தது. போளூர் தாலுக்கா அல்லியார் பாதம் துறாலி............ருக்கும் அண்ணாமலை உடையார் தத்து புத்திரன் குமாரசாமி படிக்கும்படி ஆர்க்காடு தாலுக்கா வளையாத்தூர் கணக்கு சின்னப்பாப்பிள்ளை குமாரன் நாகப் பிள்ளை எழுதிய அசுவமேதயாகம் முற்றிற்று.

## 5. பிற செய்திகள்

சுவடி முறையாக முதல் ஏட்டில் தான் தொடங்குகிறது; ஆனால் தொடக்கம் விளங்குமாறில்லை.

# 1708. இராமாயண வசனம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1372

ஆ. ய/28

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. இராமாயண வசனம்

இ. உரை நடை இலக்கியம்

ஈ. உரை நடை.
அச்சில் ஏறத்தாழ 125 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 128 ஏடு; 256 பக்கம்.

ஆ. நீளம் 46 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 1-41, 46, 53-63, 66-96, 126, 129, 130, 133-137, 139-144, 146-157, 161-186, 188, 190-195, 198, 199, 204,205, 207-209, 219-221, 223, 231-237, 240-243, 264,265, 271-273 ஆகிய ஏடுகளும் 298க்கு மேல் இருக்கவேண்டியனவும் காணப்படவில்லை. உள்ளவை நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

....கிறார்கள். ஐயையோ மகனே இந்த அயோத்தி மாநகருக்கு என்ன அனர்த்தகாலம் வருகிறதோ தெரியாது. அதனால் மகாலட்சுமியான சீதையம்மன் பிரிந்து வனத்துக்குப் போய் விட்டதும் அன்று முதல் தம்பி லட்சுமணன் உன்னை விட்டுப் பிரிந்ததும் நீ கொலு மண்டபத்துக்குப் போகாமல் நின்று விட்டதும் என்ன காரணமோ?

ஆ. முடிவு

உன்னைப் பார்த்தால் ஸ்ரீ ராமனைப் போல் இருக்கின்றது. ஆனபடியால் எனக்கு உன்பேரில் யுத்தம் செய்ய மனது இசைய

வில்லை; நீ என்பேரில் சண்டை செய்ய வேணுமென்றாலும் பொழுது போய்விட்டது. இனிஎன்ன யுத்தஞ்செய்யப் போகிறாய் சுருக்கினில் உன் தாயிடம் போய்ச் சேர்என்று சொன்ன சலவ சந்தனைப்பார்த்து குசலன் சொல்லுகிறான். அடா! சலவசந்தனே என்ன வார்த்தை புகன்றாய்? உன்னைப் பார்த்தால்ஸ்ரீராமனைப் போ.........

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

**5. பிற செய்திகள்**

இது உத்தர காண்டம் போலும்;

## 1709. மருத்துவ நூல்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. *1373*

ஆ. *ல/266*

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. ............

ஆ. பெயர்தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

**3. தோற்றக் கூறுகள்**

அ. 14 ஏடு; 28 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சற்றே சிதைந்த நிலை. முதல் ஏடும் 15ஆம் எண்ணுள்ள ஏட்டின் பின்னுள்ள ஏடுகளும் இல்லை,

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

.... ..... ..... ....
.... ... . பலந்தா னொன்று
தள்ளவே யிளவறுப்பாய்ச் சூர ணித்து
தயவாக வடித்தெடுத்துக் சக்கரைதான் சேர்த்து
கொள்ளவே தேன்நெய்யில் விரகடந்தான் கொள்ளத்
திறமாகத் தீரும்நோய்ச் செப்பக் கேளே.

ஆ. முடிவு

நாலப்பா ஆவின்பால் விட்டு ஆட்டி
நலமான நெய்ச்சாற்றில் கரைத்து விட்டு
மேலப்பா அடுப்பேற்றி மெழுக தானால்
விருதாக வடிந்துமேன் பொடிதான் கேளு
காளப்பா பத்திரியும் ஏலம் ரெண்டு
கருவாகக் ..... .. .. .....
..... .... ..... ...... (193)

## 1710. முத்தாலம்மன் வில்லடிப் பாட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 1374
ஆ. ர/54

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .........
ஆ. முத்தாலம்மன் வில்லடிப்பாட்டு
இ. நாட்டுப்பாடல்
ஈ. செய்யுள்.
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 128 ஏடு; 256 பக்கம்
ஆ. நீளம் 43 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு இரண்டு பத்தி. பத்திக்கு 5 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து,

ஊ. மிகப் பழுதுற்ற நிலை,

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அயனுடன் மாலும் தேடி அன்புடன் காணா நின்ற
நயனம்மூன் றுடைய வேத நாயகன் தன்னைப் போற்றி
உயர்தன குன்றா நின்ற உரைமூவர் கதையைப் பாட
கயகத்தி முகத்தன் வேத விநாயகன் காப்ப தாமே.

ஆ. முடிவு

கையிலே சிவலிங்கம் மிறு...த்து
கல்விதன்னைக் கடலில்எறிந்து
மெய்யிலே சிலபொய்கள் பிறந்தது
வேகமுப்புரம்வெந்து தணிந்தது
செய்யமூவர்...............ந்திடதே.........
முத்தாலக்கிடாச்சி.....................
முத்தாலம்மன் பேரில் வில்லடிப் பாட்டு முற்றியது.

இ. முற்குறிப்பு

1109ஆம் வருஷம் மாசி மாதம் 9ஆம் தேதி திருநெல்வேலிச் சில்லா நாங்குநேரித்தாலுக்கா............இளையநேத்தில் இருக்கும் சுடலைக்கண் நாடார் படித்து வருகிற முத்தாற்ற......

# 1711. சடுத்தலாகமம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. *1375–1*

ஆ. ட/*219*

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. சடுத்தலாகமம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 73

## 3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்.

ஆ. நீளம் 31 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. மிக அழகிய தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை,

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாக்குடன் நினைவுக் கெட்டா வளரொளி யாகி யைந்தும்
பாக்கியத் தலைவி யாகும் பராபரை யிடத்திற் றோன்றி
நீக்கருங் களிப்பி னாலே நிலைபெற உலகுள லாம்உண்
டாக்குமும் மதத்தோன் எந்தை அடியிணை தலைமேற்
கொள்வாம்.

ஆ. முடிவு

விளங்குபிர வஞ்சமதி லயன்மே லந்த
விரிமுளமுள் முளரிஅரி உந்தி மாலும்
துளங்குகட லிலேமுனிவன் கரத்த வாழி
தொன்மொழியுங் குடித்ததுவும் மண்ணிற் சின்னம்
வளங்கெழுமண் பணித்தலைமேல் இருந்த நாக
மாதுமைகை காப்பமையு மிறையிற் பாதம்
உளங்கொளரும் பினாகிசிவ பத்தர் உள்ளத்து
ஒடுங்குதலால் பத்தரியல்பு உரைக்கொ ணாதே. (73)

இது சிவபத்தர் மகிமை உணர்த்தியது.

இ. பிற்குறிப்பு

ஈஸ்வர வருஷம் மார்கழி மாதம் 15ஆம் தேதி சுக்கிர வாரம் நவமி 43.41 அஸ்தம் 1.42 சித்திரை 56.52 அதி 50.15 தைது 16.8 திவி நா 2.2. சித்தயோகமும் கூடிய இந்த சுபதினத்தில் மாங்குடியிலிருக்கும் கந்தசுவாமிஅய்யர் தவ புத்திரனாகிய முருகையரவர்களுக்கு மேற்படி ஊரிலிருக்கும் குமாரசாமி ஐயர் குமாரன் ஆறுமுக ஐயர் சுஹஸ்த லிகிதம்.

## 1712. வீராகமம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1375-2

ஆ. ட/219

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சாந்தலிங்க சுவாமிகள்—திருமழிசை

ஆ. வீராகமம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 117

### 3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்.

ஆ. நீளம் 31 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. மிக அழகிய தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரிய சஞ்சிதம் அகலவும் புரியு டம்பிடர் ஒழியவும்
விரியும் நம்பவம் ஒழியவும் கரிமு கன்பதம் கருதுவாம். (1)

ஆ. முடிவு

மாரி நாளின் மதிமுன் னரம்பைநீர்
ஈர மாற வுலர்ந்தி யெறித்தமு
தார வூட்டுவ போலென் வல்வினை
சார நீத்த வடந்தருள் வாழியே, (117)

வீராகமம் முற்றிற்று.

பிற்குறிப்பு

திருச்சினாப்பள்ளி தாலுக்கா லாலுகெடி பிர்க்காவைச் சேர்ந்த நத்தமாங்குடியிலிருக்கும் வீரசைவ சிகாமணியாகிய கந்தசுவாமித் தம்பிரான் தவபுத்திரனாகிய முருகத்தம்பிரானுக்கு மேற்படி தாலுக்கா மேற்படி பிர்க்கா மேற்படி கிராமத்தில் இருக்கும் குமாரசாமித்தம்பிரான் குமாரன் ஆறுமுகத் தம்பிரான் சுஹஸ்தலிகிதம்,

## 1713. திருவேங்கடவந்தாதி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1376

ஆ. ய/98

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பிள்ளைப்பெருமாளையங்கார்

ஆ. திருவேங்கடவந்தாதி

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 102

### 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.

ஆ. நீளம் 34 செ.மீ.; அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 7ஆம் ஏடு காணப்படவில்லை. முதல் 4 ஏடுகள் முறிந்துள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நல்லவந் தாதி திருவேங் கடவற்கு நான்விளம்பச்
சொல்லவந் தாதி விழுப்பொருட் சோர்வறச் சொல்வித்தருள்
பல்லவந் தாதிசை வண்டார் குருகையில் பலசமயம்
வெல்லவந் தாதி மறைதமி ழாய்ச்செய்த வித்தகனே.

ஆ. முடிவு

மட்டளை தண்டலை சூழ்வட வேங்கட வாணனுக்குத்
தொட்டளை யுண்டபி ரானுக்கன் பாம்பட்டர் தூயபொற்றா
ளுட்டளை யுண்ட மணவாள தாதன் உகந்துரைத்த
கட்டளை சேர்திரு வந்தாதி நூறும் கலித்துறையே. (101)

திருவேங்கடவந்தாதி முற்றும்.

இ. பிற்குறிப்பு

1019ஆம் வருஷம் சித்திரை மாதம் 26ஆம் தேதி சோமவாரமும் மூல நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் வைத்தமாநிதி எழுதி நிறைந்த திருவேங்கடவந்தாதி முற்றும்.

# 1714. தேவாரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1377

ஆ. ண/48

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருஞானசம்பந்தர் முதலியோர்

ஆ. தேவாரம்

இ. சைவத்திருமுறை

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 400 ஏடு; 800 பக்கம்.

ஆ. நீளம் 45 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. ஓரளவு தெளிவான கையெழுத்து.

ஊ. மிகமிகப் பழுதுபட்ட நிலை. ஓர் ஏடு கூட செம்மையாக இல்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மந்திர மறையவை வானவ ரோடும்
இந்திரன் வழிபட நின்ற வெம்மிறை
வெந்தவெண் ணீற்றர்வெண் காடு மேவிய
அந்தமு முதலுடை யடிக ளல்லரே. (1)
(இது திருவெண்காட்டிற்குரிய பதிகம்.)

ஆ. முடிவு

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்த ...
தெள்ளிய னாகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்கித் தெல்லாம் உடனிருந் தறிதி யென்று
வெள்கினேன் வெள்கினா...... விலாவிறச் சிரித்திட் டேனே. (3)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

## 1715. மருத்துவ அகராதி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1378

ஆ. ல/267

### 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. ............

ஆ. மருத்துவ அகராதி

இ. மருத்துவம்

ஈ. உரைநடை,
அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 123 ஏடு; 246 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 18, 112 ஆகிய இரு ஏடுகள் காணப்படவில்லை.
பல ஏடுகள் மிகச் சிதைந்துள்ளன.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அகத்திற்பால் – முலைப்பால்
அகக்காழ் – உள் வயிரமுள்ள மரம்
அக்காளம் – உள் வயிரமுள்ள மரம்
அக்கு – அகில் கட்டை
அகத்தி மரம் – வெள்வேல்

ஆ. முடிவு

காடுபடுந்திரவியமாவது :
இறால், தேன், அரக்கு, மயிற்பீலி, நாபி,

இ. பிற்குறிப்பு

குரோதி வருஷம் மாசி மாதம் 7ஆம் தேதி ஆதிவாரம் அகராதி எழுதி முடிந்தது.

## 1716. நீலகேசி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1379

ஆ. ந/122

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சமய திவாகர முனிவர்

ஆ. நீலகேசி: மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 212 ஏடு; 424 பக்கம்.

ஆ. நீளம் 44 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. அனைத்தேடுகளும் சிதைந்துள்ளன. மிகப் பழுதுற்ற சுவடி.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூமாது ...கலம் புல்லுவதும் பொங்கொளிசேர்
நாமாது நம்மை நயப்பதுவும் — காமாதி

வென்றான் விரைமலரின் மேல்நடந்தான் தென்மயிலை
நின்றான்பொற் பாதம்நினைந் தால்.

ஆ. முடிவு

அருகன் திருவறத் தன்புசெய் வாரும் அதிவழக்கால்
பெருகுந் துருநெறிப் பீடழிப் பாரும்இப் பேருலகில்
பொருவின்றி நின்ற தமிழ்ப்புல வோர்க்கிப் பொருளை யெல்லாம்
திருவின்றிக் காட்டும் சமய திவாகரம் சேவிக்கவே.

இ. பிற்குறிப்பு

ஜயங்கொண்ட......தேசத்து......க்ராமத்து வெங்கப்ப நயினார் குமாரன் வெங்கப்பன் விஜயஅன்னங்களய்யருக்கு ஸாஸ்த்ர தானம் பண்ண எழுதினது..................கள்ளப்புலியூர் பார்ஸ்வ நாதஸ்வாமி ஸந்நதியிலே எழுதி நிறைந்தது. முற்றும்.

## 5. பிற செய்திகள்

இச் சுவடியில் பல இடங்களில் கிரந்தலிபி பரவலாகக் காணப்படுகிறது.

# 1717. வீடணன் அறிவுரை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. *1380*

ஆ. *ந/123*

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருவழுந்தூரன்

ஆ. வீடணன் அறிவுரை

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 85

## 3. தோற்றக் கூறுகள்

அ. 43 ஏடு; 86 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. இடப்பகுதி முழுவதும் சிதைந்துள்ளது.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1296 காண்க.

ஆ. முடிவு

……தத்தைப் பெற்றேன் இறையவன் அருளைப் பெற்றேன்
……ன் நானும் சாயவே வரத்தைப் பெற்றேன்
……ழப் பெற்றேன் மணிமுடி இலங்கை பெற்றேன்
……த்தின் கையால் இராமனும் படுவான் கண்டாய். (85)

(இதற்குமேல் எழுதப்படவே இல்லை)

# 1718. சோதிட நூல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1381

ஆ. வ/58

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ……………

இ. பெயர் தெரியாத ஒரு சோதிட நூல்

உ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
**அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்.**

## 3. தோற்றக் கூறுகள்

அ. 63 ஏடு; 126 பக்கம்.

ஆ. நீளம் 24 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 1–51, 54, 60, 64, 65, 73, 74, 80, 85, 87–90, 92, 99, 103, 105, 111, 115, 116, 126, 132, 133, 135, 136 ஆகிய ஏடுகளும் 138க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை. மிகப் பழுதுற்ற சுவடி.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

...கைந்தோ டாரல் கணக்கர்கேள் பரணி காரிக்கு
எதிரும்எட் டோடு தோணி எரிக்குமுன் உவாவு ரோணி
புதியபொன் தனக்குப் பன்மூன் றனுஷமாம் புகர்கா
ரோணம்
மதியவற்கு இரண்டாம் பக்கம் சித்திரை மருவில் நாசம்.

(இது நாச யோகத்தைக் கூறும் விருத்தம்.)

ஆ. முடிவு

உரைத்திடில் இரண்டு நான்காறு எட்டொன்பான் ஈராறு
ஈரேழ்
பரித்தது வெண்ணி ரண்டு பத்தொன்பான் இருபத்
திரண்டும்
இருத்திய இருபன் மூன்றில் இருபத்தாறு இருபத் தெட்டும்
பொருந்தநன் றிருபத் தொன்பான் ஆழிவை பூவின்
மாதே;

எ–து 2, 4, 6, 8, 9, 12, 14, 16, 19, 22, 23, 26, 28, 29
இவையெல்..............

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை.)

# 1719. சோதிட அரிச்சுவடி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1382

ஆ. வ/59

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..................

ஆ. சோதிட அரிச்சுவடி

இ. சோதிடம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 12 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு; 36 பக்கம்.

ஆ. நீளம் 15 செ. மீ.; அகலம் 2 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. மிகக் கிறுக்கலான கையெழுத்து.

ஊ. 1–4, 8 ஆகிய ஏடுகளும் 23க்கு மேல் இருக்க வேண்டியனவும் காணப்படவில்லை; மிகப் பழுதுற்ற நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வே வோ கா சி மிருகசீரிடம்;

இதுக்கு யோனி சாரைப்பாம்பு, பட்சி.....கருங்காலி மரம்; தெய்வ கணம், ரி......வையாசி மாதம் சூனியம், வெள்ளிக்...... செம்ம வாரம், வடகிழக்கு வீடு;

ஆ. முடிவு

கோ சா சீ சூ சதயம்.

இதுக்கு யோனி பெண் குதிரை. அண்டங் காக்கா. விருட்சம் கடப்பம். மனுஷ கணம். மாசி மாதம் சூனியம். சனிக்கிழமை செம்மவாரம், வீடு வடகிழக்கு.

## 1720. சிவகாமியாண்டார் அகவல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1383-1

ஆ. ய/99

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. சிவகாமியாண்டார் அகவல்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.

ஆ. நீளம் 11 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. ஆங்காங்கு சிதைந்துள்ளது.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீரார் கமலம் சிறந்திருக்கும் பொய்கைதனில்
நீர்வாழும் மண்டுக நெஞ்சேகேள்—நேராய்
உடன்பிறந்த வாசிதன்னை உள்ளத்தே காணாமல்
குடம்கவிழ்நீ ரானதொரு கோலமே—நடம்புரிந்து

ஆ. முடிவு

பாதம் சிவந்ததுவும் பங்கயம்போல் ஆனதுவும்
கீதச் சிலம்பொலியும் கம்பீரம்—நாதம்
பிறந்திட மேஉண்மை பேசா திரு...........
யிரந்திடமே எல்லை இரு.
சிவகாமியாண்டார் அகவல் முற்றும்.

## 5. பிற செய்திகள்

நூலின் பெயர் அகவல் என இருப்பினும் இதன் யாப்பு நேரிசைக்கலிவெண்பா ஆகும்.

# 1721. உடல்சக்கரத் திருமந்திரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1383-2
ஆ. ய/99

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........
ஆ. உடல்சக்கரத் திருமந்திரம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 30

**3. தோற்றக் கூறுகள்**

அ. 6 ஏடு; 12 பக்கம்;

ஆ. நீளம் 11 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.

உ. மிகக் கிறுக்கலான கையெழுத்து.

ஊ. பழுதுற்ற சுவடி.

எ. முழுமை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

குருவென வந்து குணமாய் வணங்கித்
திருவடி தன்னைத் திருநீறு சாத்திச் செவியருள் செப்பி
எருவுடன் அருகுமென்கயில் நீரால்
உருவுடன் கொண்டான் உடல்பொருள் ஆவியே.

(இப்பாடலின் யாப்பு தெளிவாக விளங்கவில்லை)

ஆ. முடிவு

முப்பது முப்பது முப்பத் தறுவரு
செப்ப..........கோவிலில் வாழ்பவர்
செப்பும் அதனிடைக் கோவில் சிதைந்தபின்
ஒக்க அனைவரும் ஓடலுற் றாரே.

## 1722. நடுவணைத் திருமந்திரம்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1383-3

ஆ. ய/99

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............
ஆ. நடுவணைத் திருமந்திரம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 30

## 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.
ஆ. நீளம் 11 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9,10 வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. சில ஏடுகள் சிதைந்துள்ளன.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உத்த பராபரம் உயர்வெளி உச்சிமேல்
அத்தன் பழம்பொரு ளாகும் சதாசிவம்
பெத்த நடுவணை பேசொணா ரகசியம்
பத்தி என்னுளே பணிந்துநின் றேனே. (1)

ஆ. முடிவு

நடுவில்நின் றார்சிலர் ஞானிகள் ஆவர்
நடுவில்நின் றார்சிலர் யோகியர் ஆவர்
நடுவில்நின் றார்சிலர் தேவரும் ஆவர்
நடுவில்நின் றாரொடு நாமும்நின் றோமே. (30)

நடுவணைத் திருமந்திரம் முற்றும்.

# 1723. வாசித் திருமந்திரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1383-4
ஆ. ய/99

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............
ஆ. வாசித் திருமந்திரம்
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 30

## 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.
ஆ. நீளம் 11 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9,10 வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. மிகச் சிதைந்துள்ளது.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாசிவா வென்று வாசியை வாங்கி
...............மங்கையாவாரில்லை
வாசியை யுண்ணு............வாளற்கு
வாசியோ டீசன் மகிழ்ந்திருந் தானே.

ஆ. முடிவு

ஏற்றி இறக்கி இரு...லும்பூரித்து
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவா ரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்க......ளர்க்குக்
கூற்றை உதைத்தான் கோலம.........

வாசித்திருமந்திரம் முற்றும்;

# 1724. அட்டலோகத் திருமந்திரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1383-5
ஆ. ய/99

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. அட்டலோகத் திருமந்திரம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்.

ஆ. நீளம் 11 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சுவடியின் வலப்புறம் சிதைந்துள்ளது. பல பகுதிகள் அழிவு.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீராங் குருநந்தி செப்பும் உபதேசம்
.........வஞ்சத்தா ரறியாவான்பொருளொ
.........துண்மையுடனே திருவரு............
.........யவகாரத்திறாயமே......... (1)

ஆ. முடிவு

செம்பி குகைச்சி வயிற்றிற் செனித்திட்டு
வம்பல சொன்ன வயிரவன் தானாக்கிக்
கம்பிக் கடைச்செம்ப...பத்தன்காலிலே தேய்க்கச்
செம்பொன் னாகிடும் சித்தும்சீ ராகுமே. (30)

அஷ்டலோகத் திருமந்திரம் முற்றும்.

## 1725. திருமந்திர பூரண சூத்திரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1383-6

ஆ. ய/99

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. திருமந்திர பூரண சூத்திரம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 43

### 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.

ஆ. நீளம் 11 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8, 9 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. பழுதுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதி கணேசன் அதன்மேல் முக்கோணம்
பாதியாஞ் சத்தி பகுந்து...வாணாள்
நீதி.........நின்றது நாலிலே
ஓதிய ஐவர் உறவானது அஞ்சுமே. (1)

ஆ. முடிவு

நின்றது பூரணம்.....தவன் காரணம்
ஒன்று போடாமல் ஓதி வெளிவிட்டேன்
அன்றுநான் நந்தி அடிபணிந்து ஏந்திக்
குன்றுமல் சூத்திரம் கூறியது முற்றே. (43)

திருமந்திர பூரண சூத்திரம் முகிந்தது. முற்றும்.

## 1726. அதிசயத் திருமந்திரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1383-7

ஆ. ய/99

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. அதிசயத் திருமந்திரம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 60

### 3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 28 பக்கம்.

ஆ. நீளம் 11 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. பழுதடைந்த சுவடி.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உலகம் இயக்கு மொருபெருங் கன்றினைப்
பலகலை சொல்மலைப் பாவை புதல்வனை
அலவை கலக்கியான் மாகிற யானையைத்
தலையில்வைத்து அதிசயம் சாற்றுகின் றேனே. (1)

ஆ. முடிவு

குருவான நந்தி குணமாய் உரைத்தது
திருவான மங்கை ......... .........சும்

சு. வி. 18

பரிவான மூலம் ப......... .........பின்
உருவாகும் கண்டீர் உலக மயக்கமே. (60)

அதிசயத் திருமந்திரம் முற்றும்

## 1727. இருநூற்றுத் திருமந்திரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: 1383-8

ஆ: ய/99

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. இருநூற்றுத் திருமந்திரம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 201

### 3. தோற்றக் கூறுகள்

அ: 37 ஏடு; 74 பக்கம்.

ஆ: நீளம் 11 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ: ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.

உ: கிறுக்கலான கையெழுத்து.

ஊ: பழுதுற்ற நிலை.

எ: முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எண்ணா யிரத்தி லிருநூறு மந்திரம்
அண்ணாவி சொல்ல வடியேன் அறிந்தேன்
செண்ணாஞ் சிவப்பு சேர்பச்சை நீலம்
வண்ணா ளறிவான் வகாரத் திறையையே. (1)

ஆ. முடிவு

குருவான தந்தையென் நந்தி யப்பா
திருமூலர் நானே செய்தொழில் சொன்னேன்
கருவூரன் கொங்கணன் பேர னிவர்கள்
தரு...... ......... தமிழடி யெண்ணே. (201)

திருமூலநாயனார் திருமந்திரம் இருநூறு முடிந்தது.
முற்றும்

## 1728, வழலைத் திருமந்திரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1383-9

ஆ. ய/99

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. வழலைத் திருமந்திரம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 40

### 3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்.

ஆ. நீளம் 11 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. பழுதுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாகான காயம் வளமாய் நிறுத்திடப்
பாகான மூலத்தில் பார்த்திடுநாற் கோணம்தான்
ஆக நடுமையம்.........முக்கோணம்
நாக......ஞ்சுழியினில் நாதியா லிங்கமே. (1)

ஆ. முடிவு

நாசமாய்ப் போகும் நற்சடங் கன்மசம்
வாசமா மேல்நோக்கி மைந்தனே கற்பம்கொள்
நேசமாய்ச் சித்தர்தான் நிலைக்கவே பாவிப்பார்
தேசமாம் எங்கும் திரியலாம் சித்தியே. (40)

வழலைத் திருமந்திரம் பிண்டஉற்பத்தி முடிந்தது: முற்றும்.

## 1729. நிகண்டுத் திருமந்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1383-10

ஆ. ய/99

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. நிகண்டுத் திருமந்திரம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 105

3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 42 பக்கம்.

ஆ. நீளம் 11 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. 26 ஆம் ஏடு காணப்படவில்லை. மிக மிகப் பழுதுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முப்பாழுக் கப்பால் முடிந்தமுத லெந்நாளும்
தப்பாமல் பூரணத்தே சாருவாய்—எப்போதும்
வேகாச் சடலமுத்தி வேண்டுங்.........முக்கோணஞ்
சாகாக் கணேசனருள் தான்.

ஆ. முடிவு

ஓதி டறிவாலே உள்ளஞ் செழுத்தையும்
ஆதிநடுப் பூரண..........................
நாதன் துரிய மிருந்திட நந்தியா
.................நிலைத்திடு முத்தியே. (105)

## 1730. மருத்துவ நிகண்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 1384

ஆ. ல/268

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..................

ஆ. மருத்துவ நிகண்டு

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 68 ஏடு; 136 பக்கம்.

ஆ. நீளம் 31.5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. முதல் 14 ஏடுகள் காணப்படவில்லை. ஏட்டெண்கள் சரியாகக் கொடுக்கப்படவில்லை. பழுதுற்ற நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்டகங் கொந்தளம் கடுவொத்த கொம்பனாம்
நீண்டகை யானை நேர்கருஞ் சாளிதான்
பூண்டகைப் புயன்போக்கும் விஷதாரி ஊண்டகக்
காண்டா மிருகத்தினாம் பேர். (125)

ஆ. முடிவு

வாத மறுக்கி மாசித் திரைபோக்கி
போத மலத்தைப் போக்கிய சிற்பரி
காத மரிச்சி கருங்கார கோபத்தி
வேத மிளகுனி விளங்கிய நாமமே. (797)

## 1731. தன்வந்திரி குணவாகடம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1385

ஆ. ல/269

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. தன்வந்திரி

ஆ. தன்வந்திரி குணவாகடம்

இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 450

## 3. தோற்றக் கூறுகள்

அ. 68 ஏடு; 136 பக்கம்.
ஆ. நீளம் 36·5 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. சுமாரான நிலை.
எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரனுட சத்தி யாலும் அயன்முத லான தேவர்
சிரதவ முனிவர் கூடி செய்தவா கடத்து நூலைக்
குருபரன் குமரன் சீஷன் குறுமுனி அருளி னாலே
உரைசெய வாக டத்தில் உகந்தவர் காப்புத் தானே. (1)

ஆ. முடிவு

காதுதனை குறுகுறுவென்று ஊரும் கைகால்
கணகணெனவே வெதும்பும் கசிந்தே நிற்கும்
போதுமுகஞ் சொரிந்துவிடு மன்னம்புளி
நீரும்குளி நீரும் போத வென்றும்
வாதுசொல்லக் கடையிடுவாய் நீர்குமுறும்
மயிர்ச்சிலிர்க்கும் உடல்சிலிர்க் குடிவாய் கைப்பாகும்
வேதுகொளலு மிக்குணங்கள் மிகவே
கண்டால் விஷசுர மிதுவே. (450)
(பாடலில் சீர் ஒழுங்கு இல்லை.)

# 1732. அகத்தியர் முப்பூ

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1386-1
ஆ. ல/270

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் முப்பூ 30

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 30

## 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 24 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. மிக மிகப் பழுதுற்ற நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதிபரா பரத்தினுட கிருபை போற்றி
அடிமுடியா மைங்கோலம் நந்தி காப்பு
நீதியாம் வாரணத்தின் முகவன் காப்பு
நிர்மலமாம் சதாசிவத்தின் வடிவே காப்பு
பாதிமதி யணிந்தசிவன் பாதம் காப்பு
பத்திமுத்தி சித்திவயி ரவனே காப்பு
ஓதியதோர் வாணியின்தன் பாதம் காப்பு
ஓங்கார மூலவட்டத் தொளிகாப் பாமே. (1)

ஆ. முடிவு

விடுகாதே அண்டமதின் ஓட்டை வாங்கி
மேற்கசிந்த கோரையைநீ வாங்கிப் போட்டு
உடுகாதே முப்பத்தி ரண்டு தீட்சை
உத்தமனே பஞ்சிகரண முற்ற போது
நடுகாதே அடிமுடி..................

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

## 1733. ரோமரிஷி 25

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1386-2

ஆ. ல/270

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ரோமரிஷி

ஆ. ரோமரிஷி 25

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 12

### 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 24 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. 3 ஆம் ஏடு காணப்படவில்லை. மிகப் பழுதுற்ற நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஓமூல தந்திமுக வன்சரண முகந்தொழுது
ஆமூல நந்திசர ணம்சரணம் யான்தொழுது
தாமூல பராபரை சரஸ்வதியென் வாக்கில்நின்று
யேமூல சூத்திரங்காப் புத்தொழுது இறைஞ்சுவார்க்கே.
(1)

ஆ. முடிவு

பாரப்பா வெள்ளீயம் தனைஉ ருக்கி
பாய்ச்சடா வீரனைத்தான் பத்துக் கொன்று
சேரப்பா யேமரசம் மாண்டு போகும்
சிவசிவா கயிலாச மேரைக் காண

துணப்பா துரும்பாகும் துரும்பு தூணாம்
சொல்லடங்காப் பொருளெனவே சுருக்கி யேதான்
சாயப்பா இந்நூலைப் பார்த்துக் கொண்டு
சதாகோடி சித்துவிளை யாடு வாயே. (12)

(இப் பாடலின் எதுகை சரியாக அமையவில்லை.)

5. பிற செய்திகள்

12ஆம் பாடலுக்குப்பிறகு கடுங்காரச் செயநீரின் செய்முறை எழுதப்பட்டுள்ளது.

## 1734. நோய்க்கு மருந்து

1. நூலகக் குறிப்புகள்

அ. 1387

ஆ. ல/271

2. உள்ளீடு; நூல் விவரம்

அ. ...............

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 60 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 58 ஏடு; 116 பக்கம்.

ஆ. நீளம் 25 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை; பல ஏடுகள் இடையிடையே இல்லை; முறை மாறியுமுள்ளன.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பெருங்காய வைப்பு: வில்லைப்பழச்சோறு 16 பலம், உளுந்து மா 8 பலம், வேப்பம் பருப்பு 4 பலம், வெள்ளுள்ளி 3 பலம், பெருங்காயம் 1 பலம், சுண்டி 1 பலம், சர்க்கரை 1 பலம், குக்கில் 1 பலம். இந்த எட்டுவ கையும் வெள்ளாட்டுப் பால் வார்த்து நன்றாயிடித்து வெள்ளாட்டுத்தோல் மயிர் பரத்தி, அதிலே வைத்து, பொதிந்து கட்டி, நெல்லுமிடாவிலே நடுவே வைத்து, மேலும் நெல்லுக் கொட்டி மூடி, ஒரு மாசமான பிறகு எடுத்து வைக்க ஆயிரங் குடும்பத்தை ரெட்சிப்பான்.

ஆ. முடிவு

உள் வலிப்பு, பிறவலிப்புக்கு உபசாரணை மருந்து: கெந்தகம் பொடி செய்து சீலையிற் திரித்து விளக்கிற் கொளுத்திப் புகை மூக்கில் பிடிக்க நிற்கும்.

# 1735. நோய்க்கு மருந்து

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1388

ஆ. ல/272

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 100 ஏடு; 200 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 2 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காக வாதஞ் சன்னியிரு கண்சுழன்று கைகாலும்
ஆகம் நடுங்கி யாற்றி விழுந் ...... .........
...... தின்றி வழிந்து கண்கலங்கி ......
மூர்ச்சித் துருத்துவலி துரத்த லுண்டு. (15

ஆ. முடிவு

உண்டியின் பொல்லாங் காலும் ஒண்டொடி முயக்கத் தாலும்
கண்டுயி லாமை யாலும் கடுகிய நடையி னாலும்
பண்டையில் மலக்கட் டாலும் பழகிய சீர்மத் தாலும்
மிண்டிய சுமையி னாலும் வியாதிவந் தடுத்த வாறே. (55)

ஆகப்பாட்டு 262

# 1736. குணவாகடம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1389

ஆ. ல/273

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. குணவாகடம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 70 ஏடு; 140 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சுமாரான நிலை,

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கண்டிக்கும் வாதபித்தம் கபத்தை யறுத்துமிக
உண்டித் தெரித்தபித்தம் ஓட்டுமே-சண்டித்த
அழலார் சுரமதனை யாற்றுமே ஊரில்
மிளகுதனைக் கொள்பவர்க்கு மே, (26)

ஆ. முடிவு

ஆனைமே லேறி வந்தால் அதிகுன்ம மனுபோ கிக்கும்
பானு வான பரிமேல் வந்தால் பருகிய நீரே கொள்ளும்
சேனை தண்டிகையில் வந்தாற் சிறந்த நித்திரையே பண்ணும்
மானனை விழியி னாளே வகுத்தன முனிவர் தாமே. (460)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

# 1737. மருத்துவச் செய்திகள்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1390
ஆ. ல/274

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. மருத்துவச் செய்திகள்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு; 44 பக்கம்.

ஆ. நீளம் 37 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சற்றே கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை. பல ஏடுகளின் தொகுப்புப் போல உள்ளது.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பதிதலத்தில் மதியொடுங்கி வளருஞ் சூட்சம்
பக்கமதி லிருபக்கம் வார மேழில்
பதிதலத்தி லீரெட்டு யிதழு மொன்றாய்
பதினாறாய் சோடசமாய் வளர்ந்து தேய்ந்து
துதிபிலத்து கதிரநாளில் பவுர்ணையே யானால்
தினமறித்து யிடகலையை கதிரிற் சேரு
கதிர்முகத்தில் காயசித்திக் கிதுவே சூட்சம்
கருதினேன் அகத்தியனுக் கருவைத் தானே. (6)

ஆ. முடிவு

கூட்டிடுங்கோ ரோசினைதான் பணவெடையு மஞ்சு
குற்றமற நிம்பச்சா ரதனில ரைத்துப்
போட்டுநீ பதமாக யெரித்திருத்துக் கொடுநீ
எண்ணெ காசெடையே கொள்ள
ஒட்டியிடும் கண்களெல்லாம் விட்டகலு மெய்யாய்
உளக்காச்சல் வயிறுகடுப்பு கணமும் போகும்
...... ...... ...... ...... ...... (70)

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

## 1738. மருத்துவ நூல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1391

ஆ. ல/275

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 40 ஏடு; 80 பக்கம்.

ஆ. நீளம் 36 செ.மீ.; அகலம் 3·5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சற்றே சிதைவுற்ற நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

...... ...... ...... ......
வயிறுதனிற் பசியிலாமே தூணு மற்று
நாரக்கமாய் ஞாலத்து நடக்கை யற்று
நடுக்குமாங் கையிரண்டுந் திமிரு முண்டாம்
ஊரகமா யுறக்கமில்லா துணர்ச்சி யற்று
உதறுச ரீரமெங்கு முலர்ந்து காணும்
பாரகமாய் வாய்விட்டு அலத்த லாகும்
பாணிகம்ப வாதத்தின் பாங்குந் தானே. (264)

அ. தொடக்கம்

சீதேவி செங்கழுநீர் வெள்ளிக்கிழமை நாள் தீப தூபங் கொடுத்து, காப்பு கட்டி மூலமந்திரம், ஓம் ஸ்ரீயும் கிலியும் சீரே விராசராச வசிகரி குருகுரு மூலி என்று வேர் அறாமல் பிடுங்கி தாமரை நூல் சுற்றிக் கடலைப் பசுவின் நெய்யில் மைபற்ற வைத்துத் திலதமிட ராச வசீகரம்.

ஆ. முடிவு

நீர்க்கடம்புக்கு ஓம் மோகினி மகா மோகினி என்று தீப தூபங் கொடுத்துப் பிடுங்கி, எலுமிச்சஞ்சாறு விட்டு நன்றா யரைத்து, கையில் தடவி, பெண்கள் கையைப் பிடிக்க வருவாள். அஷ்டகரம் மூலிகை அறுபத்து நாலும் எழுதி முகிந்தது.

முற்றும்.

## 1740. வில்லிபாரதம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1393

ஆ. ந/124

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. வில்லிபுத்தூரர்

ஆ. வில்லி பாரதம் : விராட பருவம் : மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 76 ஏடு; 152 பக்கம்.

ஆ. நீளம் 43 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை. இடையிடையே ஏடுகள் இல்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

.........வோமென்று சொன்னார். அப்போ தேசங்களெல்லாம் பாண்டவர்களைத் தேடிக்கொண்டு போன தூதர்கள் சொல்லத் தொடங்கினார்க ளென்றவாறு. (30)

ஆ முடிவு

பெரியோர்களிட யோசனை நிதானத்திலே சொல்லு கிறார்கள். தேவேந்திரனுட குமாரனாகிய அர்ச்சுன ராசன் தெய்வீகமான ரூபத்துடனே ஒளிவை மறைத்து வேஷங் கொண்டு ராசாதிபதிகளுட அந்தப்புரத்........

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

# 1741. மாவிந்தம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1394

ஆ. ந/125

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .........

ஆ. மாவிந்தம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு; 44 பக்கம்:

ஆ. நீளம் 33 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ:

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 13 வரி.

உ. சிறிய, அழகிய கையெழுத்து,

ஊ. சிதிலமாயுள்ளது,

எ. குறை

## 4. சிறப்புச்செய்திகள்

அ. தொடக்கம்

முன்னையோர் மொழியு ளுள்ளான் முளரியான் மார்பினுள்ளான்
பின்னையாள் கண்ணி ளுள்ளான் பேசு கோசலைப் பிராட்டி
என்னையாள் கையி லுள்ளா னாரணத் தலையி னுள்ளான்
என்னையாண் டருள நெஞ்சி லிருந்தவா றெந்த வாரோ. (1)

ஆ. முடிவு

அரசினைப் போதிக் களித்துத் தன்மாதரம்
விரைசெறி மாபெந்த மேவ வெண்ணிய
வரிசையாங் கதையினை வகுக்க வேண்டியே
சரசோதி தன்னிரு சரணம் போற்றுவாம். (5)
கடவுள் வாழ்த்து முற்றும்.

# 1742. பரிபாசை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1395

ஆ. ல/276

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. பரிபாசை; நாலாங் காண்டம்

இ. மருத்துவம்
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 34 பக்கம்.
ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சதிரமாங் கண்டத்தே செப்பு தற்குச்
சதாசிவனார் பாதமென் சிரசில் வைத்து
நிரையமாம் சிவனுடைய உத்தாரத் தாலே
நித்தியராம் என்குருவின் பாதம் போற்றி
முறையமாம் ஞானத்தின் சமாதி காப்பு
முச்சுடர்மணி முனிமுடிக்கும் பரமே காப்பு
கறையா மாமணிக்கு குறையார் காப்பு
கடந்துநின்ற கணேசனருள் பாதங் காப்பே. (1)

ஆ. முடிவு

இல்லையே பராபரத்தின் செய்கை தானும்
இவ்வாறோ இருப்பா ரென்றாற் கேளு
தில்லையே பூரணத்தி னுள்ளே சொக்கித்
துரியத்தின் சுடர்போலே தேக மாகி
மல்லையே மனத்தையந்த பூரணத்தில் மருவி
மற்றதெல்லாம் விந்தையென்று தெளிந்தா ரானால்
வில்லையே சுருக்கெல்லாம் மனந்தான் காணும்
மிகுந்தகோபத்தை போக்கினவன் ஞானிமுற்றே. (100)
நாலாங்காண்டம் முற்றும்.

## 1743. தருமபுரப் புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1396

ஆ. ப/45

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. தருமபுரப் புராணம்

இ. தலபுராணம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 28 ஏடு; 56 பக்கம்;

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. பெரிய, தெளிவான கையெழுத்து.

ஊ. மிகு சிதைவு.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருமன்னு சுருதிவிதி சித்தாந்தர்
எவருமெட்டாச் சிவஞ்சிற் சோதி
இருமன்னு நான்குமரு வுருவொருநான்
குருவுமான மூர்த்தி
குருமன்னு வடிவனந்தங் கொண்டடியார்க்
கருள்புரியுங் கோமான் சேர்வீ
தருமன்னு திருத்தருமைத் தருமபுர
நாதனிரு தாள்கள் போற்றி. (1)

ஆ. முடிவு

பூசுரர்க ளெவருமகிழ் தருமபுரப் புராணம்பொன்கொள்
ஆசுகவி மதுரகவி சித்திர வித்தார கவியதிக யோகன்
தேசுலவுஞ் சவுந்தரமெய்ச் சிவஞான தேசிகன்றாள் சித்தம்
வைத்தோன்
வீசுபுகழ் மேன்மை பெற்றசங்கர குமாரமுனி விளம்பினானே
(102)

## 1744. முதலாயிரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1397

ஆ. ன/95

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. பெரியாழ்வார் முதலியோர்

ஆ. முதலாயிரம்

இ. திவ்வியப்பிரபந்தம்

ஈ. செய்யுள் 472

### 3. தோற்றக் கூறுகள்

அ. 50 ஏடு; 100 பக்கம்

ஆ. நீளம் 36 செ.மீ.; அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணாவுன் சேவடி செவ்வி
திருக்காப்பு. (1)

ஆ: முடிவு

வேயர் தங்கள் குலத்துதித்த விட்டுணு சித்தன் மனத்தே
கோயில்கொண்ட கோவலனைக் கொழுங்குளிர் முகில்வண்ணனை
ஆயரேற்றை யமரார் கோவை ... ... ...
... ... ... ... (11)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1745. மாகமாத புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1398

ஆ. ந/126

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ: ........

ஆ. மாக மாத புராணம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 47 ஏடு; 94 பக்கம்.

ஆ. நீளம் 46 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 13 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

பராசர மாமுனியக வைப்பாம் புருடனை நான்கு
பழமறையின் பிறப்பிடத்தைப் பலவிஞ்சைக் கிருபை
விராவுபுகழ் நிலையத்தை வேதாந்தப் பொருளை
வெகுளியிலாப் பொறையோனை விடையமறுத் தோனைச்

சுராதிபர்......தூயமனத் தோனைத் துகளறு
மேகக்கலை முழுதுந் தோய்ந்திடம் பட்டோனைத்
தராதல மெண்புனித வியாதனைப் போற்றியவன்
தண்ணளியே நிலையாகச் சரணமரண் புகுவாம். (1)

ஆ. முடிவு

இட்டுணாத் தீமையால் யாதுண் டாயினுந்
தொட்டுணு முன்வென் றோர்விழுந் துயத்திலென்
கட்டமுற் கதிர்வந்துங் கூகைக் கண்ணிருள்
விட்டில தெவரினி விதியை வெல்லுவார். (56)

(இதன் பிறகு 57ஆம் பாடலின் முதலிரண்டு அடிகள் மட்டுமே உள்ளன.)

## 1746. சித்தராரூட நொண்டி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1399

ஆ. ல/277

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. சித்தராரூட நொண்டி

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 28 ஏடு; 56 பக்கம்;

ஆ. நீளம் 33 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ;

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது;

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை;

ஏ. குறை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அத்திமா முகவன் செய்ய அடியிணைக் கமலம் போற்றிச்
சித்தரா ரூடந் தன்னைச் செப்பிய பொருளை யோர்ந்து
சுத்தமா யெவர்க்குந் தோன்றச் சுருக்கமாய் நொண்டிச் சிந்தாய்
வித்தகர் அருளி னாலே தமியனும் விளம்ப லுற்றேன்.

ஆ. முடிவு

ஊழியின் விதிப்படியே—விரி........
கடித்துவிடஞ் சிரத்தில் நின்றால்
விழியின் பழமரைத்துச் சுரிவியன்
வெண்ணை யுடன்றுந்தில் மீண்ட......

## 1747. தனிப்பாடல்கள்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. *1400*
ஆ. *ற/129*

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. .........
ஆ. தனிப்பாடல்கள்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்

**3. தோற்றக் கூறுகள்**

அ. 26 ஏடு; 52 பக்கம்.
ஆ. நீளம் 24 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.

ஐ. சுமாரான நிலை
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானும்
பந்தமிலா வின்பநமக் காவானும்—எந்தனுயிர்
தானாகு வானுஞ் சரணாகு வானுமருட்
கோனாகு வானுங் குரு,

ஆ. முடிவு

எதிர்க்கும் புலவர் கழுத்திற் சுருக்கிட்
டிழுத்துச் செருப்பா லடிக்கும் படிக்காசுப்
புலவர் வாரார் வாரார் பாருங்கடி.

இ. முற்குறிப்பு

விஸ்வாவசு வருஷம் ஆவணி மாதம் 23 ஆம் தேதி சிவ சாமிக்குப் பாட்டுச் சுவடி எழுத ஆரம்பம்.

ஈ. பிற்குறிப்பு

சிவசாமி ஐயர் புஸ்தகச் சுவடி.

## 5. பிற செய்திகள்

இச்சுவடியில் இடையிடையே வடமொழி ஸ்லோகங் களும் கணக்குகள் சிலவும் எழுதப்பட்டுள்ளன. பல செய்திகளும் அடங்கிய ஓர் ஏடாக இது உள்ளது.

# 1748. பெருமாளம்மானை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1401
ஆ. ர/55

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..................
ஆ. பெருமாளம்மானை

இ. நாட்டுப்பாடல்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 74 ஏடு; 148 பக்கம்.

ஆ. நீளம் 49 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6, 7 வரி.

உ. பெரிய கிறுக்கலான கையெழுத்து.

ஊ. ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளன. முதல் 25 ஏடுகளும் 115 ஆம் ஏட்டிற்குப் பின்னர் உள்ள ஏடுகளும் காணப் படவில்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

......பாலகனானவன் சொன்னபோது
கமண்டலத்தைக் கைகொடுத்தார்
வாங்கிக் கொண்டு குரு புத்திரனும்
மாமுனியைக் கட்டித் தொழுதான்.

ஆ. முடிவு

துள்ளித் துள்ளிப் பொன்மானதுதான்
துய்யவனத்தில் விரைந்தான்
அந்நேரம் ரகுராமன் அச்சுத
நாராயணப் பெருமாள்
நம்பாணம் கையிலெடுத்து ராமசுவாமியும்
தொடுத்து விட்டார்
விட்டசரமது பட்டுத்தாவி விழுந்ததல்லோ
பொன்மா னதுதான்
(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

## 1749. தக்கராசன் கதை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1402
ஆ. ர/56

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........
ஆ. தக்கராசன் கதை
இ. நாட்டுப்பாடல்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 28 ஏடு, 56 பக்கம்.
ஆ. நீளம் 44 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. பெரிய கிறுக்கலான கையெழுத்து.
ஊ. ஏடுகள் வளைந்து முறிந்துள்ளன. 3, 8, 11, 12, 19, 21, 22, 31-36, 38, 41, 43 ஆகிய ஏடுகள் இல்லை. முதலேடு முறிந்துள்ளது.
எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

....மால் இருக்கின்ற கைலாசத்தில்
செம்பொன் மணிமேடை சிறந்திலங்க
....னும் புவிமாதும் தான் பொருந்தி
ஆண்டிருந் தாரே கயிலாசத்தில்
....டிருக்கின்ற நாளையிலே
ஆகம வேதங்கள் தான்முழங்க
....பிரமா விட்டுணு இந்திரரும்
பின்புமுள்ள தவமுனியும்
....முகவனும் அறுமுகனும்

ஆ. முடிவு

தலையெடுத்து உசத்தாமல் தலைதனக்கும் ஒருதறியாம்
காலெடுத்து உசத்தாமல் கால்தனக்கும் ரண்டுதறி
கையெடுத்து உசத்தாமல் கைதனக்கும் ரண்டுதறி

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1750. பாரத அம்மானை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1403
ஆ. ர/57

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............
ஆ. பாரத அம்மானை
இ. நாட்டுப்பாடல்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 120 ஏடு; 240 பக்கம்.
ஆ. நீளம் 56 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. பதப்படுத்தப்பெறாத ஏடுகள். முதல் ஏடும், இடையிடையே பல ஏடுகளும் இல்லை. பல ஏடுகள் சிதைந்துள்ளன.
எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

......கண்ட போதே யம்மை குந்திதேவி
காரிகையுமே ஏதோ சொல்வாள்
அவர்தானோ வேறே யோதான்
அரன் தெரிய கன்ன

செவ்வேலி தோட்டத்திலே
　　பள்ளிகொண்ட கர்ணயென்ன
பள்ளிகொண்ட வளமை யறியாமல்
　　பைந்தொடியாளம்மை குந்திதேவி...

ஆ. முடிவு

நாராயணருட திருவருளால்
　　நாக்கடலோடே போனவஞ்சி
ஆராகிலும் களர்காடுகள் ஒண்ணாமல்
　　அரியதோர் சொல்ல எரிகடலில்......

5. பிற செய்திகள்

மிகவும் பழுதுற்ற ஏடுகள். பாடலில் தொடர்ச்சி இல்லை. ஏடுகளும் முறை மாறியுள்ளன,

## 1751, திருவாதவூரர் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1404

ஆ. ந/127

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. கடவுள் மாமுனிவர்

ஆ. திருவாதவூரர் புராணம்: மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 80 ஏடு; 160 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 3 செ. மீ,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சற்றே சிதைவுற்ற நிலை. 1–41, 54, 56-58, 67, 72, 82–114, 127, 132-153, 154–181, 184–196, 239, 247 ஆகிய எண்ணுள்ள ஏடுகளும் 248 ஆம் ஏட்டிற்குப் பின்னுள்ள ஏடுகளும் இல்லை,

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மின்னலைப் பார்க்கிலும் நிலையில்லாமற் கெட்டுப் போற விழுப் பொருளான பிரபஞ்ச வாடகையின் மாயா மயக்க மான பொருளெல்லாம் வேண்டேன். உன்னுட பாதார விந்தத் தின் கெடாத பொருளை நினைந்துகொண்டு நாயேன் செனன மரண துக்கங்களை ஒழித்துவிடவேணும்.

ஆ. முடிவு

திருச்சதக முதலாகச் சிறந்ததமி ழுறுநூறும்
விரித்தவகப் பொருட்கோவை விளங்கவொரு நானூறும்
உரைத்தஉரை முடித்தவிடத் துயர்வாத வூரன்மொழி
தரித்தெழுதும் அம்பலவன் னெழுத்தென்று சாற்றினார்.

(எ.து.) அப்பால் திருச்சதக முதலாகச் சிறந்த தமிழ்ப் பாடல் 600 விரிவாகும் உட்பொருளினங் கோவையின் பாடல் 400, ஓதிப்படி.........

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

# 1752. திவாகரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1405

ஆ. ச/37

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திவாகரர்

ஆ. திவாகரம்

இ. இலக்கணம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 27 ஏடு; 54 பக்கம்.

ஆ. நீளம் 26 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. சிறிய தெளிவான கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை, சில ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

### அ. தொடக்கம்

முடிவிலின் பத்துமூவர் முதல்வனைப் போற்றி செய்தே
அடிதொரு மிரண்டு மொன்று மாதியிற் பொருள டக்கி
நடைபெறு ககரமாதி நகரவீ ரெதுகை யாகப்
படியிலோர் சொற்பொருட் பல்பயர்த்தொகை பகர லுற்றாம்.

### ஆ. முடிவு

கல்லு முலோகமுஞ் செங்கலு மரமும்
மண்ணுஞ் சுதையுந் தந்தமும் வண்ணமும்
கண்ட சர்க்கரையு மெழுகு மென்றவித்
தசமே சிற்பத் தொழிலுக் குறுப்பாகும்
மகாதேவன் சிவனு ருத்திரன் சங்கரன்
நீல லோகிதன் விசையன் வீமன்......

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

## 1753. திருக்குறள்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: *1406*

ஆ: ஙு/22

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: திருவள்ளுவர்

ஆ: திருக்குறள் ; மூலமும் உரையும்

இ: பதினெண்கீழ்க்கணக்கு

ஈ, செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்,

### 3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு; 44 பக்கம்.

ஆ: நீளம் 24 செ.மீ.; அகலம் 5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 15 வரி.

உ. சிறிய தெளிவான கையெழுத்து.

ஊ. ஏடுகள் சிதைந்தும் முறிந்துமுள்ளன.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இந்திரன் முதலிய இறைவர் பதங்களும் அந்தமிலின் பத்து அழிவில் வீடு நெறியறிந்......ரிய மாந்தர்க் குறுதியென உயர்ந்தோராலெடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம் பொருள் இன்பம் வீடு என்பன.

ஆ. முடிவு

ஒருவனுக்கு எல்லா அறிவு முளவாயினுங் கைப் பொருளிழத்தற் கேதுவாகிய ஊழ் வந்துற்ற விடத்தவனைப் பேதையாக்கும். இனி அவன் அறிவு சுருங்கி யிருப்பினுங் கைப் பொருளாதற்கேதுவாகிய ஊழ்வந்துற்ற விடத்தஃததனை விரிக்கு மென்றவாறு.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

**6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம்**

பல நூலகங்களிலும் உள்ளன.

**7. வெளியீட்டுச் செய்திகள்**

பல பதிப்புகள் வெளிவந்துள்ளன.

## 1754. பிரம்மோத்தர காண்டம்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. *1407*

ஆ. *ந/128*

**2. உள்ளீடு; நூல் விவரம்**

அ. வரதுங்கராம பாண்டியன்

ஆ. பிரம்மோத்தர காண்டம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள்

**3. தோற்றக் கூறுகள்**

அ. *143* ஏடு; *286* பக்கம்.

ஆ. நீளம் *38* செ. மீ.; அகலம் *3* செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு *6,7* வரி.

உ. சுமாரான எழுத்துகள்.

ஊ. சில ஏடுகள் பழுது பொதுவாக நல்ல நிலை. *73, 96-102, 105, 106, 109-113, 119, 124-128, 136-138, 148-152, 158-159, 164* ஆகிய ஏடுகள் இடையிடையே இல்லை,

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூமேவு சதுமுகனுந் திருமாலும் போற்றிசைப்பத்
தேமேவு குழலுமையாள் செழுங்குவளை விழிகளிப்ப
மாமேவு மிதழிநறு மழைதுளிப்ப மணிமன்றந்
தாமேவு நடம்புரியுந் தனிப்பொருளை வணங்குவாம். *(1)*

ஆ. முடிவு

இன்ன தன்மைய மணியென தியல்பெலா மெடுத்துப்
பன்னி யோதிடிற் பங்கயன் முதலியோர்க் கமையா
தென்னில் யாவரே யதனிலை விளம்புவா ரெனினு
முன்ன மந்தமா மணியினா னிகழ்ந்தமை...... *(13)*

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

# 1755. விக்கிரமாதித்தன் கதை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. *1408*

ஆ. *ம/29*

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. விக்கிரமாதித்தன் கதை

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 243 ஏடு; 486 பக்கம்.

ஆ. நீளம் 44 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. ஏடுகள் யாவும் வளைந்து முறிந்துள்ளன. பழுதுற்ற நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

.........ஆண்டு வருகிற விக்கிரமாதித்த னென்கிற ராசாவும் பட்டி என்கிற மந்திரியும் இவர்கள் ரண்டு வருகிற போது அந்தப் பட்டணம் சுற்றுக்குச் சுற்று நாற்காத வழி என்கிற பட்டணம் அப்படிக் கொத்தப் பட்டணம் பத்திரகாளியம்மன் கோவிலுடனே படுபாதிப் பட்டணம் காடு கொண்டுபோன படியினாலே நின்ற படுபாதிப் பட்டணமும் போச ராசாவும் சுத னென்கிற மந்திரியும் ஆறிலொன்று கடமை வாங்கி அசையா மணிகட்டி கவ்வென்கிற சத்தமில்லாமல் ராச்சிய பரிபாலனம் பண்ணிக் கொண்டு வருகிற போது........

ஆ. முடிவு

.........அந்த வெள்ளாட்டி வந்து ஆசார சத்திலே யிருந்த அய்யனை ராசா படுத்துக் கொண்டார். உம்மைக் கூட்டிக் கொண்டு போய்க் கிழக்குத் தெருவிலே யொருத்தியிருக் கிறாள் அவள் வீட்டிலே விடச் சொன்னார் வாருமையா வென்று கூட்டி......யென்றாள் என நான்தானென்றாள். இந்த அய்ய னுக்கு உன் வீட்டை விடுதியாக விட்டார். அவர் மனசு வர நடந்தாலே யாச.........

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

# 1756. மருத்துவ நூல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1409
ஆ. ல/278

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ........ ...
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 89

## 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.
ஆ. நீளம் 28 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை.
எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அருந்த சுரம்போா மாறா திரும லய்யம்
பெருந்திப்பி லியைக்கொள்வார் பேணியே-மருந்தெனவே
கொண்டாற் பசியுண்டாம் குன்மமொடு வாய்வுகபங்
கண்டாற் பறந்துவிடுங் காண். (1)

ஆ. முடிவு

அண்டையிலே நிண்டா லருசியெடுக்கும்
பண்டையில் நோய்மிகுந்தே பாரிக்கும்-கெண்டைமீன்
வாய்வுயர்க்கும் வயிறுவலி யுண்டாக்கும்
நீயு மிதையறிந்து நில். (89)

## 1757. மருத்துவ நூல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1410

ஆ. ல/279

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்.

உ. மருத்துவம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 28 பக்கம்.

ஆ. நீளம் 25•5 செ. மீ.; அகலம் 2•5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சற்றே சிதைவுற்ற நிலை. இடையிடையே பல ஏடுகள் இல்லை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

...... கொள்ளுகாடி, கொம்மட்டிக்காய், கோழிபண்ணி, பள்ளையாடு முள்ளும், பெரிய பாகற்காய், மூரியவரை, பயித்தங் காய், இளை...ருடன், பீர்க்கங்காய், பெரிய பலாக்காய், பூசணிக் காய், வள்ளல் சுரக்காய், வழுதலங்காய், ... ... ... ... ...

ஆ. முடிவு

வாத சுரத்தின் குணம்: சாவது, துணிவது பயப்படும், துணுக்கென்பதும், ரோமங்களை நெரிப்பதும், நடுங்குவதும்,

தலை நோக்காடும், சீழ்ச்சதுவும், கை கால் விலாவும், கோடாலி போட்டுப் புளுக்குறாப் போலே நோவதும், தண்ணீர் தாகமுண்டாகும். தொப்புள் மூத்திரம் கடுக்கும். குன்றி ... ... ...

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1758. மருத்துவ நூல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1411

ஆ. ல/280

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..................

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்.

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்;

ஆ. நீளம் 22 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. வெவ்வேறு கையெழுத்து.

ஊ. இடையிடையே ஏடுகள் காணப்படவில்லை; சுமாரான நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(தெளிவாக எழுதப் பெறவில்லை)

ஆ. முடிவு

காய்ச்சல் குளிர்சன்னி கைநோய் பலபிணிக்கும்
வாய்ச்சகரி தானாய் வழங்குமே—காச்சமில்லா
தெல்லவர்க்கும் நல்ல இதமா மிதமென்றே
சொல்லுமரைக் கீரைச் சுவை. (13)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1759. நோய்க்கு மருந்து

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1412

ஆ. ல/281

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. நோய்க்கு மருந்து

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 52 ஏடு; 104 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. பழுதுற்ற நிலை. ஏடுகளின் இடதுபுறம் முறிந்தும் சிதைந்துமுள்ளது.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மாலையா யுடம்புணத்தும் உறக்க மில்லை
    மகத்தான படுக்கைவிட்டு ஏதுஞ் செய்யா
சேலையாய்ச் சோறுமே செரியா மற்றான்
    செடமெங்கும் வாயுவாய்த் தியக்க மாகும்
பாலையா மூச்சதுவு மிகவுண் டாகும்
    பருபருக்கை யாய்க்கழியும் வயிறு தானும்
ஆலையாய் வயிறிரைச்சல் அதிக மாகும்
    அசதியாம் பித்தகா மாலை தானே: (532)

ஆ. முடிவு

......... ......... ......... .........
மூசுமூலப் பவுத்திரம் மேகப் பவுத்திரம
    முடுக்காண கிரந்தி ...... தான்
தாசுகின்ற அஞ்சுந்தான் அசாத்திய மாகுஞ்
    சாக்கண்ட மாலையொடு கொடிப்ப வுத்திரம்
ஆசுகின்ற ஆசனத்தின் கண்ட மாலை
    அசாத்தியந்தான் யிதுமூணும் அறிந்தி டாயே. (798)

பவுத்திர நிதானம் முற்றும்.

# 1760. மருத்துவ நூல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1413

ஆ. ல/282

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்.

இ. மருத்துவம்

ஈ. உரைநடை.

அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 24 ஏடு; 48 பக்கம்.

ஆ. நீளம் 22.5 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை. இடையிடையே ஏடுகள் இல்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

....வைத்து, அங்குலம் பிரமாணம் புளியம் புறணியில் புடமிட்டு, தீயாறும் முன் தள்ளி, ஒரு குழி கொல்லி, அதிற் போட்டு மண்ணிட்டு மூடி, ஒரு நாழிகை கிரமிச்சு எடுத்து, கக்கரி காயைக் கீறி அதுக்குள்ளே வைத்து, நூல் கொண்டு சுத்தி பழகின சட்டியில் வைத்து, தேங்காய் எண்ணெயிட்டு அடுப்பில் வைத்து வேக வைத்து, கொதுகொதென்று வருகிறபோது எடுத்துக் கீழே வைத்து, கல்வத்திலிட்டு அரைத்து, செப்பில் வைத்துக் கொண்டு பித்தளை, வெள்ளி, செம்பில் கொடுக்கவும்.

ஆ. முடிவு

சிவனார் வேம்பு வேர், காஞ்சிரை வேர், தேத்தான் வேர், இருவகையை வெவ்வேறு...... சரி எடையாய் அளந்து ஒண்டு படுத்தி வைத்துக் கொண்டு சன்னி தோசம் இதுகளுக்கு நாவில் தொட்டு வைக்கவும்.

# 1761. மருத்துவக் குறிப்புகள்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1414

ஆ. ல/283

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .............

ஆ. மருத்துவக் குறிப்புகள்

இ. மருத்துவம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

..........எலிக்கடி எண்பது, அரிப்பு, காமாலை, பாண்டு, புகைச்சல், சோகை, வரட்காமாலை, விடபாகம், சூலைகட்டு, கரப்பன், நீரிழிவு, துன்மாங்கிசம், கல்லடைப்பு, சுக்கிலப்பிரமியம், உள்ளுருக்கி, பிறமூலம், பவுத்திரம், பக்க சூலை, கபாலஉட்டிணம், வண்டுகடி, காணாக்கடி, அண்ட வாதம், நீராமை, போராமை, செரியாக்குணம், மூலவியாதி யெல்லாம் தீரும்.

ஆ. முடிவு

வெள்ளோக்காளத்துக்கு மருந்து

ஏலரிசியும் எலுமிச்சம் விதையும் வெற்றிலைக்காம்பும் அரைத்து வெந்நீரிற் கொள்ளவும்.

## 1762. மருந்து செய்முறை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1415

ஆ. ல/284

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. மருந்து செய்முறை

இ. மருத்துவம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 15 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 34 பக்கம்.

ஆ. நீளம் 22 செ. மீ.; அகலம் 2•5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சிதைந்த நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உக்கிர வயிரவன் மாத்திரை

ரசம், நாபி, அப்பிரகம், சாரீய பற்பம் இவை நான்கும் சமன் கூட்டி, திரிகடுகு கசாயத்தில் ரெண்டு சாம மரைத்து, குகையிலிட்டு மூடி, சீலைமண் செய்து, வாலுகா எந்திரத்திலே ரெண்டு சாமமெரித்து, ஆறினவாறே நாய்ப்பிச்சி லரைத்து, சணல்விரைப் பிரமாணம் உண்டை செய்து, இளநீர்க் காய்ச்சி உரைத்திட அந்திரக சன்னிவாதம் திரும்.

ஆ. முடிவு

சுக்குக் கசாயம், அயிலப்பட்டைக் கசாயம் ரெண்டு கசாயமும் வேறாகக் காய்ச்சி, இவை ரெண்டும் சமனாகக் கொண்டு அவ்வளவு நெய்யும் அவ்வளவு பாலும் கூட்டி அதில் கற்கம் திரிகடுகு, சித்திரமூலம் வட்டத்திருப்பி, மஞ்சள், சிறு தேக்கு, உள்ளி, வாய்விளங்..........

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1763. மருத்துவக் குறிப்புகள்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1416

ஆ. ல/285

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. மருத்துவக் குறிப்புகள்

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு; 36 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. ஏடுகள் வளைந்தும் முறிந்துமுள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கேளப்பா மேகமென்ற தெல்லாந் தீர
கெடியான யெண்ணெயொன்று சொல்லக் கேளு
நாளப்பா கோவைச்சாறு காணிச் சாறு
நலமான வல்லாரி செருப்படைச் சாறு
வேளப்பா ஆனையுட நெருஞ்சிச் சாறு
வெகுசுருக்காய் சீந்தியுட தண்டுச் சாறு
ஆளப்பா அரசினுட பட்டைச் சாறு
அப்பனே அத்தித்தோல் படிஅரைதா னாமே. (1)

ஆ. முடிவு

சூதக வாய்வுக்குக் கற்பூர மெழுகு விபரம்

சூரத்து கற்பூரம் 1 பலம் கொண்டு வந்து, உந்தாமணிச் சாற்றில் ஒரு சாமம் ஊற வைத்து எடுத்துக் கொள்கிறது. பின்பு, கற்பூரவள்ளியிலைச் சாற்றில் ஒரு சாமம் ஊற வைத்து எடுத்து, யின்பு அரைக்கீரைச் சாற்றில் ஒரு சாமம் உற வைத்தெடுத்து, பின்பு ... ... ...

# 1764. மாந்திரீக நூல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1417

ஆ. ழ/41

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரீக நூல்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை.

அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்,

## 3. தோற்றக் கூறுகள்

அ. 40 ஏடு; 80 பக்கம்.

ஆ. நீளம் 17 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சிதைந்த நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கிழக்கு ராசி யிருப்பு சாவு வார்த்தை.
தீவு திசையில் சொற்ப பயம்.
அக்கினி மூலையில் புதனிருப்பு ...... முறைவரவு.
தீவு திசையில் சந்தோஷமான வார்த்தை.

ஆ. முடிவு

ஏவல் விட்டிருந்தால் அதுக்கு இரும்புத் தகட்டில் அடைத்து வைக்கிறது. ஐயும் கிலியும் சவ்வும் இது இரண்டு பக்கமும் அடைக்கவும்.

(இதன் பின் யந்திரம் வரையப்பட்டுள்ளது.)

# 1765. மருத்துவ நூல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1418

ஆ. ல/286

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 42 ஏடு; 84 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. பல ஏடுகள் சிதைந்துள்ளன. முதல் 90 ஏடுகளும் 132 ஆம் ஏட்டிற்கு பின்னருள்ள ஏடுகளும் காணவில்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

.. .. .. ..
.. .. கீழ்க்காய் நெல்லி
மதிரமாம் பேய்த்தும்பை யுலர்த்தித் தூளாய்
மகத்தான இவையெல்லாஞ் சமனாய்க்கொண்டு
மதிரமென்ற நிழலுலர்த்தி இடித்துத் தூளாய்
மைந்தனே பொட்டாக நிறுத்துக் கொண்டு
மதிரமென்ற முன்பொடியைச் சமனாய்க் கொண்டு
மங்கையர்கள் முன்னுதிரச் சீலை வாங்கே (349)

ஆ. முடிவு

எரித்திடவே யிரவுபகல் பனிரெண்டு சாமம்
இறக்கியே யாறவிட்டு எடுத்துப் பாரு
எரித்திடவே ரசமணிதா னென்ன சொல்வேன்
இடைபோகா திர...............
... ... ... ...

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

# 1766. மாந்திரீக நூல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1419

ஆ. மு/42

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. பெயர் தெரியாத ஒரு மாந்திரீக நூல்

இ. மாந்திரீகம்

ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 44 ஏடு; 88 பக்கம்.

ஆ. நீளம் 16·5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சிறிய, கிறுக்கலான கையெழுத்து.

ஊ. பல ஏடுகள் சிதைந்தும் பூச்சி அரித்துமுள்ளன.
சிதைந்த நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பலபல பொரியை யவ்விடமறிய
குலகுலக் கூடு விலவில முனையே (121)
முனையே சுழியே குனையே முழியை
இனமே தெளிய உனையே தரியேன் (123)

ஆ. முடிவு

(துருவத்தில் அடக்க அட்சரம்;
இது அன்பத்தி ஓர் அட்சரம்.
லக்கத்தில் அடக்க அட்சரம்.
ஆக அன்பத்தாறு அட்சரமும் கண்டுகொள்ளவும்,
என இவ்வாறுள்ள தலைப்புகளில் சில எழுத்துகள் எழுதப்பட்டுள்ளன.)

## 1767. ரோமரிஷி 500

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1420
ஆ. ல/287

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ரோமரிஷி
ஆ. ரோமரிஷி 500
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 48 ஏடு; 96 பக்கம்.
ஆ. நீளம் 23 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தானென்ற லேகியத்தை உண்ட போது
　　தவறாது கண்கள்ரெண்டுஞ் சிவந்து காணும்
ஊனென்ற மன்மதன்போல் காந்தி யாகும்
　　உத்தமனே லேகியமோ உறுதி மெத்த
பானென்ற சூரியனி லோட்டங் காணும்
　　பரவெளியில் திருநடனங் காண லாகுங்
தேனென்ற மொழியாளைக் கூடொண் ணாது
　　சிறக்கவே பத்தியந்தான் திறமாய்க் காரே. (305)

ஆ. முடிவு

பாரப்பா நூறுசொன்னேன் பதினாறு சொன்னேன்
　　பதிவான ஐம்பதிலே ரெண்டுஞ் சொன்னேன்
சீரப்பா அதில்மவுன ஞானஞ் சொன்னேன்
　　சிறப்பாக குருமுறையுஞ் சொல்லி வைத்தேன்
வீரப்பா ரோமனென்று பேரும் நாடி
　　விசையெல்லாம் சொல்லிவைத்தேன் யிந்த நூலில்
ஆரப்பா அவனியிலே கொடுக்கப் போறார்
　　அப்பனே புசுண்டருட பதந்தான் முற்றே. (511)

## 1768. இராமாயண வசனம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1421

ஆ. ம/30

2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ..................

ஆ: இராமாயண வசனம்

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை
　　அச்சில் ஏறத்தாழ 300 பக்கம் வரும்,

## 3. தோற்றக் கூறுகள்

அ. 245 ஏடு; 490 பக்கம்.

ஆ. நீளம் 47 செ. மீ.: அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை. முதல் 25 ஏடுகளும், 282ஆம் ஏட்டிற்குப் பின்னுள்ள ஏடுகளும் இல்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

......பதினாயிரம் பிள்ளைகளும் கிழக்கே கீழசமுத்திரம் மட்டும் தேடினார்கள். எங்கும் காணாமல் வட முகத்திலே ...... மல் மகாமேரு உச்சியிலே ஏறி தெய்வலோகம் முதல் பிரம்ம லோக பரியந்தமும் தேடி அங்கும் காணாமல் பூமியில் உள்ள வனங்கள்................

ஆ. முடிவு

இராமசுவாமிக்கு சந்தோசமாகி விபீசணனுக்கு இலங் கைப் பட்டணம்......வைக்க வேணுமென்று கோட்டை வாசலிலே வந்து நின்று பச்சை மரகதக் கல்லை பார்த்து ராமசுவாமியும் மனசிலே ஆசை......அப்போது சாம்பு வரச் சொல்லுவார்.
அலைகடல் கடைந்து தேவர்க் கமிர்தம் கொடுக்கக் கண்டேன்
மலையுந்தன் சீர் ..............

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

# 1769. அகத்தியர் தேவாரத் திரட்டு

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1422

ஆ. ண/49

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருஞானசம்பந்தர் முதலியோர்

ஆ. அகத்தியர் தேவாரத் திரட்டு

இ. சைவத்திருமுறை

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 25 ஏடு; 50 பக்கம்.

ஆ. நீளம் 12·5 செ. மீ.; அகலம் 4·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 17 வரி.

உ. சிறிய, அழகிய கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

குருவுருவம் வெண்ணீ றெழுத்தஞ்சு கோயிலான்
உருவமென் றலைமே லார்க்குந் – திருவடியுஞ்
சிட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலயர்க்கன்
றிட்டா ரகத்தியனா ரெட்டு.

ஆ. முடிவு

ஒருமை பெண்மை யுடையன் சடையன்
விடையூறு மிவனென்ன
வருமை யாக உரைசெய்ய வமர்ந்தென்
னுள்ளங்கவர் கள்வன்
கருமை பெற்ற கடல்கொள்ள மிதந்ததோர்
காலமிது வென்ன
பெருமை பெற்ற ...... ...... ...... ......

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

## 1770. காசி காண்டம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1423

ஆ. ப/46

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அதிவீரராமபாண்டியன்
ஆ. காசி காண்டம்
இ. தலபுராணம்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 238 ஏடு; 476 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை. சில ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருவளர் மகதி வீணைத் தெய்வமா முனிவன் றெண்ணீர்
நருமதை யாற்றின் மூழ்கி நானிலத் துயிர்கட் கெல்லாங்
கரு......வனைத்தும் நல்குங் குடிலையங் கடவுட் போற்றி
வருதலும் பொருவில் விந்த மால்வரை யினிது கண்டான். (1)

ஆ. முடிவு

அலகில் புகழிப் பெருங்காதை நவின்றோர்
கேட்டோ ரன்புற்றோர்
நிலவு பொழியுந் தனிக்கவிகை நிழற்ற
வரியா சனத்தேறி

உலக மூன்று மொருதிகிரி யுருட்டி
யரசர் திரையளப்ப
மலரி னுறைபொற் றிருமடந்தை வாழ்த்த
வினிது வாழ்ந்திருப்பார். (16)

விசுவநாதன் மகிமை யத்தியாயம் முற்றும்.

## 1771. அருணாசல புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1424

ஆ. ப/47

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. எல்லப்ப நாவலர்

ஆ. அருணாசல புராணம்

இ. தலபுராணம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 50 ஏடு; 100 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இரவிகள் சந்திரர் வயிரவர்
விஞ்சையா ரிமையவ ரெண்டிசை
யொருநக ருந்தவர் முனிவரர்
பங்கய ருவண நெடுங்கொடியோர்

பரவி நெருங்கலி லுலகு நிறைந்தவர்
பணியு மிடங்கி டையா
தரகர வென்பது கடலின் முழங்கிய
தருணை வளம் பதியே. (1)

ஆ. முடிவு

அஞ்செழுத்தும் வாழிவாழி அருணை வாழி அருணையான்
கஞ்சமுற்ற சரணம் வாழி ... கருணைபொன்......
மஞ்சுபெற்ற வானம் வாழி வையம் வாழி வையமேற்
தஞ்சமுற்ற நீறு வாழி சைவர் வாழி வாழியே. (7)
புழுகாதிபச் சருக்கம் முற்றும்.

ஆக அருணகிரி புராணம் சருக்கம் பனிரெண்டுக்குத் திருவிருத்தம் 587. அருணாசல புராணம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

அட்சய ஆண்டு ஆனி மாதம் 4ஆம் தேதி செவ்வாய்க் கிழமை ஏகாதசி அசுபதியிலும் பெத்தயன் அருணகிரிபுராணம் எழுதுகிறதுக்கு ஆரம்பம் பண்ணினது.

## 1772. தருமர் அசுவமேத யாகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1425

ஆ. ம/31

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. தருமர் அசுவமேத யாகம்

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 300 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 278 ஏடு; 556 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

### அ. தொடக்கம்

சுபஸ்ரீ மன் மகா மண்டலேசுபரன் அகண்ட மண்டலா வீசுபரன் ராசாதிராசன் ராச பரமேசுபரன் ராச மார்த்தாண்ட ராச கெம்பீர ராச நரபால, ராச குலசேகர, ராசாதி ராசன், குருகுல வங்கிஷ சந்திர குலத்துதித்த பாண்டு மகா ராசாவின் குமார காண்டிபரான பஞ்ச பாண்டவர்களில் தர்மபுத்திரரானவர் கவுரவ சிங்காசனருடைய வரான திரிதராட்டித மகிபால குமா ரர்கள் திரியோதனாதிபர்களுடனே பாரத யுத்தம் பண்ணி ...... ...... ...... ......

### ஆ. முடிவு

......இந்தப் படியாகப் பஞ்ச வேதமாய்ப் பாரதப் போர் முடிந்தன. பிறகு சாந்தாதி அசுவமேத யாகம் துடங்கித் திக்கு விசயமும் செலுத்தி சகல யூகாதிபதிகளும் ரிசி ஈசுபரா ளுடனே யாகம் நிறைவேற்றி ராச்சிய பரிபாலனம் பண்ணிக் கொண்டு சுகமே இருந்தார்களென்று செனமேசயராசனுக்கு வசிய பரயினரான செயமுனியேந்திரர் சொல்ல செனமேசய ராசனுங் கேட்டு மகா சந்தோசத்துடனே முனியேந்திரருக்கு வேண்டிய வெகுமதியும் பண்ணி சந்தோசமாக இருந்தார்க ளென்றவாறு.

பஞ்ச பாண்டவர்கள் சாந்தாதி அசுவமேத யாக கதை எழுதி முகிந்தது.

### இ. பிற்குறிப்பு

அசுவமேதை யாக கதையெடுத்தவர்கள் படித்துச் சோடச உபசாரத்துடனே தூபதீப நெய்வேத்தியம் செய்து கெந்த புஷ்பம் தாம்பூலம் சகலத்திராளுக்குக் கொடுத்து வாழி படிக்கவும். இவை புண்ணிய கதை கேட்டவுடனே சகல பாவமும் பரிகாரமாய் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி பதம் பெறுவார்கள். எழுதின பேர்களும் படித்த பேர்களும் அன்புடனே கேட்ட பேர்களும் ஆல் போல் தழைத்து அருகது போல் வேர் ஊணி மூங்கில்போல் அன்ன சுற்றம் முசியாமல் வாழ்ந்து சுகமே இருப்பார்களென்றவாறு.

## 1773. பகவத் கீதை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1426

ஆ. ட/220

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பட்டர்

ஆ. பகவத்கீதை

இ. தத்துவம்

ஈ. செய்யுள்
அச்சில் ஏறத்தாழ 80 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 85 ஏடு; 170 பக்கம்.

ஆ. நீளம் 24 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆரணங்கள் தானாகி யாபத் தனமாகிக்
காரணமாய்க் கண்ணனுமாய்க் கார்முகிலாய்ச்-சீரணங்காய்
நின்றானை நேமிப் படையானை நீநெஞ்சே
யொன்றாக யுள்ளுறைவா யுற்று. (1)

ஆ. முடிவு

ஆற்றியல் வழுவிய புலங்க ளைந்தையும்
மாற்றிய சங்கர பகவற் பாரதன்

ஏற்றிய பெயரினா னருளி னாலியான்
சாற்றின னிப்பெருந் தரும நூலையே. (82)

பதினெட்டாவது சங்க்சேபவத்தியாயம் முற்றும்.
ஆகப் பாயிரம் உள்படத் திருவிருத்தம் 592.

இ. பிற்குறிப்பு

வச்சிரால ராமச்சந்திரநாயகர் பகவத் கீதை எழுதினது. கார்த்திகை மாதம் 15ஆம் தேதி அசுபதி நட்சத்திரமும் சதுர்த்தசியும் செவ்வாய் மங்கள வாரமும் சாத்மீக வேளையும் புத வோரையும் கூடின சுபதினம் எழுதி முகிந்தது. மேற்படி கையட்சரம், சம்பூரணம்.

## 1774. பகவத்கீதை வசனம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1427

ஆ. ட/221

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. பகவத்கீதை வசனம்

இ. தத்துவம்

ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 98 ஏடு; 196 பக்கம்.

ஆ. நீளம் 19 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. பல ஏடுகள் சிதைந்து முறிந்துள்ளன.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தன்மராசாவினுடைய சேனா சமுத்திர வகையுந் திரியோதனன் சேனா சமுத்திர வகையும் யுத்தத்துக்கு ஆயத்தப் பட்டு இரண்டு தளமுமிருக்கிறபோது திருதராட்டிரன் சிந்தித்துக் கொண்டிருக்கையில் அவடத்துக்கு வேத வியாஸ மாமுனி வந்து திருதராட்டிரனுடனே ஒரு வார்த்தை சொல்லுகிறார்.

ஆ. முடிவு

......அர்ச்சுனனுக்கு கிஷ்ட்டிணசுவாமி காட்டின ஆச்சரிய ரூபத்தை நினைத்து நினைத்தெனக்கு மகா சந்தோஷ மாகுது. எந்தப் பட்சத்திலே யோகீசுர ரான கிஷ்ட்டிண சுவாமி எந்தப்பட்சத்திலே தனுர்தரனான அர்ச்சுனனு மிருக்கிறார்களோ அவடத்துக்குச் செயமுஞ் சம்பத்தும் நீதியும் நிசமென்றென்னு டைய மனதிலே யுண்டு.

பதினெட்டாவது சகலவும் பணிவித்து அர்த்தப்பிருதி பரதன மோட்ச யோக வத்தியாயம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

இந்தப் பகவத் கீதை பதினெட்டத்தியாயமும் யாதொருத்தன் படித்து அபரோட்சமாக வதியிரானோ அவன் அந்தக் கணமே முத்தனாவான். இதுக்குச் சமுசயமில்லை. சங்கராசாரிய சுவாமிகளிந்த பகவத் கீதை சுலோகத்திலே யொரு சரணமாகிலும் எவன் படித்து அனுபவமறியிரானோ அவன் உடனே முத்தனாவானென்று சொல்லியிருக்கிறார். இதைத் தமிழினாலே விஸ்த்தரித்து அனுக்கிரகம் பண்ணின சுப்பிரமணிய குரு சரணார விந்தமே கதி.

# 1775. அருணாசல புராணம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1428

ஆ. ப/48

## 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. எல்லப்ப நாவலர்

ஆ. அருணாசல புராணம்; மூலமும் உரையும்

இ. தல புராணம்.

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 300 பக்கம் வரும்,

## 3. தோற்றக் கூறுகள்

அ. 251 ஏடு; 502 பக்கம்.

ஆ. நீளம் 34 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. ஏடுகளின் ஓரங்களில் முறிவு. பொதுவாக நல்ல நிலை.
முறை மாறியுமுள்ளன.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மிக்க வேத வியாசன் விளம்பிய
இக்க தைக்கு வியனருள் செய்திட
முக்கண் வெற்பினை மும்மத வாரியைக்
கைக்க ளிற்றினை கைதொழு தேத்துவாம்.

ஆ. முடிவு

அண்ணாமலை சோணா சலமென் றருணைகிரி
உண்ணா முலையா முமைபாகர் – கண்ணாகத்
திருவடியைச் சிந்திக்கச் சேவடியைப் பூண்டடியார்க்
குருவடியைக் காணவருட் கூறு. (10)

புழுகாதிபச் சருக்கம் முற்றும்.

ஆகச்சருக்கம் 12க்குத் திருவிருத்தம் 600.

அருணாசல புராணம் முகிந்தது. முற்றும்.

இ. பிற்குறிப்பு

இந்த அருணாசல புராண தோத்திரம் பண்ணுகிறதா பழனியாண்டியாம் பிள்ளை.

இந்தப் புராணம் எழுதினது சிவந்திலிங்கம்பிள்ளை குமாரன் பால்வண்ணபிள்ளை.

## 1776. அருணாசல புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1429
ஆ. ப/49

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. எல்லப்ப நாவலர்
உ. அருணாசல புராணம்: மூலமும் உரையும்
இ. தலபுராணம்
ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 129 ஏடு; 258 பக்கம்.
ஆ. நீளம் 32 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. பல ஏடுகள் சிதைவுற்ற நிலை. முதல் 37 ஏடுகள் வலதுபுறம் கீழ்ப்பகுதியில் சிதைந்துள்ளன,
ஏ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1428 காண்க.

ஆ. முடிவு

ஆரணனாகிய பிரம்மா விஷ்ணுவும் தேட அடி முடியு மொளித்து ஞான பூரணமாய்ப் பிரகாச சொரூபமாய் மேல் கீழுலகமெல்லாம் பொருந்தி நிற்போம். தாரணித்தலத்தோ......

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

# 1777. அருணாசல புராணம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1430

ஆ. ப/50

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. எல்லப்ப நாவலர்

ஆ. அருணாசல புராணம்: மூலமும் உரையும்

இ. தல புராணம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 124 ஏடு; 248 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ: சுமாரான நிலை;

எ: குறை

4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

தொடர் எண் : 1428 காண்க.

ஆ. முடிவு

நாயகனாகிய பரமசிவ னருளிச்செய்தபடிக்கு நடந்த விருத்தாந்த மெல்லாங் காசியிலே வந்து முப்பத்திரண்டறம் வளர்த்ததும் காஞ்சிபுரத்திலே வந்து சிவபூசை பண்ணினதும் பரமசிவன் சோதித்ததும் கம்பையாற்றிலே பிரளயம் வெள்ளம் வந்து விலகிப் போனதும் சுவாமி எழுந்தருளிவந்து காட்சி கொடுத்த.........

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

## 1778. கைவல்ய நவநீதம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1431

ஆ. ட/222

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. தாண்டவராய சுவாமி

ஆ. கைவல்ய நவநீதம்: மூலமும் உரையும்

இ. தத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 151 ஏடு; 302 பக்கம்.

ஆ. நீளம் 29 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அவதாரிகை :

வட நூலாராய்ச்சியில் வல்லமையுள்ள விந்நூலாசிரியர் தாமடைந்த சுவானுபூதிப் பிரத்தியக்ஷத்தை யுலகஞ் சுளுவில டைந்தானந்தாதீதமாகும் பொருட்டருளினாற் சொல்லப்புகுந்த விந்நூலினிது முடியவதனந்தரங்கமான பிரஞ்ஞானபிரமமென்னு மிருக்கு வேத மகா வாக்கியார்த்தமாக விளங்கு மத்துவிதஸ்வ ரூபத்தை விலட்சணமாகவுஞ் சலட்சண மாகவுந் துதிப்பான் தொடங்கி.........

ஆ. முடிவு

நான்கு வேதங்களின் முடிவிலுள்ள நான்கு மகாவாக்கி யார்த்தமு மொன்றான வித்தியானந்தமே யனுபவ மெனவும் அஃதை யடைந்தவர்களே சீவன் முத்த ரெனவுங் கூறினதாம். **(182)**

இ. முற்குறிப்பு

இஃது கொளத்தூர் வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் கேட்டுக் கொண்டபடி பொய்கைப்பாக்கம் வீராசாமி முதலியா ரவர்கள் இளைய சகோதரராகிய அப்பாசாமி முதலியாரால் தமது வித்துவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

குரோதி வருஷம் பங்குனி மாதம். இதன் விலை ரூ. $5\frac{3}{4}$ மேற்படி அச்சுப் பொஸ்தகத்தைப் பார்த்துக் கோரிப்பாளையம் பாக்கிய முதலியார்க்காக மதுரை ராமாயணச்சாவடிக் கணக்குத் தவசிக்கோன் மகன் தேவேந்திரன் எழுதினது. பராபவ வருஷம் மார்கழி மாதம் 20 ஆம் தேதி...........

## 1779. கைவல்ய நவநீதம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1432

ஆ. டி/223

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. தாண்டவராய சுவாமி

ஆ. கைவல்ய நவநீதம்: மூலமும் உரையும்

இ. தத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 60 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 53 ஏடு; 106 பக்கம்;

ஆ. நீளம் 27 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பல ஏடுகள் மிகு சிதைவு.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முத்தனை வெங்க டேச முகுந்தனை யுகந்தாட் கொண்ட
தத்தனை வணங்கிச் ......... வல்லிய நவநீ தத்தில்
தத்துவ விளக்க மென்றுஞ் சந்தேகந் தெளிதலென்றும்
...... ...... படல மாக வகுத்துரை செய்கின்றேனே.

ஆ. முடிவு

ஆண்டதே சிகனா மய்ய னாரணன் அனந்தன் பாதம்
பூண்டவா ரோபத் தால்முன் போய்மயக் காய்வந் தத்தை

மாண்டைவர் நல்லவாய்தத்தால் மாய்த்தருள்நோக்கத்தோன்றும் காண்டி ...... ...... ......

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

## 1780. திருக்குறள்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1433

ஆ. ரு/23

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருவள்ளுவர்

ஆ. திருக்குறள் : மூலமும் உரையும்

இ. பதினெண்கீழ்க்கணக்கு

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 300 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 204 ஏடு; 408 பக்கம்.

ஆ. நீளம் 33 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9,10 வரி.

உ. சிறிய, அழகிய கையெழுத்து.

ஊ. பல ஏடுகளின் இடதுபுற ஓரங்கள் சிதைந்துள்ளன. முதலில் 9 ஏடுகள் இல்லை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

......மேற்பட்ட கேடுமில்லை யென்றவாறு அறத்தினூங்காக்கமுமில்லையென மேற்சொல்லியவதனையே யனுவதித்தாரதனாற் கேடு வருதல் கூறுதற் பயன்நோக்கி இதனாலது செய்யாவழிக் கேடுவருதல் கூறப்பட்டது. (2)

ஆ. முடிவு

புகழினையுடைத்தாகிய செல்வத்தினையுடையவரது நிற்குங்காலஞ் சிறிதாய் வறுமை யுலகத்தையெல்லாம் நிறைத்த மேகம் வறுமை மிக்கார்ப்போல்வதோ ரியல்பினையுடைத்தென்ற வாறு.

(இதற்குமேல் ஏட்டில் இடம் இருந்தும் எழுதப்பெறவில்லை.)

## 1781. விருத்தாசல புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1434

ஆ. ப/51

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. விருத்தாசல புராணம் : மூலமும் உரையும்

இ. தலபுராணம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில்ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 137 ஏடு; 274 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பல ஏடுகள் ஓரங்களில் முறிந்தும் சிதைந்துமுள்ளன.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருயாலும் நான்முகனுந் தேவர் கோவுந்
தேவர்களும் யாவர்களுஞ் சிந்தை யாலும்
அருவாய மறையாலும் அளவை யாலும்
அளப்பரிதாய் கண்டிதமாய் நின்ற மூர்த்தி
உருவாகிக் கிரிவடிவாய் அனந்தங் கோடி
ஒளியுடைய கொடுமுடிக ளாகி நின்ற
பெருவாழ்வைத் திருமுதுகுன் றுடையான் றன்னைப்
பெருங்கருணை யாளனையாம் வணங்க லுற்றாம்;

ஆ. முடிவு

பத்திர மெழுதி யேவப் பணியினர் போலச் சென்று
குத்திரஞ் செய்து கொளுங் குறளையு மோர்ந்து முன்னை
மித்திரர் போலப் பேசி விருந்துண்டு களவு கொண்டு
சத்துரு வாகிப் பேசித் தனிப்பழி தீரா நின்றான்;

(எ.து.) கடன்முறி எழுதிஅந்தக் கடனுக்குடையவன் அனுப்ப அவன் மனுஷ............

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

## 1782. முத்ரா லட்சணம்

1. நூலகக் குறிப்புகள்

அ: 1435-1

ஆ. ற/130

2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ...............

ஆ: முத்ரா லட்சணம்

இ: பல்வகை நூல்கள்

ஈ: செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 28 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6, 7 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. ஏடுகளின் இருபுறமும் முறிந்தும் சிதைந்துமுள்ளன.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மண்டுநீர் பிடித்த வலக்கை இடக்கரங்
கொண்டுமேல் வளைப்பது கும்பமுத் திரையே. (1)

ஆ. முடிவு

சேட்டைக ளிட்டைமேற் சேர்மூ விரலையும்
நீட்டி விரிப்பது நேத்திர முத்திரையே. (30)

## 1783. அநுட்டான விதி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1435–2

ஆ. ற/130

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ...............

ஆ. அநுட்டான விதி

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 8

## 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 28 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. ஏடுகளின் இருபுறமும் முறிந்தும் சிதைந்தும் உள்ளன.

எ. முழுமை

## 4. சிறப்புச்செய்திகள்

அ. தொடக்கம்

மன்னுநடு விரண்மூன்று மடக்கிவி நாயகனை
வணங்கியுயர் சிரம்புடைத்தல் சிகரமுத்திரையாகும்
உன்னுமிரு கரங்குவித்தல் நமக்கார மாகும்
உயர்ந்தநகுத் தர்சனையுள் வளைத்தல் கோகோ
டென்னுநிரீட் சணமுத்திரை புரோட்சண மாமதனுக்
கியன்றதீட் சணமுத்திரை தர்சனியை நிமிர்த்தல்
அன்னதுதா டனஞ்செய்த லதோமுகி யங்குலிநீ
டங்குட்ட மடக்கலப்பி யுக்கணச்சேர்த் திகமே. (1)

ஆ. முடிவு

கூறுமநா மிகைசேட்டை மத்திமையுங் கூட்டிக்
கொண்டுதிரு நீறெடுத்தல் மிருகமுத் திரையாம்
நீறுகுழைத் திடுதற்குப் புனலெடுத்தல் கனிட்டை
நீக்கிநின்ற விரல்கூட்டல் நிரோதன மாகுந்
தேறும்வகை நாற்பதுமுத் திரையினியல் பறிந்து
செய்யுமனுட் டானவிதித் திறத்துடையோர்க்கெல்லாம்
பேறினிய கிரியைபுரிந் தன்னிலையினிற் பெரும்பயனைப்
பெறுவரே ......... பேசிடு மாகமமே. (8)

அநுட்டான விதி முற்றும்.

## 1784. புதுவையம்பிகை பிள்ளைத்தமிழ்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1436

ஆ. ய/100

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. புதுவையம்பிகை பிள்ளைத்தமிழ்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 42 ஏடு; 84 பக்கம்.

ஆ. நீளம் 22 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

செஞ்சடைக் காட்டின் மதிநில வெறிப்பக்கட்
செவிப்பணா மகுடரத்தினஞ்
செய்யவெயில் வீசமுழு மையனைய கருவிடந்
திருமிடற் றிருள் பரப்ப
பஞ்சனைய சீரடிக்க வுரியொரு பாகம்
பசேரெனச் செம்மை பூத்த
பவளமேனிப் பரமர்தவள தூளக் கடவுள்
பாதமலர் சென்னி வைப்பாம்

அஞ்சனநி றப்புங்கவர்க் கிளையதங் கையென்
அம்மையைத் தர்மவி ளைவை
அண்டர்புகழ் சண்டப்பிர சண்டருத் தரியைமலை
அரசன ருமைப்பு தல்வியை
வஞ்சனைமுதற் பில்லிசூ னியநிவா ரணியை
வண்டுமது வுண்டு கிணத்திடு
மாமுண்ட கத்திபுகழ்ச்சா முண்டியைப் புதுவை
வல்லியைக் காக்க வென்றே. (2)

ஆ. முடிவு

மாசறு துய்ய மதித்திரு முகமு
மணத்தக ருங்குழலும்
வரிவிழியுங் குழையோ லையும் வெண்ணகை
வாயுங் கனியிதழும்
தேசடர் மங்கல நாணும் மலர்க்கைச்
செவ்வியு மிணைமுலையும்
சிற்றிடை வடிவும் பட்டுடை யழகுஞ்
செம்பொற் பதமலரும்
நேசமு டன்பல நாளும் நினைந்துக
சிந்துருகி............
நின்றுவ ணங்கிவ ணங்கிவ கத்தி
நிறைத்திடு தொண்டர்செயும்
பூசனை கொண்டருள் புதுவையி ளங்கிளி
புதுநீ ராடுகவே
புவனமை யேசுபரி சிவகரு ணாகரி
புதுநீ ராடுகவே. (10)

**நீராட்டு முற்றும்.**

## 1785. சௌந்தரியலகரி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1437
ஆ. ய/101

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கவிராச பண்டிதர்
ஆ. சௌந்தரியலகரி: மூலமும் உரையும்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 147 ஏடு; 294 பக்கம்.

ஆ. நீளம் 17 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பல ஏடுகள் சிதைவு. மிகவும் சிதைவுற்ற நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மொழிந்தமறை நூலியற்று முகபடா .........
........ ......... தானம்
பொழிந்துதன் தினைமணி யென்றிரு சுடரும்
புனைகளிற்றைப் போற்றல் செய்வர்
வழிந்துபெரும் புனல்படர்ந்து வடவரையிற்
றுலகேழு மேழு மொக்க
வழிந்திடினு மழியாத வபிராமி
பாடல் வளமளிக்க வென்றே.

ஆ. முடிவு

இதற்குப் பொருள் தானே விளங்கும். பிறைபுனைந் தருளுஞ்.......... னது உவகைப் பெருக்கென வடமொழி முனி வனறை சவுந்தரியலகிரியைத் தமிழாலருள் கவிராச பண்டிதன் நிறைமனங்கருதித்தாளை, மாநகரினிலைபெற வாழ் – கவி – யெல்லைநிறை மனவெனினுந் தவறிலாதுரை–தேர்ந்தெழுதி ன னிருள் விளக்கெனவே.

சவுந்தரியலகிரி உரை முற்றும்.

## 1786. யோகமாலை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1438

ஆ. ட/224

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. யோக மாலை

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 147

### 3. தோற்றக் கூறுகள்

அ. 40 ஏடு; 80 பக்கம்.

ஆ. நீளம் 16·5 செ.மீ.; அகலம் 2 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. ஏடுகளின் இடதுபுற ஓரங்களில் சிதைவுற்ற நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆகமா மாயைக் கூடப் பிடித்துநின் றிறத்து மிக்க
மோகமாங் கம்பந் தள்ளி முறித்துமுன் னனைய கர்மம்
போகமாம் பரிக்கா ரோடப் பொருப்பரக் காணம் வீசும்
வேகமாம் மதஞா னத்தின் வேழமே போற்றி போற்றி. (1)

ஆ. முடிவு

மறைந்திட வைத்த பிள்ளையே வளர்ந்தால்
மனத்தினி லெனைநினைத் திருக்கும்
உறைந்திடு மிடமு மின்னதென் றறிக
உலகியல்பொன் றுந்தா னறியாது

அறைந்தன மிதனை யறியவல் லோர்க்கும்
அந்நிலை யேநிலை யன்றோ
சிறந்திடு மணலின் படுமிரதம் போலச்
செனனமற் றிடுமந்தச் செய்கை. (146)

(இதன் பிறகுள்ள 147ஆம் பாடலில் முதலிரண்டடிகள் மட்டுமே உள்ளன. பிற ஏடுகள் இல்லை.)

## 1787. பராபரக் கும்மி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1439–1

ஆ. ர/58

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .........

ஆ. பராபரக் கும்மி

இ. நாட்டுப் பாடல்

ஈ. செய்யுள் 100

### 3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 34 பக்கம்;

ஆ. நீளம் 22 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது;

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான எழுத்து;

ஊ. சுமாரான நிலை;

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலத் தெழுந்த பரஞ்சுடரே - ஆதி
மூவர்க்கு மெட்டாத முச்சுடரே

ஞாலத் தெழுந்த பதம்போற்றி - ஆதி
நாயகன்பொற் பாதந் துணையே. (1)

ஆ. முடிவு

தேனைநதி மதுபானங் கொண்டு - மகா
வானைப் பதியி லிருந்த சீசு
நானைஉன் குழந்தை சீசுவர்க்க - முத
லாயிநம்பு வோங்காரும் பரா பரமே. (100)
எந்தன் குருவுக்கு வாழி மிகவாழி
எப்போ தழிவில்லாப் பிரமமும் வாழி
அந்தமில் லாதஅருள் சுடர் வாழி
அய்யனருள் பெற்ற வல்லோர்கள் வாழி.

## 1788. பராபர உமையவள் கும்மி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1439-2
ஆ. ல/278

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............
ஆ. பராபர உமையவள் கும்மி
இ. நாட்டுப் பாடல்
ஈ. செய்யுள் 121

### 3. தோற்றக் கூறுகள்

அ. 16 ஏடு; 32 பக்கம்.
ஆ. நீளம் 22 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.
உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

முச்சுடர் மூலமுதற் பொருளா—மது
மூவருந் தேவருங் காண வொண்ணா
சச்சுச் சித்தானந்த மெய்வடி வாகிய
தந்திமுகத் தோன்பதந் துணையே (1)

ஆ. முடிவு

தேனைப் பதியிலருள் பொழியு மகா
தேனை நகரிலமுது உசுரும்
வானைப் பதியில் எளியஅருள்சுடர்
மாசற முற்றுமே வாழியதே; (121)

## 1789. தனிப்பாடல்கள்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1440

ஆ. ற/131

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. ............

ஆ. தனிப் பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

**3. தோற்றக் கூறுகள்**

அ. 28 ஏடு, 56 பக்கம்.

ஆ. நீளம் 41·5 செ. மீ.; அகலம் 3 செ. மீ,

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மலர்வாணி கருணா கடாட்ச சம்பூர்ண
நயவசனப் பிரசங்க துங்கம்
வளர்மாம் பழக்கவிச் சிங்கத் தமிழ்ச்சக்கர
வர்த்திஇனி தெழுது கடிதம்
பலவீமன் மழசையம் பதியதி பனுசிதகம்
பளகுல சிரேஷ்ட நிபுணன்
பரிசுத்தனாங் கருணைகிரி முத்த யேந்திரசெய
பாண்டிய னெதிர்ந்து காண்க.
...... ...... ...... ......

ஆ. முடிவு

மங்கள துங்க வலங்கிருத வின்ப
மழசை சங்கர்க் கதிகாரா
குரிவார் குலமால் முத்து மங்கய
முத்தைய வள்ள லுதவுங் குமாரா.
செங்களப புயவீமா கவிச் சிங்கந்
துதிக்கின்ற சோமா நேமா.

இ. முற்குறிப்பு

கடலூரில் சுவாமி கருணைகிரிப் பெருமாள் பேரிலும் மகாராஜமானிய ராஜ ராஜஸ்ரீ ஆதீன கர்த்தரவர்களாகிய துரையவர்கள் கருணைகிரி முத்தய நாயக்கரவர்கள் பேரிலும் பழனியூர் மாம்பழக் கவிராசர் பாடிய கவிகள் இதன் பின்னால் எழுதலாயிருக்கிறது.

# 1790. நீதி வெண்பா

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1441

ஆ. ஏ/66

## 2. உள்ளீடு நூல் விவரம்

அ. ............

ஆ. நீதி வெண்பா: மூலமும் உரையும்

இ. நீதி நூல்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 35 ஏடு; 70 பக்கம்.

ஆ. நீளம் 21 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6, 7 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூதுணர்ந்தோ ரோதுசில மூதுரையைப் பேதையேன்
நீதிவெண் பாவென்று நிகழ்த்தினேன்—ஆதிபரன்
வாமபாதத் தெம்மனி யூற்றாம் பூத்தமுதக்
கோமான் பெருங்கருணைக் கொண்டு.

ஆ. முடிவு

கைம்பெண்ணைத் தீண்டித் தழுவினால் அவனுக்கு ஆயிசு குறைந்துபோம். பிறருடைய ஸ்ரீகளை விரும்பித் தழுவின

வனுக்கு வெக்கமும் லட்சையுங் குலமுங் கெட்டுப் போய் நரகத்துக்கு ஏதுவாய்ப் போவானென்றவாறு. (105)

நீதிவெண்பா முற்றும்

முள்ளிப்பன் வாத்தியார் ராமலிங்கம் பிள்ளை நீதி வெண்பா எழுதி முகிந்தது. முற்றும்,

## 1791. திருவிளையாடற் புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1442

ஆ. ப/52

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. பரஞ்சோதி முனிவர்

ஆ. திருவிளையாடற் புராணம்

இ. தல புராணம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 110 ஏடு; 220 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக வரங்க ளின்ப

சு. வி. 23

நல்குக உயிர்கட் கெல்லா நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக உலக மெல்லாம் பிரவலன் செங்கோல் வாழ்க. (1)

ஆ. முடிவு

பூசனை புரியு மெல்லைப் பொன்னகர்க் கிறைமை பூண்ட
வாசவன் வருடந் தோறும் பூசித்து வருவா னன்ன
காசறு மனத்தான் பூசை கழிவுறு மளவுந் தாழ்ந்து
தேசமை சீர்ப்பார பூசை செய்துதன் னாடு புக்கான். (4)

(இது, வருணன் விட்ட கடலை வற்றச்செய்த திரு விளையாடற் படலம்)

(இதற்குமேல் ஏட்டில் இடமிருந்தும் எழுதப்பெறவில்லை.)

## 1792. கோயிற்புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1443

ஆ. ப/53

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. உமாபதி சிவாசாரியர்

ஆ. கோயிற் புராணம்

இ. தல புராணம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 24 ஏடு; 48 பக்கம்.

ஆ. நீளம் 16 செ. மீ.; அகலம் 5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 19 வரி.

உ. சிறிய, அழகிய கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூங்கமலத் தயனுமலர்ப் புண்டரிகக் கண்ணானுந்
தாங்குபல புவனமுமேற் சகலமுமா யகலாத
ஓங்குமொளி வெளியேநின் றுலகுதொழ நடமாடுந்
தேங்கமழும் பொழிற்றில்லைத் திருச்சிற்றம் பலம்போற்றி.
(1)

ஆ. முடிவு

மன்றாடிய திருநட.ராசன்துயர் மணிமாளிகை வெளிவளர்
வானிற்
குன்றாவிரல் மணிமுடிவான் வாணி குழுமானிடர்
திரளொடு கூடி
நின்றாவென் வதிநயமே.... .... ....
...... ...... ...... ......தாவிழ உயர்வுற்முர்: (35)

(இதன் பின்னுள்ள பாடலடிகள் சிதைந்துள்ளன.
தொடர்ந்து ஏடுகளும் காணப்படவில்லை.

## 1793. இராமநாடகக் கீர்த்தனை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1444

ஆ. ற/132

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அருணாசலக் கவிராயர்–சீகாழி

ஆ. இராம நாடகக் கீர்த்தனைகள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 300 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 253 ஏடு; 506 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. சற்றே கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை,

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அண்டர்தன் துயரந் தீர அயோத்திமா நகரில் வந்து
தண்டகா ரணியஞ் சென்று சமுத்திரம் அணையாய்க் கட்டிக்
கொண்டுரா வணனை மாட்டக் கோதண்டங் கையிலேந்தும்
புண்டரீ கக்கண் ராமன் பொன்னடிக் கமலம் போற்றி.

ஆ. முடிவு

தரு - கல்யாணி

இப்படி யவசகுணங் கண்டானே கண்ட ராவணன்
இடும்பா லெண்ணாமற் சென்றானே
கைப்படை யானதைச் .... .... ....

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1794. திருவிளையாடற் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1445

ஆ. ப/54

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. பெரும்பற்றப் புலியூர் நம்பி

ஆ. திருவிளையாடற் புராணம்

இ. தலபுராணம்

ஈ. செய்யுள்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 230 ஏடு; 460 பக்கம்

ஆ. நீளம் 40 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்லநிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொருப்பைப் பண்பொடுங் குனித்துக் கண்டவெம்
 புரத்தைப் பொன்றமுன் சிரித்துக் கண்டவன்
கரப்பொற் குன்றடும் திரத்துச் சிங்கமென்
 கருத்துட் டங்குமஞ் செழுத்துச் சம்புவண்
டரக்குக் கொண்பதஞ் சலிக்குத் தென்றலந்
 தழைப்பத் தொந்தமென் றிசைத்துச் சந்ததந்
திருத்தச் செம்பதம் புரிப்பித் தன்புறுந்
 திருச்சிற் றம்பலம் திருச்சிற் றம்பலம்.

ஆ. முடிவு

அம்பதுமற் றோன்சொல்லி யாண்டான் கவுணியர்கோன்
அம்பெரும் பற்றப் புலியூர் - நம்பி
வியந்தெம் பெருமான் விளையாட லறுபத்து நான்கினையும்
ஓதி முடித்தா னுவந்து. (6)

திருவிளையாடல் புராணம் முகிந்தது, முற்றும்.
(பாடலடிகளில் சீர் ஒழுங்கு இல்லை)

இ. பிற்குறிப்பு

கெத்திரவால பிள்ளை மருமகன் சிவனுபிள்ளை குமாரன் முந்தரசு பிள்ளை எழுதின ஏடு முற்றும்.

அட்சய வருஷம் பங்குனி மாதம் சிவன் சாத்திரைக்குத் திருவிளையாடல் முற்றும். அருணாசலம் அண்ணாமலை.

## 5. பிற செய்திகள்

பின்னால், இரண்டு ஏடுகளில், 'திருவிளையாடற் புராண அட்டவணை' எழுதப்பட்டுள்ளது.

# 1795. திருவாசகம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1446

ஆ. ண/50

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மாணிக்கவாசகர்

ஆ. திருவாசகம்

இ. சைவத்திருமுறை

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 73 ஏடு; 146 பக்கம்.

ஆ. நீளம் 14 செ. மீ.; அகலம் 5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 15,16 வரி.

உ. சிறிய, அழகிய கையெழுத்து.

ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை. முதல் 30 ஏடுகளும் 104ஆம் ஏட்டின் பின்னுள்ள ஏடுகளும் இல்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

களிவந்த சிந்தையொ டுன்கழல் கண்டுங் காந்தருள
வெளிவந்...........விடுதிகண் டாய்மெய்ச் சுடருக் கெல்லாம்
ஒளிவந்த பூங்கழ.........தர கோசமங்கைக் கரசே
எளிவந்த வெந்தை பிரானென்னை......ளுடை
யென்னப்பனே. (15)

(இது நீத்தல் விண்ணப்பம்–15ஆம் பாடல்)

ஆ. முடிவு

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்து
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.
ஆக 654.

## 1796. ரோமரிஷி சூத்திரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1447

ஆ. ல/288

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ரோமரிஷி

ஆ. ரோமரிஷி சூத்திரம் 50

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 38 பக்கம்.

ஆ. நீளம் 15·5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு10 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வாரணமா முகத்தோனும் வல்லபையுங் காப்பு
வாக்கிலிருந்து ஓதுகின்ற வாணி காப்பு
பூரணமாய் நிறைந்தகுரு நாதன் காப்பு
புகழ்பெரிய சித்தருட பாதங் காப்பு

தாரணிக்குள் குருநூலா மம்ப துக்குள்
சகலசித்தும் கைவசமாய்த் தானே சிக்கும்
காரணமாய் சொல்லிவிட்டேன் வழலை யாதி
கருத்தறிந்தால் ரசவாதம் கைக்கு ளாச்சே. (1)

ஆ. முடிவு

பாரய்யா முடியைவிட்டு அடியைத் தொட்டப்
பாதகரே நீங்களென்ன வாதம் பார்த்தீர்
ஊரய்யா சுடுகாடு சுத்த பொட்டல்
உள்ளிருக்கும் அடிமுடியை யுற்றுப் பாரு
காரய்யா அடிமுடிக்கு மூல விந்துக்
கண்டீரோ கடல்நீரின் கருவைத் தானும்
ஆரய்யா காண்பதுவும் யோகி காண்பான்
அப்பனே குருநூலன் பதுதான் முற்றும். (51)

ரோமரிஷி நாயன் குருநூல் முற்றும்.

## 1797. தண்டலையார் சதகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1448
ஆ. ய/102

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. படிக்காசுப் புலவர்
ஆ. தண்டலையார் சதகம்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 38 ஏடு; 76 பக்கம்.
ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை. முதல் ஏடும், 6, 7, 11, 33, 34 ஆகிய எண்ணுள்ள ஏடுகளும் 35 ஆம் எட்டிற்குப் பின்னுள்ள ஏடுகளும் இல்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வள்ளுவர் நூ லாதிபல நூலிருக்க
வதன்பொருளின் வண்மை யெல்லாம்
உள்ளபடி தெரிந்தமைந்தற் பெரியவர்க் காண
முன்னிவனு மொருவன் போலப்
பள்ளமுது நீருலகில் வழங்கும்
பழமொழி வழக்கம்பரிந்து கூட்டி
வெள்ளமதி யினன்கொல்லத் தெருவுதனி
லூரசிவித்த வினையந் தானே. (3)

ஆ. முடிவு

நிலைசேரு மதிகவித ரணசுமுக
துரைகளுட னேச மாகிப்
பலநாளு மேயவரை யடுத்தவர்க்குப்
பயமல் லாற்பய முண்டோ
தலைசேருந் திங்களணி தண்டலையா
ரேசொன்னேன் கண்ணிற் காண
மலைமீதி லிருப்பவரே வந்துபுலி
பாயாத வண்ணந் தானே. (96)

# 1798. திருவகுப்பு

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1449

ஆ. ய/103

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. அருணகிரிநாதர்

ஆ. திருவகுப்பு

உ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

**3. தோற்றக் கூறுகள்**

அ. 57 ஏடு; 114 பக்கம்.

ஆ. நீளம் 26 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. குறை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

அலைகட ...... வெழுபுவி புரந்திருக்க
அரசென நிரந்தரிக்க வாழலாம்;
அளகையரசன் ........... றனக்கும்
அரசென வறஞ்செலுத்தி வாழலாம்;
(இது கடைக்கணியல் வகுப்பின் தொடக்கம்)

ஆ. முடிவு

தொடர் எண் : 65 காண்க.

## 1799. அப்பையநாயகர் வளமாடல்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1450

ஆ. ய/104

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. அப்பையநாயகர் வளமடல்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 37 ஏடு; 74 பக்கம்;

ஆ. நீளம் 19 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

......போர்வேள்துறந்தரிகஞ் செல்க
......காமவேள் நாமமே சொல்க
......மானாக லோக மதவேள் கால
......செந்தேனை வீழ்ந்தருந்தி வாழ்க...
... ... ...

ஆ. முடிவு

உருகு களிப்பாலே உடல்பிளந்த புண்வாய்
திருகு களிப்பாலே பொற்சிந்த வடியப்
பெருமிதஞ்சேர் நாரசிங்கன் பிரியமுறு கோதைத்
தெருவுதொறு மன்றுதொறுஞ் சென்று மயல்செயத்
வரிவளையா லூர்வேன் மடல்.

அப்பைய நாயக்கரவர்கள் பேரில் வளமடல் முற்றும்.

## 1800. பெரிய புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1451

ஆ. ண/51

### 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. சேக்கிழார்

ஆ. பெரியபுராணம்

இ. சைவத்திருமுறை

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 310 ஏடு; 620 பக்கம்.

ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.

ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை. சிதைந்த ஏடுகளே மிகுதி

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். (1)

### 5. பிற செய்திகள்

ஏடுகளின் ஓரங்கள் சிதைந்துள்ளதால் பல ஏடுகள் இடம் மாறியும் அமைந்துள்ளன.

சுமார் 1182 பாடல்கள் வரை உள்ளதாக அறிய முடிகிறது.

## 1801. இலக்கண சூடாமணி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1452*

ஆ. *ச/38*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .........

ஆ. இலக்கண சூடாமணி

இ. இலக்கணம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 111 ஏடு; 222 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. ஏடுகள் மிகவும் சிதலமாயுள்ளன

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

.........வியுஞ் சீருந் தளைக்கவுங்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய்..............................
பெருகுமாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

ஆ. முடிவு

ஊர்க்கு முயர்ச்சியொப் பாயிருப் பாருல காளுமன்னர்
ஆர்க்கும் வரிசை பெறமிகுப் பாரடைந்த தோரை யென்றுங்

கார்க்கு மதுலன் கவிவால பாரதி கட்டுரையாற்
பார்க்கு மிலக்கண சூடா மணியைப் படித்தவரே?

இ. பிற்குறிப்பு

துந்துபி வருஷம் தை மாதம் 19 ஆம் தேதி சுக்கிர வார நாள் அனுஷட்டமி அஞ்சரை நாழிகைக்கு ரேவதி நஷத்திரம் சுகர்ம நாம யோகம் 14க்கு வச்சிரநாம யோகம் மூணேகால், இலக்கண சூடாமணி முற்றும்.

5. ..................

6. ..................

7. வெளியீட்டுச் செய்திகள்

அச்சில் வந்துள்ளதாக அறியக்கூடவில்லை.

## 1802. அல்லி அரசாணி மாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1453
ஆ. ர/59

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............
ஆ. அல்லி அரசாணி மாலை
இ. நாட்டுப்பாடல்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 93 ஏடு; 186 பக்கம்.
ஆ. நீளம் 38 செ.மீ.; அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அத்தி முகத்தோனே யானைமுக வேதியனே
புத்தியுண் டாகப் போதப் பரிமளிக்கும்
எள்ளுருண்டைச் சக்கரையு மினியப்பந் தன்னுடனே
வள்ளி கிழங்குடனே வாழைக்கனி முப்பழமும்
.... .... .... ....

ஆ. முடிவு

எங்கள் பெருமாள் இளவரசு அல்லியுடன்
வாளச் சமத்தும் விலச்ச மத்தும் வலிமையுடன் நின்றவர்க்கு
வளர்பாண்டி நாட்டுடையாள் மாலையிட வாராளென்று
...... ...... ...... ......

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

# 1803. ஆசாரக் கோவை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1454

ஆ. ங/24

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பெருவாயின் முள்ளியார்

ஆ. ஆசாரக் கோவை—மூலமும் உரையும்

இ. பதினெண்கீழ்க் கணக்கு

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.

ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. சிறிய, அழகிய கையெழுத்து.

ஊ. ஏடுகளின் வலதுபுற முழுவதும் முறிந்த நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1271 காண்க.

இ. பிற்குறிப்பு

திருப்புகழ் வரப் பிரசாதம் பெற்ற செவ்வந்தி ஞான வரோதயக் குருக்களுடைய பேரன் பழநியாண்டிக் குருக்கள்......

# 1804. ஆசிரிய நிகண்டு

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1455

ஆ. ச/39

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஆண்டிப்புலவர்

ஆ. ஆசிரிய நிகண்டு

இ. இலக்கணம்

ஈ. செய்யுள்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 104 ஏடு; 208 பக்கம்.

ஆ. நீளம் 23·5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. ஏடுகளின் ஓரங்களில் மிகு சிதைவு.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கன்னியுமை பாலனைத்தெய் வானை வள்ளிபங்
        காளனைச் சேவற்கொடிக்
    கந்தனைத் தென்பழனி முருகனைச் சிந்தையிற்
        கருதியன் பொடுபணிந்தே
முன்னுளதி வாகரம் பிங்கல நிகண்டுசீர்
        முந்துகாங் கையனுரிச்சொல்
    முறைபெரு தயாகரம் பகருமக ராதியிவை
        முற்றுமொன் றாய்த்திரட்டி
இந்நிலந்த னிலுளோ ரெவரு மறியும்படிக்
        கெண்ணியாச ரியத்தினால்
    இயம்பின நிகண்டுட னுரையறி நன்னூல்என்
        றிரண்டுமே செய்துவைத்தேன்
மன்னுசெஞ்சிச் சீர்மைசூழ் தொண்டைவள நாட்டில்
        வாய்த்தஊத் தங்காலெனும்
    மாநகர்க்க திபனுயர் பாவாடை வாத்தியார்
        மைந்தன் ஆண்டிப் புலவனே. (1)

ஆ. முடிவு

வரியெழுத் தைம்புலனி லாஞ்சினம் மரக்கலம்
        அலாதெருவை செல்வமேதிறம்
    மன்னுபெயர் போதினா ரைமூல நாள்வெள்ளை
        யுளைவாழற் கோழிகொல்லனுலைமுக்
கரியமா தவியிளமை வாகுகை வளைபத்தும்
        ஆனபெயர் குருகென்பதா
    டாண்மைநெஞ் சொடுசோர லெழுச்சிசெய் யிழுக்குமற்
        றவைபொதுப் பெயருனாற்று

இரதவெண் டுகில்மை காவிக்கல் மண்பொன்னி
னேழுலோக மாதிலாதா
தெழுமிரதங்கனனூ தேமாப் பொன்தேமான
மிவைநான்கு சேதாரமே
சிறுமைபுள்ளிக் கிறைவனொடு தொங்கல்
சென்னிவீட்டிற்பு டனிருப்புகடன்
செங்கைவரை யிவையொன்பதும் இரையெனப் புலவர்
செப்புமிப் பெயராகுமே. (4)

இ. பிற்குறிப்பு

பிரமாதூத வருஷம் ஆடி மாதம் 16 ஆம் தேதி புதன் கிழமையும் தசமியும் கூடின சுபயோக தினத்தில் ஆசிரிய நிகண்டு எழுதி முகிந்தது. முற்றும்.

## 1805. கொன்றைவேந்தன்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1456-1

ஆ. ள/67

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. கொன்றை வேந்தன்

இ. நீதி நூல்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை.

ஏ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1110 காண்க.

## 1806. ஆத்தி சூடி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1456-2
ஆ. ள/67

2. உள்ளீடு; நூல் விவரம்

அ. ஔவையார்
ஆ. ஆத்தி சூடி
இ. நீதிநூல்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 5 பக்கம்.
ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1118 காண்க.

## 1807. பள்ளிப்பிள்ளையார் சிந்து

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1456-3

ஆ. ள/67

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. பள்ளிப் பிள்ளையார் சிந்தனை (சிந்து?)

இ. நீதி நூல்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சிந்தித் தொழுவது கணபதி செய செய
சீரிய வானைக்!கன்றே செய செய
அன்புடன் மார்க்க நாதா செய செய
ஆபத் துணையே கணபதி செய செய
...... ...... ......

ஆ. முடிவு

........பெற்றதே கறியும்
உண்டு உறங்கி வெள்ளியுதித்து
பள்ளிக் கூடத்துக்கு வாரும்.

பள்ளிப் பிள்ளையார் சிந்து முற்றும்.

## 1808. கோரக்கர் அட்டகர்மம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1457–1

ஆ. ல/289

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கோரக்கர்

ஆ. கோரக்கர் அட்டகர்மம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 35 செ.மீ.; அகலம் 3·5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. இடதுபுற ஓரங்கள் சிதைவு.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

''.... பாடின்நூல் அகத்தீசர் பார்த்து அதிசயமென்றே
யெடுத்துக் கண்ணிலேதான் வைத்து
நானுமினிப் பாடுகிறே னட்ட........
நன்றாகப் பாடினார் ஆயிரத்தெழுநூறு
வேணுமென்று சித்தரெல்லாம் வெகுகோடி மந்திரம
வெகுவிதமாய்ப் பா .......நானூற்றஞ்சு
வானஅட்ட கர்மமந்திரம் வகைவிபர மாக
வாருமந்திரஞ் சித்திக்கும் வகையாய்ப் பெரியோர்க்கே,

ஆ. முடிவு

கேழுகணரே ... தான் முழியைத் தோண்டி யெடுத்து
    கிருபையுள்ள யெண்ணெய்ச்சட்டி தன்னிலேதா னிட்டு
வாழுமேரண்ட ... சற்றேவிட்டுக் கடைந்து
    வருகுநேரம் அடுப்பிலேற்றி வற்றக்கிண்டி மையைச்
சிமிழிலடைத்து வைத்து ...... கிடக்கும்பையை
    முன்னே புதைத்து வைத்த ...... காண்பார்.

(பாடலடிகள் சிதைந்துள்ளன.)

## 1809. கர்மவநுபோக சூத்திரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1457–2
ஆ. ல/289

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............
ஆ. கர்மவநுபோக சூத்திரம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 50 ஏடு; 100 பக்கம்.
ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ. சுமாரான கையெழுத்து.
ஊ. ஏட்டின் இடதுபுறம் முழுவதும் சிதைவு.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் முதலா தாரம்.........
புரிவட்டந் திசைவாயு நாடி மூன்று
காரணமா யிடைபின்னாய்ச் சுழினை யாகி
கலந்துநின்ற வாதபித்தஞ் சேற்பன மாகி
மாரணமாய்ச் சடத்தினுள்ளே தத்துவங்கள்
மனம்புத்தி ஆங்காரஞ் சித்தத் தாலே
வாரணமாய் நடத்திவித்த கர்மத் தாலே
வந்ததடா நோய்களெல்லாம் மானுடர்க் காமே. *(1)*

ஆ. முடிவு

வரிசையாய்ச் சொல்லுகிறேன் கணைக ளேது
மாந்தமொடு சுழிதுரப்பு வலிக ளேது
பரிசமாங் கனப்பனொடு பரங்கி யேது
பட்சியொடு பறக்கின தோஷ மேது
தரிசனமாங் கண்களிலே வருவ தேது
தீர்க்கமடா சிறுவதேகுத் தேவா மிர்தம்
கரிசனமா மிந்நூலின் கர்ம தர்மம்
காட்டான மருந்துவகைக் கணக்கு முற்றே. *(302)*

# 1810. அகத்தியர் சாலநிகண்டு

## 1. நூலகக் குறிப்புகள்

அ. *1457-3*

ஆ. *ல/289*

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் சால நிகண்டு

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. சற்றே கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உன்னிய பொதிகை வாழும் உயர்முனி பொருளைப் போற்றி
இன்னிலா நிகண்டு பாட இந்திர சால நூலில்
பன்னிய பாசை தோணப் பண்டித வேத னாவு
கன்னியும் ...... மீசன் கந்தனுங் காப்புத் தானே. (1)

ஆ. முடிவு

பாரினி லிந்த முறைப்படிப் பார்த்து
தேறுநீ பாவஞ் செய்யவும் வேண்டாம்
ஆறிநீ பாரு அறுபத்தி நாலும்
நேரிரு நூறு கண்டது முற்றே. (203)

# 1811. கயிலாசச் சட்டைமுனி நிகண்டு

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1458

ஆ. ல/290

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சட்டை முனி

ஆ. கயிலாசச் சட்டை முனி நிகண்டு

இ. மருத்துவம்
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 45 ஏடு; 90 பக்கம்.
ஆ. நீளம் 21 செ.மீ.; அகலம் 3·5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மிகவும் சிதைவுற்ற நிலை.
எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்த மில்லாத பூரணத்தை நோக்கி
அடுத்துநின்ற உன்மனைத்தாய் பதத்தைப் போற்றிப்
பாதியந்த மாகிநின்ற உமையாள் சொல்ல
பாங்கான சின்மயத்தின் கருணை யாலே
ஓதியிந்த வாதமென்ற நூல்கட் கெல்லாம்
மோசறவைத்த நாகமணிக் கிரீடம் போல
சாதியந்தக் குணத்தொடு நிகண்டு சொல்லச்
சச்சுதா னந்தவெளி காப்புத் தானே. (1)

ஆ. முடிவு

எடுனீய புளுகு யிசையவுங் காலிடை
......னீய படுகிப் புகழாகக் காலிடை
கொடுனீய குருவண்டு கூட்டி திலனம்
...... ...... ...... ......

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

# 1812. அகத்தியர் ஞானம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1459
ஆ. ட/225

## 2. உள்ளீடு நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் ஞானம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 31 ஏடு; 62 பக்கம்.

ஆ. நீளம் 23 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகச் சிதைவு. 15 ஆம் ஏட்டின் பின்னுள்ள ஏடுகளின் இடதுபுறம் சிதைந்தும் முறிந்துமுள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் மும்மூர்த்தி வந்தவாறும்
    பூமியென்றுந் திகிரியென்றும் படைத்த வாறுங்
காரணமாய் தேவியெங்கும் நிறைந்த வாறுங்
    கற்பமுண்ட ரிஷிகள்சா காத வாறும்
வாரணமாய்ப் பாவையொடு நாற்கால் சென்ம
    மானிடர்க ளுருகின்ற குலத்தின் வாறும்
பாரதமாய் விருட்சமாய்ப் புல்ல தாகி
    பாதாள சாகரமும் படைத்த வாறே. (1)

ஆ. முடிவு

.........வெளிசேரு மீறுந் தண்ணீர்
    விதமான அன்புடனே போகும் போகும்
.........தேயுவது சேர்ந்து போகும்
    உத்தமனே மண்ணுடனே மண்ணுஞ் சேரும்

ஆ. முடிவு

.........வாயுவிலே வாயு சேரும்
அஞ்சுமொன்றாய்க் கூடினா லாறமாவர்
.........யோடே இவ்வண்ண மறிந்து கொண்டு
மானிடரே காயசித்தி .........முற்றே. (101)

அகத்தீசர் ஞானம் நூறு முற்றும்.

## 1813. தட்சிணாமூர்த்தி வைத்தியம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1460

ஆ. ல/291

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. தட்சிணாமூர்த்தி
ஆ. தட்சிணா மூர்த்தி வைத்தியம் 1200
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 62 ஏடு; 124 பக்கம்.
ஆ. நீளம் 18 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.
உ. சிறிய கையெழுத்து.
ஊ. சற்றே சிதைந்த நிலை.
எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆயிரத்திரு நூறு முன்னூ லாய்ந்து அமுர்தகாண்ட சூத்திரம்
புாயிரத் தொகுதி யொன்று பாடிய வயித்திய பாகம்

ஓயிரக் கவிமுந் நூறு மைகா னுரைக்க யீன்ற
தாயெனக் குரைக்க யானுஞ் சாற்றிய விதிநூல் தானே. (1)

ஆ. முடிவு

நோயளி...... ...... ......யுண்டு
நொறுக்குமடா சூலைபதி னெட்டுத் தானே
பாயகளி....யொடு படுத்தி டாதே
பண்டிதனே பொல்லாப்பு பகர்ந்தி டாதே
வாயக.... பொய்கள் சொல்லி மறந்தி டாதே
வாங்குமடா சூலைகுட்டம் கரப்ப னெல்லாம்
...... ......யிறய்குநின்ற தாயி தப்பாதற்
கார்க்குங் காத்தவிசை தகைசெய்யா.... (277)

## 1814. அழுகணிச்சித்தர் சூத்திரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1461-1

ஆ. ல/292

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அழுகணிச் சித்தர்

ஆ. அழுகணிச் சித்தர் சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 28

### 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்.

ஆ. நீளம் 17 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. சுமாரான எழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலம் நடுவிரா யாத்தாளே
முப்மண்டலத் தமர்ந்த நீலகண்ட
வஸ்த்துவைத் தானாத் தாளே
நிர்மலனைப் போற்றுவனே. (1)

ஆ. முடிவு

கருவையொளி மலர்த்தாளே
காசினியில் நல்லோர்க்குக்
குருவைநாம் கண்பித்தோ மாத்தாளே
தவிராது வாத வித்தை. (28)

## 1815. சட்டைமுனி அட்டகருமம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1461–2
ஆ. ல/292

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சட்டைமுனி
ஆ. சட்டைமுனி அட்ட கருமம்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 19

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 17 பக்கம்.
ஆ. நீளம் 17 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை,

ஏ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

### அ. தொடக்கம்

அந்தரமாஞ் சுழினையல்லோ நந்தி வரம்கை
ஆகாகா வானந்த ரூபங் காணுஞ்
சுந்தரமா மட்டகர்மஞ் சித்தி யாகுஞ்
தொழிலான மாந்திரிகஞ் சித்தி யாகுஞ்
சிந்தையுமோ பராபரத்திற் சித்தி யாகுந்
தேவியுட தீட்சதீட்சை சித்தி யாகும்
வந்ததொறு வனிமாவுங் கரிமா வோடு
வளவான லகுமாவு மகிமா வோடே. (1)

### ஆ. முடிவு

திறந்திட்டேன் உலகுக்கு மிப்படியே செப்பு
செத்தபிண மானாலுந் திரும்பிப் பேசா
மறந்திட்டேன் என்றெண்ணாதே மக்கள் வேண்டில்
விளங்கவே யட்டகர்மங் கைமுறையாய்ச் சொல்லு
பிறந்திட்டார் பிள்ளைக்கே யுங்களுக்குப் புத்தி
பேசுறேன்முப் பத்திரெண்டு நூப்பு தோன்
கறந்திட்ட படியாகச் சென்மித் தாக்கால்
காலனுக்கு உயிர்கொடுக்கக் காட்டொண் ணாதே. (19)

# 1816. போகர் 8

## 1 நூலகக் குறிப்புகள்

அ. 1462-1

ஆ. ஸ/293

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. போகர்

ஆ. போகர் 8

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 8

## 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.

ஆ. நீளம் 21 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஒன்றான வேதாந்த சூத்தி ரந்தான்
ஓதுகிறேன் ஆதியுமை பாதம் போற்றி
பன்றான வைப்புமுதல் வதம ஞானம்
பாங்கான பிராணாயங் குளிகை சித்தி
நன்றான கருவித்தை யாகச் சொல்லி
நாட்டிறேன் தூலத்தோர்க்குங் கன்னியோர்க்குங்
கன்றான ஆறுதலம் அட்ச ரந்தான்
கைமுறையாய்ச் சொல்லிவிட்டேன் காணு வீரே. (1)

ஆ. முடிவு

ஆச்சப்பா பெண்தனக்கு உபதே சித்து
அப்பனே அமுரியது வாங்கிக் கொள்ளு
பாச்சப்பா கற்பத்துக் கிதுவே யாச்சு
பாடியபே ரிக்கருவை மறைத்தா ரப்பா
ஓச்சப்பா யிந்தவுப்பு குகையி னுள்ளே
உத்தமனே துருசுமது சுண்ண மாச்சு
மூச்சப்பா கருவையெல்லாம் வெளியாய்ப் பாடி
முடித்துவிட்டேன் எட்டினுள்ளே மூட்டி விட்டேன். (8)

## 1817. இராமதேவர் சூத்திரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1462-2

ஆ. ல/293

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. இராமதேவர்

ஆ. இராமதேவர் சூத்திரம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 10

### 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 21 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை,

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காண்ணப்பா ஏரியிலே வளர்ந்த பிண்டம்
    கடிதான் மாங்கிசத்தோ டெடுத்து வந்து
பூணப்பா பொற்காரம் பொடித்துக் கொண்டு
    பிண்டத்தின் வாய்பிளந்து அதனுட் போடு
ஆணப்பா பெண்ணோடே கூடினாப் போல
    அப்பனே நாதமங்கே யிறங்கும் பாரு
தோணப்பா லோகந்தான் கூட்டி லொன்றில்
    சுகமான யிணங்கனையு மதனுள் போட்டே,

ஆ: முடிவு

ஆடலா மிதனாலே கோடா கோடி
அளவற்ற வித்தையெல்லா மிதற்குள் ளாச்சு
ஆடலா மிதனாலே குளிகை செய்து
ஆகாச மலைகளெல்லா மேறிப் பார்க்க
நாடெல்லாந் திரிந்தாலு மிந்தப் போக்கு
நல்லமுறை யிதுபோலே எங்குமில்லை
பாடல்போற் சொன்னேனென்று எண்ண வேண்டாம்
பத்துமோ சாத்திரத்தின் பால முற்றே. *(10)*

## 1818. ரோமரிஷி வைத்தியம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: *1462-3*

ஆ. ல/*293*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ரோமரிஷி

ஆ: ரோமரிஷி வைத்தியம் *25*

இ: மருத்துவம்

ஈ. செய்யுள் *26*

### 3. தோற்றக் கூறுகள்

அ: *5* ஏடு; *9* பக்கம்:

ஆ: நீளம் *21* செ. மீ.; அகலம் *3* செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ: ஒரு பக்கத்திற்கு *11* வரி.

உ: சிறிய கையெழுத்து.

உ: நல்ல நிலை;
எ: முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

மயமான சூத்திரத்தி லுப்பு மார்க்கம்
வாதத்துக் காதியாவி ரித்துச் சொல்வேன்
சியமான குருநந்தி உபதே சித்தார்
சிவனொடுமை பார்பதியும் திருவாணி தானும்
நயமாக எப்போதும் முன்னே நின்று
நாட்டியே சூத்திரத்தை நயந்து காக்க
வயமாகச் சொல்லுகிறோ மிருபத் தஞ்சில்
வாதிகளே யிந்நூலை வணங்கிக் கேளே. (1)

ஆ: முடிவு

அஞ்சான நந்தீசர் எந்த னுக்கு
அருளான என்மகனே ரோமரிஷி யென்று
கஞ்சமலர்த் திருப்புயனே தருபா னந்தான்
கடாட்சித்தார் எந்தனுக்கு நானுஞ் சொன்னேன்
வஞ்சகமாய்த் திரியாதே குருனல் பூட்டி
பானமென்ற பொரிவந்து நீறிப் போவாய்
தஞ்சமென வந்தடைந்து சரணம் போற்றி
தயவுசெய்வாய் சூத்திரந்தான் முடிவு முற்றே. (26)

ரோமரிஷி சூத்திரம் இருபத்தஞ்சு முற்றும்.

# 1819. கும்பமுனி 10

## 1. நூலகக் குறிப்புகள்

அ: 1462-4
ஆ: ல/293

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: கும்பமுனியார்
ஆ: கும்பமுனி 10

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 10

## 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.

ஆ. நீளம் 21 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரி.

உ. சிறிய கையெழுத்து,

ஊ. நல்ல நிலை,

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாரப்பா வாதியென்றால் பூசை வேணும்
பரிவான சிவம்வேணும் தியானம் வேணும்
நேரப்பா வாசியென்ற யோகம் வேணும்
நேராகச் சோடசத்தை நிறுத்த வேணும்
காரப்பா குருபதத்தைக் காக்க வேணும்
கைகாட்டித் தொழில்முறைகள் அறிய வேணும்
பாரப்பா சாத்திரமுஞ் சூத்தி ரமும்சார்
வாகப்பார்த் திருந்து வாதம் பாரே. (1)

ஆ. முடிவு

போமடா கரியோட்டி லூதும் போது
போக்காகக் கனலிட்டு மாடு மாடு
மாமடா கல்லுப்பைக் கூட்டி யூத
நல்லதொரு வயிரமணி போலே யாகும்
நாமடா ஆணவத்தால் வெளியிற் போட்டேன்
நாட்டாதே கள்ளரென்ற மானி டர்க்கு
தாமடா இதுவெல்லா மறிந்து திரண்டு
தாரணியில் விள்ளாதே யடக்க முற்றே. (10)

கும்பமுனியார் அருளிச் செய்த வாக்கியம் பத்தும் முற்றும்.

# 1820. அகத்தியர் சூத்திரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. *1462-5*

ஆ. *ல/293*

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் சூத்திரம் 16

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 16

## 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 21 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. சிறிய கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியென்ற மூலகண பதியின் பாதம்
    ஆடியதோர் சூத்திரந்தான் பதினா றப்பா
தேடியே அண்டபிண்ட மெல்லாஞ் சேர்த்து
    சீராகப் பாடியதோர் எந்நூ லப்பா
பாடினேன் பூரணசூத் திரத்துக் காகப்
    பதிலாகப் பாடிவிட்டேன் சூத்திர நூலை
நாடியென் நந்தீசர் சொன்ன வாக்கியம்
    நன்றான மூலகண பதியே காப்பு. (1)

ஆ. முடிவு

காணேதா னூற்றாலே மெய்ய தாகும்
    கருவதுதா னன்பதிலே மெய்ய தாகும்
பூணேதா னிந்தநூல் துறைகாண் பிக்கும்
    பூட்டினதோர் பூட்டெல்லாம் நான்கிலே காணே
தோணவே கருக்குருவும் வளிதுறையும்
    சுகமாகும் வேதைவளி யோடே யேறும்
பூணவே பதினாறு இதுவே யாகும்
    பலமாகு மகத்தீசர் வைத்திய முற்றே. (16)

## 1821. வழலை முறை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1462–6
ஆ. ல/263

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............
ஆ. வழலை முறை
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.
ஆ. நீளம் 21 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரி.
உ. சிறிய கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

**4. சிறப்புச் செய்திகள்**

அ: தொடக்கம்

பாடுகிறேன் வழலைமுறை நன்றாய்க் கேளு
பரமான அண்டமென்ற கல்லை வாங்கி
நாடுகிறேன் கல்லுரலி லிட்டுக் கொண்டு
நலமான இருப்புலக்கை தன்னாற் குத்தி
வாடுகிற வகையென்ன மாப்போலக் குத்தி
வரிசையுடன் மாவாக்கி அதன்மே லப்பா
கூடுகிற சுத்தசலந் தன்னிற் போட்டு
கூர்மையுடன் கரைத்திருநீ மறுநாள் தானே; (13)

ஆ: முடிவு

சுண்ணமென்றால் இதன்பெருமை சொல்லக் கேளு
சுருக்கான கடுங்காரச் சுண்ண மாகும்
விண்ணான ஆதியுப்புச் சுண்ண மென்றும்
விருதுபெற்ற வழலையுட சுண்ண மென்றும்
கண்ணான மதிரயிரவி சுண்ண மென்றும்
கருவான முப்பூவின் சுண்ண மென்றும்
வண்ணான்தன் மார்க்கமுள்ள சுண்ண மென்றும்
வரிசையுடன் உரிசையுள்ள சுண்ண மாச்சே; (22)

## 1822. ஆரூட நூல்

**1. நூலகக் குறிப்புகள்**

அ: *1463*
ஆ: வ/*60*

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ: …………
ஆ: ஆரூட நூல்
இ: சோதிடம்
ஈ: உரைநடை
**அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்;**

### 3. தோற்றக் கூறுகள்

அ. 60 ஏடு; 120 பக்கம்.

ஆ. நீளம் 15 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. வெவ்வேறு கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விநாயகனை எழுந்தருள......ண்ணிது நன்று
காணியாட்சி கொள்ள ......
இந்தஊரில் குடியிருக்க நன்று
அடிமை கொள்ள நன்று
கடன் கொடுக்க நன்று

ஆ. முடிவு

இந்தப் பெண்ணை இவனுக்கு கொடுக்க நன்று.
ஏரிகட்ட உடையாம லிருக்கும்.
வெள்ளாட்டி கொள்ள இவனுக்குப் பாபமில்லை.
இந்த வியாதி தெய்வ சகாயத்தினால் வரும்.

## 1823. அறுபது வருட பலன்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1464

ஆ. வ/61

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. அறுபது வருட பலன்

இ. சோதிடம்

ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 50 ஏடு; 100 பக்கம்.

ஆ. நீளம் 19 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

......வருஷ பலன் அறியும் படி : சித்திரை மாதம் 16ஆம் தேதி......மழையுண்டு. பசுவுக்கு அனல் அவியாமல் ......வையாசி, ஆனி, ஆடி 16 தேதிக்கு மேல் ............ சோளம் தட்டாமல் விளையும். வெள்ளா.........அகவிலை கம்பு........

ஆ. முடிவு

கார்த்திகை மாதம் காயும், அட்டுக்கு சேதமுண்டும். அகவிலை.....நெல் ஆரியம் தங்கம் புத......ஆட்டுக்கு மாட்டுக்கு வெட்டையுண்டு, பனம்பூ அகவிலை குறையும்.

# 1824. மகாமந்திர விநோத சாத்திரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1465

ஆ. ல/294

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. மகாமந்திர விநோத சாத்திரம்

இ. மருத்துவம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 30 ஏடு; 60 பக்கம்.

ஆ. நீளம் 29 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. மிகு சிதைவு. ஏடுகளின் ஓரங்கள் முறிந்துள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முன்னொரு காலத்திலே பார்பதி தேவியானவள் ஒரு காரணத்தி ராத்தி ......... பார்த்து கேட்கிறாள், சுவாமி அடியாளுக்கு விநோதமா யிருக்கிற சாத்திர ....யடியாளுக்குத் தெரியும் படிக்குத் திருவுளம் பற்ற வேணும் என்று கேட்க ......... பரமேசுவரன் மனமகிழ்ந்து திருவுளம் பற்றுகிறார். அதை தேவி ..........

ஆ. முடிவு

இந்தமருந்து சமூலத்துடனே பிடுங்கிவந்து நிழலுலர்த்திப் பொடி பண்ணி மாடப்புறா எச்சமுங் கூட்டிப் பால்வார்த் தரைத்து உண்டை பண்ணவும், தேவாங்குத் தலையை......

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

இ. பிற்குறிப்பு

விநோத சாத்திரம் எழுதி நிறைவேறினது. முற்றும். இது எழுதியது ராமலிங்கம், இலக்கண இலக்கியக் கடல் முழுவதுங் கரைத்துக் குடித்தேப்ப மிடு ராமலிங்கம் பண்டா............ எழுதி நிறைவேறினது. முற்றும்.

## 1825. அருணாசல புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1466

ஆ. ப/55

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. எல்லப்ப நாவலர்

ஆ. அருணாசல புராணம்: மூலமும் உரையும்

இ. தல புராணம்

ஈ. செய்யுளும் உரை நடையும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 203 ஏடு; 406 பக்கம்.

ஆ. நீளம் 42 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6, 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1428 காண்க.

ஆ. முடிவு

ஆவடி யாகிய ஒரு பசுவினுட குளம்படியளவு பூமி தானம் அந்தணர்களுக்குத் தானங்கொடுத்த பேர்கள் ஈசுபரனுட பாதார விந்தத்தின் கீழ்நிழ...... (32)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1826. இராமநாடகக் கீர்த்தனை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1467*

ஆ. *ற/133*

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அருணாசலக் கவிராயர்-சீகாழி

ஆ. இராம நாடகக் கீர்த்தனைகள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 207 ஏடு; 414 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9,10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச்செய்திகள்

அ. தொடக்கம்

நன்மையுஞ் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மவி ரோதமும் மரண மாறுமே
இன்மையும் ராமா வென்றெழுத் திரண்டினால்;

ஆ. முடிவு

ஞான நாய கர்ராம நாடக மிசையாரச் சொல்லும்
கான மாக வதறுள்ளங் களித்திட யிதனைக் கேட்டு

தான மாயு லகிலுள்ள சவுபாக்கி யந்தந்தோர் கேட்டோர்
வான நாட்ட ரசர்போலே வசீகரம் பெற்று வாழ்வீர்.

இராமாயண நாட்டியம் எழுதி நிறைவேறினது. முற்றும்.

இ. பிற்குறிப்பு

அருணாசலக் கவிராய ஈஷ்பராள் சொன்ன இராமாயண நாட்டியம் எழுதி நிறைவேறினது. முற்றும். சம்பூர்ணம். இந்த ராமாயணக் கீர்த்தனை. ராசிபுரம் வடக்குவாதி, குழந்தை செட்டியார் குமாரனுடையது. ஸ்ரீராமசெயம். இதைப் படிச்ச பேர்களுக்கு அறிவுண்டாகும். நல்லது.

## 1827. வில்லி பாரதம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1468*

ஆ. நு/*129*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. வில்லிபுத்தூரர்

ஆ. வில்லி பாரதம்: 13, 14ஆம் போர்: மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 109 ஏடு; 218 பக்கம்.

ஆ. நீளம் 40 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சங்கையில் லாவையம் படவா ருயிர்தளர் பொழுத்த குருகே
மங்கையர் குடியிருந் தழுதுள்ளம் புக்கினு யான்மறவேன்
கங்கையும் நான்மறையும் தொழவுங் ... கழலிணையுந் திருமால்
லங்கையின் மீதொளிர் சங்கமும் நேமியும் மஞ்சண மேனியுமே.
(1)

ஆ. முடிவு

தேரின் பேரிலே நின்று பூமியினிற் அரிச்சுனன் பேரில் விட பாதாளத்திலிருக்கிற சேஷன் பேரிலே பாணங்களெய்யுறது போலவும், மேகத்திலே நின்று ஆகாசத்திலே தாவுகிறாப்போலே தாழ்ந்து நின்று அரிச்சுனனெய்யுற பாணம் அவரவர்களுக்கு இன்ன விடமென்று தெரியாது ராசக் கூட்டத்தின் பேரிலே பாணங்கள் பட்டதென்றவாறு. (75)

# 1828. நைடதம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1469

ஆ. ந/130

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அதிவீரராம பாண்டியன்

ஆ. நைடதம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 140 ஏடு; 280 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. ஓரளவு பூச்சரித்துள்ளது. பொதுவாக நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கருவி மாமழை ......குருவென விளங்கி
இருவி சும்பிடை பரந்துவென் றின்மணி கொழிக்கும்
பரவை வெண்டிரை மேய்ந்துயர் பனிவரை யுயர்த்த
உருவ வோடரித் தடங்கணா ளுருக்கொடு மீண்ட (1)

ஆ. முடிவு

ஆழிசூழ் புவிமுழுவதும் ஆழியோன் றுருட்டி
வாழிநல் லறம்புரி தருமக்கடல் வாற்றிச்
சூழிமால் வரைப்பிட ருறுசுமை வொழித் தார்ப்
பாழியம் புயத்துக் கெலாம் பரித்தினி திருந்தான். (15)

அரசாட்சிப் படலம் முற்றும்.
ஆகப் படலம் 28 க்கு விருத்தம் 1170.

இ. பிற்குறிப்பு

பவ வருஷம் சித்திரை மாதம் 13 ஆம் தேதி சனி வார நாள் சங்கர செட்டி நைடத காவியம் எழுதி நிறைவேறினது.
சம்பூரணம்,

# 1829. வீரகுமார நாடகம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1470

ஆ. ற/134

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ............

ஆ: வீரகுமார நாடகம்

இ: பல்வகை நூல்கள்

ஈ: செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ: 165 ஏடு, 330 பக்கம்;

ஆ: நீளம் 36 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ: இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ: ஒரு பக்கத்திற்கு 6, 7 வரி.

உ: சுமாரான எழுத்து.

ஊ: முதல் 14 ஏடுகளின் ஓரங்கள் மிகு சிதைவு; பிற நல்ல நிலை.

எ: முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

சீர்கொண்ட வீசைநகரம் புரக்கும் வேந்தன்
செகவீர சூரதூ ரேந்திரன் பாலன்
...கொண்ட மனுக்கள் மீள
மீறுளக் கோபரன் யிதழ்வா யழகன்
பார்மீதெங்கும்......கொடியோன் சிந்தா மணியைச் சேரும்
யியல்விராம ரான கதையைப் பாட
கார்கொண்ட மும்மதமும் நால்வாய் அய்ந்து
கரந்தனிலே யிருபாதங் காப்பு தானே.

ஆ: முடிவு

வேதியன் தலத்தில் வாழி விஷ்டுணுவு மாதனும் வாழி
பூதலத்தில் புண்ணிய நிலா வாழி தானே
அந்தணர் போருளே வாழி அகத்தீச மாதேவர் வாழி
சந்திர சூரியாரும் வாழி சகலரும் வாழி தானே.

### இ: பிற்குறிப்பு

இந்த வீரகுமார நாடகம் எழுதிமுடிஞ்சுது எப்படி என்றால் குருவும் ஆசரவேறி சேலம் அன்னதானபட்டி மிட்டாவுக்குச் சேர்ந்த பெரிய புத்தூரிலேயிருக்கும் வடிவேல் பண்டாரத்துக் குமாரனும் செங்கோடனுக்குக் கலியாணிக்குக் கணக்குச் சண்முகனுக்குச் சாமிபிள்ளை எழுதிக் கொடுத்த வீரகுமார நாடகம். எவராகிலும் எடுத்துப்படித்து போட்டு சுவடிக்காரன் கேட்டு படிக்கவும். காணாமல் எடுத்துக்கொண்டு போனால் கங்கைக்கரையிலே ஏழு காராம் பசுவைக் கொன்ற தோசத்தினாலே போக கடவுள் பார்க்கும்.

## 1830. அரங்கேச வெண்பா

### 1. நூலகக் குறிப்புகள்

அ: *1471*

ஆ: ள/*68*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ...............

ஆ. மநுநீதி சூடாமணி என்னும் அரங்கேச வெண்பா

இ. நீதி நூல்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 88 ஏடு; 176 பக்கம்.

ஆ. நீளம் 41 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. பெரிய, தெளிவான கையெழுத்து.

ஊ. ஏடுகள் பலவும் சிதைந்துள்ளன.

ஏ. முழுமை

...ARA PUBLIC...

## 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

சொன்னகம்பத் தைமடங்கல் தோன்றுதலால் அன்பருளாத்
தின்னமிர்த மாகு மிரங்கேசர் — மன்னும்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆ: முடிவு

மகமேரு பருவதம் போலப் பெருமையையுடைய ...... ......மான காரிய முன்னி முக்களவு செய்யினும் அபிமானத்தி னாலே சருவாங்கமும் குன்றி விடுவார்.........

...... ...... ...... ......

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

இ. முற்குறிப்பு

நரசிம்மன் சூடாமணி எடுத்தவன் உடனே படிக்க விட்டு கொடுப்பது.

## 1831. தொல்காப்பியம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. *1472*

ஆ. *ச/40*

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: தொல்காப்பியர்

ஆ: தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - மூலமும் நச்சி னார்க்கினியர் உரையும்

இ. இலக்கணம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 27 ஏடு; 54 பக்கம்.

ஆ. நீளம் 45 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. சிறிய அழகிய கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத்
தமிழ்கூறும் நல்லுல கத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி
...... ...... ...... ......

ஆ. முடிவு

......வரையாதாரெனவே வல்லொற்று மெல் லொற்றும் பெற்றாம். உதா. மணிக்கு-மணிக்கண், திக்கு-தீக்கண், மனைக்கு-மனைக்கண் எனவும், வேய்க்கு-வேய்க்கண், ஊர்க்கு-ஊர்க்கண்,

(இதற்குமேல் ஏடுகள் இல்லை.)

## 1832. சவுந்தரியந்தாதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1473

ஆ. ய/105

## 2. உள்ளீடு : நூல் விவரம்

அ: ...............

ஆ: சவுந்தரியந்தாதி

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 100

## 3. தோற்றக் கூறுகள்

அ. 51 ஏடு; 102 பக்கம்.

ஆ: நீளம் 37 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது;

ஈ: ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ: பெரிய, தெளிவான கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை;

எ: முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொன்னிதழ் பரந்தமலர் கொன்றைமுடிமிசை
போகசுக ......  ......
வன்னியி லெழுந்தவொளி மின்னலென
நுண்ணிடை வளர்ந்திலகு வஞ்சிமணியே
உன்னரிய ஞான வொளியே வெளியின்
மேவுமொரு வோதிமநலங் கொளுமையே
என்னரிய தந்தையை எழுந்தருள
வென்றருளி ரங்கெனை யரம்பை யரசே; (1)

ஆ. முடிவு

பரிசமுட னைந்துபுல னாகிய தறிந்த
பதபங்கய மொருத்த ரறியா
வரிசையுட னெங்கும் விளையாடி யதளித்து
நிதம்வந்து புரிகின்ற மயிலே

தரிசன முதற்பொரு ளூதிப்பது மொடுக்கிய
திசைப்பரம் வெட்ட வெளியும்
புரிகுழல் சவுந்தரி யெனக்கருள் பரம்பரம்
வன்னியடி பொன்னின் முடியே. (100)

சவுந்தரியந்தாதி முற்றும்.

இ: முற்குறிப்பு

சார்வரி வருஷம் ஐப்பசி மாதம் 16ஆம் தேதி சுக்கிர வாரம் ஆரம்பம்.

இ: பிற்குறிப்பு

குழந்த செட்டியினுடைய சவுந்தரியந்தாதி. சிவன் செயல்.

## 1833. கருடப்பத்து

### 1. நூலகக் குறிப்புகள்

அ: 1474

ஆ. த/33

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . . .

ஆ: கருடப்பத்து: உரை

இ. பிற தோத்திரங்கள்

ஈ. உரைநடை
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 71 ஏடு; 142 பக்கம்.

ஆ. நீளம் 24 செ. மீ.; அகலம் 2•5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ: ஒரு பக்கத்திற்கு 5 வரி;

உ: சுமாரான கையெழுத்து;

ஊ: பொதுவாக நல்ல நிலை;

எ: முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

தேவாதி தேவர்பல ராலுண் ணாது
திருநாம மோதி திருவாய்
மூவாத வாய்வோ டுலகே ழோடேழு
மரசாளும் மேன்மை முதல்வாய்
மேவாத வின்பம் வரமேவிண் மேவ
நெடுவீடு கண்டு முடுக
ஆவா யருந்தி யமுவார் கொலாருன்
னதிரேக மாய்கை யறிவார்
வாராய் சுவாமி வாராய் ராம பத்திரார்; (எ து2)

ஆ: முடிவு

இப்படி கருடன் வந்து சுவாமியைத் தோத்திரஞ் சொன்னபோது கருடனைக் கண்ட நாக பாச மெல்லாம் சின்னா பின்னமாக அறுபட்டுப் போச்சு. அப்போது கருடனைப் பார்த்து ராமர் சொன்னது. அய்யா நீர் யாரோ எங்கள் அருந்தவத்தினால் வந்தெய்த வீரஉயரும் வாழ்வும் ஈந்தனை. எம் முன்னோருலகை யுரு கொடா கொத்த காட்சியே யல்ல மீட்சி செய்திரமில்லை கண்டாய் யாரெனச் செப்பினாயே. (1)

இ. முற்குறிப்பு

சுபகிருது வருஷம் சித்திரை மாதம் 10ஆம் தேதி பொன்முடிசெட்டி மகன் சுப்பராயன் கருடப்பத்து எழுதின நாள்;

# 1834. குருசேத்திர நாடகம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ: 1475

ஆ: ற/135

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: . . . . . . . . . .

ஆ: குருசேத்திர நாடகம்

இ: பல்வகை நூல்கள்

ஈ. செய்யுளும் உரைநடையும்:
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 198 ஏடு; 396 பக்கம்.

ஆ: நீளம் 37 செ. மீ.; அகலம் 2•5 செ. மீ•

இ: இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரி.

உ: சுமாரான கையெழுத்து. பக்கத்திற்கு மூன்று பத்தியாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது.

ஊ: ஏடுகளின் ஓரங்கள் சிதைந்துள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

செஞ்சடை யுள்ள நாதன் சிவன்பதஞ் சென்னியில் வைத்தோன்
கஞ்சனை மார்கி ழித்தோன் கரியமா லழகர் பாதம்
நெஞ்சகந் தன்னில் வைத்து நிகர்குரு சேத்திரந் தன்னை
பஞ்சவர் கார்த்த நன்றி பகருவேன் பெரியோர் முன்னே.

ஆ: முடிவு

அப்பு அணிந்தவன் வார்த்தையை-இந்த
அம்புவி தன்னில் அடியேனும்
தப்பு வனோவென்று மாயனை - உங்கள்
தாட்டிகங் கொண்டு யெதுத்தோமே
இப்பவே தேவரீர் வந்தி......
யெதுத்தது உங்க ளால்......
எப்புடன் படிக்கைகள் பண......
ளுள்ளம் கயிலையி லேகு......

## 1835. ஞானக்குறள்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1476

ஆ. ட/226

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. ஞானக்குறள்

உ. தத்துவம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்.

ஆ. நீளம் 16·5 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. சிறிய, அழகிய கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை. இறுதி ஏடு முறிந்துள்ளது.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியாய் நின்ற வறிவுமுதன் மூலமே
ஓதிய நூலின் பயன். (1)

பரமாய சத்தியுட பஞ்சமா பூதங்
கரமாகித் தோன்றும் பிறப்பு. (2)

ஆ. முடிவு

அறுபதோ டாறு வருட மிதனை
உறுதிய தாக உணர். (9)

அட்டமா சித்தி யடையுமோ ராண்டினில்
இட்ட மிதனைத் தெளி. (10)

## 1836. இரங்கநாயகி நாச்சியார் வாது

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1477-1*

ஆ. *ய/106*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. இரங்கநாயகி நாச்சியார் வாது

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 16 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருமா லுரமருவுந் செந்திருவும் நாச்சியரும்
மருவுசம் வாதம் வழுத்துதற்கு - அரியதமிழ்
வேதத் தனையளித்த விமலன் சடகோபன்
பாதந் தனைமனமே பற்று.

ஆ. முடிவு

இரங்கரைக் கூடியேதான் நாமிருவரும்
பொங்கமதாய் வாழ்வோம் சங்கை யிலாமலே
தங்கையுந் தமக்கையுஞ் சரியாக வீற்றிருப்போம்.

### 5. பிற செய்திகள்

தெலுங்கும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நூல்.

## 1837. பார்த்த சாரதி பதிகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1477-2

ஆ. ய/106

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..........

ஆ. பார்த்தசாரதி பதிகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்.

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியாய் நின்றதோ ரண்ணலே கண்ணனே
அண்டர்கட் கமுதளித்தாய்
ஆனந்த கோவிந்த மாதவா துளவமலர்
அணிகேச வாமுகுந்தா

நீதியாய் நின்றதா சர்க்குவல மீந்திடும்
நிட்களர் பதுமநாபா
நீலவண் ணாஅரி வைகுந்த வாசனே
நிறைந்தகல் யாணலீலா

சோதியே யமரர்துதி செய்திடும் பாதனே
துய்யனே பரந்தாமனே
சுத்தனே கர்த்தனே பக்தர்கள் மனத்தினிற்
துலங்கிடும் ஆதிமூர்த்தி
பாதிமதி புனையும் பரமன்மா கூரனே
பகர்திருவலிக் கேணிவாழ்
பங்கயக் கண்ணுருக்கு மணிதேவி நேயனே
பார்த்தசா ரதிமாயனே.

ஆ: முடிவு

அன்னங்கள் போல்மாத ராடலும் பாடலும்
அநேகவித வாத்தியங்களும்
அண்டங்கள் செவிடுபட வேதகோஷ் டங்களும்
அடியார்கள் தொழுதேத்தலும்
சின்னங்கள் பூத்தபோதே நிபந்தங்க ளுமதில்
சுற்றிலும் பந்தமும்
சிதாபா ணங்களும் புருசுமுதல் வெடிகளும்
சிறக்கம தாயிலங்க
உன்னதக்க வரிகளால வட்டங்கு டைகள்
ஒளிர்மதி யெனபிடிக்க
ஓங்குகரு டாதியர் மேற்பவனி வந்திடும்
உல்லாச மென்னசொல்வேன்
பன்னுதமிழாழ் வார்கள் பன்னிருவர் பாடலும்
பகர்திரு வலிக்கேணிவாழ்
பங்கயக்கண் ணுருக்குமணி தேவி நேயனே
பார்த்தசா ரதிமாயனே.

## 1838. பார்த்தசாரதி பஞ்சரத்தினம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: *1477-3*

ஆ: *ய/106*

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: . . . . . . . .

ஆ: பார்த்தசாரதி பஞ்சரத்தினம்

இ: சிற்றிலக்கியம்

ஈ: செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ: 3 ஏடு; 5 பக்கம்.

ஆ: நீளம் 37 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ: ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ: கிறுக்கலான கையெழுத்து.

ஊ: நல்ல நிலை.

எ: முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

கண்போ தரைக்கணந் தெரியாதெ ழுந்துமுன்
கைகுவித்தெ திற்சென்றுடல்
கம்பித்து ரோமஞ்சி லிர்த்துவிழி மலரருவி
கரைபுரள முகமலர்ந்தே

தெண்டனிட் டுபசார மாவரவ ழைத்தவர்கள்
சிந்தையி னிளைத்த படியே
செப்புமுன் னடியவர்க் கொப்புடன் அளித்தவர்கள்
செல்வமொரு குறையுமுண்டோ

தண்டமொடு சங்குசக்கரம் வாளிலங்குகோ
தண்டமேந்திடும் பிரசண்ட
தகைகொண்ட பலவண்டமுழுதுண்ட வன்கண்ட
தலமளவு கண்டவண்டர்

பண்டரு மனந்தமறை கொண்டுமுனி வோர்கடுதி
பகர்திரு வலிக்கேணி வாழ்
பார்த்த பேரிடா மாயமுர் தமாய
பார்த்த சாரதி மாயனே.

ஆ. முடிவு

தீங்கொன் றிலாதபஞ் சவராசி லேறவும்
சுயோத நாதியர் நீரவும்
செருமுகம தனில்விசயன் மாபெருந் தேரிலொரு
செங்கையிற் கோலொன்று கொண்டு
ஓங்கிமலர் வாயாலு மாக்கடும் பறிக்கா
யுறப்புகோ லத்தை யடியேன்
உளமகிழ்ந் தன்பொடு காணவீங் கருளுவர்
உயர்தொண்டை மாளினதுபொற்
பூங்கழல் வணங்கி யபினால் வேதமும்
பாளபுனி தர்க்குராம சந்திரா
புஜமந்தா கஜவிந்தா பஜமந்தா நிஜதந்தா
போற்றுமடியார் சுதந்தரா
பாங்குமுத் திடுசங்க வெளவ்வளவ முத்திடப்
பகர்திரு வலிக்கேணி வாழ்
பார்த்தபே ரிடாமாய முர்த மாய
பார்த்த சாரதி மாயனே.

## 1839. இரங்கநாயகி திருவூசல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: 1477-4
ஆ: W/106

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ: ..........
ஆ: இரங்கநாயகி திருவூசல்
இ: சிற்றிலக்கியம்
ஈ: செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ: 5 ஏடு; 9 பக்கம்
ஆ: நீளம் 37 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சற்றே சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தார்சிறந்த முகத்தினாற் கால்கள் நாட்டி
 தனிப்பவளக் கொம்பதினாற் கொடுங்கை மாட்டி
வார்சிறந்த வைரத்தாற் பலகை பூட்டி
 வண்ணநவ மணிமாலை வயங்கச் சூட்டி
ஏர்சிறந்த சித்திரங்க ளெங்குந் தீட்டி
 இலகுதிரு பொன்னூசல் சேவை காட்டி
சீர்சிறந்த மாதவா னராடீ ரூசல்.
 சீரங்க நாயகனா ராடீ ரூசல்.

ஆ. முடிவு

இடையினிற் பீதாம்பரந் தானிருந்து மின்ன
 எழிற்காதத்திற் பஞ்சவாயு தங்கள் மின்ன
வடிவுபெறுந் திருமேனி வண்ணம் மின்ன
 மதிவதனங் கிருபையொடு மகிழ்ந்து மின்ன
முடிதனிலே முடிமாலை முயங்கி மின்ன
 மொழிமார்பிற் கவுஸ்துவர் பாண துன்ன
திடமேவுங் காவேரி சிறந்து சூழும்
 ஸ்ரீரங்க நாயகனார் ஆடீ ரூசல்.

முற்றும்

# 1840. சூடாமணி நிகண்டு

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1478

ஆ. ச/41

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மண்டல புருடர்

ஆ. சூடாமணி நிகண்டு

இ. இலக்கணம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 78 ஏடு; 156 பக்கம்;

ஆ. நீளம் 44 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய, தெளிவான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை;

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆறாவது பல்பொருட் பெயர்த் தொகுதி

காப்பு:

உலகெலா மிறைஞ்சி யேத்த உலகெலா முணர்த்து மூர்த்தி
அலகிலா ஞான வாரி ஆறிரு கண்க ளோடும்
இலகுமூ வெயிலுள் யாழி யெழிலணை யிருந்தோன் பாதம்
பலமுறை வணங்கி யேத்திப் பல்பொருட் பெயருஞ் சொல்வாம்.
(1)

ஆ. முடிவு

இறந்தது நிகழ்வு மற்றை யெதிர்வுமாம் புராணஞ்செய்
நறந்தரு குணபத்திரன் தாளரனெனச் சரண மானோ
மறந்தலைப் படாத வீரை மன்னன் மண்டலவன் செய்தா
சிறந்திடு மொலிபற்றும் பேர்ச்செயு ளொன்றை யைந்திரட்டி;

பத்தாவதொலி பற்.... தொகுதி முற்றிற்று

இ. பிற்குறிப்பு

சூடாமணி நிகண்டு: இஃது பொய்கைப் பாக்கம் ஹரிஹர புத்ர உபாத்தியாயரவர்கள் குமாரராகிய அப்பாசாமி முதலியாரவர்களால் தமது வித்வ ரக்ஷாமிர்த அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பட்டது; குரோதி வருஷம் மாசி மாதம் இதன் விலை ரூ: 3.

## 1841. கபிலை கதை

### 1. நூலகக் குறிப்புகள்

அ: 1479

ஆ: ந/131

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ...........

ஆ: கபிலை கதை

இ: காப்பியம்

ஈ: செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ: 36 ஏடு; 72 பக்கம்:

ஆ: நீளம் 39 செ.மீ.; அகலம் 2.5செ.மீ:

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ: ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ: பெரிய, தெளிவான கையெழுத்து:

ஊ: சிதைவுற்ற நிலை.

எ: குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

தப்பில்லா கவலைகதை தக்கையினால் பாடுமது
முப்பழகு நல்லமிர்தம் முசியாம லுண்பவர்க்கு

கைப்பொருளி லாவடவன் கடப்பாட லாமொழிந்து
உப்பில்லாக் கூழையிட்டு உபசரித்து நின்ற தொக்கும். (1)

ஆ: முடிவு

பாய்ப்புலிக்குச் சிக்கி விட்டேன்......னே
செப்பினார் போலே யிளைத்துத் தீராத......னே
தாயிழந்த கன்றாகித் தளை வீங்கி கண்சுழன்று
வாயுழந்து நாவரண்டு மயங்கு கைக்கோ வுனையீன்றேன். (72)

## 1842. சாதக அலங்காரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1480

ஆ. வ/62

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ............

ஆ: சாதக அலங்காரம்

இ: சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 59 ஏடு; 118 பக்கம்.

ஆ. நீளம் 20 செ.மீ.; அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9,10 வரி.

உ. சிறிய கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

திங்கள் வேணியருள் தும்பி மாமுகன்
செய்யவேல் முருகன்பதம் போற்றியே
அங்கன் ஞாலத் துதித்தபே ருற்பவமாய்
அந்தரி வதற்குற் பவமே முதல்
இங்கிதற்கு முடியா தெனிற்சிர
மிம்பாநோக் கும்பொழுதே முகூர்த்தமாந்
திங்கள் சேருமிரா சியுடனுயிர் சேயன்
சென்னி திரும்பு முதையமே.

ஆ: முடிவு

சுபக்கிரகமும் நீச உச்ச ராயிருக்கில் சமனாக நன்மையுந் தின்மையுங் கலந்து வாழ்வாரென்பது. அவரவர் திசைகள் வருங் காலங்களின் கிரகங்களின் வலியறிந்து நிதானித்துப் பனிரண்டு ராசியில் பலன்களுஞ் சொல்வதென்பது. (99)

# 1843. சூடாமணி நிகண்டு

## 1. நூலகக் குறிப்புகள்

அ: 1481

ஆ: ச/42

## 2. உள்ளீடு; நூல் விவரம்

அ: மண்டல புருடர்

ஆ: சூடாமணி நிகண்டு

இ: இலக்கணம்

ஈ: செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ: 93 ஏடு; 186 பக்கம்.

ஆ: நீளம் 39 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.
உ. தெளிவுடன் கூடிய கையெழுத்து.
ஊ. ஓரங்களில் சிதைவு. பொதுவாக நல்ல நிலை.
எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1273 காண்க.

ஆ. முடிவு

கடலின் பெயர்

பரவை தெண்டிரை யேசிந்து பௌவமே பாரா வார
நரலையார் கலியே யுந்தி நதிபதி யம்பு ராசி
குரவையே சக்க ரங்கார் கோள்வே லாவலிய முந்நீர்
அரிமக ரால யந்நீ ராழியம்பர மேவேவீ (16)

# 1844. தண்டலையார் சதகம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1482
ஆ. ய/107

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. படிக்காசுப் புலவர்
ஆ. தண்டலையார் சதகம்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் (31 முதல் 56 வரை)

## 3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்.
ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ: இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ: ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ: பெரிய, தெளிவான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை. முதல் 15 ஏடுகளும் 28 ஆம் ஏட்டிற்குப் பின்னுள்ள ஏடுகளும் இல்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

கொச்சையிலே பாலுண்டோ கூத்தியா
  ரிடத்தில்நல்ல குணந்தா னுண்டோ
துச்சரிடத் தறிவுண்டோ துச்சரெங்கே
  போனாலுந் துரையா வாரோ
நச்சரவத் துடையாரே தண்டலை யாரே
  சொன்னேன் பொய்நில் லாமல்
அச்சியிலே போனாலும் அகப்பைய ரைக்
  காசின் மேலார் கொள்வாரே. (31)

ஆ: முடிவு

சீரிலகுந் தண்டலையார் திருவருளா லகமெடுத்து
  செழித்த நாளில்
வாரியென வாயிரம்பொன் கனகந்தான் கொடுக்கும்
  பயனைப் பார்க்க
நேரிடும் பஞ்சந்தனிலே யெவள் வாயிலுங்
  கொடுத்தால் நீதியாகும்
பாரில மறிங்கல் நீரிற் கொருகுடை
  நீர்வண்மை தானே. (56)

# 1845. குருசம்பிரதாயம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. *1483*

ஆ. *ற/136*

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ...............
ஆ: குருசம்பிரதாயம்
இ: பல்வகை நூல்கள்
ஈ: உரைநடை
அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ: 25 ஏடு; 49 பக்கம்.
ஆ: நீளம் 25 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.
இ: இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ: ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ: தெளிவான கையெழுத்து.
ஊ: சிதைவுற்ற நிலை,
எ: முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விசுவாமித்திரரும் வதிஷ்ட்ட மாமுனியும் நம்மை பிறவிக்கு வாராமல் ரட்சிக்க வேண்டி ஞான மென்கிற பாதார விந்தத்தை நமக்கு நீலகண்ட சுவாமி அனுக்கிரகம் பண்ணின தத்தோமசி வாக்கியம் அனுக்கிரகம் பண்ணினார். அத்தத்தோமசி வாக்கியம் குரு சம்பிரதாயம்.

ஆ. முடிவு

தத்தோமசி வாக்கியம் நீலகண்ட சுவாமி......சித்தா ரெண்டு விசுவாமித்திரனும் வசிஷ்ட மாமு...............அன்னை பிறவிக்கு வாராமல் ரட்சித்தார்கள். சற்குரு..................குரு சம்பிரதாயம் முற்றும்.

## 1846. சூடாமணி உள்ளமுடையான்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1484
ஆ. வ/63

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. சூடாமணி உள்ளமுடையான்: மூலமும் உரையும்

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரை நடையும்.
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 51 ஏடு; 102 பக்கம்.

ஆ. நீளம் 35 செ.மீ.; அகலம் 2.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை. ஏடுகளின் வலதுபுறம் முறிந்துள்ளது.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

உலகொரு மூன்றும் பெற்ற உயர்மறை நான்கு மெண்ணெண்
கலைகளுந் தெரியு மங்கை மறைய வர்க சிந்து
பொலன்மலி யருவி நின்ற பூவண ரீசர் பொன்னா
மலரடி வணங்கி நின்றேன் மனத்துயர் தீரு மாதோ.

ஆ. முடிவு

அசுபதி முதல் இருபத்தேழு நாளைக்கும் உணவு பயந்...... சோறு பாலில் வெந்த இலைக்கறி தயிர் எண்ணெய் நுரை, மானிறைச்சி, உதிரபீற்கு, நெய், பால் சோறு, கிச்சிலி, மாங்கிஷம், செந்நெல்........

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1847. தனிப்பாடல்கள்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1485*

ஆ. *ற/137*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. தனிப் பாடல்கள்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 30 ஏடு; 60 பக்கம்.

ஆ. நீளம் 36 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை. ஏடுகள் முறை மாறியுள்ளன.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரகர சிவசிவா நமசி வாயா
எங்களம்மை சிவகாம சுந்தரியர் பேரவுத்
தொண்டருக் கன்புசெய்யுஞ் சகாய யின்று
பதம்பெறு சமயத்தில் இதம்பர மாயறிந்து
விதம்பெற விளையாடுஞ் சிதம்பர தேவா.

ஆ. முடிவு

இன்னம் சென்ம மெடுப்பது முண்டோ
இந்தக் கடலைக் கடப்பது முண்டோ
முன்னாள் வினையைத் தவிர்ப்பது முண்டோ
முத்தி யெனக்குக் கொடுப்பது முண்டோ.

**(இதற்குமேல் ஏடு சிதைந்துள்ளது.)**

## 1843. அட்டக வர்க்கம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: 1486

ஆ: வ/64

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ..................

ஆ. அட்டக வர்க்கம்

இ. சோதிடம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை. இருபுறமும் ஓரங்கள் முறிந்துள்ளன.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கேந்திர திரிகோ ணந்தன்னில்
கீர்த்தியாய் மறையோன் சுங்கன்
சேர்ந்திடி லடுத்த லாபம்
தனிலதி நின்ற காலை
பார்ந்த ......... யான
பாக்கிய சாலி யாவான்
ஏந்திய குலத்தில் நல்லன்
இயற்றலு முடையா னென்னே (1)

ஆ: முடிவு

துய்ய செவ்வாய் தன்னுடைய வட்ட வர்க்கத்தை
சோதித்த பிறகு செவ்வாய் நின்ற ராசிக்கு....
செய்ய விந்துடன் சென்ம லக்கினத் திரிகோணஞ்
செறிந்த விந்தையுங் கூட்டிக் கண்ட தொகைதனை
ஐய்ய மில்லா மிட்ட சந்....சொல்லுவர் சேயுரைதாக
அரிய நாலா மிராசித் திரிகோண விந்தைப்
பைய்யவே தொகைகண்டு கிராமாதி பந்தியம்
பண்பான பூவாம் படைப்பதுவுஞ் ......ல்லே. (31)

(இதற்கு மேலுள்ள பாடல் சிதைந்துள்ளது)

## 1849. உள்ளமுடையான்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: 1487
ஆ: வ/65

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............
ஆ: உள்ளமுடையான்: மூலமும் உரையும்.
இ: சோதிடம்
ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 216 ஏடு; 432 பக்கம்.
ஆ. நீளம் 30·5 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.
இ: இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ: ஒரு பக்கத்திற்கு 5,6 வரி.
உ: தெளிவான கையெழுத்து.
ஊ: ஏடுகள் சிதிலமாயுள்ளன.
ஏ: குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பவளமால் வரையினில் வெறிப்பது போற்
பரந்தநீற் றழகுபச் சுடம்பிற்
திவளமா துடனின் றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்துத்
தரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் திருமுகம் படைத்த
கடவுளை நினைந்து கைதொழுவாம். (1)

ஆ. முடிவு

சேரவே துருவந் தேசாந் திரமுட னிரண்டுங் கூட்டப்
பாரமா மதிதான் சுத்தம் பாகையா மொன்றி னுக்கு
நேரமே கடிகை நாலோ டரையாகும் நின்ற சேடம்
ஆரமே புனையு மாதே அறியவர்க் கெளிதா மீதே.

# 1850. திருவாசகம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1488
ஆ. ண/52

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மாணிக்க வாசகர்
ஆ. திருவாசகம்
இ. சைவத்திருமுறை
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 127 ஏடு; 254 பக்கம்.
ஆ. நீளம் 18 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ: இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ: ஒரு பக்கத்திற்கு 8 வரி;

உ: சிறிய கையெழுத்து.

ஊ: சிதைவுற்ற நிலை.

எ: முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம் ஆ: முடிவு

தொடர் எண் : 2 காண்க.

# 1851. குமாரசாமியம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ: 1489

ஆ: வ/66

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ...............

ஆ: குமாரசாமியம் : மூலமும் உரையும்

இ: சோதிடம்

ஈ: செய்யுளும் உடைநடையும்,
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ: 183 ஏடு; 366 பக்கம்;

ஆ: நீளம் 27 செ.மீ.; அகலம் 3·5 செ.மீ;

இ: இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ: ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ: சுமாரான எழுத்து;

ஊ: சிதைவுற்ற நிலை;

எ: குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

பேர்திட மாகிய வேதிய னாத
பாரதன்ன மானமுதலோ
ரீதிடமாய் வருவா ரெனில் யாவும்
விடாதியல் பாகநவில்
சோதிடமே திடமாக நடாவு குமார
சுவாமி யம்யான்
ஓதிடவே யெனதுள் ளிடம்வாழ்வதோ
யானைசகோ தரனே.

ஆ. முடிவு

வித்தை யாரம்பத்துக்கு முகிர்த்த மறியும்படி : அத்தம், மிருக சிரம், சித்திரை, திருவோணம், அவிட்டம், திருவாதிரை, புனர் பூசம், பூசம், ரேவதி, அனுஷம், உத்திரம், அசுபதி இந்த நாட்களில் 5ம் வருஷத்தில் உத்திராயணத்தில் சனிகே யல்லாத வாரத்தில் திதி யோக கரணமுஞ் சுபமாக.

# 1852. திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்

## 1. நூலகக் குறிப்புகள்

அ: 1490
ஆ: ய/108

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பகழிக்கூத்தர்
ஆ: திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்
இ: சிற்றிலக்கியம்
ஈ: செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 45 ஏடு; 90 பக்கம்.
ஆ: நீளம் 30 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. 30–33, 36 ஆகிய எண்ணுள்ள ஏடுகள் இல்லை. சிதைவுற்ற நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1293 காண்க.

## 1853. சோதிட நூல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1491

ஆ. வ/67

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. பெயர் தெரியாத ஒரு சோதிட நூல்

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும்; அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 80 ஏடு; 160 பக்கம்.

ஆ. நீளம் 23 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரி.

உ. பெரிய, தெளிவான கையெழுத்து.

ஊ: மிகவும் சிதைவுற்ற நிலை:

எ: குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சாரு முதையு மேழிடங்கள் முழுநோக்
கொன்பான் நிகழ்முக்கால்
பாரிலஞ் சாமரை நோக்காம் பற்றுநான்
குங்கால் நோக்காம்
ஆறு மூன்றும் பதினொன்று மரைக்கால்
நோக்கா மாறெட்டும்
நாரி யிரண்டும் பனிரெண்டும் நயன
மில்லை நவக்கோளே.

ஆ: முடிவு

மேடம் முதலான பனிரெண்டு ராசியுந் தாதுமூல சீவ னென்றொட்டுவது அசுபதி முதலிருபத்தேழு நட்சத்திரத்தையும் இப்படியே ஒடுவது. கழி காலம் நிகழ்காலம் வருகால மிவை இவ்வடவே ஓடுவது: ஞாயிறு முதலான ஏழு கிழமையும் மேஷ முதலான பனிரெண்டு ராசியும் ஆண் பெண்ணென்று ஓடுவது.

# 1854. சிதம்பரப் பாட்டியல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ: 1492

ஆ: ச/43

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: பரஞ்சோதியார்

ஆ: சிதம்பரப் பாட்டியல்: மூலமும் உரையும்

இ. இலக்கணம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 30 ஏடு; 60 பக்கம்.

ஆ. நீளம் 23·5 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சுமாரான கையெழுத்து,

ஊ. மிகு சிதைவு,

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(முதல் மூன்று ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளதால் படித்தறியும் நிலையில் இல்லை.)

ஆ. முடிவு

....பாணன் மொழியிற் பாணனாற்றுப் படை; கூத்தன் மொழியிற் கூத்தனாற்றுப்படை பொருணன் மொழியிற் பொருணனாற்றுப்படை. என்றிவை பெயரிட்டு ஒவ்வொன்று ஒவ்வொரு செய்யுளாக வழங்கு மென்றவாறு.

# 1355. சோதிட நூல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1493

ஆ. வ/68

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. பெயர் தெரியாத ஒரு சோதிட நூல்

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும்.
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ: 128 ஏடு; 256 பக்கம்.

ஆ: நீளம் 30 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ: இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ: ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ: சிறிய கையெழுத்து.

ஊ: ஏடுகள் பூச்சியரித்துள்ளன, சிதைவுற்ற நிலை.

எ: முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நல்லதோர் வேத மூர்த்தி நாதனார் சொன்ன நூலை
வல்லது கிரந்த வாக்கியம் வகுத்திடு மாதந் தன்னில்
சொல்லது தெரியா தார்க்குத் தமிழாற் சொன்னவன் சீரூர்வேத
வல்லன மொழிநூல் தானும் வகுத்தங் காரந் தானே. (1)

ஆ: முடிவு

...... ...... ...... ......
சோதி ஆவணி பங்குனி சொன்ன நாள்முதல் ஏழினில்
தூயமா பனிரெண்டு திங்கள்
தொடர்ந்து யிப்படி நடந்திடும் வகைய றிந்து
நல்லெயிற் புரோகிதர் வண்மை கண்டிது
சொல்லவே.

# 1856. தண்டலையார் சதகம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ: 1494

ஆ: ய/109

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: படிக்காசுப் புலவர்

ஆ: தண்டலையார் சதகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 72

## 3. தோற்றக் கூறுகள்

அ. 36 ஏடு; 72 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது;

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய, கிறுக்கலான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வேதநெறி விளங்கிய சொல்லாக மெய்நூல்
விளம்பிய சொல்மிகு புராணம்
ஏதுவினிற் காட்டியசொல் லிலக்கணங் கள்சொல்
இசைந்தபொரு ளெல்லாம் நாடி
ஆதிமுத லுலகுதனில் விளங்கும் பழமொழி
விளக்க மறிந்து பாட
சோதிபெறு வேழமுகத் தொருவன் பாதம்
நித்தந் துணைசெய் வாரே. (1)

ஆ. முடிவு

தகமிக்க தண்டலையா ரடிபோற்றும்
மகராசர் பையில் வந்தால்
சுகமிக்க வேசியர்க்குப் பொன்நூறு
கொடுப்பார் தமிழ்சொல் வோர்க்கும்
அகமுற்ற சோறிடுவா ரந்தணர்க்
கெல்லாம்நாழி அரிசி ஈய்வார்
பகடிக்கோ பணம்பத்துத் திருப்பாட்டுக்
கொருகாசு பாலிப் பாரே. (72)

## 1857. சோதிட நூல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1495

ஆ. வ/69

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. பெயர் தெரியாத ஒரு சோதிட நூல்

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 30 ஏடு; 60 பக்கம்.

ஆ. நீளம் 45·5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை, பல ஏடுகளின் தொகுப்பு.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

...... ...... பதினாலுக்கு
மெத்தவே நன்மை உண்டாம் பதினஞ்சுக்கு
மேன்மேலும் யோகமுண்டாம் பதினாறுக்கே.

ஆ. முடிவு

ஆறாமிடத்திலிருந்தால் தானிய விருத்தி, சத்துருநாசம், பூமிலாபன். ஏழாமிடத்திலிருந்தால் ஸ்ரீபீடை, பாபர் கூடில் ஸ்ரீநாசம். சுபர் கூடில் பிழைப்பான். எட்டாமிடத்திலிருந்தால்...

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

சு. வி. 28

## 1858. சோதிடச் செய்திகள்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1496*

ஆ. வ/70

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . . .
ஆ. சோதிடச் செய்திகள்
இ. சோதிடம்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு; 36 பக்கம்.

ஆ. நீளம் 27 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை. ஏடுகளின் வலதுபுறம் முறிந்துள்ளது.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கார்குழல் மாது கற்பம் கருத்தினில் அறிய வேண்டி
பேர்தனை சொல்லச் சொல்லி . . . . முத்ததனை யெண்ணி
ஓரெழுத் தொருமூன் றாக்கி ஒற்றநாள் பக்ஷம் சேர்த்து
நேரி... மனேழுக் கீய ஒத்தையாண் ரெட்டை பெண்ணே.

ஆ. முடிவு

மீனந்தான் மீனிரண்டாய் விழுவதா யெழுவதாயு
மீனமிலா தேநிற்கு மிடம்நீர் பெண்பாற்குஞ்
சீவனினமில் மறையோன் பச்சை பகல்விழியுபைய

மீசர்க்கான திக்காம் பொன்வீடு புகர்க்குச்சம்
மருண்நீசம் (12)

இராசிமூல அத்தியாயம் முற்றிற்று. முற்றும்.

இ. முற்குறிப்பு

குழந்தை செட்டியினுடை சோதிட புத்தகம்.

## 1859. சோதிடச் செய்திகள்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1497

ஆ. வ/71

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. சோதிடச் செய்திகள்

இ. சோதிடம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 221 ஏடு; 442 பக்கம்.

ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகு சிதைவு.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(முதலிலுள்ள ஏடுகள் மிகவுஞ் சிதைந்துள்ளன. படித்தறியும் நிலையில் இல்லை.)

ஆ. முடிவு

சுங்கனார் திசையிற் செவ்வாய் சுகம்பெறு மீரேழ் திங்கள்
மங்கையார் மணமும் போகம் மனப்பாரி பயங்க ளுண்டாந்
தங்கிய அத்த லாபஞ் சாதியி லிடைஞ்சல் தீரும்
பொங்கிய பூமி சேரும் பூமகன் பொசிக்கும் நாளே. (76)

## 1860. சோதிடச் செய்திகள்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1498

ஆ. வ/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. சோதிடச் செய்திகள்

இ. சோதிடம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 265 ஏடு, 530 பக்கம்.

ஆ. நீளம் 31 செ. மீ.; அகலம் 2 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. ஏடுகள் பூச்சியரித்துள்ளன. இடையிடையே ஏடுகள் முறிந்தும் உடைந்துமுள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அம்புவி யோர்செய் தொழிலாற் சீவனமுண் டாகும்
அவையறி ...... சேர்மன் னாதவன் மும்மனைக்குந்
தம்பமொடு பத்தாம் வீட்டங்கு சத்திலி ருந்தோர்
தம்மிலதிக பலமாய்த் தரித்த வாங்கி சைதான்
வெம்புரவித் தேரோன் அங்கிசத் தயன பலமே
மேவிற் புலவயக் கோனும் விற்றுணர்வே கொள்வன்
செம்பொன் விப்பது ராசிப்பல நாலுக் கோரை
திக்குபல முண்டாகிற் செய்வன் வைத்தி யங்கள். (1)

ஆ. முடிவு

தீர்க்காயிசுக்கு லக்கினத்துக்கு 7ம் இடத்துக்குடையவன் திசையாவது புத்தியாவது வரில் மரணம். இது முன் சொல்லியிருக்கிற நிரியாணாதி பலமும் அறிந்து, அஷ்ட்ட வர்க்கத்தில் ஆயிசு மறிந்து யோசித்துச் சொல்லவும்.

சூரியனுக்குச் சத்துரு சனி, சுக்கிரன் சமன், சந்திரன் புதன், மற்ற பேர் மித்திரர்.

# 1861. இலக்கண விளக்கம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1499

ஆ. ச/44

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. வைத்தியநாத நாவலர்

ஆ. இலக்கண விளக்கம்: மூலமும் உரையும்

இ. இலக்கணம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 400 பக்கம் வரும்;

## 3. தோற்றக் கூறுகள்

அ. 423 ஏடு; 846 பக்கம்.

ஆ. நீளம் 26 செ. மீ.; அகலம் 4 செ. மீ.;

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 11,12 வரி.

உ. சிறிய அழகிய கையெழுத்து.

ஊ. மிகவும் பழுதுற்ற சுவடி. ஏடுகள் பலவும் பூச்சி அரித்துள்ளன.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு வரை

(ஏடுகள் மிகவும் பழுதுற்றுள்ளன. மரபியல் முற்றுமுள்ளது.)

## 1862. மோட்ச தர்மம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1500-1

ஆ. ட/227

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. மோட்ச தர்மம்

இ. தத்துவம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 5 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 5 பக்கம்.

ஆ. நீளம் 21 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மோட்சத்து மேலே யிச்சை யுண்டானவனாய் மிதாகாரனாய் இந்திரிய நிக்கிரக முள்ளவனாய், வயிராக்கியத்தினாலே பரிசுத்த இருதயனாய் லபிச்சாலும் பூ சந்தனம் ஸ்ரீகள் என்கிற போகங் களையும் ரட்சிக்காமல் கிரகத்திலே இருக்காமல் ...... ......

ஆ. முடிவு

.........யாவனொருவன் சருவ பூதங்களுக்கும் அபயங் கொடுத்து கிரகாசிரமத்தை விட்டுச் சன்னியாச தர்மத்திலே ...... ...... யிருக்கிற மகா புருஷனுக்கு தேசோ மயமா யிருக்கிற லோகங்களு முண்டாகும். அட்சயா னந்தமாயிருக்கிற மோட்ச முமுண்டாகும்.

# 1863. சாதன சதுட்டயம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1500-2

ஆ. ட/227

## 2. உள்ளீடு : நூல் விவரம்

அ: ..............

ஆ. சாதன சதுட்டயம்

இ. தத்துவம்

ஈ. உரைநடை.

அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 220 ஏடு; 440 பக்கம்.

ஆ. நீளம் 21 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9, 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. ஏடுகள் பூச்சியரித்துள்ளன. பொதுவாக நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச்செய்திகள்

அ. தொடக்கம்

எந்தச்சாதன சதுட்டைய சம்பத்தியினாலே பவ பந்தம் விடுபட்டு அருவி யானந்த பதத்தை யடைவார்களோ அந்தச் சாதன சதுட்டய சம்பத்தி ...... ...... ......

ஆ. முடிவு

மறவா நினையா மவுனத் திருக்கில்
பிறவா ரிறவார் பின்.
குருவாம் பரநந்திக் குடல்குறித் தாங்கே
இருபோது நீங்கா திரு.

# 1864. வேதாந்த சூளாமணி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1501
ஆ. ட/228

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சிவப்பிரகாசர் – துறைமங்கலம்

ஆ. வேதாந்த சூளாமணி: மூலமும் உரையும்

இ. தத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 100 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 81 ஏடு; 162 பக்கம்.

ஆ. நீளம் 28 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. மிகு சிதைவு. ஏடுகள் முறிந்தும் பூச்சியரித்துமுள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

(முதலிலுள்ள ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளதால் படித்தறியும் நிலையில் இல்லை)

ஆ. முடிவு

அளித்திடுகவென்னும் வியங்கோளெதிர்கால வினை முற்றை ஞானிகளென்னும் படர்க்கைப்பாற் படுத்துக. ஞானிகளானோர் யாருக்குச் சொல்வார்களென்றால் என்னுஞ் சொற்களெஞ்சி நின்றன, இந்நூல் ஞான நூலாதலின் அறிவர்க்கன்றி மூடர்க்குத் தவறாக வுதவினாசிரியனுக்கு மாணாக்கனுக்குங் குற்றம் பயக்குமென்பா ரிவ்வா றுதவுகவென ஞானிகண் மேன்மையும் இந்நூலின் மேன்மையுந் தோன்றக் கூறினாரென்க.

இ. பிற்குறிப்பு

இந்நூற்கு உரையெழுதினேனென்று பெயரிட்டு எனதறியாமை யுலகுக்கெல்லாம் அறிவித்தலால் இக் குற்றத்தைப் பெரியோர் பொறுத்தருள்க. இந்த வேதாந்த சூளாமணி 184. வேதாந்த சூளாமணி யுரையோடுங்கூட எழுதி நிறைந்தன. முற்றும்.

சுபகிருது வருஷம் சித்திரை மாதம் 16ஆம் தேதி புதன் கிழமை அனுஷ நட்சத்திரமும் திரிதிகையுங் கூடின சுபதினத்தில் மதுரை நாயகம் குரு கிருபையினாலே எழுதி முடிந்தது. முற்றும்.

## 1865. கூர்ம புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1502

ஆ. ந/132

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அதிவீரராம பாண்டியன்

ஆ. கூர்ம புராணம்

இ. காப்பியம்

ஈ. செய்யுள் 3714

### 3. தோற்றக் கூறுகள்

அ. 395 ஏடு; 790 பக்கம்;

ஆ. நீளம் 28 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது;

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. ஏடுகள் பூச்சியரித்துள்ளன; மிகு சிதைவு.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வெண்ணீ... கற்றைக் கான்று
விளங்கு ...... மார்பிறைக்......
எண்ணிலோ ...... பிடியென
இருந்த ...... ......

பெண்ணொரு பாகம் வைத்து ......
...... ...... ...... ......
மண்ணலாங் ..... ...... யானை
யடிமலர் சென்னி சேர்ப்பாம். (1)

ஆ. முடிவு

எதிர்மலைந் தேற்றி வெஞ்சமத் தரசர்
இடுதிரை கடையளந் தறியா
மதுரையும் புகாரும் வஞ்சியும் புரக்கும்
மானவே வழுதியர் பெருமான்
எதிர்பொலங் கழற்கா லடலதி வீர
னரிற்பத் தெரிந்து நன்கிசைத்த
முதுதமிழ்க் கூர்ம புராண முற்றுணர்ந்தோர்
முத்திவீ டிலிதுவீற் றிருப்பார். (13)

இ. பிற்குறிப்பு

தொண்ணூற்று நாலாவது பிராகிருதப் பிரளையமும் ஆதியந்தப் பிரளையமு முரைத்த வத்தியாயம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 1187. ஆகக் காண்டமிரண்டும் அத்தியாயம் தொண்ணூற்று நான்குக்குந் திருவிருத்தம் 3714. கூர்ம புராணம் முற்றும்.

## 1866. கந்தபுராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1503

ஆ. ந/133

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கச்சியப்ப சிவாசாரியர்

ஆ. கந்த புராணம்: 4ஆவது யுத்த காண்டம்: ஏமகூடப் படலம் முதல்.

இ. காப்பியம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 329 ஏடு; 658 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. சிறிய, அழகிய கையெழுத்து.

ஊ. பல ஏடுகள் சிதைவு. பூச்சியரித்துள்ளது. சுமாரான நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாரண னென்னுந் தேவு நான்முகத் தவனு முக்கட்
பூரணன் தானு மாகிப் புவியளித் தருளி மாற்றி
யாரண முடிவுந் தேரா வனாதியா யுயிர்கட் கெல்லாம்
காரண னான வேலோன் கழலிணை கருத்துள் வைப்பாம். (1)

ஆ. முடிவு

பாராகி யேனைப்பொரு ளாயுயிர்ப் பன்மை யாகிப்
பேரா வுயிர்கட் குயிராய்ப் பிறவற்று மாகி
நேராகித் தோன்ற லிலதாகி நின்றான் கழற்கே
யாராத காதலொடு போற்றி யடைது மன்றே. (263)

வள்ளியம்மை திருமணப்படலம் முற்றும்.

ஆகப் படலம் 24க்கு விருத்தம் 2216. தெட்சண காண்டம் முற்றும். ஆகக் காண்டம் 6க்கு விருத்தம் 10, 247, திருச்சிற்றம்பலம்.

காந்தப் புராணம் முற்றும்.

இ. பிற்குறிப்பு

சி. சவரிமுத்துப் பிள்ளை

## 5. பிற செய்திகள்

இறுதி ஏட்டில் அட்டவணைகள் எழுதப்பெற்றுள்ளன;

## 1867. தஞ்சைவாணன்கோவை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1504

ஆ. ய/110

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பொய்யாமொழிப் புலவர்

ஆ. தஞ்சைவாணன் கோவை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 250 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 150 ஏடு; 300 பக்கம்.

ஆ. நீளம் 38 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9,10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. மிகவும் பழுதுற்ற நிலை. ஏடுகள் பூச்சியரித்துள்ளன.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொய்யா மொழியா ரெனும் பெரியோர்
புகலும் வாணன் கோவையுரை
மையார் சோலைக் குன்றத்தூர்
வளரட்டாவதானி சொக்கன்
கையார் கனிபோ லகப்பொருளிற்
காணுஞ் சங்கை யெலாந்தீர
மெய்யார் தொல்காப் பியநூலின்
விதியா லெழுதி விளக்கினனே.

ஆ. முடிவு

வரைவியல் என்பது......களைக் குரவர் முதலாயினோர் கொடுப்பவுங் கொடாதொழியவும் வதுவைச் சடங்கொடு பொருந்து மணஞ் செய்து கோடல்.

## 1868. கும்பகோணப் புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1505

ஆ. ப/56

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை

ஆ. கும்பகோணப் புராணம்

இ. தலபுராணம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 226 ஏடு; 452 பக்கம்.

ஆ. நீளம் 32 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. சிறிய, அழகிய கையெழுத்து.

ஊ. ஏடுகள் பூச்சியரித்துள்ளன. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூமேவு தமதருளா லுயருமுய
விலதுமெனப் புவனங் கூறும்
மாமேவு மொழிக்கியைய வுயர்திணையி
னஃறிணை மாவதனங் கொண்டோர்

பாமேவு முறையிணைந்து மருளமைந்து
பயில்வதுபோற் பயிலா தென்றுந்
தாமேவு மருளமைந்த வாதிவிநாயகர்
சரணஞ் சார்ந்து வாழ்வாம். (1)

ஆ: முடிவு

முன்னுபுகழ்ச் சோணாடு வாழ்க
திருக்குடந்தை யெனுமூதூர் வாழ்க
மன்னுபெருஞ் சைவமிக வாழ்க
விடைமருதர்முதல் வானோர் வாழ்க
பன்னுதிரு மங்கள நாயகி வாழ்க
கும்பேசர் பண்பு வாழ்க
மின்னுதிரு வம்பலத் துளவ ரெடுத்த
குஞ்சிதத்தாள் மேன்மேல் வாழ்க. (25)

முனிவரர் பூசைப் படலம் முற்றியது:
ஆகப் படலம் 70க்குத் திருவிருத்தம்.........
கும்பகோணத் தலபுராணம் முற்றுப் பெற்றது.

இ. பிற்குறிப்பு

திரிசிபுரம் வரகநேரியில் வசிக்கும் சி. சவுரிமுத்துப்பிள்ளை யினுடைய புத்தகம்.

## 1869. விநாயக புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: 1506

ஆ: ந/134

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: கச்சியப்ப முனிவர்

ஆ. விநாயக புராணம்

இ. காப்பியம்

ஈ: செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 416 ஏடு; 832 பக்கம்.

ஆ. நீளம் 43 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. சிறிய அழகிய கையெழுத்து.

ஊ. ஏடுகள் பூச்சியரித்துள்ளன. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அகரமென வறிவாகி யுலக மெங்கும்
அமர்ந்த ...... ...... ......
புகரங்கட...... யொரு முதலாகி வேறு
......வேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில் பொருண்நான் கினையு மிடர்தீர்ந் தெய்தப்
போற்றுனருக் ...... புரிந்தல் லார்க்கு
நிகரின் மறக் கருணை புரிந்தாண்டு கொள்ளு
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

ஆ. முடிவு

வரசன்ன வீரமூர்த் திடைவிளங்க
முடிமுடியின் வயங்க விண்ணோர்
பரசன்ன நினதுதிருச் சேவடி
நாயேன் . . . . பதித்தல் செய்யாய்
விரசன்ன மலர்த்தடஞ்சூழ் சென்னைநகர்
வீற்றிருந்த விமல வாழ்வே
பிரசன்ன விநாயகனே யடியருளம்
அழியாத பெருமை யானே.

# 1870. சிராமலையந்தாதி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1507

ஆ. ய/111

## 2. உள்ளீடு நூல் விவரம்

அ. ...............
ஆ. சிராமலையந்தாதி
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 13 ஏடு; 26 பக்கம்.
ஆ. நீளம் 40 செ.மீ.; அகலம் 3·5 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. சிதைவுற்ற நிலை. முதல் ஏட்டின் பாதி முறிந்துள்ளது.
எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தார்கொண்ட செவ்வி மிகுமட்டு வார்குழற் சாம்பவியால்
வேர்கொண்ட தாஞ்செவந் தீசரந் தாதி விளம்பமுனங்
கூர்கொண்ட வெண்மருப் பான்மக மேரு குறித்தெழுதுங்
கார்கொண்ட மும்மத நால்வாய் பெருமைங் கரன்துணையே.

ஆ. முடிவு

பரமே யதீதத்தி னுள்ளே நிறைந்த பரத்திலெழு
முரமே பெறுமட வார்குழல் பாலொரு ளாதிலகு
திரமே மிகுதென் சிராமலை மேற்சிறி யேனுகந்து
வரமே தரநின்ற வாழ்வேமெஞ் ஞான மணிவிளக்கே. (100)

இ. பிற்குறிப்பு

கணக்கு சண்முகம் வாசிக்கின்ற சிராமலை அந்தாதி முற்றிற்று.

## 1871. கும்பகோணப் புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1508

ஆ. ப/57

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை

ஆ. கும்பகோணப் புராணம்

இ. தலபுராணம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.

ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9,10 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. ஏடுகள் பழுதுற்ற நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1505 காண்க.

ஆ. முடிவு

கனிதரு கழிவே யல்லாற் களவுவே றில்லை யங்கன்
முனிதரு ...... ...... குறவுடைக்கப் பட்ட
...தரு தயிரே யல்லால் உடைபடு வதுவே றில்லை
மனிதரு ..... ...... நாமு ரைப்ப தென்னே. (51)

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

## 1872. கந்தபுராணம்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1509
ஆ. ந/135

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. கச்சியப்ப சிவாசாரியர்
ஆ. கந்தபுராணம்
இ. காப்பியம்
ஈ. செய்யுள்

**3. தோற்றக் கூறுகள்**

அ. 325 ஏடு; 650 பக்கம்;
ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.
உ. சிறிய, அழகிய, தெளிவான கையெழுத்து.
ஊ. மிகு சிதைவு. ஏடுகள் பூச்சியரித்தும் துளைகள் மிகுதியாயுமுள்ளன.
எ. குறை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம் ஆ. முடிவு

(ஏடுகள் மிகவும் சிதைவுற்றுள்ளதால் படித்தறியும் நிலையில் இல்லை)

## 1873. நாலடியார்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1510
ஆ. ந/25

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சமண முனிவர்கள்

ஆ. நாலடியார்

இ. பதினெண்கீழ்க்கணக்கு

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 65 ஏடு; 130 பக்கம்;

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகு சிதைவு; ஏடுகளில் துளைகள் மிகுதி. பல ஏடுகள் முறிந்துள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வெள்ளான மரபுக்கும் வேத.........
ளெல்லாருங் கூடி யெடுத்து.........
நாலடியார் நானூறு நன்கினி.........
சீலமுடை னிற்கத் தெளிந்து.

ஆ. முடிவு

தம்மமர் காதலர் தார்சூ ழணியகலம்
விம்ம முயங்குந் துணையில்லார்க் - கிம்மெனப்
பெய்ய வெழிலி முழங்குந் திசையெல்லா
நெய்தல றைந்தனன் நீர்த்து.

## 1874. திருக்குறுக்கைப் புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1511*

ஆ. ப/58

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை

ஆ. திருக்குறுக்கைப் புராணம்

இ. தலபுராணம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 69 ஏடு; 138 பக்கம்

ஆ. நீளம் 35 செ.மீ.; அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9,10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. மிகு சிதைவு. ஏடுகளில் துளைகள் மிகுதி.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீர்கொண்ட மழைதவழ் மால்வரைச் சாரற்
        தினைப்புனத்து நீபத் தோன்பூந்
தார்கொண்ட ....... ......... ......
        ......... காத றணிப்பா னன்பார்க்
கேர்கொண்ட தன்னுறுப் பொன்றிரண் டிரண்டு
        மூன்று மூன்றிரண்டுரண்.........
...... .... .... ......
        வருகுஞ் சரத்தைப் பரவி வாழ்வாம்.

ஆ. முடிவு

(மிகுசிதைவு)

## 1875. தனிப்பாடல்கள்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1512

ஆ. ற/138

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..........

ஆ. தனிப்பாடல்கள் (பதிகங்கள்)

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 25 ஏடு; 50 பக்கம்.

ஆ. நீளம் 44 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை. ஏடுகள் முறிந்துள்ளன.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திருத்தணி கந்தப்பராசர் பதிகம்

வஞ்சகமெ னுங்கபட கொடியகுன் றாமொடிச்சாடு
வண்மை பெறுவச்சிர
மண்டலம னைத்துமுதல் கொண்டுதிரி நெஞ்சரை
வதைத்திடு பெருத்தசீயம்
விஞ்சுமட மங்கையர் கொடுங்கலவி நெஞ்சமதை
மீளவிடு மூலகுளிகை
மேவுமுத லூழ்வினைய னேகவித குப்பையை
வெருக்கொள் நெருக்குசோதி

தஞ்சபிற விக்கடல் கடந்துதுணை நெஞ்சவிருள்
தூரத்து ரத்துமிரவி
தோராத காமமுத லாமுதலை துணிசெயுந்
துங்கத் தனிக்குடராம்
செஞ்சொல்மொ ழியஞ்சுகம டந்தை குறவள்ளியுந்
தெய்வானை யணையும்மார்பன்
திருத்தணி வரைக்குமர சிற்பரம சண்முக
சிகாமணி யெழுத்தாறுமே. (1)

ஆ: முடிவு

சுப்பிரமணியர் தோத்திரம்

துங்கத் தமரர் சிறைசிதறத்
துலையா வசுரர் சிரஞ்சிதறத்
துன்பப் படுமென் வினைசிதறத்
துரகத் தவுணன் உயிர்சிதற
வங்கக் கடலி னகஞ்சிதற
வளர்நல் லடியோர் துயர்சிதற
வடிவேல் கரத்தி லணிகின்ற
வருணத் துவசர் என்மீதில்
வங்கைக் கொடுமை நினைத்தேவல்
வைப்பு சூனிய முறைப்பாடு
வாகா பில்லியிது முதலாய
வைப்போ மென்று நினைத்திட்டோர்
தங்கட் குடனே யிவையெல்லாம்
தானே சூழ வருள்செய்வாய்
தமியேன் மீதி லவையெல்லாஞ்
சாரா தருள்செய் சண்முகனே. (4)

## 5. பிற செய்திகள்

இச்சுவடியில், திருத்தணி கந்தப்பராசர்பதிகம், பொய்கைப் பாக்கம் ஐயனார் பேரில் பதிகம், பழநியாண்டவர் பேரில் பதிகம், உண்ணாமுலையம்மன் பேரில், வைத்நீஸ்வரன் பேரில், கோகிலாம்பிகைபேரில், சுப்பிரமணியர் தோத்திரம் ஆகிய தலைப்புகளில் பாடல்கள் உள்ளன.

## 1876. திருவாசகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: 1513

ஆ: ண/53

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: மாணிக்கவாசகர்

ஆ: திருவாசகம்

இ: சைவத்திருமுறை

ஈ: செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 108 ஏடு; 216 பக்கம்.

ஆ. நீளம் 10 செ.மீ.; அகலம் 5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 18,19 வரி.

உ. சிறிய, அழகிய, தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ: முடிவு
தொடர் எண் : 2 காண்க.

## 1877. வராகி மாலை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1514-1

ஆ: பு/43

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . . .

ஆ. வராகிமாலை

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுள் 27

## 3. தோற்றக் கூறுகள்

அ. 28 ஏடு; 56 பக்கம்.

ஆ. நீளம் 18 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சங்காழி வாள்கட்கம் தண்டுஉலக்கை வனகலபபை
மங்காது அபய வரதமுடன் — இங்கான
நாலிரண்டு கைபடைத்த நாயகியாம் வாராகி
காலிரண்டும் உண்டுஎமக்குக் காப்பு.

ஆ. முடிவு

சீரிட்ட முற்பொதி பாதார விந்தத்தைச் சேவைசெய்து
நீரிட்ட வர்க்கு வினைவரு மோநினை யல்லவென்று
மாரிட் டவரை யலகா யுதங்கொண்டு வகுத்துயிரைக்
கூரிட் டறுக்கும் வராகியென் றோதும் குலதெய்வமே.

## 5. பிற செய்திகள்

பிரயோகத்திற்கு உரிய இயந்திரங்களும் இச்சுவடியில் தரப்பட்டுள்ளன.

## 1878. வராகி அகவல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1514–2
ஆ. மு/43

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ...............
ஆ. வராகி அகவல்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்.
ஆ. நீளம் 18 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. சுமாரான நிலை.
எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

துர்க்கா பகவதி சுந்தரி மாயி
நற்கா மேஸ்வரி நாரணி சூலி
மாதங்கி சடாக்கி மத்தமா தங்கி
ஓதுங் கரசூலி உன்மத்த வயிரவி

ஆ. முடிவு

வார்த்தைகள் இயம்பா வராகியே எந்தன்
ஆர்த்தி அடக்கும் ஆனந்த முகிலே
சித்தே சிவமே ஸ்ரீகிருஷ்ண சோதரி
மத்தப் பிரமத்தி வராகியே சரணம்.

## 1879. ஈஸ்வரி அகவல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1514-3

ஆ. மு/43

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . .

ஆ. பூவனை ஈஸ்வரி அகவல்

உ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்.

ஆ. நீளம் 18 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. அழகிய கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலத் தெழுந்த மூர்த்தி யாளே
ஞாலம் படைத்த ஞானக் கொழுந்தே
நான்முக வடிவாய் ஞாலத்து எழுந்து
வான்உலகு எங்கும் வகைவகை ஆனாய்.

ஆ. முடிவு

போற்றிபூ வனையே போற்றி போற்றி
காத்துஎனை ஆளக் கடவது உனக்கே
ஆட்சியாம் அம்பிகை உந்தன்
காட்சி கொடுக்கும் கருணை நமோஸ்து.

## 1880. ஆனந்த மாலை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1514-4

ஆ. மு/43

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கவிராச பண்டிதர்

ஆ. ஆனந்த மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 24

### 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்.

ஆ. நீளம் 18 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாரணமே நான்முகமே நண்ணார் புரம்எரித்த
காரணமே ஞானக் கடலே அருட்சுடரே
பூரணமே ஒன்றே புராதனமே மெய்ப்பொருளே
ஆரணமே அம்மே ஆனந்த நாயகமே. (1)

ஆ. முடிவு

கானம் பதியிலே தாய கவிராச பண்டிதர்சொல்
ஆனந்த மாலை படித்தா னந்தவாழ் வரிவானா
வானம் புவனம்அனல் வாரிநில மெழக்கடும்
ஞானம் பரம குருநக தரிட்டத்தி லெய்துவரே (24)

## 1881. தேவி தியான அகவல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1514-5

ஆ. மு/43

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ........

ஆ. தேவி தியான அகவல்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 18 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அறிவே அட்சரமே ஐம்பத்தொன் றான
சரஸ்வதியே தாயே நமோதாயே திரிபுரையே
வாக்கினிலே வந்துஉலவா வாக்யம் சிவமோகினியே
நாக்கினிலே வந்திருக்கும் நாமகளே நோக்கியே.

ஆ. முடிவு

வல்லினமே இடையினமே இடையிலங்கு மூன்றுமே
நல்லது உரைத்தருளும் நாரணியே எல்லாம் நீ
ஓம்என்ற மந்திரமே ஓம்நமசி வாயமென

ஆம்என்ற மந்திரமே ஆதிஓம் அம்மா
சிவாயசரணமே நமோசரஸ்வதியே
அரிஓம் மூலவிக்னேஸ்வரனே நமோநம நமோசிவாய நமோ.

இ: பிற்குறிப்பு

அருணாசலம் கைபெழுத்து:

## 1882. ஆத்திசூடிப்புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1515*

ஆ. *ந/136*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. ஆத்திசூடிப் புராணம்: மூலமும் உரையும்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்,
அச்சில் ஏறத்தாழ 150 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 177 ஏடு; 354 பக்கம்.

ஆ. நீளம் 44 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. ஏட்டெண் எழுதப்படவில்லை. இடையில் இரண்டொரு ஏடுகள் இல்லாமலிருக்கலாம். 89ஆம் பாடல் உரையின் ஒரு பகுதிவரைதான் எழுதப்பட்டுள்ளது. நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

கோபர்வதமாலையிலே அறுபத்துமூவர் கதைக்கு (மூலம்) பெரியபுராண கதையானபடியினாலே அந்தப் பெரிய புராணம் வந்த வரலாறு அடிப்பூர்வோத்திரம் சொல்லுவது.

ஆ. முடிவு

அப்பால் மாணிக்கவாசகரும் மதுரை விட்டு மறுபடியும் திருபெருந்துறைக்கு வந்து மறுபடி சுவாமி உத்தாரப்படிக்குச் சிறிது தலங்கள்பாடி சிதம்பர தலத்திலே வாசம்பண்ணி யாழ்ப்பாணத்துப் புத்தரை வாதிலே வென்று செயித்து அந்த ஈழ ராசா குமாரத்தி ஊமைப் பெண்ணைப் பேச வைக்குற......

(இதற்குமேல் எழுதப்படவில்லை)

## 1883. ஆத்திசூடிப் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ: 1516
ஆ: ந/137

2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ............
ஆ: ஆத்திசூடிப் புராணம்: மூலமும் உரையும்
இ. காப்பியம்
ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 128ஏடு; 256 பக்கம்.
ஆ. நீளம் 38 செ.மீ.; அகலம் 3செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரி.

உ. தெளிவான கையெழுத்து:

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1515 காண்க.

ஆ. முடிவு

கோபுரா புரமுஞ்செம் பொனங்குறிச்சி கூறுமாத் தூர்பரு ஆருந்
தாபர தேவிவாழு மங்கல முந்தாம் வளங்குடி முதலை
மாபுரத் தோர்முப்பத் திரண்டூரார் வாழ்கவே வாழ்த்தினேன்
மாலை
நூபுர பாதந்தனி லரங்கேற்றி நூற்பவர் கயிலை காப்பவரே.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1884. ஞான உலா

1. நூலகக் குறிப்புகள்

அ. 1517-1

ஆ. ட/229

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. ஞான உலா

இ. தத்துவம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்.

ஆ. நீளம் 21·5 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை,

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீரார் கமலஞ் சிறந்திருக்கும் பொய்கைதனில்
நீர்வாழு மண்டூக நெஞ்சேகேள் - நேரர்
யுடன்பிறந்த வாசிதனை யுள்ளத்தே காணாமற்குணங்
கடவுள்நீ ரானதொரு கோலமே - நடம்புரிந்து
.... .... .... .....

ஆ. முடிவு

பாதம் சிவந்ததுவும் பங்கயம்போ லானதுவுஞ்
சீதச் சிலம்பொலியுங் கம்பீர - நாதம்
பிறந்திட மேயெலகை பேசா திருமனமே
இறந்திட மெய்கை யிரு.

ஞான உலா முற்றும்.

# 1885. திருமூலர் அட்சர நிகண்டு

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1517-2

ஆ. ட/229

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருமூலர்

ஆ. திருமூலர் அட்சர நிகண்டு

இ: தத்துவம்

ஈ: செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ: 5 ஏடு; 10 பக்கம்.

ஆ: நீளம் 21·5 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ: ஒரு பக்கத்திற்கு 11 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ: நல்ல நிலை.

எ: முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ: தொடக்கம்

ஆதி கணேச னதன்மேலே முக்கோணம்
பாதி யாஞ்சத்தி பகுந்துற வானாள்
நீதியாம் நந்தி நிலைத்தது நாலிலே
ஓதிய அய்வற்கு உறவான தஞ்சுமே. (1)

ஆ. முடிவு

...... ...... ......
மொன்றுபோ டாமல் யோதிவெளி விட்டேன்
அன்றுநான் நந்தி சித்தர்க் கடிபணிந் தேற்றி
குன்றாமற் சாத்திரங் கூறியது முற்றே. (43)

திருமூல நாயனார் அட்சர நிகண்டு முற்றும்.

(பாடலடிகளில் சீர் ஒழுங்கு இல்லை)

## 1884. சுந்தரானந்தர் சூத்திரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ: 1517-3

ஆ: ட/229

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சுந்தரானந்தர்

ஆ. சுந்தரானந்தர் சூத்திரம் 25

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 21.5 செ.மீ.; அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை,

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூமிநாத மேகமே பூனல்சொரிந்த பூவதாம்
ஆமடா ரவிமுகத்தில் ஆயிருந்த விந்தடா
சோமநாத மீறியே சொரூபம்வைத்த சத்தியை
ஏமவித்தை பூரணம் இருக்குமட்ட சித்தியே. (1)

ஆ. முடிவு

சோதியான லிங்க தாரஞ் சூது நாற்றஞ் சதிரமும்
ஆதி யாம்பழச் சாற்றினால் அரைத்து நாலு சாமமும்
பேதி யாண்ட மஞ்சளிற் பிளக்கு மாங்கு மரியில்
வாதி லான வன்னியில் மருவ எட்டு முற்றுமே. (26)

இ. பிற்குறிப்பு

எழுத்து வேலை அழகியனாசாரி மகன் கோபால னாசாரி சுப்பிரமணியனாசாரி மாடசுவாமி சுவடியாகிய சுந்தரானந்தர் சூத்திரம் எழுதினேன் முகிந்தது. முற்றும்.

## 1887. போகர் அட்டாங்கம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1517-4

ஆ. ட/229

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. போகர்

ஆ. போகர் அட்டாங்கம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 11 பக்கம்.

ஆ. நீளம் 21.5 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 12 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கரிமுகவன் பதம்போற்றிக் கடவுள்பதம் போற்றிக்
கடாட்சித்து எனையீன்ற மாயிபதம் போற்றி
அரியயன் பதம்போற்றி வாணிபதம் போற்றி
அருள்தந்த லெட்சுமித்தா ளாயிபதம் போற்றி
துரியமாம் பாட்டரென் றழலா பதம்போற்றித்
துணையான காலாங்கி அய்யர்பதம் போற்றி
நிருவிகற்ப சமாதியுற்ற ரிசிகள்பதம் போற்றி
நிறைந்துநின்ற பூரணமே காப்புத் தானே.

ஆ. முடிவு

நாடாமற் போவதென்ன வென்று கேட்க
நற்சத்த பரிசமொடு ரூபங் கெந்தி
தாடாமல் ரசத்தொடு பொறிகழுஞ்சுந்
தனக்கேற்ற வழிபோகில் மனந்தா னோடும்
வீடாமல் விவேகத்தாற் பேர்கொட் டாமல்
மீட்டுமே புனல்வெட்டி வீசிப் போடு
தோடாமற் காதையைநீ போற்றி னாக்காற்
சொல்லொன்றுங் கேளாது சூட்டிப் பாரே. (27)

## 1888. அகத்தியர் ஞான உலா

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1518-1*
ஆ. *ட/230*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் ஞான உலா
இ. தத்துவம்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 11 பக்கம்;
ஆ. நீளம் 21·5செ.மீ.; அகலம் 4 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரி;
உ. சுமாரான கையெழுத்து;
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சொல்லவும் நிலையோ வுருவமோ பெனவோ
தோற்றியா ரேனு முண்டோ
இல்லையோ அன்றுஎன்றேன் முன்னாள்
இறந்தது மோரு வாகி
வல்லியாய் விளங்குஞ் சிவனென வேதான்
வந்ததே வுலகமேவ் வாறுஞ்
சொல்லிய வழியா யாகுமெஞ் ஞானந்
தோன்றுமே பூரண மாமே.

ஆ. முடிவு

சோதி மயங்கிவிடுஞ் சொல்லிவிட்டேன் - பூதலத்தில்
சித்திபெற வேணுமென்றால் தேவியுட ஈசர்தனைப்
புத்தியெனும் பூரணமே பூண்.

அகத்தீசுரர் ஞான உலா எழுதி முகித்தேன்.

இ. பிற்குறிப்பு

அழகியனாசாரி மகன் கோபாலனாசாரி சுப்பிரமணிய னாசாரி மாடசுவாமி.

## 1889. அகத்தியர் ஞானம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1518-2
ஆ. ட./230

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் ஞானம் 32
இ. தத்துவம்
ஈ. செய்யுள் 32

## 3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 13 பக்கம்.

ஆ. நீளம் 21·5 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அஞ்செழுத்து அஞ்சு முக மானபிரா னம்பலத்தே
நெஞ்செழுத்தை நேரே நிறுத்தவே – அஞ்செழுத்தும்
ஈரெழுத்தாய் மூவெழுந்து மிசைந்த சுழியூடே
ஓரெழுத்தாங் கணேசனரு ளோங்கு. (1)

ஆ. முடிவு

பாடியதோர் ஆயிரத் திருநூற்றி லப்பா
பலன்பெறவே யதிற்தெரியும் ஞான மப்பா
தேடியே திரிந்தாலுங் கிட்டா தப்பா
செகச்சால மாடுதற்கு யிதுதான் வேணும்
நாடியதோர் சூத்திரந்தான் வைத்திருந்தார் தம்மை
நாலாறு ஞானமிது முப்பத் திரண்டே. (32)

அகத்தீசுபரசுவாமி ஞானம் முப்பத்திரண்டு முகிந்தது.
முற்றும்

இ. பிற்குறிப்பு

அழகியனாசாரி மகன் கோபாலனாசாரி சுப்பிரமணிய னாசாரி மாடசுவாமி சுவடியாகிய ஞானம் முப்பத்திரண்டு எழுதினேன் மாடசுவாமி.

# 1890. அகத்தியர் சக்கரவிதி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1518–3

ஆ. ட/230

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் சக்கரவிதிச் சுருக்கம் 47

இ. தத்துவம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 21 பக்கம்.

ஆ. நீளம் 21·5 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சொல்லாத நாற்பத்தி முக்கோ ணந்தான்
துரியாதீ தங்கடந்த சோதி யப்பா
சொல்லாதே யொருத்தருக்கும் வெளியாய்ச் சொல்வேன்
சொர்ணத்தின் தகடானால் மெத்த நன்று
சொல்லாதே வெள்ளிசெம்பி லெழுதலாங் கேளு
சுத்தித்தா லட்டசுரம் எட்டு மாடுஞ்
சொல்லாதே பிரமாண மேவளவு மாகுஞ்
சூட்சமாய் நாற்பத்தி முக்கோணஞ் செய்யே. (1)

ஆ. முடிவு

ஓதிநீ தூபமொடு நெய்வேத்திய தீபம்
உத்தமனே மண்டலந்தான் செய்தா யானாற்
கோதிவிடு மாவினெய்யும் அக்கினியும் போலக்
கொடுமைமெத்தச் செய்யுமடா கூறி னேன்கேள்
பேதியாய் மனத்தொருமை யாகி நின்று
பிதற்றாம லிப்படியே செய்தோர்க் கெய்துஞ்
சோதியா மென்மகனே யென்றாள் தாயுஞ்
சோதிச்சு ஆடினேன்நான் சூத்திரம் முற்றே. (47)

நாற்பத்து முக்கோணஞ் சக்கரவிதி சூத்திரம் முகிந்தது: முற்றும்;

இ. பிற்குறிப்பு

அழகியனாசாரி மகன் கோபாலனாசாரி சுப்பிரமணியனாசாரி மாடசுவாமி சுவடியாகிய நாற்பது முக்கோண சக்கர விதிச் சூத்திர மெழுதினேன். நன்றாக.

## 1891. அகத்தியர் சித்தாந்த வேதாந்தம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1518

ஆ. ட/230

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் சித்தாந்த வேதாந்தம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 21 ஏடு; 41 பக்கம்.

ஆ. நீளம் 21·5 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 11 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியந்த மானபரி பூரணமே தானாய்
அண்டரண்ட கடாகமெல்லாம் நிறைந்த சோதி
நீதியென்ற காரணமாய்ச் சத்த லோகம்
நீரடர்ந்த சத்தசா கரங்க ளென்றும்
வேதியென்ற பருபதங்கள் மேரு வென்றும்
...... ..... ..... ......
பேதியென்ற யோனியினாற் தோற்ற மேழு
பிறப்பிறப்பின் வகையெல்லாம் பேசு றேனே. (1)

ஆ. முடிவு

பாரய்யா யிடையனுட பலத்தி னாலே
பதியான மடையனுட விந்தி னாட்டஞ்
சேரய்யா தடையறவே பத்தி முத்தி
சித்தியாஞ் சென்மாந்திர மந்திர பீடங்
காரய்யா யெந்நாளுஞ் சினம்வி டாமல்
காத்தவர்க்குக் குருபாதந் தலைமே லாச்சுப்
பேரய்யா நரசென்மப் பெரும்பே ராச்சுப்
பிண்டமது ஒளிகண்டார் தேக முற்றே. (102)

இ. பிற்குறிப்பு

அழகியனாசாரி மாடசுவாமி யெழுதின சித்தாந்த வேதாந்தம். நன்றாக. நீடூழி காலம் வாழ்க.

# 1892. அருணாசலப் பதிகம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1519-1

ஆ. ய/112

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. அருணாசலப் பதிகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 10

## 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 3 பக்கம்.

ஆ. நீளம் 27·5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நினவாகி மூலம் நிலையாக நேசம் நிசரூப மான வடிவே
மனமாய்கை பூடி யறிவே கலங்கி மனமு மயங்கிவெகுவாய்
இனமோ டிருந்து யவதி குலைந்து எமதூத ரோடி வருமுன்
மனவேக மான அருணா சலீசர் வரவேணு மெங்க ணருகே. (1)

ஆ. முடிவு

சூதாடி நினதுசிவ சூத்திரத்தில் சுளிவாய் மந்த ஒளிவே
பாதாள கேச உடலோ டிருந்து படுகாணி யாடி நடனம்
வேதாள மாடநதி பாட மூவர் வெளியாகி நின்ற வடிவே
வாதாடி நின்றயரு ணாச லீசர் வரவேணு மெங்க ணருகே. (10)

முற்றும்

# 1893. மயில் பத்து

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1519-2

ஆ. ய/112

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. மயில் பத்து

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 10

## 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.

ஆ. நீளம் 27·5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வற்றாத பொய்கை வளநாடு கண்ட யலைமே லிருந்த குமரா
உற்றா ரெனக்கு ஒருவரு மில்லை உமையாள் தனக்கு மகனே
முத்தாடை தந்து அடியேனை யாளும் முருகேச ரெந்தன் மனதில்
வித்தார மான மயில்மீதி லேறிவர வேணு மெந்த னருகே. (1)

ஆ. முடிவு

மன்றாடு யீசனா னாரே யுந்தன் மலர்வீடு தந்த ருளுவாய்
வண்டூறல் பாயும் வயலூர் செங்கை வடிவே லெடுத்த குமரா
நன்றாக வந்து அடியேனை யாளும் நானா வினோத முருகா
கொண்டாடு வெற்றிமயில் மீதி லேறிவர வேணு மெந்த னருகே.
(10)

# 1694. தோற்றப் பத்து

## 1. நூலகக் குறிப்புகள்

அ: 1519-3

ஆ. ய/112

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ................

ஆ. தோற்றப்பத்து

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 11

## 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 3 பக்கம்.

ஆ. நீளம் 27·5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

இலகிய முகங்க ளாறும் ஏறிய மயிலும் வேலும்
கலமது விடிக கூவுஞ் சாவலுங் கடப்ப தாகும்
அலைதனி லுதித்த சோதி ஆனதோர் மேனி தானும்
நிலைபெற அடியேன் முன்னே நித்தமுந் தோற்ற வேணும்.
(1)

ஆ. முடிவு

சுத்தனை சுவாமி தன்னை சுப்பிர மணியன் தன்னை
வித்தக விநோதன் தன்னை வேலையுளக் கடவு ளானை
பத்தருக் கன்புள் ளானை பன்னிரு தோளன் தன்னை
அத்தனை முருக வேளே அடியேன்முன் தோற்ற வேணும்.
(11)

## 1895. முருகன் மாதப் பதிகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1519-4

ஆ. ய/112

### 2. உள்ளீடு; நூல் விவரம்

அ. ...............

ஆ. முருகன் மாதப் பதிகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 3 பக்கம்.

ஆ. நீளம் 27.5 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பத்திபத்தி யாமுழங்கும் பள்ளிமலை நன்னாட்டில்
நித்தியம் புகழ்வையகவூர் நிறைந்திருக்கும் நாராய்கேள்
சத்தியமாய் வாதமெனது தான்மருவிப் போனவர்தான்
சித்திரையிலும் வரக்காணேன் செங்கைவடி வேலோனே.(1)

ஆ. முடிவு

நங்கை மிக்கூடும் நற்பழனி நன்னாட்டில்
செங்கனி வாயிலுண்டு தெருவில்நிற்கும் நாராய்கேள்
எங்கனி வாய்சேர்ந்து எனைமருவிப் போனவர்தான்
பங்குனியில் வரக்காணேன் பச்சைமயில் வேலோனே. (12)

## 1896. தண்டலையார் சதகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1520
ஆ. ய/113

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. படிக்காசுப் புலவர்
ஆ. தண்டலையார் சதகம்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 12 ஏடு; 23 பக்கம்.
ஆ. நீளம் 27·5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது;
ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. பொதுவாக நல்ல நிலை.
எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அண்டர்க ளமுத முண்ண அலைகடல் நஞ்சை யுண்ட
வண்டணி குழலி னாளை மாதுமை பங்கன் பாதந்
தெண்டனிட் டிடுவார் சாலச் சிவபுரா ணங்க ளோத
தண்டலை மாலை சொல்ல தந்திமா முகவன் காப்பு. (1)

ஆ. முடிவு

தாயறிவாள் மகளருமை தந்தையுந்தா
   னறிவானே தருமந்தானே
வாய்மையிடந் தூதுசென்ற தண்டலைநீ
   ணெறியாரே மனிதர் காணும்

பேயழிவு முழுமூடர் தமிழருமை
    யறிவாரே பேசிய வாறே
நாயறியா யாதொருச்சந் திப்பானை யென்றுஞ்
    சட்டியென்றும் நடக்கை யாமே. (52)

## 1897. பட்டினத்தார் பாடல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1521

ஆ. ற/139

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பட்டினத்தார்

ஆ. பட்டினத்தார் பாடல்; நெஞ்சொடு புலம்பல்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3 தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 15 பக்கம்.

ஆ. நீளம் 27.5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7, 8 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

### 4 சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரியயனுங் காணாத யானந்தப் பேரொளியை
எரிசுடரில் நெய்யதுபோ லேற்றிவணங் காமல்
பரியுவ ரதுமக்கள் களஞ்சியமும் வாழ்விதென்று
பெரிதுபிர தாபமென்னப் பேசினையே நெஞ்சகமே. (1)

ஆ. முடிவு

நாடிப் படித்து நன்ன கரியூட்டிப் பாயத்
தேடித் திரிந்து சிவபதத்தைப் போற்றாமல்
வாடித் தவித்து வயிறுபசி யாற்றாமல்
ஆடித் திரிந்து வலைக்குள் புகுந்து
ஊனை யென்றாய் நெஞ்சகமே, (51)

## 1898. திரிகடக வெண்பா

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1522

ஆ. ள/69

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. திரிகடக வெண்பா

இ. நீதிநூல்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு, 10 பக்கம்.

ஆ. நீளம் 27·5 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூவிலுறை மாது புவியோ ரழியவெனது
தாவுதிரிகடக வெண்பாச் சாற்றவே – மூவுலகில்
வடமோ கயிலைதனில் வடமொழிநன் னூலெழுதுங்
காகாடக் குஞ்சரக்கண் காப்பு. (1)

(யாப்பு ஒழுங்கில்லை)

ஆ. முடிவு

சிலவில்லாச் சிலவுசெய் வோனுஞ் செண்மையில்லாக்
களவில்லாக் களவுகற் றோனும் – உலகிலில்லா
வழக்கை யெடுத்துரைத்தோ ளிம்மூன்றும்
பிலமற்று வூரிழந்த பேரு. (52)

# 1899. திருவாசகம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1523
ஆ. ண/54

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மாணிக்கவாசகர்
ஆ. திருவாசகம்
இ. சைவத்திருமுறை
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 109 ஏடு; 218 பக்கம்.
ஆ. நீளம் 12 செ. மீ.; அகலம் 5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 17 வரி.

உ. சிறிய, அழகிய, தெளிவான கையெழுத்து.

ஊ. பல ஏடுகள் முறிந்துள்ளன. சுமாரான நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 2 காண்க.

## 1900, சோதிடச் செய்திகள்

1. நூலகக் குறிப்புகள்

அ: 1524
ஆ: வ/73

2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ...............
ஆ. சோதிடச் செய்திகள்
இ. சோதிடம்
ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 22 ஏடு; 41 பக்கம்

ஆ. நீளம் 23 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஆதித்தன் – உறைப்பு ரசத்துக்குடையவன். சர்வகிரகத்துக்கு பலவான். பிராணகாரகன்– ஆண், ஆகிருதி, சமன், யௌவ்வனம் இராஜகாரகன் – பாவக்கோள் – தாம்பிரம். பிதிர்காரகன் – மாணிக்கம், சிவப்பு வஸ்த்திரம் – சந்திரன்.

ஆ. முடிவு

அஞ்சது கடக மாகி சேயதில் இருக்கும் சந்திரன்
மிஞ்சியே யீரா ரெட்டில் ஆறய்ந்தில் இருந்திட்டாலும்
தஞ்சமா ரெண்டு நாளில் சனித்தவன் உயிர்போ மம்மா.

## 1901. மனையடி சாத்திரம்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1525

ஆ. வ/74

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. ...............

ஆ. மனையடி சாத்திரம்

இ. சோதிடம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 25 பக்கம் வரும்.

**3. தோற்றக் கூறுகள்**

அ. 26 ஏடு; 52 பக்கம்.

ஆ. நீளம் 32.5 செ. மீ.: அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

யோனி சர்பம்; அங்கிஷ்ஞ் சத்தி;
ராசி மீனம்; வர்ணம் வசியம்;

ஆ. முடிவு

வயது61, கருடன், சித்தயோகம்,
கெர்ப்பம்3, திஷ்டி2, மனுச கணம்,
சுக்கிர தசை.

## 1902. அருளானந்தர் சரித்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1526

ஆ. ம/32

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . . .

ஆ. அருளானந்தர் சரித்திரம்

இ. உரைநடை இலக்கியம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

3. தோற்றக் கூறுகள்

அ. 169 ஏடு; 338 பக்கம்.

ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. சற்றே கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முத்திபேறு பெற்ற தேபிரித்தே வென்னும் அருளானந்தர் கர்த்தர் பிறந்த 1647ஆம் ஆண்டில் போர்ச்சுக்காலி ராச்சியத்துக்கு இராசதானியான லிஸ்போனென்னு மாநகரில் உயர்ந்த கோத்திரத்திற் பிறந்தார். இவருடைய தாய், தகப்பன் மேலான உத்தியோகங்களைச் செலுத்தி மிக்குள்ள திரவியங்களைச் சம்பாதித்தும் இவ்வுலக வாழ்வு மகிமையை நம்பாமற் பத்தி விசுவாசமுள்ளவர்களாயிருந்தார்கள்.

ஆ. முடிவு

பிராமணருடைய வித்தை மாந்திரிய சூனியமெல்லாம் வியர்த்தமாகப் போனதாகக் கண்ட சகலரும் நகைத்திகழ்ந்து சிரிக்கிறதாக இராசாவறிந்து தனக்குங் கோபத்தை யடக்க மாட்டாதவனாய்ச் சுவாமியாரைத் தன் சமூகம்முன் கூட்டிக் கொண்டு வரக் கற்பித்தான். சுவா............

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

# 1903. அகத்தியர் சூத்திரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1527

ஆ. மு/44

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் சூத்திரம் 8

இ. மாந்திரீகம்

ஈ. செய்யுள் 8

## 3. தோற்றக்கூறுகள்

அ. 3 ஏடு; 5 பக்கம்.

ஆ. நீளம் 28 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சிவயவசி சிங்அங்உங் கென்று திரும்பவே
அரிகிலியு மங்கென் றோது சரிதை யொடு
கிரிகையது ஞானம் பாதம் தப்பாது
ஓங்கிலியும் சவ்வென்றோது பரிசமொடு
பூரணத்தி லியங்கும் வாய்வு பார்க்கையிலே
ஓம் சிவய வசியென்றோது துரியமடா
துரியத்தில் அப்பும் உப்புந் சூட்டுறேன்
பாரை யுப்பைச் சொல்லு றேனே. (1)

ஆ. முடிவு

குறியான அகாரமே உகார மாச்சு
குற்றமில்லா முதலெழுத்து மிதுமிது னுள்ளாச்சு
அழியாத பொருளாவி யிதனுள் ளாச்சு
அனைத்துயிர்க்குப் பிறப்பிறப்பு யிதனுள் ளாச்சு
வழியாக யிதுமூன்றுஞ் செத்தோர் சித்தன்
வினியற்றிய எழுமுடனென்றக் கழுதையு மாச்சு
ஒளியாகும் சோதிமணி யிதுவே யார்க்கும்
உயர்வைத்த நாகமணி கீரீடந் தானே. (8)

அகத்தியர் சூத்திரம் எழுதி முற்றும்.

## 1904. யானை விருத்தம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1528-1

ஆ. ய/114

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. யானை விருத்தம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 1

### 3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்.

ஆ. நீளம் 26 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7,8 வரி.

உ. கிறுக்கலான கையழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எண்டிசையு மண்டபகி ரண்டமு தண்டசெகத்
தண்டவுல கங்கள்பலவும்
ஏகமதெ லாந்திரண் டோருருவெ டுத்தெண்ண.
றாவிதச கப்பொருப்பை
இணக்கித் திரட்டிப் பொருத்திச் சமைத்து
வைத்ததென வுன்னிதய ப்ரகாசத்து

ஆ. முடிவு

பாதரபதி யதிபதி கிர்டபதி வரபதி
மனோகரிக வாசாலரே
மனமதனில் நாடும்வகை உதவிசெயும் நாளும்இரு.
மையினுமகு மூதுநபியே. (1)

யானை விருத்தம் 64 அடியும் எழுதி முகிந்தது.
முற்றிற்று. முற்றும்.

## 5. பிற செய்திகள்

64 சீர் ஓரடி என்பதே சுவடியில் பிழையாக 64 அடிவிருத்தம் என எழுதப்பட்டுள்ளது. நபிகள் நாயகத்தின் யானைப்பவனியை வருணித்துப் பாடப்பட்டது.

# 1905. வாள் விருத்தம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1528-2
ஆ. ய/114

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . .
ஆ. வாள் விருத்தம்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 1

## 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்;
ஆ. நீளம் 26 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ. கிறுக்கலான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

வால சந்திர சூரியப் பிரகாசங் கோடி
மகிமைப் பிரகாச மொளிர
வானுடு வினங்கள் பலபொலு பொலென்று
மலர்வர்க் கங்கள் போலுதிரவே
மருவலர்கள் பஞ்சுக் கனல் போலவே கண்ட
மாற்றலர் மயங்கி யழிய
மாதிரங்களு மண்டபகி ரண்டமூ தண்ட
மகிதலங்களும் நடுநடுங்க.
... ... ... ... ...

ஆ. முடிவு

சங்கைநும் மகளினுட னேபேசி நின்றவாள்
தானுடைய அலிமாதுலோய்
சகலஉயிர் அகிலாண்ட கோடியும் புகழவரு
சம்பூர ணக்குரிசிலே
தனியேனை இனிதாள வரஞானம் அருள்நீதி
தரவேணும் மகுமூதரே.

**5. பிற செய்திகள்**

இது ஓரடிக்கு முப்பத்திரண்டு சீர்களைக்கொண்ட கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். சுவடியில் பிழையாக அடி முப்பத்திரண்டு எனக் குறிக்கப்பட்டுள்ளது.

## 1906. பரி விருத்தம்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. *1528-3*
ஆ. *ய/114*

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. ...............
ஆ. பரி விருத்தம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 1

## 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 5 பக்கம்.

ஆ. நீளம் 26 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாரசைய வட்டகுலப் பருபதக் கொடுமுடி
பணிந்துகிடு கிடெனவசையப்
பாதாள உலகத்தின் மீதாளு முரகப்
பணாமுடிக ளாயிரமுமே
பம்மிப் பதுங்கித் தியங்கித் தயங்கியே
பதறியுடல் நடுநடுங்க

ஆ. முடிவு

பூபாலர் புகழ்மக்க நகர்வாழு மப்துல்லா
புத்திரசு புத்திர நீரே
பூவில்மிக யெளியேனை யாளுவது கடன்ஞான
போதமருள் மகுமூதரே.

பரிவிருத்தம் அடி முப்பத்திரண்டும் எழுதி முகிந்தது.
முற்றிற்று. முற்றும்.

## 5. பிற செய்திகள்

இது முப்பத்திருசீர் ஓரடி ஆசிரிய விருத்தம்.

## 1907. கொன்றை வேந்தன்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: 1529

ஆ. ள/70

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. கொன்றைவேந்தன்

இ. நீதிநூல்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்;

ஆ. நீளம் 34·5 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பதப்படுத்தப் பெறாத ஏடுகள்.

எ. முழுமை

### 4. சிறப்புச்செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1110 காண்க.

இ. பிற்குறிப்பு

ராட்சத வருஷம் தை மாதம் 6ஆம் தேதி வெள்ளிக்கிழமையுந் தசமியுங் கூடின சுபதினத்தில் கொன்றைவேந்தன் எழுதி நிறைவேறினது. சம்பூரணம்.

சாமிநாதப் புலவன் குமாரன் நாச்சிமுத்துப் புலவனுக்கு எழுதியது. சம்பூரணம்.

## 1908. அபிமன்னன் சுந்தரி மாலை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1530

ஆ. ர/60

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ,,............

ஆ. அபிமன்னன் சுந்தரி மாலை

இ. நாட்டுப்பாடல்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 19 ஏடு; 37 பக்கம்.

ஆ. நீளம் 41 செ. மீ.; அகலம் 2•5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முந்தி விநாயகனே முருகா சரசுபதியே
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே முன்னடவாய்
வேலவர்க்கு முன்பிறந்த விநாயகனே முன்னடவாய்
ஐவருட பாரதத்தை அன்பாக நான்பாட
மெய்யாக வந்துதவும் விக்கினவி நாயகனே
சுந்தரியாள் கலியாணம் தோற்றமுடன் பாடுதற்கு
எந்தனுட நாவில் இருந்தருளும் விநாயகனே.

ஆ. முடிவு

கொக்குத் திரளிலே ராசாளி பாய்ந்தாக்கால்
கொக்குக்குச் சேதமோ ராசாளிக்குச் சேதம்
ராசாளியோ டொக்கும் எங்களத்தை மகன் மசதனனும்
கொக்குத் திரளிடோக்கும் கூத்தியாள் பெற்றபிள்ளை.

## 1909. மங்கல வாழ்த்து

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1531

ஆ. ற/140

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..........., .. ..

ஆ. மங்கல வாழ்த்து

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 12 பக்கம்;

ஆ. நீளம் 30 செ. மீ.; அகலம் 2.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி;

உ. சுமாரான கையெழுத்து;

ஊ. நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நல்ல கணபதியே நான்கால மேதொழுதால்
அல்ல வினையெல்லாம் அகலுமேற் – சொல்லரியு

தும்பிக்கை யானைத் தொழுதால் வினைதீர்க்கும்
நம்பிக்கை யுண்டே நமக்கு.

ஆ. முடிவு

கட்டிலும் மெத்தை காளாங்கி கண்ணுடன் பால்பசுவு
வில்லைச் சரப்பணிச்ச விளிபதக்கம் பெரியகலம்
காணியாச்சி கயநீர்க் கொடுத்து
அத்திடு துத்திப்பட்டு ஆனூடித் தேர்வங்கும்
பச்சவர்ணந் தேவ.....பவழவர்ணக் கண்டா
...... ...... ...... ......

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

## 1910. அகத்தியர் லோக மாரணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1532

ஆ. ல/295

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் 150; லோக மாரணம்

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 150

### 3. தோற்றக் கூறுகள்

அ. 17 ஏடு; 34 பக்கம்.

ஆ. நீளம் 30 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. பொதுவாக நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீரணி கொன்றை சூடுஞ் சிவனிரு பாதம் போற்றி
வாரண முகத்தோன் பாதம் வணங்கிநூற் றன்ப
துஞ்சொலப்
பூரணி வாலை ஞான சரசுபதி போற்றி போற்றி
காரண மான செஞ்சொல் கரம்சூத் திரங்காப்
பாமே. (1)

ஆ. முடிவு

சொன்னது தொகையாம் நூற்றி
யன்பதுஞ் சூட்ச மாகும்
முன்னமே சொன்ன நூலில்
முக்கியம் இந்நூல் சூட்சம்
மன்னிய நூல்கட் கெல்லாம்
வரைமுடித் தீப மென்னாம்
அன்னமே சொன்னோ மிந்நூல்
அருளு டன்றி முற்றே. (147)

150 லோக மாரணம் முற்றும்.

# 1911. தனிப்பாடல்கள்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1533-1
ஆ. ற/141

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............
ஆ. தனிப்பாடல்கள்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள் 11

## 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.
ஆ. நீளம் 37 செ.மீ.; அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அருணெறி யறிந்தபே ராயிரத்தி லொருவர்
பொருணெறி யறிந்தபேர் பதினாயி ரத்திலொருவர்
குருநெறி யறிந்தபேர் கோடியி லொருவர்
கருநெறி யறிந்தபேர் காணவு மரிதே. (1)

ஆ. முடிவு

எய்தரிய பரசிவத்தை மூலந் தன்னில்
இருசுடரு முதித்தொடுங்கு மிடமே யென்று
மெய்தெரியுஞ் சுழிமுனையே கம்ப மாகி
மெய்ப்பொருளாஞ் சோதியென்றே மேவி நிற்கும்
இவ்வகையே மூலமெனும் பாதந் தன்னை
இருநேரந் திடத்தே யிறைஞ்சிக் காணே. (11)

# 1912. இருவகைக் குருவறி விளக்கம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1533-2
ஆ. ற/141
சு. வி 32

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. இருவகைக் குருவறி விளக்கம்.

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 19

## 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 5 பக்கம்;

ஆ. நீளம் 37 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை,

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

காரியக் குருக்க ளென்றுங் காரணக் குருக்க ளென்றும்
பாரினில் வழங்கு கின்ற பருவமே தய்யா வென்ன
ஆரியன் முகம லர்ந்து அன்புடன் கேட்ட பேர்க்கு
சீரிய பேருண் டான திறத்தையும் செப்ப லுற்றார். (1)

ஆ. முடிவு

இடம்வல மாயெ ழுந்த இருசுடர் தன்னைக் காட்டி
உடலிது உயிரி தென்று உற்பவந் தன்னைக் காட்டி
படர்வினை தகர்ந்து போக பகருமந் திரத்தைச் சொல்லி
திடமறிந் தப்பா லின்னம் சிவபதி சொல்வோ மென்பார்.
(19)

## 1913. அருணாசல புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1534

ஆ. ப/59

### 2. உள்ளீடு நூல் விவரம்

அ. எல்லப்ப நாவலர்

ஆ. அருணாசல புராணம்: மூலமும் உரையும்

இ. தலபுராணம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 52 ஏடு; 104 பக்கம்.

ஆ. நீளம் 32 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரி.

உ. சுமாரான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1428 காண்க.

ஆ. முடிவு

புலைச் சென்மச் சாண்டாள ரென்னப்படுமவர்கள் நல்ல சற்குணமுடையவராலும் பொல்லாத பாவிகளென்னப்படும் அவர்கள் உயிருடனே யிருந்தாலும் நடை யாடும் பிரேதப் பிணத்துக்குச் சமான மல்லது அந்தத் திருவருணாசலத்துக்கு...... (54)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1914. மூதுரை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1535

ஆ. ள/71

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. மூதுரை

இ. நீதிநூல்

ஈ. செய்யுள் 30

3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 17 பக்கம்

ஆ. நீளம் 38 செ.மீ.; அகலம் 2·5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. பெரிய கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1150 காண்க.

## 1915. நாலடியார்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1536

ஆ. ங/26

## 2. உள்ளீடு நூல் விவரம்

அ. சமண முனிவர்கள்

ஆ. நாலடியார்

இ. பதினெண்கீழ்க்கணக்கு

ஈ. செய்யுள் 400

## 3. தோற்றக் கூறுகள்

அ. 67 ஏடு; 134 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. பெரிய, தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அறுசுவை யுண்டி அமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப் பாரோ ரிடத்துக்கூ ழெனிற்செல்வம்
ஒன்றாக வைக்கப்பாற் றன்று.

ஆ. முடிவு

கண்மூன் றுடையானுங் காக்கையும் பையரவு
மெண்ணீன்ற யாயும் பிழைத்ததென்—பொன்னின்ற
கோங்கரும் பன்ன முலையாய் பொருள்வயிற்
பாங்கனார் சென்ற நெறி.

ஆகப் பாடல் 400
நாலடியார் முற்றும்.

இ. பிற்குறிப்பு

சாதாரண வருஷம் ஆனி மாதம் 21ம் தேதி புதன் வாரமும் ..........

## 1916. பவளக்கொடி நாடகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1537

ஆ. ற/142

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ........

ஆ. பவளக்கொடி நாடகம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 50 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 30 ஏடு; 59 பக்கம்.

ஆ. நீளம் 42 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விநாயகர் காப்பு

மாமலைசூழ் தடஞ்சோலை வளங்கள் மேவும்
வலியசே ராம்புமன்னர் வரத்தில் வந்த
பார்மகளும் புகழ்ந்தேற்றும் திவ்விய மாது
பவளக்கொடி எனும்பெண்நா டகத்தைப் பாட
சேமநெடு பாரதத்தை வியாசர் சொன்ன
திடமுள்ள கதையெல்லோர் சிந்தை கொள்ள
தாமணிதேன் மழைசெய் நகரில் வாழும்
தந்திமுகத் தைந்துகரன் பதங்காப் பாமே.

ஆ. முடிவு

வெங்கணை விசய துங்கனுக் குரிய
மங்கையே எனக்குத் தங்கையே வாரீர்,
எனது தங்கையே அல்லிமன்ன ரரசே வாராய்
நீ நீடூழி வாழ்வாயாக.

(இதற்குமேல் எழுதப்படவில்லை.)

## 1917. அநுட்டான விதி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1538

ஆ. ற/143

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..........

ஆ. அநுட்டான விதி

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 15 ஏடு; 30 பக்கம்.

ஆ. நீளம் 26 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. சிறிய கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை. முதல் ஏடு இல்லை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

வழிமா நீழல் பசுமந்தை — ..பூமி
குழிமேடு காவரு குக்குள். (16)

ஆ. முடிவு

ஓராயிர முரைக்க நோயுற்றார் நோயற்றா
ரீராயுற் றதைப்பசி யுற்றே. (252)

ஆவலினோ மத்தோ டபிடேகத் தோடுமிகு
பாவ மொழியப் பகர். (253)

## 1918 பராபரத் தத்துவம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1539

ஆ. ட/231

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ...............

ஆ. பராபரத் தத்துவம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 18 ஏடு; 36 பக்கம்.

ஆ. நீளம் 27 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சற்றே சிதைவுற்ற நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலத்தை நின்றிடுங் குஞ்சரத்தைப் போற்றி
முளரிநான் முகன்தனையே முறையா லேற்றி
ஞாலத்தை அண்டமா லடியை வாழ்த்தி
நலஞ்சேர்ந் தருத்திரனை நயந்து பாடி

சீலத்தில் மயேசுவரனைத் தரிசித் தப்பாற்
சிறந்தசதா சிவன்தனையே சிந்தை செய்து
கோலத்தில் நின்றநான் மகளை யன்பாக்
கும்பிட்டென் குருவருளைக் கூட வென்றே.

ஆ. முடிவு

மாடாநாள் பொதியெடுக்கு முழகு மப்பா
வாய்ஞானி யதுக்காகான் மாயக் கூடு
வீடானாற் காத்திருக்கும் நாயே யானால்
வேட்டைக்குப் பலன்கொடுக்கும் வேறுக் கொள்வான்
நாடான கழுதையென்றால் அழுக்குத் தூக்கும்
நலமாக யிதுக்குமொவ்வான் நாட்டு ஞானி
ஊடான தலம்மாறும் உற்றுப் பாரு
ஊருக்குச் சொன்னேன் மொழியின்னம் கேளே. (41)

## 1919. அழகரந்தாதி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1540
ஆ. ய/115

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ...........
ஆ. அழகரந்தாதி
உ: சிற்றிலக்கியம்
ஈ: செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ: 7 ஏடு; 14 பக்கம்.
ஆ: நீளம் 35 செ. மீ.; அகலம் 3.5 செ. மீ.
இ: இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ: ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. சிறிய, அழகிய கையெழுத்து.

ஊ. சிதைந்த நிலை. 3, 7 ஆம் ஏடுகள் முறிந்துள்ளன. 6, 8 ஆகிய ஏடுகள் இல்லை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நீராழி வண்ணனைப் பாலாழி நாதனை நின்மலனைச்
சீராழி யங்கைத் திருமகள் கேள்வனைத் தெய்வப்புள்ளூர்
கூராழி மாயனை மாலலங் காரனைக் கொற்றவெய்யோன்
ஓராழித் தேர்மறைத் தானையெஞ் ஞான்று முரைநெஞ்சமே. (1)

ஆ. முடிவு

அலங்கார ருகருப் பாம்சு வாமிக் கழகருக்குக்
கலங்காரப் பெருங்காட்டு பவர்க்குக் கருத்தன்பினால்
நலங்காது சொற்றொடை யந்தாதியைப் பாணப் பட்டன்
விலங்காரு நீதி மணவாள தாதன் விளம்பினனே. (101)

அழகரந்தாதி முற்றும்.

# 1920. அகத்தியர் ஞானோதயம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1541

ஆ. டா/232

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் ஞானோதயம்

இ. தத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 200 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 9 பக்கம்.
ஆ. நீளம் 27 செ.மீ.; அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்று நதிகிரியென்று படைத்த வாறும்
காரணமாய்த் தேவியரு னிறைந்த வாறும்
கற்பமுண்டு ரிஷிகள்சித்தர் சாகா வாறும்
வாரணமாம் பறவையொடு நாற்காற் சென்ம
மானிடர்கள் கூறுகின்ற குலத்தின் வாறும்
பாரணமாம் நால்வேதம் வந்த வாறும்
பாடுகிறேன் முப்பதுக்குப் பார்க்கத் தானே. (1)

ஆ. முடிவு

தரிசிப்பாய் புலத்தியனே நன்றாய்க் கேளு
செப்பினதோர் நூல்களெல்லாஞ் சுட்டுப் போடு
அரிசிப்பா யோர்வழிமெஞ் ஞானப் பாதை
அடைவதற்கு அடையாள மொன்று சொல்வேன்
பரிசிப்பாய் பத்துமொழி கையிற் கொண்டு
பரப்பிரம மொன்றையே நாடிக் கொண்டு
வரிசிப்பாய் நிலைதவறா மார்க்கந் தேடி
வணங்குமந்த மறைபுகுந்து வாழு வாயே. (22)

# 1921. தேவாரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1542-1
ஆ. ண/55

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருஞானசம்பந்தர் முதலியோர்

ஆ. தேவாரம்

இ. சைவத்திருமுறை

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 228 ஏடு; 456 பக்கம்.

ஆ. நீளம் 27 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 9 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 97, 98 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை; மிகமிகச் சிதைவுற்ற சுவடி.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே,

ஆ. முடிவு

நீரேற வேறுநிமிர் புன்சடை நின்மல மூர்த்தியைப்
போரேற தேறியைப் புக்கொளி யூரவி நாசியைக்
காரேறு கண்டனைத் தொண்ட னாரூரன் கருதிய
சீரேறு பாடல்கள் சொல்லவல் லார்க்கில்லை துன்பமே.(10)

## 1922. நடராசர் மங்களம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1542-2

ஆ. ண/55

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . . .

ஆ. நடராசர் மங்களம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 10 கண்ணி

### 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்;

ஆ. நீளம் 27 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மங்களம் கனகசபை வாசநடராசருக்கு
மங்களம் புகழ்தில்லைவன நாதருக்கு
மங்களம் சிவகாமவல்லி மணவாளருக்கு
மங்களம் அம்பலவாண மகாதேவருக்கு
செயமங்களம் நித்ய சுபமங்களம்.

ஆ. முடிவு

பன்னிரண்டு கண்ணருக்குப் பன்னிரண்டு கையருக்கு
என்னிரண்டு கண்குளிர எழுந்தவற்கு

தன்னிரண்டு தாள்எனக்குத் தந்தருள வந்தவற்கு
முன்னமொரு சூரன்உயிர் முடித்தவற்கு
செயமங்களம் நித்ய சுபமங்களம்.

## 1923. திருப்பதிக் கோவை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1543-1

ஆ. ண/56

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. உமாபதி சிவாசாரியர்

ஆ. திருப்பதிக்கோவை

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 15

### 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 4.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 15 வரி.

உ. அழகான சிறிய கையெழுத்து.

ஊ. சிதைந்துள்ள நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கோயில்திரு வேட்களம்நெல் வாயில்கழிப் பாலை
குலவு...... மயேந்திரப் பள்ளி முல்லை
வாயில்கலிக் காழூர்சாய்க் காடுதிருப் பல்ல
வனீச்சரம்வெண் காடுவளர் திருக்காட்டுப் பள்ளி

தாயிலான் குருகாவூர் கழுமலங்கோ லக்கா
தருக்கிளர்புள் ளிருக்குவே ளூர்கண்ணார் கோயில்
ஞாயிலே கடைமுடியே நின்றியூர் புன்கூர்
நாடியநீ டூர்அன்னி யூர்வேள்விக் குடியே. (1)

ஆ. முடிவு

பொன்னிவட கரையதனில் அறுபதுடன் மூன்றே
புகழ்பெறுதென் கரையதனில் நூற்றிருபத் தேழாம்
மன்னியவீ ழத்திரண்டு பாண்டிபதி நான்கு
மலைநாட்டி லொன்றுகொங்கி லேழுநடு நாட்டில்
இன்னியல்சேர் இருபதுடன் இரண்டுதொண்டை நாட்டில்
எண்ணான்கு துளுவிலொன்று வடக்கில்ஐந்து மூவர்
உன்னியருள் பதிகமுறும் பதிகள்தொகை உரைக்கில்
ஓரிருநூற் றெழுபத்து நான்காம்என்று உரையே. (15)

## 1924. மூத்த திருப்பதிகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1543-2

ஆ. ண/56

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. காரைக்காலம்மையார்

ஆ. மூத்த திருப்பதிகம்

இ. சைவத்திருமுறை

ஈ. செய்யுள் 22

### 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.

ஆ. நீளம் 35 செ.மீ.; அகலம் 4·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 15 வரி.

உ. அழகான சிறிய கையெழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 72–1 காண்க.

ஆ. முடிவு

தொடர் எண் : 72-2 காண்க.

இ. பிற்குறிப்பு

மன்மத வருஷம் ஐப்பசி மாதம் 3ஆம் தேதி.

## 1925. தேவாரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1543-3

ஆ. ண/56

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருஞானசம்பந்தர் முதலியோர்

ஆ. தேவாரம்

இ. சைவத்திருமுறை

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 372 ஏடு; 744 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 4•5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 14, 15 வரி.

உ. அழகிய, சிறிய, தெளிவான கையெழுத்து.

ஊ. மிகப் பழுதுபட்ட சுவடி. பல ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

ஆ. முடிவு

கைமா வுரிவை யம்மான் காக்கும் பலவூர் கருத்துன்னி
மைமாந் தடங்கண் மதுர மன்ன மொழியாள் மடச்சிங்கடி
...... ஞூரன் சடையன் சிறுவன் அடியன் தமிழ்மாலை
செம்மாந் திருந்து திருவாய் திறப்பார் சிவலோ கத்தாரே (10)

இ. பிற்குறிப்பு

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 25 ஆம் தேதி திரவாரமும் பூசநட்சத்திரமுங் கூடினசுபதினத்தில் சோழமண்டல முதல் சுந்தரமூர்த்தி பொதுத் திருப்பதிகமீறாகச் சொல்லப்பட்ட தேவார அடங்கன் முறை 796 பதிகமும் திருத்துருத்தி வாசம் அரிகண்ட பண்டாரத்து மகன் சுவர்கபுரிவாசி சுப்பிரமணிய ஓது வான் அர்ச்சித்து வாசிக்கும் பொருட்டுத் தனது கையெழுத்தத னால் எழுதி நிறைந்தன.

## 1926. சேத்திரக் கோவை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1543-4

ஆ. ண/56

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. சேத்திரக்கோவை

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 17

## 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 4•5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 14 வரி.

உ. சிறிய அழகிய தெளிவான கையெழுத்து.

ஊ. பழுதுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஒன்றாதி யாகிவரும் ஓரெழுபத் தொன்றீறாய்ச்
சென்றார் சிவதலங்கள் செப்புதற்கு—நின்று
கடகுஞ் சரமுகனே காயவிழி யா......ற
கடகுஞ் சரமுகனே காப்பு.

ஆ. முடிவு

தோடுடைய செவியன்முதல் கல்சீறு ஆகச்
சொற்பதினா றாயிரம்நற் றோணிபுரத்து அரசு
நாடுடைய கூற்றாமுன் எண்ணுகைஈறு ஆக
நாற்பத்தொன் பதினாயிரம் நாவுக் கரசு
மோடுடைய பித்தாமுன் வாய்நொடித்தான் ஈறாய்
முப்பத்தே ழாயிரமாம் நாவல்நகர் பெருமான்
ஏடுடைய இலக்கத்தீ ராயிரம தாகும்
இவையிலொன்று தரித்துரைப்போர் இகபரமும்
பெறுவார். (17)

5. பிற செய்திகள்

இத்தமிழ்ச் சுவடி விளக்கஅட்டவணையில் 301 ஆவது நூலாக உள்ள சேத்திரக் கோவை வேறு. (அது திருப்பதிக் கோவை எனவும் வழங்கப்படுகிறது.) இந்நூல் வேறு.

## 1927. வைப்புத் தலக் கோவை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1543–5

ஆ. ண/56

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. வைப்புத் தலக்கோவை

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 7

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.

ஆ. நீளம் 35 செ. மீ.; அகலம் 4·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 15 வரி.

உ. அழகிய சிறிய கையெழுத்து.

ஊ. பழுதுற்ற நிலை,

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

திங்களூர் பிடவூர்கோ விந்தபுத்தூர் குருக்கேத்
திரம்பொதிய மலைதேனூர் விராடபுரம் சூல
மங்கைமா வூர்அளப்பூர் ஊற்றத்தூர் சேற்றூர்
மானிருப மிராப்பட்டீச் சரஞ்சித்த வடங்கா

ளிங்கம்உஞ்சை மாகாளம் நல்லாற்றூர் பேரூர்
ஏமப்பே ரூர்குன்றி யூர்இடவை வெங்கூர்
செங்குன்றூர் வெற்றியூர் மூவலூர் கருப்பூர்
திருத்தேவ னூர்மயிண்டீச் சரம்குடந்தங் குடியே. (1)

ஆ. முடிவு

மறையனூர் பிறையனூர் தேனூர் காலம்
வாந்தையே சீவிளமர் கச்சையூர் விடங்களூர்
நிறையனூர் யேசனூர் பேரனூ ருடனே
நிகழ்த்துமுண்ணீ ரோடகமென் னெஞ்சகலா திருக்கும்
மறையவனார் மருவியவைப் புத்தலங்கள் இவைநூற்
றெண்பத்தா றாகும்இசை யாலிவற்றைத் துதித்தோர்
வினையறுத்துச் சிவகதிய டைந்தின்பம் பெறுவர்
எனமறைவல் லோர்பேசிடுவர் தானே. (7)

(இப்பாடல் வடிவம் செம்மையாக இல்லை)

இ. பிற்குறிப்பு

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 25ஆம் தேதி அடியேன் சுப்பிரமணியன் சுய ஹஸ்த லிகிதமாக அடங்கன் முறையும் சேத்திரக் கோவையும் எழுதி நிறைந்தன. நன்றாக இது எடுத்து நேசித்துப் பூசித்து வாசிக்கும் நாயன்மார்கள் அடியேனுக்குச் சிவஞானம் உண்டாகும்படி திருவுள்ளத்தில் கொண்டருளும்படி எப்போதும் கேட்டுக் கொள்கிறேன்.

## 1928. பெரியபுராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: 1544

ஆ: ண/57

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சேக்கிழார்

ஆ: பெரிய புராணம்

இ: சைவத்திருமுறை

ஈ: செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 282 ஏடு; 564 பக்கம்.
ஆ. நீளம் 27·5 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 10, 11 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. மிகமிகப்பழுதுற்ற நிலை.
எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1451 காண்க.

ஆ. முடிவு

அணிமுத்தின் சிவிகைமுதல் லருள்தாங்கிச் சென்றார்கள்
மணிமுத்த மாலைபுனை மடவார்மங் கலம்பெருகும்
பணிமுற்று மெடுத்தார்கள் பரிசனங்கள் வினைப்பாசம்
துணிவித்த வுணர்வினராய்த் தொழுதுடன்புக் கொடுங்கினார். (251)

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

## 1929. திருவிளையாடற் புராணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1545
ஆ. ப/60

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பரஞ்சோதியார்
ஆ. திருவிளையாடற் புராணம்(விறகு விற்ற படலம் முதல்)
இ. தலபுராணம்
ஈ. செய்யுள் 1333

## 3. தோற்றக் கூறுகள்

அ. 154 ஏடு; 308 பக்கம்.

ஆ. நீளம் 33 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8,9,10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சுவடி 225 ஆம் ஏட்டில் தொடங்கி 383 இல் முடிகிறது. 323–327 ஏடுகள் இல்லை. பல ஏடுகளில் தொளைகள்.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நெடியவன் பிரமன் தேட நீண்டவன் தென்னர்க் கெளியன்
முடியதாஞ் சிவலோ கத்தைக் காட்டிய முறையீ ......
.................. பாடிப் பாணனை விறகா ளாகி
அடிமைஎன் றடிமை கொண்ட அருட்டிற மெடுத்துச் சொல்வாம். (1)

(இது 41ஆவது விறகுவிற்ற படலத்தின் முதல் பாடல்.)

ஆ. முடிவு

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும் பரவுக அறங்க ளின்பம்
நல்குக வுயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக உலகம் எல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

இ. பிற்குறிப்பு

வளரும் விரோதி சம்வச்சரத்தில் மார்கழி மாதத்தில் வருதேதி ஒன்பதில்,ஒளிரும் புதன் வாரமதில் அட்டமி உத்தரத்தில் ஓங்கு கூடலின் மான்மியம், நளிரும் பரஞ்சோதிமுனி பாடல் அறு பத்துநாலு திருவிளையாடலே, தளர் நுண்ணிடை களபமுலை மாதர் மேவிய சுந்தரராசன் எழுதினானே.

(இது 377ஆம் ஏட்டில் உள்ள குறிப்பு)

## 1930. திருவிளையாடற் புராணம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1546

ஆ. ப/61

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. பரஞ்சோதி முனிவர்

ஆ. திருவிளையாடற் புராணம்

இ. தலபுராணம்

ஈ. செய்யுள் 3362

### 3. தோற்றக் கூறுகள்

அ. 303 ஏடு; 606 பக்கம்.

ஆ. நீளம் 27 செ. மீ.; அகலம் 4.5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 11,12,13 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 141 ஆம் ஏடு முறிந்துள்ளது; பல ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளன.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானையின் செய்யபொற் பாதமே.

ஆ. முடிவு

ஏத்தியருச் சனைசெய்து நினைவிலரி
தாயன்பில் எளிய வட்ட
மூர்த்தியையங் கயற்கண்ணி யன்பனைமுப்
போதும்போய் முடிதாழ்ந் தின்பம்

பூத்தமனத் தினராகிக் கருவி......
......... புட்போ லந்த
......... வசிட்டாதி முனிவர்தம்பேர்
வனஞ்செய்து வதிந்தார் மன்னோ. (53)

அருச்சனைப்படலம் முற்றும். ஆகத்திருவிருத்தம் 3360.

இ. பிற்குறிப்பு

(கொல்லம்) 1027ஆய் வருஷம் ஆடி மாதம் 4ஆம் தேதி சுக்கிர வாரமும் அமர பட்சத்துச் சஷ்டியும் பூரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் குட்டத்துறையிலிருக்கும் சுப்பிரமணியபிள்ளை குமாரன் சங்கரலிங்கம் பிள்ளை எழுதினது நீடூழி காலம் வாழ்க.

## 5. பிற செய்திகள்

இறுதியில் இரண்டு ஏடுகளில் ஒவ்வொரு படலத்திலு முள்ள செய்யுட்களின் எண்ணிக்கை அட்டவணையாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

# 1931. தேவாரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1547-1

ஆ. ப/62

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருஞான சம்பந்தர் முதலியோர்

ஆ. தேவாரம் (திருவாலவாய்ப் பதிகங்கள்)

இ. சைவத்திருமுறை

ஈ. செய்யுள் 121

## 3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 18 பக்கம்.

ஆ. நீளம் 27 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. முதல் இரண்டு ஏடுகள் முறிந்துள்ளன. மிக மிகச் சிதைவுற்ற சுவடி.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பாடக மெல்லடிப் பாவை யோடும்
படுபிணக் காடிடம் பற்றி நின்று
நாடக ......... ......... .........
......... ......... வென்கொல் சொல்லாய்
சூடக முன்கை மடந்தை மார்கள்
துணைவ ரோ... ........ ........
......... ........ நெருங்குங் கூடல்
ஆல வாயின்கண் அமர்ந்த வாறே. (1)

ஆ. முடிவு

தூர்த்தனைத் தோண்முடிபத் திறுத்தான் தன்னைத்
தொன்னரம்பின் னின்னிசைகேட் டருள்செய் தானைப்
பார்த்தனைப் பணிகண்டு பரிந்தான் தன்னைப்
பரிந்தவற்குப் பாசுபதம் ஈந்தான் தன்னை
ஆத்தனை அடியேனுக் கன்பன் தன்னை
அளவிலாப் பல்லூழி கண்டு நின்ற
தீர்த்தனை ...... ...... ......
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. (11)

# 1932. திருவிளையாடற் புராணம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1547-2

ஆ. ப/62

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. பரஞ்சோதி முனிவர்

ஆ. திருவிளையாடற் புராணம்

இ. தலபுராணம்

ஈ. செய்யுள் 3361

**3. தோற்றக் கூறுகள்**

அ. 256 ஏடு; 512 பக்கம்.

ஆ. நீளம் 27 செ.மீ.; அகலம் 4 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 11,12 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 78, 79, 92 ஆகிய மூன்றேடுகள் காணப்படவில்லை. 118,146,147,161, 186 ஆகிய ஏடுகள் முறிந்துள்ளன. பல ஏடுகள் மிகமிகச் சிதைந்துள்ளன.

எ. குறை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1546 காண்க.

இ. பிற்குறிப்பு

(கொல்லம்) 1031ஆம் வருஷம் வைகாசி மாதம் 9ஆம் தேதி மங்களவாரமும் அனுஷ நட்சத்திரமுங் கூடின சுபதினத்தில் எழுதி முடிந்தது. முன்னீர்ப்பள்ளம் தெப்பக்குளத்திலிருக்கும் இராமசுவாமியாபிள்ளை குமாரன் தாண்டவமூர்த்தி எழுதினது.

**5. பிற செய்திகள்**

சுவடியின் இறுதியில் படல அட்டவணை எழுதப்பட்டுள்ளது.

## 1933. சீவக சிந்தாமணி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1548*

ஆ. *ந/138*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. திருத்தக்கதேவர்

ஆ. சீவகசிந்தாமணி: நச்சினார்க்கினியர் உரையுடன்

இ. காப்பியம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 250 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 126 ஏடு; 252 பக்கம்.

ஆ. நீளம் 23 செ. மீ.; அகலம் 4 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 13,14 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. அனைத்தேடுகளிலும் தொளைகள். மிகப் பழுதுற்ற நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அருளி லாரி வடமனைய ராயினு
முரிதிரை யுலகெலா முருளு மின்றெனக்
கருதிக் கவரிசாந் தாற்றி வெண்குடை
யரிவையை மறைத்தன ஆல வட்டமே. (351)

ஆ. முடிவு

இவ்வுரையாசிரியர் கருத்துணராது இக்காலத்தார் வேண்டாதனவற்றிற்கு வேண்டுவனவாகக் கருதி இடையிடை

மடுத்த ஆப்புரைகளையும் பாட்டுக்களையும் சொல்வேறு பாட்டானும் பொருள்வேறு பாட்டானும் இலக்கண வழுவானும் வாய்பாட்டின்...த்தாலும் கண்டுதள்ளி எழுதினேன் சிந்தாமணியுரை.

இ. பிற்குறிப்பு

1834ஆம் வருஷம் அட்சய வருஷம் மார்கழி மாதம் 9ஆம் தேதி நாராயணபிள்ளை அவர்களுக்குச் சீவக சிந்தாமணியுரை எழுதினேன் பாளையங் கோட்டைக் கடுத்த குட்டந்தீர்த்த துறையிலிருக்கும் வேதமூர்த்தியா பிள்ளை. இரகுபதி சகாயம்.

## 1934. சதுரகராதி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1549

ஆ. ச/45

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. வீரமாமுனிவர்

ஆ. சதுரகராதி

இ. இலக்கணம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 400 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 170 ஏடு; 340 பக்கம்.

ஆ. நீளம் 36 செ.மீ.; அகலம் 3.5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. இடையிடையே பல ஏடுகள் காணப்படவில்லை. எல்லா ஏடுகளும் மிகச் சிதைந்துள்ளன. மிகமிகப் பழுதுற்ற சுவடி.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அ – முதல் எழுத்து.....பன்மையீறு, உதாரணம்: வாழ்ந்தன; ஆறாவதன் பன்மை உருபு, 2...ம் : நின தாள்கள்: சாரியை, 2...ம் :........

ஆ. முடிவு

10 - அங்கம், சிற்பத் தொழிற் குறுப்பு, சேனைத்தொகை, தசாங்கம், தாளப்ரமாணம், திக்கு, திருமாலவதாரம், துவர், நாடி, மகளிரான் மலர் மரம், வாயு, வேளாண்மை மாந்தரியல்பு.

11 - உருத்திரர், கரணம், நதி.

12 - இராசி, உயிர், மெய்வேதனை, உயிர்வேதனை, சூரியர், மாதம்.

13 - தமிழ்நாடு.

(இதற்குமேல் ஏடுகள் இல்லை)

# 1935. ஆரூட நூல்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1550

ஆ. வ/75

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. ஆரூட நூல்

இ. சோதிடம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 40 பக்கம் வரும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 81 ஏடு; 162 பக்கம்.

ஆ. நீளம் 21 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 1–21, 53, 72, 79, 86, 91-93 ஆகிய ஏடுகள் காணப் படவில்லை. பல ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முந்த வேளை எரித்த முழுமுதல்
சுந்த வேளைப் பயந்த கடவுளர்
ஏந்த வேளையில் எப்படிச் செய்வரோ
அந்த வேளையில் அப்படி ஆகுமே.

ஆ. முடிவு

இந்த ராசாவின் பேரில் படைவர நல்லது.
இந்த வாய்க்கால் வெட்ட நீர்நிறைய நிற்கும்.
இந்த மணியத்தால் லாபம் உண்டாகும்.
இந்தப் பிள்ளைக்குக் காதுகுத்த நன்றாய் வளரும்.

# 1936. அருணாசல புராணம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1551

ஆ. ப/63

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. எல்லப்ப நாவலர்

ஆ. அருணாசல புராணம்

இ. தலபுராணம்

ஈ. செய்யுள் 571

3. தோற்றக் கூறுகள்

அ. 50 ஏடு; 100 பக்கம்.

ஆ. நீளம் 22 செ.மீ.; அகலம் 3•5 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10,11 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. 2,6,14,20,21,24,25,30,31,33,35,36,38-40,44-46,49,50,56,57,60,68,71,74,75 ஆகிய ஏடுகள் காணப்படவில்லை. பல ஏடுகள் சிதைந்துள்ளன.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தொடர் எண் : 1428 காண்க.

ஆ. முடிவு

மேவியரு ணைப்பதியில் மிக்கபுகழ் மாயன்
பாவமகல் வித்திடுப லத்தினையு ரைத்து
தூவில்மயில் பக்கமுறை சோணகிரி நாதர்
நாவியின்ம கிழ்ச்சியையும் நான்முகன்உ ரைப்பான். (31)

பாவந்தீர்த்த சருக்கம் முற்றும். ஆகச் சருக்கம் 11க்கு விருத்தம் 571.

இ. பிற்குறிப்பு

(கொல்லம்) 1004 ஆம் வருஷம் ஆவணி மாதம் 4ஆம் தேதி ஆதித்த வாரம் அன்றைய தினத்தில் எழுதிய அருணாசல புராணம் நீடூழி காலம் வாழ்க.

## 1937. மருந்து செய்முறை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1552

ஆ. ல/296

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. மருந்துகளின் செய்முறை

இ. மருத்துவம்

ஈ. செய்யுளும் உரைநடையும்;
அச்சில் ஏறத்தாழ 60 பக்கம் வரும்;

## 3. தோற்றக் கூறுகள்

அ. 50 ஏடு; 100 பக்கம்.

ஆ. நீளம் 40·5 செ. மீ.; அகலம் 2·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. பல ஏடுகள் முறிவு. மிகமிகப் பழுதுற்ற நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தூதுவளை கற்பம்: தூதுவளை . . மூலமுங்கொண்டு வந்து நிழலில் உலர்த்திப் பொடிசெய்து கொள்ளவும். இப்படி நெய்யிற் கொள்ள உடம்பு பெருக்கும். தேனிற் கொள்ள உடம்பு மெலியும். இப்பொடி வெண்ணையிலிட்டுக் காய்ச்சிக் குடிக்கத் தாது வர்த்திக்கும்.

ஆ. முடிவு

மலசலம் கட்டினால்: முடக்கொற்றான் தழை கொண்டுவந்து அரைத்து விளக்கெண்ணையில் கொதிக்கவைத்துக் கொடுக்க மலசலம் விடும். கை கண்டது.

# 1938. தட்சிணாமூர்த்தி 5

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1553-1

ஆ. ல/297

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. தட்சிணாமூர்த்தி

ஆ. தட்சிணாமூர்த்தி 5

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 5

## 3. தோற்றக் கூறுகள்

அ. ஒரு ஏடு; 2 பக்கம்.

ஆ. நீளம் 32 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5,6 வரி.

உ. கிறுக்கலான கையெழுத்து.

ஊ. மிகமிகச் சிதைவுற்ற ஏடு.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நயந்ததோர் தந்திமுகன் தனைப்ப ணிந்து
நயமாக உரைத்திடுவேன் நந்தி பானும்
தேடியதோர் மந்திரத்தால் அஷ்ட சித்தி
திறமாக ......... யோகி யோர்க்குக்
கூடியதோர் கெந்தமதைச் சிதம்ப ரத்தின்
குணமான காலகனைக் கூட்டி மூட்டி
ஆடியதோர் ஐம்புலனை மூலத் துள்ளே
....... ......கண பதியே காப்பு.

(முதலடியின் முதற்சீர் நாடியதோர் எனற்பாலது ஏட்டில் பிழைபட உள்ளது)

ஆ. முடிவு

இரண்டாம் பக்கம் மிகச் சிதைந்துள்ளதால் படிக்க இயலவில்லை. ''ஒருவருடன் விள்ளாதே அஞ்சு முற்றே'' என நூல் முற்றுப்பெறுகிறது.

## 1939. மருத்துவ அகராதி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1553-2

ஆ. ல/297

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. மருத்துவ அகராதி

இ. மருத்துவம்

ஈ. உரைநடை.
அச்சில் ஏறத்தாழ 20 பக்கம் வரும்.

### 3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்.

ஆ. நீளம் 32 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்குப் பலவித வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. மிகமிகப் பழுதுற்ற நிலை.

எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

புண்டரீகம் என்பது தாமரை
முதியான் கூந்தல் என்பது .....குருந்து.

ஆ. முடிவு

சம்பழம் என்றும் பழம் என்றும் எலுமிச்சம் பழத்திற்குப் பேராம். பஞ்சாங்கம் என்பது அஞ்சு வகை

(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

## 1940. மருத்துவ நூல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1553–3
ஆ. ல/297

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............
ஆ. பெயர் தெரியாத ஒரு மருத்துவ நூல்
இ. மருத்துவம்
ஈ. செய்யுள் 521

### 3. தோற்றக் கூறுகள்

அ. 50 ஏடு; 100 பக்கம்.
ஆ. நீளம் 32 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. 2, 3, 8-11, 14 முதலிய பல ஏடுகள் காணப்படவில்லை. பல ஏடுகள் முறிந்துள்ளன. மிகமிகப் பழுதுற்ற சுவடி.
எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

போச்சொன்று நூலெல்லாம் பொய்ஆ காமல்
    பழிகளாகச் சொல்லிவிட்டேன் நிகண்டுக் குள்ளே
ஆச்சென்று இதைஅறிந்தால் அவனே வாதி
    அறியாட்டால் ஆசானை யடுத்துக் கேளு
மூச்சென்ற வாதியைப்போல் வாதத் துக்கு
    முகிந்ததுவாம் வழலையென்பார் சொல்லார் சொல்லார்
பேச்சென்ற பேச்செல்லாம் இதினா லா......    (6)
    பேறாக என்னூலைப்பேணிக்

ஆ. முடிவு

எருக்கொடு துத்தி இசைந்த நலமெணி
மருக்கிய வாலை மருவு .........
பொருக்கியூ மத்தை புகன்றநா யுருவியும்
தெருக்கிய தென்னிலை செந்த அருகிடே: (521)

(இதற்குமேல் எழுதப்படவே இல்லை)

## 1941. போகர் சூத்திர வெண்பா

1. நூலகக் குறிப்புகள்

அ. 1553-4

ஆ. ல/297

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. போகர்

ஆ. போகர் சூத்திர வெண்பா

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 16

3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு: 4 பக்கம்.

ஆ. நீளம் 32 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. மிகச் சிதைந்த நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதிகுரு பாதம் அனவரத மும்போற்றிச்
சோதிவடி வானசிவ சுந்தரிதன் — பாதம்
நினையாமல் நெஞ்சில் நினைத்தாதி மூலப்
பனைமதக்கை யானைப் பணி. (1)

ஆ. முடிவு

அடுப்பில் எரித்த அரிதாரம் சவ்வீரம்
தொடுப்புடனே சத்ததிற் சொன்னாம் — எடுப்பாகக்
கூட்டி எரிக்கக் குருவாகும் வெங்காரம்;
மாட்டியொரு குப்பிதனில் வை. (16)

வைத்துப் புடம்போடு மா..... ........
(இதற்கு மேல் ஏடுகள் இல்லை)

# 1942. அகத்தியர் வைத்திய சூத்திரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1553-5

ஆ. ல/297

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் வைத்திய சூத்திரம் 50

இ. மருத்துவம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 11 ஏடு; 22 பக்கம்.

ஆ. நீளம் 32 செ. மீ.: அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 7 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. மிகமிகச் சிதைந்த நிலை.

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நாடியதோர் அகண்டபரி பூரணமாய் நின்ற
நாகமுற்றுங் கணேசனொடு கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனாரும் என்னைப் பெற்ற
ஆத்தாளும் நாவதனில் குடிகொண் டேதான்
பாடியதோர் வைத்தியமைம் பதும்தான் சொல்லப்
பண்பான புலத்தியனே இந்நூ லோடே
தேடியதோர் பூரணசூத் திரத்தில் நன்றாய்
தீட்சையொடு ....... ........ மீதே, (1)

ஆ. முடிவு

ஈற்றேடு மிகமிகச் சிதைந்துள்ளதால் படிக்க இயல வில்லை. நூல் ''சாற்றியதோர் வைத்தியமைம் பதும்தான் முற்றே'' என முடிகிறது.

## 1943. சட்டைமுனி சூத்திரம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1553-6

ஆ. ல/297

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சட்டை முனி

ஆ. சட்டைமுனி சூத்திரம் 8

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 8

## 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.

ஆ. நீளம் 32 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 6,7 வரி.

உ. தெளிவான கையெழுத்து

ஊ. மிகச் சிதைந்த நிலை.

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியென்ற கயிலாச ஆயி பாதம்
அழகாக எனையீன்ற அய்யர் பாதம்
சோதியெனும் தென்பொதிகை ஆசான் பாதம்
தொழுதிறைஞ்சி வேதாந்த சூட்சம் சொல்வேன்
ஓதியே உம்மென்றும் அம்மென் றாணி
உரைத்திடவே சாபமெல்லாம் ஓடிப் போகும்
சாதனையா வகாரமது சிகாரங் கூட்டி
............ பத்துலட்சம் வாசி யாமே. (1)

ஆ. முடிவு

ஆச்சிந்த வகையாலே சித்தர் செய்தார்
ஆதியென்ற பராபரைத்தாய் அருளைப் பற்றி
போச்சப்பா தாயினுட வித்தை எல்லாம்
புகழான குருக்களாலே கண்டு தேறு
பேச்சந்தக் குருவருளை வணங்கிக் கொண்டால்
......... பரகதிக்கு இடம்ஆ காதே
பாச்சந்தக் குருபதத்தில் பொருளை எல்லாம்
பாங்காக மனதுவைத்துப் பகரு வாரே. (8)

சட்டை முனியார் சூத்திரம் முற்றும்.

## 1944. அகத்தியர் 50

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1553-7

ஆ. ல/297

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. அகத்தியர்

ஆ. அகத்தியர் 50

இ. மருத்துவம்

ஈ. செய்யுள் 50

### 3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்; (ஏட்டெண் 22 முதல்)

ஆ. நீளம் 32 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. ஓரளவு தெளிவான கையெழுத்து.

ஊ. 24ஆம் ஏடு முறிந்துள்ளது: 28,29ஆம் ஏடுகள் இல்லை மிகமிகப் பழுதுற்ற சுவடி.

எ. குறை

### 4. சிறப்புச்செய்திகள்

அ. தொடக்கம்

வாதம்தான் எண்ப தாகும் வருகின்ற பக்க வாதம்
சீதமே நடுக்கு வாதம் சிறந்திடு முடக்கு வாதம்
சூதமே சந்து வாதம் தோன்றிய முகத்து வாதம்
பேதமாம் வாதம் தீரப் பெருத்திடும் மருந்து கேளே. (1)

ஆ. முடிவு

போமிது பொன்னாங் காணி புகல்சிறு கீரை முத்தம்
ஓமிது சீந்தில் நிம்பம் உயரும்நா ரத்தை கோஷ்டம்

ஆமிது மதுரம் ஏலம் அடருசெண் பகப்பூ வங்கம்
நாமிது சொன்னோம் எண்ணெய் நயந்துநீ முழுகு வாயே.
(50)

அகத்தியசுவாமி வைத்தியம் 50 முற்றும்.

## 1945. அகத்தியர் முப்பூ சூத்திரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1553–8
ஆ. ல/297

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அகத்தியர்
ஆ. அகத்தியர் முப்பூ சூத்திரம் 50
இ. மருத்துவம்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 14 ஏடு; 28 பக்கம்.
ஆ. நீளம் 32 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. மிகு சிதைவு.
எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மயமான முப்பூவின் மார்க்கந் தன்னை
வைத்தியத்தி லாக்கியே விரித்துச் சொல்ல
செயமான கணபதியுங் கந்தன் தானும்
சிவனோடே யுமைபார்ப தியும்நிரு வாணி

நயமாக எப்போது முன்னே நின்று
நாடியே முப்பூவை நயந்து கேட்க
லயமாகச் சொல்லுகிறேன் அன்ப துக்குள்
வைத்தியரே இப்பொழுது வணங்கிக் கேளே.

ஆ. முடிவு

காலான வைத்தியத்தை யுறுதி யாக
கைமுறைகள் தப்பாமற் கருவாய்ச் செய்தால்
பாலான நிறமுடைய ...... னாவான்
பாரிலே வாழ்வதற்குக் குருவு மாவான்
சேலான திருவுடைய செல்வ னாவான்
சிந்தையிலே களங்கமற்றால் சித்த னாவான்
நாலான மணிபோற்றும் பிரமன் சொன்ன
நலமுடைய முனிவன்மொழி நாடி முற்றே. (50)

## 5. பிற செய்திகள்

இச் சுவடியின் இறுதியில் உள்ள 10 ஏடுகளில் வேறு சில மருத்துவக் குறிப்புகளும் உள்ளன. ஏடுகள் மிகவும் சிதைவுற்றுள்ளன.

# 1946. திருவெம்பாவை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1554-1
ஆ. ண/58

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மாணிக்கவாசகர்
ஆ. திருவெம்பாவை
உ. சைவத்திருமுறை
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.

ஆ. நீளம் 19 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. நல்ல நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதியும் அந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதா ரமளியின் மேல்நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். (1)

ஆ. முடிவு

போற்றி யருளுக நின்றாதியாம் பாதமலர்
போற்றி யருளுக நின்னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல்லா வுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லா வுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லா வுயிர்க்கும் ஈறா மிணையடிகள்
போற்றி மாநான் முகனுங் காணாத புண்டரிகம்
போற்றி யாமுய்ய வாட்கொண் டருளும் பொன்மலர்கள்
போற்றி யாமார்கழி நீராடேலோ ரெம்பாவாய். (20)

## 1947. திருப்பொற்சுண்ணம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1554-2
ஆ. ண/58

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. மாணிக்கவாசகர்
ஆ. திருப்பொற்சுண்ணம்
இ. சைவத்திருமுறை
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்.
ஆ. நீளம் 19 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 8 வரி.
உ. தெளிவான கையெழுத்து.
ஊ. நல்ல நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முத்துநற் றாமம்பூ மாலை தூக்கி
    முளைக்குடந் தூப நற்றீம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளு
    நாமகளோடு பல்லாண் டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
    கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனையா றம்மானைப் பாடியாடப்
    பொற்சுண்ண மிடித்து நாமே. (1)

ஆ. முடிவு

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியுமாய் முற்று மாயினார்க்குப்
பந்தமுமாய் வீடுமா யினார்க்கு
ஆதியு மந்தமு மாயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணமி டித்துநாமே. (20)

## 1948. ஆத்திசூடி

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-1

ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ஔவையார்

ஆ: ஆத்திசூடி

இ: நீதிநூல்

ஈ: செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை. இச்சுவடிக் கட்டில் பல ஏடுகள் சிதைந்தும் பூச்சரித்தும் உள்ளன. முதலிலுள்ள 4 ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளன.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1118 காண்க.

## 1949. நஞ்சுண்டர் மாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-2
ஆ. ள/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............
ஆ. நஞ்சுண்டர் மாலை
இ. பிற தோத்திரங்கள்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்.
ஆ. நீளம் 39 செ.மீ.; அகலம் 3 செ.மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நஞ்சுண்டர் மாலை நயமுடன் பாடக்
கஞ்சன் மருகன் கணபதி காப்பு.

ஆ. முடிவு

அய்யா போற்றி அரனே போற்றி
மெய்யா போற்றி வினாயகா போற்றி.

## 1950 நீதியொழுக்கம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-3

ஆ. ஏ/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............

ஆ. நீதிவெண்பா

இ. நீதிநூல்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு, 8 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1216-2 காண்க.

## 1951. கொன்றைவேந்தன்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-4

ஆ. ள/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஔவையார்

ஆ. கொன்றைவேந்தன்

இ. நீதிநூல்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 13 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது;

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி;

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1110 காண்க.

## 1952. உலகநீதி

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-5

ஆ. ள/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. உலகநாத பண்டிதர்
ஆ. உலகநீதி
இ. நீதிநூல்
ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 13 பக்கம்.
ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சிதைவுற்ற நிலை,
எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1124 காண்க.

## 1953. ஆண்புத்தி மாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-6
ஆ. ள/72

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. .............
ஆ. ஆண்புத்தி மாலை

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 9 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4, 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை,

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆண் புத்தி மாலை அடவுடன் படிக்க
மாண் புத்தி ஈகுவன் வாரண முகவனே.

ஆ. முடிவு

வோதுந் தொழிலை மறவா தேயடா
வெளவிப் பிடிக்க வாழ்வுண் டாமடா.

# 1954. பெண்புத்தி மாலை

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-7

ஆ. ள/72

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. பெண்புத்தி மாலை

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 9 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4, 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை,

எ. குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பெண்புத்தி மாலை பேணிப் படிக்க
வண்புத்தி ஈகுவன் வாரண முகவனே.

ஆ. முடிவு

வோதுவ தெல்லாம் ஒருகிரமம் பட்டி
வெளவி நல்வழியில் வாழ்வு பெற்றிரடி.

## 1955. வேலவர் தாலாட்டு

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-8

ஆ. ள/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. வேலவர் தாலாட்டு

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

3. தோற்றக்கூறுகள்

அ. 12 ஏடு; 23 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அம்மையுமை யாள்புதல்வன் ஆறுமுக வேலவர்மேற்
செம்மைதிகழ் தாலாட்டைச் செப்பவே—இம்மைதிகழ்
ஆரா ரணியணிந்த அந்திவண்ணன் தந்தைமைந்தன்
காரானை மாமுகனே காப்பு.

ஆ. முடிவு

கொட்டமிட்ட அசுரர்தம்மைக் கொன்றோன்
கோழிக் கொடிவாழிக் குகன்வாழி
அணைவோர் வாழி
மட்டுலவுந் தென்பழனி வடிவேல் வாழி
மயில்வாழி அயில்வாழி வாழிதானே.

## 1956 கடுவெளிச்சித்தர் பாடல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-9

ஆ. ள/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. கடுவெளிச்சித்தர்

ஆ. கடுவெளிச்சித்தர் பாடல்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 8 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

பாபஞ் செய்யாதிரு மனமே—நாளைக்
கோபஞ் செய்தே—எமன்
கொண்டோடிப் போவான்
பாபஞ் செய்யா திருமனமே.

## 1957. உதயராகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-10

ஆ. ள/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..........

ஆ. சிவசுப்பிரமணிய கடவுள் பேரில் உதயராகம்

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . .
ஆ. வள்ளிநாயகி மாலை
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 11

## 3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 6 பக்கம்.
ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சேவியேன் துதியேன் கைதொழ நின்னைச்
சிந்தையேன் வந்தனை யறியாப்
பாவியான் பிறந்தபல் வினைத விர்ப்பாய்
பராக்கிரம வீமனைப் பகையால்
ஆவிவாங் குவதே கருத்தெனக் கருதி
யாடர வுயர்த்தவன் பதித்த
வாவின னகழுமேல் வண்டுரு கொண்டோன்
மருகனே வள்ளிநா யகனே. (1)

ஆ. முடிவு

கண்ணுறக் கருத்தி லறிந்துறப் புணர்ந்து
காதலோ டாதரித் தடியேன்
எண்ணுதற் கரிய யிணையடி யதனி
லிருக்கும்நா ளெந்த னாரருள்
விண்ணுல களித்து வெய்யநூற் றுவற்று
மேவிய ஐவருக் கிங்கன்
மண்ணுல களித்து வடத்தின்மேற் துயின்றோன்
மருகனே வள்ளிநா யகனே. (11)

## 1959. கருடப் பத்து

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-12
ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ...........
ஆ. கருடப்பத்து
இ. பிற தோத்திரங்கள்
ஈ. செய்யுள் 12

### 3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 7 பக்கம்.

ஆ. நீளம் 39 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூரணனே பதினாறு திங்கள் சேரும்
    பொருந்தியே யருக்கன்பதி னெட்டுஞ் சேரும்
காரணனே கரிமுகில்பொன் மேனி சேரும்
    கருணைபெருங் கட்டாச்சரங் கலந்து வாழும்
வாரணனே லட்சுமியோ டெட்டுஞ் சேரும்
    மதிமுகம்போல் நின்றிலங்கும் மாயா நேயா
ஆரணனே ரகுராமா கருடன் மீதில்
    அன்புடனே ஏறிவந் தருள்செய் வாயே. (1)

ஆ. முடிவு

துளபமணி மார்பழகா சுகத்தைத் தாதா
சுருதியே மெய்ப்பொருளே வரத்தைத் தாதா
களபகத் தூரியனே கடாட்சந் தாதா
கஞ்சனைமுன் வென்றவனே கருணை தாதா
பழம்பொருளே சிவஜோதி பாக்கியந் தாதா
பத்திமுத்தி சித்திசெய்யவுன் பாதந் தாதா
அளவில்லா மெய்ப்பொருளே கருடன் மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய் வாயே. (12)

## 1960. கஜேந்திர மோட்ச கீர்த்தனை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555–13

ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. கஜேந்திர மோட்ச கீர்த்தனை

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்;

ஆ. நீளம் 39 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

விடுத்துயர் கருடன் மேலேறி ஆயிரம்படம்
விரித்தெழு மணிச்சூட்டுச்–சேஷ
மெத்தைதுறத்து திருமார்பிற் பளப ளென்ன
விளங்கிய எழில் காட்டி
.... .... ...... ......

ஆ. முடிவு

... ... ... ...
வேகமொடு சென்று மரகத மாலைபோ லெதிர்நின்று
நீதிகைத் தஞ்சாதே யஞ்சாதே யென்று
நெடிய முதலையைக் கொன்றிடா தொலைத்தன்று
மூலமென் றழைத்த யானையைக் காத்தருள்
முகுந்தனைப் பணிநெஞ்சே.

## 1961. அழுகணிச் சித்தர் பாடல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-14

ஆ. ள/72

2. உள்ளீடு : நூல் விவரம்

அ. அழுகணிச் சித்தர்

ஆ. அழுகணிச் சித்தர் பாடல்

இ. தத்துவம்

ஈ. செய்யுள் 32

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 8 பக்கம்

ஆ. நீளம் 39 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலப் பதியடியோ மூவிரண்டு வீடதிலே
கோலப் பதியடியோ குதர்க்கந் தெருநடுவே
சாலப் பதிதனிலே தணலாய் வளர்ந்தகம்பம் உந்தன்
மேலப் பதிதனிலே என்கண்ணம்மா விளையாட்டை... *(1)*

ஆ. முடிவு

வெட்டுண்ட சக்கரத்தால் வேணதன மளித்துக்
குட்டுண்டு நின்றேனடி – கோடிமனு முன்னாலே
குட்டுண்டு நில்லாமற் – கோடிமனு முன்னாக
வெட்டுண்ட பிணிநீக்கி – என் கண்ணம்மா
விளித்துவெளி காட்டாயோ. *(32)*

# 1962. ஞான ரத்தினக் குறவஞ்சி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555–15

ஆ. ள/72

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. ஞானரத்தினக் குறவஞ்சி

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 11 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பொன்னுலகு பொருந்துமன்ப பொருளரியத் தனமறிய
மின்னுலகில் மெஞ்ஞானம் விளங்கக்குற வஞ்சிதனை
உன்னாமத் தன்னினைவி லுன்னியுதிப் ......காயத்
தன்னிறையைத் தன்னினைவாய்த் தரிப்பது காப்பாமே.

ஆ. முடிவு

அட்ட கெசங்க ளறிந்திட மெவ்விடஞ் சிங்கி–அது
எட்டு விதமா யெழுதும் பலனடா சிங்கா.
உற்ற ஞானப் பொருளுத்தியாய்ச் சொன்னதா சிங்கி–அது
உற்றமா பீருமுகம்ம துரைத்தது சிங்கா.

# 1963. முருகரந்தாதி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555–16

ஆ. ள/72

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..........

ஆ. முருகரந்தாதி

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

**3. தோற்றக் கூறுகள்**

அ. 7 ஏடு; 14 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

ஆறுமுக னாறுதலத் தையன் முருகையன்மேற்
பேறுதரு மந்தாதி பேசுதற்கு — வீறுதரு
மைந்துகர நால்வாயா னான்றமுக்கட் டோனறுகும்பக்
கந்தமதத் தந்திமுகன் காப்பு.

ஆ. முடிவு

சாற்றிய வாயின்மும் மூன்றையும் சாத்தித்த னுக்கரிய
சீற்றமுதற் பதின்மூன் றையுந்தள்ளிச்சி... யென்றே
காற்றை விளித்துக் கதிரு டிருந்துங் கருத்தருளும்
வேற்றுமை ...யிருப்பா ...... ...... (30)

## 1964. கீதாமிர்த சாரம்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1555–17

ஆ. ள/72

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. ..............

ஆ. கீதாமிர்த சாரம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 7 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை,

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஜாவளி

இராகம்: பியாக. தாளம்: ரூபகம்

கந்தநாதா இந்தவேளை கருணைசெய்ய வேணுமே
—கந்த

தொந்தமுடைய பந்தவிடைய துன்பத் தழுந்தி வெம்பினேன்
சிந்தை தெளிவ தெந்த வகையின் செம்பொற் பாதம்நம்பினேன்
—கந்த

ஆ. முடிவு

.... .... ...

மதபொரு வினைபுரி விதமிக மீறும்
மயல்வில கிடவரு முயர்கதி தேறும்
அதிக மதியது தந்தாள விடையேறும்
அரனது செவிதனி லொருபொருள் கூறும்
—ஆதி

வந்தனு தினந்தொழு மதுரப் பிரபந்த
மாம்பழந்... ... ...

(இதன் தொடர்ச்சி ஏடு இல்லை)

## 1965 மதுராபுரி அம்பிகை மாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-18

ஆ. எ/72

2. உள்ளீடு நூல் விவரம்

அ. குலசேகர பாண்டியன்

ஆ. மதுராபுரி அம்பிகை மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 11 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ, குறை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

தொடர் எண் : 1111 காண்க.

## 1966. இராசகோபால மாலை

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-19

ஆ: ள/72

2. உள்ளீடு நூல் விவரம்

அ. . . . . . . . . . .

ஆ. இராசகோபால மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 31

## 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 8 பக்கம்;

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ;

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது;

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நந்தன்மகன் மோதகத்தி லவரையில் வாழும்
    ராசகோ பாலனருள் மாலை தன்னை
விந்தைசெரி பூவுலகில் நீதி சாரம்
    விபரமுட னடியேனும் விளம்பும் பாடற்
பந்துமுலைத் தெய்வானை வள்ளி பங்கன்
    பாரமயி லேறிஒயிற் பவனி மீதிற்
கந்தனுக்கு முன்பிறந்த ஐங்கரத்தோன் சித்திக்
    கணபதியை யிருசரணங் காப்புத் தானே.

ஆ. முடிவு

இட......யிகழ்ந்து வின்சொல்லும்..சக்க ரென்றும்
அடந்த வர்க்கிடுக்கஞ் செய்தால் அதுபழிபோ காதையா
நடந்தவர் வீடு நன்றாய்த் தூக்கியே யடிவைத்தாலும்
நடந்தகா விடருமையா ராஜ கோபால மாலை. (31)

## 1967. வீடணன் அறிவுரை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555–20

ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. வீடணன் அறிவுரை

இ. காப்பியம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 20 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிவைுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம். ஆ. முடிவு

தொடர் எண்: 1296

## 1968. வடமொழி நீதி சாரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555–21

ஆ. ள/72

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ........

ஆ. வடமொழி நீதி சாரம்

இ. நீதி நூல்

ஈ. செய்யுளும் உரைநடையும்.

## 3. தோற்றக் கூறுகள்

அ. 30 ஏடு; 60 பக்கம்.

ஆ. நீளம் 39 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை. இடையிடையே ஏடுகள் முறிந்துள்ளன

எ. குறை

## 4. சிறப்புச் செய்திகள்

### அ. தொடக்கம்

சீர்பெறு தருமஞ் செய்கை தெளிந்ததின் வெளியே சென்று
பார்பெறப் புத்தி பண்ணித் தனக்கது வலித்தி டாத
ஏர்பெறக் கரும மெல்லாம் யாவர்க்கு மாகா தென்று
சீர்பெற விடுத்தே யத்தை ஒல்லையிற் செய்வ தாமே.

### ஆ. முடிவு

பூலோகத்திலே யாதாமொருவன் தருமஞ் செய்ய நினைந்தாலும் தர்மகாரியமாய் வந்தால் வாக்கினாலும் சரீரத்தினாலும் அத்தத்தினாலும் உபகாரஞ் செய்வானாகில் அவன் நீச்சனானாலும் ஆயிரங்கோடி காலம் தெய்வலோகத்தை ஆளுவார்களென்றவாறு. (66)

வடமொழி நீதிசாரம் எழுதி முடிந்தது.

## 1969. இலட்சுமி பார்வதி தர்க்கம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: *1555-22*

ஆ: *ள/72*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ...............

ஆ: மகாலட்சுமிக்கும் பார்வதிக்கும் தர்க்கம்

இ: பல்வகை நூல்கள்

ஈ: செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 14 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மண்ணெடுத் தடிபட்டு வாணிச்சி பிட்டு
வாங்கித் தின்றா ரோடியுங்கள் சிவனார். (1)

குன்றெடுத்துப் பால்தயிர் வெண்ணெய் திருடிக்
குந்திக்குந்தி தின்றா ரோடியுங்கள் பெருமாள். (2)

ஆ. முடிவு

பாரிலொரு குட்டிக்கு முலைப்பால் கொடுக்கப்
பன்றியாக வந்தா ரேடியுங்கள் சிவனார். (81)

காரியமாப் பூமியெல்லாம் மூக்காலே வீழக்
கற்பன்றி யானா ரேடியுங்கள் பெருமாள். (82)

ஸ்ரீமகாலெட்சுமிக்கும் பார்வதிக்கும் தர்க்கம் எழுதி முகிந்தது.

## 1970. இராமர் பதிகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-23
ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........
ஆ. இராமர் பதிகம்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு; 10 பக்கம்.
ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சிதைவுற்ற நிலை.
எ. குறை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சீர்மேவு மாழ்வார்கள் பன்னிருவருள் புகழ
செப்பவும் ராம ஜெயமே
திரு... ...ராய்ச் செல்வமு முத்தியுஞ்
சித்திதரும் ராம ஜெயமே

கார்மேக வண்ணனே யெ... பதையைமுன்
காத்திட்ட ராம ஜெயமே
கரியாதி மூலமென் றோலமீ முதலையைக்
கண்டித்த ராம ஜெயமே

பார்மீதி லுன்பாத துள்பட்டெ ழுந்தகலி
பரிவான ராம ஜெயமே
பாங்கான வேடனம் ராம ராவெனப்
பத.. ராம ஜெயமே
ஆர்தானு ரைக்கவரு வாருன்நாம யத்தை
அனுதினமும் ராம ஜெயமே
ஐய... யாளு மெய்யனே ஸ்ரீமதே
ராமானு ஜாய நமவே. (1)

ஆ. முடிவு

சீர்கொண்ட ராமசெய மென்றதிரு மந்திரம்
செபிக்க மறியாம நாயேன்
செப்பினேன் ராமசெய மப்பனேநூற் றெட்டு
திருநாமம் ராம செயமே
நீர்கொண்ட பார்மிசை மலர்கொண்டு சாத்தியே
நித்தமும் ராம செயமே
நெஞ்சினி லிரும்செய மந்திரமு வந்தருளும்
நீங்காமல் ராம செயமே
கார்கொண்ட திருமேனி ராம செயமே
கார்த்தருளும் ராம செயமே
காதலால் ராமசெய மேயென்று நம்பினேன்
கர்த்தனே ராம செயமே.
...... ...... ...... ......

## 1971. திருமூர்த்தி பதிகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555–24

ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. .........

ஆ. திருமூர்த்தி பதிகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

**3. தோற்றக் கூறுகள்**

அ. 3 ஏடு; 6 பக்கம்;
ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

செழித்தசெம் மணியுங் கனகமுந் தரளத்
திரளுமே வருதிரை தோறுங்
....காழித் துவ......சேர்த் தொலிக்கும்
பாலாற்றுக் குன்றில்வாழ்வுறு திருமூர்த்தி
விழித்தபூ வாழ்வு வஞ்சக மென்றே
வெருண்டு நின்துணை பெற வந்தேன்
ஒழித்திடே லென்னை நின்பதத் தாளா
யொப்புக்கொள் ளுதல்கட னுனக்கே.

ஆ. முடிவு

பண்டுநூற் றவர்க்குத் தொண்டுசெய் துருகிப்
பரவியே யானந்தக் கண்ணீர்
கொண்டுமெய் யடியார் கூடும்பா லாற்றுக்
குன்றில்வாழ் வுறுதிரு மூர்த்தி
யண்டுமிவ் வெளியே னளரெனுங் குடும்பத்
தழுந்தியே வருந்துவ தெல்லாங்
கண்டுமுள் ளிரங்கா திருந்தனை யழகோ
கடவுணின் கருணையங் கடற்கே. (10)

## 1972. அமணேச சற்குரு பதிகம்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1555-25
ஆ. ள/72

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............
ஆ. அமணேச சற்குருபதிகம்
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 5 பக்கம்.
ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

நூன்மட்டி லாது கற்றவர் சொற்ற
நுண்மதி வளிகொடு னடவா
நான்மட்டி யந்தோ பந்தத்தி லாழ்ந்து
நலிகின்றேன் திருவருள் புரிவாய்
தேன்மட்டு மலர்வாய்வழி தோடை சூட்டிச்
சிவசிவா வெனுமன்பர் துதிபோய்
வான்மட்டுந் தாவுங் கயிலையன் கஞ்சி
மலையம ணேசசற் குருவே. (1)

ஆ. முடிவு

கடல்விரித் தனையது யரகத் தேனைக்
கருணைகூர்ந் தினியைய காலம்
அடல்விரித் துரினு மஞ்சுறுத் தனிப்பேர்
அன்பர்கூட் டுறவினில் வைப்பாய்
உடல்விரித் திடும்பொற் கலிங்கருஞ் சுவைய
வூணருங் காணரும் ஒன்றே
மடல்விரித் துகுதேன் மலர்ப்பொ..ற் கஞ்சி
மலையும ணேசசற் குருவே. (10)

## 1973. சிதானந்த மாலை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555–26

ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . .

ஆ. சிதானந்த மாலை

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 9 ஏடு; 17 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மருவோங்கு நின்மலர்ச் சேவடி யென்றும் வழுத்தவைத்துக்
கருவோங்கு கன்மந் தொலைத்தெனை யாண்டருள் கண்டகுசெவ்
உருவோங்கு கீர்த்தித் திருமூர்த்தி நாமத்து ஒளிர்தருமோ
திருவோங்கு தெய்வத மேவம ணேசசி தானந்தனே. (1)

ஆ. முடிவு

யாவது கேட்கவும் பாவியேற் குற்ற படிரகற்றிக்
காவவு நீடருட காட்சி தரவுங் கடனுனக்காற்
பாவனனஞ் சூழ்கரைப் பாலாற்றுக் குன்றிற் பரசருவு
சிவதயாபர னேவம ணேசசி தானந்தனே. (31)

## 1974. பரமசிவன் தோத்திரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-27

ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..........

ஆ. பரமசிவன் தோத்திரம்

இ. பிற தோத்திரங்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 7 பக்கம்.

ஆ. நீளம் 39 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூங்கமலக் கண்ணனுக்கும் போதனுக்குங் காணரிதா
யோங்கமல சின்மயவு மாபதியின் – தேங்கமல
பாதமிசைத் தோத்திரப் பாமாலை புனையப்பரை . .
காதலனா மானைமுகன் காப்பு.

ஆ. முடிவு

படுவேன் ..... சொன்னால்
பாரஞ் சுமக்க பரமுனக்கே
விடுவே னாசை விடச்சொன்னால்
விதியின் பயனதன் பயனன்றோ

சுடுவேன் பாவந் தனையின்று
சுடரே யுந்தன் னொளியாலே
இடுவேன் ...... ......
...... யென்னை யாளாயே. (13)

## 1975. சுப்பிரமணியர் வளையலீடு

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-28

ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. சுப்பிரமணியர் பேரில் வளையலீடு

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 5 பக்கம்.

ஆ. நீளம் 39 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

பூவின் வாசனை யுலவுதீபம் - கங்கை
பொங்கிய தலம்பெரிய பொன்னிநதி சூழும்
ஆவினன்குடி வளர்வ லாறு – மிக்க
அதிகசணமு சனதியும் அந்தணர்கள் தெருவும்

மேவிய யிடும்பனதி சூழும் – தேவர்
மிக்க மடவாலையம் விளங்கித்தான் வாழும்
தேவ சேனாபதி குமரா – எங்கள்
சிவகிரியில் வருமுருகரைக் கண்டி லீரோ.
தானா தனா தந்தனானா - தந்த
னாதந்தனா தந்தனானா (1)

ஆ: முடிவு

காவி வேடங் கனவிபூதி – சந்திர
காந்தி திருமேனி மிருகாதிலொளி வீசக்
கோவில் சேவிக்க வருசேனைஎக்கிற
கோடிதிரள் காவடிகள் கொண்டு வரவேதான்
தேவி குரவள்ளி மணவாளன் - எங்கள்
தெய்வக் குஞ்சரி மகுனன் செங்கைவடி வேலன்
மேவு ரணசூரா குலகாரன் - எங்கள்
விசையகிரி வருமுரு கரைக்கண்டி லீரோ. (௨)
தானா தனா தந்தனானா – தந்த
னாதந்தனா தந்தனா தந்தனானா
தானா தனா தந்த னானா.

## 1976. சூரியன் தோத்திரம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555–29

ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. சூரியன் தோத்திரம்

இ. பிற தோத்திரங்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சந்தனமும் புனுகுஞ் சமர்பன் னீருடனே
கொந்தலர் செண்பகமுங் கொண்டுவ ணங்கிடுவேன்
வந்திடும் வல்பிணிநோய் மாற்றுவ தும்பரனே
செந்தமி ழாகரனே சிவசிவ சூரியனே. (1)

ஆ. முடிவு

சோதியெ ழுஞ்சுடரே துய்யமெ னும்பொருளே
நீதியுடன் தொழுவார் நேசமி ருப்பவனே
மோதியெ ழுந்தசுரா முனைகள் முறிந்திடவே
தீதர வேல்விடுவாய் சிவசிவ சூரியனே. (10)

# 1977. விக்கினேசுரன் தோத்திரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-30

ஆ. எ/72

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. விக்கினேசுரன் தோத்திரம்

இ. பிற தோத்திரங்கள்

ஈ. செய்யுள்

**3. தோற்றக் கூறுகள்**

அ. 2 ஏடு; 3 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

கிண்ணியிலே சந்தனமும்
கிளிமூக்கு வெற்றிலையும்
அள்ளிஅள்ளிப் பூசை பண்ணும்
அத்தனா ரீசுபரனே, (1)

ஆ. முடிவு

சூரர் சேனை கண்டுழல் வேலவன்
தொழவந் தருள்புரிவாய்
வீரர் தான தமிழ்க்கூடல் மேவிய
விக்கினேஸ் பரமூர்த்தியே. (12)

## 1978. விக்கினேசுரன் அகவல்

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1555-31

ஆ. ள/72

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. ..........

ஆ. விக்கினேசுரன் அகவல்

இ. பிறதோத்திரங்கள்
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 4 பக்கம்;
ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

முக்கண் ணுடையா மூஷிக வாகனா
சக்கரை பால்பழந் தானுனக் களிப்பேன்
.... முகவா அறுமுகன் தமையா
வித்தை யெனக்கு விளம்பவந் தமியேன்
...... ...... ...... ......

ஆ. முடிவு

(மிகு சிதைவு)

# 1979. அருணாசலேசர் பதிகம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-32
ஆ. ள/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. அருணாசலேசர் பதிகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச்செய்திகள்

அ. தொடக்கம்

(மிகு சிதைவு)

ஆ. முடிவு

தென்னம் பழங்கள் ரசவாய் விழுந்து
தெருவீதி யெங்கும் வருவாய்
அன்னம் பகர்ந்த பழனா புரிக்கு
அழகாக நின்ற குமரா
இன்னந் தளர்ந்து எளியோன் தனக்கு
எமனா லைவாதை வருமுன்
வண்ணங் கலந்த மயில்மீதிலேறி
வரவேணு மென்ற னருகே. (13)

## 1980. உண்ணாமுலையம்மன் பதிகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-33

ஆ. ள/72

## 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. ............

ஆ. உண்ணாமுலையம்மன் பதிகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 5 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான நிலை.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

### அ. தொடக்கம்

ஓங்குபெரு பாரதமும் உண்ணாமுலை யம்மன்மேல்
பாங்குபெரும் செந்தமிழால் பாவுரைக்க — நீங்கரிய
வெந்துயரெல் லாம்போக்கும் வேழமுகன் செய்திருக்க
கந்தமலர்ச் செஞ்சரணம் காப்பு.

### ஆ. முடிவு

அதிகத்துயிர்க் குள்பகை யேற்கு னாம
அசனத்தை யன்றி யிலையிப்
பதிகத்தை நிற்கரண பங்கை யத்தில்
பரிவுற்று வாக்கு மெனையாள்
ததியெத் ததிச்சொல் கதியைத் தருமமுத்
தமியே பரைப்பே னுமையே
மதிசத்தி யுண்ணா முலைநாம தேவி
வரவேணு மென்ற னருகே.

## 1981. பாச்சலூர்ப் பதிகம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555–34

ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ........

ஆ. பாச்சலூர்ப் பதிகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 4 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

மூலத்தின் மேலே நின்று
மூன்றுமண் டலமுந் தாண்டி
சீலத்தின் வெளியாய் வந்து
சிலம்பொலி பரமா னந்தக்
கோலத்தின் மேலே நின்று
குகனறு முகனைப் பாட
வாலிப ரூப மான
வைங்கரன் காப்புத் தானே.

ஆ. முடிவு

ஒருபனை யிரண்டு ......
யொன்றுநுங் கொன்று கள்ளு
அறிவினி லறிந்த வர்க்கு
அதுவுங் கள்ளிது வுங்கள்ளே
ஒருதலை யுயர்ந்த தேனோ
ஒருகுலை தாழ்ந்த தேனோ
பரைபுனைப் பழிப்ப தேனோ
பாச்சலூர்க் கிராமத் தாரே.

## 1982, வருகைப் பதிகம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555–35

ஆ. ள/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. வருகைப் பதிகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 4 ஏடு; 6 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான நிலை.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

**4. சிறப்புச் செய்திகள்**

அ: தொடக்கம்

மச்சரிசி கூர்மரிசி சூதம் வேதம்
மார்க்கண்டர் ரிஷியுடனே வரங்கள் பெற்றோம்
நிச்சயமா அரவத்த னாலு கோடி
ரிஷியுடனே உன்பாதஞ் சேர்வை பெற்றோம்
அச்சமெற்ற னதார்க ளனந்தங் கோடி
அணியண்ணா மலையெனவே லட்சித் தோர்கள்
திச்சையுடன் அருணைகிரிச் சிவனே யென்று
சிவசிவாஉன் தெரிசனையைக் காணவருள்
செய்குவாயே. (1)

ஆ. முடிவு

மோசிகவா கனமேறும் மூத்தோன் வாழி
முப்பத்தி முக்கோடி தேவர் வாழி
ராசரிஷி ......ரிஷி அரனார் வேதம்
நவகோடி சித்தர்நா தாக்கள் வாழி
பேசரிய அருணைகிரிக் கடவு ளோனே
பேதையே சன்னதமிழ்ப் பத்தும் வாழி
தேசிகனார் உண்ணா முலையாள் வாழி
சிறந்தஅரு ணாசலமும் வாழிவாழி.

## 1983. பழநியாண்டவர் கும்மி

**1. நூலகக் குறிப்புகள்**

அ. 1555-56
ஆ. ள/72

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ: ...............
ஆ. பழநியாண்டவர் கும்மி
இ. சிற்றிலக்கியம்
ஈ. செய்யுள் 79

3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 19 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான நிலை.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அந்தண ருக்கிடர் செய்யாதே — நல்ல
தந்தை மொழியை மறவாதே — நல்ல
ஆவைத் துரத்தி அடியாதே
தந்தி முகனைப் பணிநெஞ்சமே. (1)

ஆ. முடிவு

இப்படி யாரும் தொழுதேற்றும் — நல்ல
மென்னனையான தெய்வகுஞ் சரியும்
செப்பமுடன் வள்ளியம் மனும்வள்ளி — எங்கள்
செவ்வேள் மலர்ப்பதந் தான்வாழி. (79)

## 1984. பதினெண் பாசைத் திருப்புகழ்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555–37

ஆ. ள/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............

ஆ. பதினெண் பாசைத் திருப்புகழ்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 15 பக்கம்.

ஆ. நீளம் 39 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரனருள் முருகா சரவண பவனாம்
சுருதிமறை பரவறிய பொருள் பரவ
அனையனைய பபபபா ஜெய ஜெய
வினையனைய நினைவு மணம் அருளிய
...... ...... ...... ......

ஆ. முடிவு

...... ...... ...... ......
அநேக டோலு தம்பட்டம் ......
கொடிதான திசைதிசை யென்பதும்
இதுதினம் தினமிது ...... யாகவேணும் ஆறுமுகப்
பெருமாளே.

பதினெண் பாசைத் திருப்புகழ் எழுதி முடிந்தது.

# 1985. சூரசம்மாரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-38

ஆ. ஏ/72

**2. உள்ளீடு: நூல் விவரம்**

அ. ...............

ஆ. சூர சம்மாரம்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

**3. தோற்றக் கூறுகள்**

அ. 7 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

**4. சிறப்புச் செய்திகள்**

அ. தொடக்கம்

தேரின்மேல் ஏறிக்கொண்டு சூரபன்மா
செருக்கள நோக்கி அசுரர் சேனை
ஆயிரத்தெட் டண்ட முள்ளோரும்
செருக்கள மீதினில் வந்த கோர
ஆரமர் செய்திட தேவர்கள் சூர்ந்து
...... ...... ......

ஆ. முடிவு

வேகமாய் அவன் வாழ்பதிக்குள்
அகோரமாய்வர வேலர் விட்டுவிடாமலே
இரதம்மேல் சுழற்றியே சூரன்மேல்வரச்
சூரபன்மனும் கந்தசுவாமி உக்கிரனும்
சண்டை தொடுத்துக் கொண்டாரே.

**சூரபன்மன் சண்டை எழுதி முடிந்தது.**

## 1986. விக்கினேசுரன் விருத்தம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-39

ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. விக்கினேசுரன் விருத்தம்

இ. பிற தோத்திரங்கள்

ஈ. செய்யுள் 11

### 3. தோற்றக் கூறுகள்

அ. 10 ஏடு; 18 பக்கம்.

ஆ. நீளம் 39 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

துதிகொண்டு நின்னடி தொழுங்கருணை தாதமிழ்
தொடுக்கின்ற வெகுவித்தைதான்
துன்பங்க ளணுகாமல் யின்பங்கள் தானல்ல
சுகசீவனப் பெருமைதான்
பதிகொண்ட புத்திராமித் துருசத்தி ராதிகள்
பரிந்துதான் வந்தவரெலாம்
பசியாம லெப்பொழுதும் முசியாம லன்னம்
படைக்கின்ற கனபவுசுதான்

மதிகொண்ட பிறவைதனை வல்லபை யிடத்தனே
வலியபதி னோரு கரவனே
மத்தப்பிர மத்தனேசித் தப்பிர சித்தனே
வசீகரக் கிருபை யாளனே
குதிகொண்ட மத்தார தகுதிகென வேவருகும்
குஞ்சரத் திருமுகவனே
குணபதிஸ்ரீ மகாகணப திவிக டதட
கும்பகெம் பீரதரனே. (1)

ஆ. முடிவு

தூயபொறி யைந்தையும் மடக்கப்பு லாதிகள்
சுழல்கின்ற வளிமருத்துச்
சுழிமுனை திறந்துமூ லாதார மேலாய்த்
துவாதசாந்தத்தை மூட்டி
வாயுவைய டக்கிபலத் துவருகுண் டலியை
வவ்விமேற் கொண்டெடுத்து
வாசியைந டத்தியவ் வோசையைத் தாவென்று
வழிகொண்டு நாத வெளியிற்
தோயும்பரப் பிரமஆர ணவுல்லா சமது
சோதிப்ப தென்ன வெளிதோ
தொலையாது நிலையாத தாகையா லுன்பத்த
துணையே துணைப் பற்றினேன்
தாயகம னோகரம யூரவா கனமுருக
சரசகோ பாலன் மருகா
சதுர்மரைக ளேதந்த பரமகுரு வாய்வந்த
சரவணப வானந்தனே. (11)

## 1987. காமாட்சியம்மன் விருத்தம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-40
ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ..............
ஆ. காமாட்சியம்மன் விருத்தம்

இ. பிற தோத்திரங்கள்
ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 6 ஏடு; 10 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சுந்தரிச வுந்தரிநி ரந்தரிது ரந்தரி
சோதியாய் நின்ற உமையே
சுக்கிரவா ரத்திலுனைக் கண்டுதரி சித்தவர்கள்
துன்பத்தை நீக்கி விடுவாய்
சிந்தைதனி லுன்பதந் தியானித்த மனிதர்க்குச்
சிறப்புறக் கதிய ருளுவாய்
செகமெலா முன்மாய்கை நகமெலா மென்சாய்கை
சிறியனாற் செப்பொ னாது
சிந்தஊ மைந்தநான் எந்தனைரட்சிக்கச்
சிறிய...... லுன்னு தம்மா
சிவசிவ மகேஸ்வரி பரமனித ஈஸ்பரி
சிரோமணி மனோன்மணி யும்நீ
அந்தரது ரந்தரநி ரந்தரப ரம்பர
அனாதரட்ச கியும்நீயே
அழகான காஞ்சியிற் புகழாக வாழ்ந்திடும்
அம்மைகா மாட்சி யுமையே. (1)

ஆ. முடிவு

எத்தனை சென்மம் எடுத்தனோ தெரியாது
இப்பூமி தன்னிலம்மா
இனியாகிலுங் கிருபைவைத்து யெனைரட்சியும்
இனிச்சென்ம மெடுத்திடாமல்

முத்திநர வேண்டுமென் றுன்னையே தொழுதுதான்
முக்காலும் நம்பி னேனே
முன்பின்னுந் தோன்றாத மனிதனைப் போல்நீ
முழித்திருக் காதே யம்மா
வெற்றிப்பேர் உன்மீதிற் பத்தியாம் நான்சொன்ன
விருத்தங்கள் பதினொன்றையும்
விருப்பமாய்க் கேட்டுநீ அளித்திடும் செல்வத்தை
விமலனா ரேசப் போரார்
அத்தனிட பாகமதை விட்டுவந் தேயென்
அருங்குறையைத் தீருமம்மா
அழகான காஞ்சியிற் புகழாக வாழ்ந்திடும்
அம்மைகா மாட்சி யுமையே. *(11)*

## 1988. அருணாசலேசர் பதம்

### 1. நூலகக் குறிப்புகள்

அ. *1555-41*
ஆ. *ள/72*

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ............
ஆ. அருணாசலேசர் பதம்
இ. பல்வகை நூல்கள்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 2 பக்கம்.
ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அண்ணா மலைகண்டேன் அப்பொழுதே தெண்டனிட்டேன்
உண்ணா முலைப்பாதம் உட்கொண்டேன்—நண்ணாக்க
கோபுரங்கள் கண்டேன் குமரகுரு தாள்பணிந்தேன்
பாவங்கள் போச்சே பறந்து.

ஆ. முடிவு

முடிவுற்ற போதுனை நம்பினேன்—மெய்
மெய்யாக வந்தென்னை லட்சியும்
துடிசக்கரம் புடிமான் மழுவும்
சூலாயுத ரகரகங்கணா
வடிவுற்ற போதுண்ணாமுலை மழுவுஞ்சடா
மகுடா சலா உமக்
கடுமைப் படக்கெதி யேதரும்
அருணாசலம் அருணாசலம்.

அருணாசலேசர் பதம் எழுதி முடிந்தது.

# 1989. திருநாமப் பதிகம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-42

ஆ. ள/72

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. திருநாமப் பதிகம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. செய்யுள் 10

## 3. தோற்றக் கூறுகள்

அ. 7 ஏடு; 12 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

ஆதிபரஞ் சோதியாய் அண்டபகி ரண்டமாய்
அநாதியாய் நின்றநாமம்
அடிமுடியி நடுவாகி யெளியவன் களிகூர
வன்புடைத் திருந்தநாமம்
நீதிநெறி பாகவே மணிபூர கத்தினி
நிலையாக நின்றநாமம்
நேசமுட னேகருட வாகனமீ தேறியே
நின்றுவிளை யாடும்நாமம்
வீதிவெளி யாகவே யுச்சிமலை மீதினில்
விளக்கொளியி னின்றநாமம்
மேலாம்ப தத்தையும் நாலாம்ப தத்தையும்
விளங்கக்கொடுக் கும்நாமம்
நாதாந்த பேரொளிய தாகவே விளங்கி
நமோநமோ வென்றநாமம்
நாராய ணாவரி கோவிந்தா வென்றுதினம்
நாடிவரு திருநாமமே. (1)

ஆ. முடிவு

ஸ்ரீங்கார மாகவே நூற்றெட் டிருப்பதி
சிறந்தோங்கி நின்ற நாமம்
தினந்தினம் ராமாவென் றுரைப்பவர்கள் சிந்தையும்
சிறப்புற்றி ருக்கும்நாமம்

நீங்காம லெந்நாளும் மதிகதிர்வி ளக்கமாய்
நிரம்பியே நின்றநாமம்
நிசநித்திய மானதொரு பரசத்திய வாசமாய்
நிறைவுற்றி ருந்தநாமம்
பாங்கான பேருடன் வாங்காம லேதினம்
பண்பினைக் கொண்டநாமம்
பச்சைமாலச் சுதர்நந்த கோவிந்த னென்ப
பரவுதற் கரிய நாமம்
ஆங்கார மாகவே திருநாமம் மாலையில்
அன்புவைத் திருந்த நாமம்
அரிநமோ நாராய ணாவென்று ரைப்பவர்க்
கரியபெரு திருநாமமே. (10)

திருநாமப் பதிகம் எழுதி முகிந்தது.

## 1990. சுப்பிரமணியர் அகவல்

### 1. நூலகக் குறிப்புகள்

அ: 1555–43

ஆ: ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ...............
ஆ. சுப்பிரமணியர் அகவல்
உ: பிற தோத்திரங்கள்
ஈ: செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ: 4 ஏடு; 6 பக்கம்.

ஆ: நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ: இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ: ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ: சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சரவண பவனே சத்துரு சங்காரா
அரஅர முருகா உன்னடி யிணை போற்றி
வளைபகிர பதிசந்த வடிவேற்ற சித்த
குரவர் நாயகா கொற்றவா சரணம்
...... ...... ...... ......

ஆ. முடிவு

செந்தில்நா யகனே போற்றிச் சேவலங் கொடியாய் போற்றி
நந்திமா மகனே போற்றி நாதாந்த குருவே போற்றி
எந்தனை யாளும் தெய்வம் இறைவனே போற்றி போற்றி
சிந்தனை வராமற் காப்பாய் சிவசுப்பிர மணியா போற்றி.

சுப்பிரமண்ணியர் பேரில் அகவல் எழுதி முகிந்தது.

# 1991. விக்கினேசுரன் தோத்திரம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555–44

ஆ. ல/92

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............

ஆ. விக்கினேசுரன் தோத்திரம்

இ. பிற தோத்திரங்கள்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 1 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. ஒரு பக்கம் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

இதமுடைய உண்டலிகள் அவரைபச்சைப் பயறு
எள்ளுண்டை காராமணி
இளநீர்க ரும்புடன்து வரைசந்த கைதோசை
யிட்டுண்டு கலச்சீடையும்
அதிரசந்தேங் காய்கொழக் கட்டைவடை சுகியும்
அவில்யிட்டு முழஅரிசியும்
அடைதேங்கு பூாயுடன்பா யசம்பால் பழமும்
அரிசிகற் கண்டு சீனி
பனுவலாக்கி யான்முக்கண் ணனே மு....
பரவுகேசரி குடோரி
பாருலகு மெஞ்ஞான விக்கினவி னாயகா
பாக்கியந் தந்தருள் வையே
அதிவிதம தாகவே நெய்வேத்திய தீபமுடன்
அபிஷேக மாடியருளே
அந்தந்தி பாலகா விக்கின விநாயகா
அபிஷேக மாடியருளே.

# 1992. கண்ணகையம்மன் பந்தடி

## 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-45

ஆ. ள/72

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . .

ஆ. கண்ணகையம்மன் பந்தடி

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 5 ஏடு: 10 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.: அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தினதினான தினதினான
தினதினான தினதினா
தினதினான தினதினான
தினதினான தினதினா

சீர்பெருகிய பாலைநகரஞ்
செழித்து வளர்ந்து தழைக்கவே
செல்வி கண்ணகை யம்மன்பேரில்
சிறக்கப் பந்தடி பாடவே
. . . . . . . . . . . .

ஆ. முடிவு

மகிழ்ந்து ஜெகத்தில் வாழ்ந்திருக்கின்ற
மனிதர்கள் பலபேர்க்குமே
வந்துலகினி லருள்புரிந்திடுந்
தந்திமுகனும் வாழியே.

புகழ்ந்துநாவி லிருந்தகமலை
புனிதனுமையும் வாழியே
பொதிகைமலையில் வாழ்குருமுனி
புலவர்பாதமும் வாழியே
சுகந்தரு நல்ல தேவர் தேவர்
சோதரிகளும் வாழியே
சூரியசந்திர ராதி தேவர்கள்
சுகங்கொடுநிதம் வாழியே
குகன்தெய் வானை வள்ளியம்மனுங்
குழந்தைவேல் மயில் வாழியே
குலவுகண் ணகையம்மன் தானும்
குதித்துப் பத்துப் பந்தடிப்பளே. (10)

கண்ணகையம்மன் பந்தடி எழுதி முடிந்தது.

## 1993. சிதம்பரக் கும்மி

### 1. நூலகக் குறிப்புகள்

அ: 1555-46
ஆ: ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: கோபாலகிருஷ்ண பாரதி
ஆ: சிதம்பரக்கும்மி
இ: சிற்றிலக்கியம்
ஈ: செய்யுள் 39

### 3. தோற்றக் கூறுகள்

அ: 6 ஏடு; 12 பக்கம்.
ஆ: நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ: இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ: ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ: சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

சக்கரை மோதகந் தேங்காயுங் கொண்டு
சன்னதி முன்பாகத் தான்படைத்து
முக்குருணி பிள்ளை யாரை வேண்டி
முழங்கிக் கும்மி யடியுங்கடி. (1)

ஆ. முடிவு

புத்திர பாக்கிய மெத்தவுண்டாம் – பசும்
பொன்மணிப் பூவினமு முண்டாம்
புத்தியுடன் கோபால கிருட்டணன்
பணியக் கும்மிய டியுங்கடி. (39)

சிதம்பரக்கும்மி எழுதி முகிந்தது.

## 1994. சிவவாக்கியர் பாடல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-47

ஆ. ள/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. சிவவாக்கியர்

ஆ. சிவவாக்கியர் பாடல்

இ. பல்வகை நூல்கள்

ஈ. செய்யுள் 100

3. தோற்றக் கூறுகள்

அ. 25 ஏடு; 50 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

தானதான தானதான
தானதான தானனே
தானதான தானதான
தானதான தானனே
அகாரகார ணத்துளே
அநேகநேக ரூபமாய்
உகாரகார ணத்துளே
உருத்தரித்து நின்றனன்
மகாரகார ணத்துளே
மயங்கிநின்ற வையகம்
சிகாரகார ணத்துளே
தெளிந்ததேசி வாயமே - தானதான. (1)

ஆ. முடிவு

எங்குமுள்ள ஈசனார் எம்முடற் புகுந்தபின்
பங்குகூறு பேசுவர்... ... ...
எங்கள்தெய்வ முங்கள்தெய்வம் என்றுபேத முள்ளதோ
உங்கள்பேத மென்றி... ... ...

சிவவாக்கியம் எழுதி முகிந்தது.

## 1995. மனோன்மணி பூசை அகவல்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-48

ஆ. ள/72

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. . . . . . . . . . . .

ஆ. மனோன்மணி பூசை அகவல்

இ. பிற தோத்திரங்கள்

ஈ. செய்யுள்

## 3. தோற்றக் கூறுகள்

அ. 3 ஏடு; 5 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரிஓம் மனோன்மணி அற்புதப் பொருளே
ஆதி...... ...... ...... ......
அரிஓ மென்னும் அட்ச ரத்தாதி
ஸ்ரீஓ மென்னும் சிற்பர......
...... ...... ...... ......

ஆ. முடிவு

சரணம் சரணம் நமஸ்த்தே சரணம்
புவன சவுந்தரி போற்றி நமஸ்த்தே
உருவடி வாயுப தேசங் கொடுத்துன்
திருவடி தந்தருள் சிவசிவா சரணம்.

மனோன்மணி பூசை அகவல் எழுதி முகிந்தது.

## 1996. சரசுவதி சிந்தனை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-49

ஆ. ள/72

### 2. உள்ளீடு : நூல் விவரம்

அ. . . . . . . . . . . .

ஆ. சரசுவதி சிந்தனை

இ. பிற தோத்திரங்கள்

ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 1 ஏடு; 2 பக்கம்

ஆ. நீளம் 39 செ.மீ.; அகலம் 3 செ.மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. சிதைவுற்ற நிலை.

எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

புத்தகத் துள்ளுறை மாதே
பூவில மர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடை யாளே
மூவுல குந்தொழு தேவி
செப்பு கவித்தன முலையாய்
செவ்வரி யோடிய கண்ணாய்

.... .... .... ....

ஆ. முடிவு

...... ...... ...... ......
கல்விக் கரசே நமஸ்த்து
...... தேவி நமஸ்த்து
சொல்லும் பொருளே நமஸ்த்து
சூட்சம ரூபி நமஸ்த்து.

சரஸ்வதி சிந்தனை எழுதி முகிந்தது.

## 1997. பிள்ளையார் சிந்தனை

### 1. நூலகக் குறிப்புகள்

அ. 1555-50
ஆ. ள/72

### 2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...............
ஆ. பிள்ளையார் சிந்தனை
இ. பிற தோத்திரங்கள்
ஈ. செய்யுள்

### 3. தோற்றக் கூறுகள்

அ. 2 ஏடு; 4 பக்கம்.
ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.
இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.
ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.
உ. சுமாரான எழுத்து.
ஊ. சிதைவுற்ற நிலை.
எ. முழுமை

### 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

எள்ளும் பொரித்த பொரியும்
இடித்த தேனிற் கலந்து
வள்ளிக் கிழங்கைத் திருத்தி
வாழைப் பழத்தை யுரித்து

உள்ளிய பாகு திரட்டி
உண்ணும் படியே தருவோம்
கள்ளத் திருமான் மருகா
கணபதி அப்பாநீ கொடாயே.

ஆ. முடிவு

...... ...... ......
இட்டதே சோறும் பெற்றதே கறியும்
உண்டு தூங்கிய பூசை முடித்து
வெள்ளி முளைக்கப் பள்ளிக்கு வாறும்.
பிள்ளையார் சிந்தனை எழுதி முகிந்தது.

## 1998. சடாட்சர விருத்தம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1555–51

ஆ. ள/72

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ...........

ஆ. சடாட்சர விருத்தம்

இ. பிற தோத்திரங்கள்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 8 ஏடு; 15 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. ஏடுகள் மிகவும் சிதைந்து, பூச்சியரித்து, ஒடிந்துள்ளன.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம்

அரியுரையாற் பரமசிவ குருவே யானீர்
அம்மையுமை வழுமகிக் கரசியானாள்
திரியவும்நீர் வாரியிலே மகர மானீர்
சிறுவனில்நீர் பிரமனையுஞ் சிறையில் வைத்தீர்
விரிவாகச் செந்துகளைப் படைத்தீர் பின்னும்
மெய்யாக மூவரமும் பெற்றீர் சித்துத்
துரியா தீதத்தில் வளர்வா லையால்
சப்பிரமண் ணியச்சுவாமி நீதுணைசெய் வாயே. (1)

ஆ. முடிவு

(மிகு சிதைவு)

# 1999. சோடச விருத்தம்

## 1. நூலகக் குறிப்புகள்

அ: 1555–52

ஆ: ள/72

## 2. உள்ளீடு: நூல் விவரம்

அ: ...............

ஆ: சோடச விருத்தம்

இ: பிற தோத்திரங்கள்

ஈ: செய்யுள்

## 3. தோற்றக்கூறுகள்

அ: 2 ஏடு; 2 பக்கம்.

ஆ. நீளம் 39 செ. மீ.; அகலம் 3 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 4,5 வரி.

உ. சுமாரான எழுத்து.

ஊ. மிகு சிதைவு.

எ. முழுமை

4. சிறப்புச் செய்திகள்

அ. தொடக்கம் ஆ. முடிவு

(பாடலடிகள் சிதைந்துள்ளதால் படித்தறியும் நிலையில் இல்லை.)

## 2000. ஞான வாசிட்டம்

1. நூலகக் குறிப்புகள்

அ. 1556

ஆ. ட/233

2. உள்ளீடு: நூல் விவரம்

அ. ஆளவந்தார்–வீரை

ஆ. ஞான வாசிட்டம்

இ. தத்துவம்

ஈ. செய்யுள்

3. தோற்றக் கூறுகள்

அ. 234 ஏடு; 468 பக்கம்.

ஆ. நீளம் 34 செ. மீ.; அகலம் 3·5 செ. மீ.

இ. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

ஈ. ஒரு பக்கத்திற்கு 10 வரி.

உ. தெளிவான கையெழுத்து.

ஊ. சுமாரான நிலை.

எ. முழுமை

## 4. சிறப்புச் செய்திகள்

### அ. தொடக்கம்

பெண்மை பாதியன் பெற்ற களிற்றினை
யண்மை தூர மறவகத் துன்னுவாந்
திண்மை ஞானச் சிறப்புயர் வாசிட்ட
முண்மை யாக வொருங்குரை செய்யவே. (1)

### ஆ. முடிவு

பரம மேனி வசிட்ட முனி
பச்சை மேனி ராமர்க்குப்
பிரம ஞான முணர் விந்தப்
பெருவா சிட்ட நன்னூலைத்
திரம தாகக் கற்பளவே
சீவன் முத்திப் பதஞ்சேர்வர்
உரம தாக உள்ளுணர்
ஒருரு பேரெங்க னுரைப்பதுவே. (68)
யோக கதை முற்றும்.

ஆகக் கதை 413க்குந் திருவிருத்தம் 2515.

### இ. பிற்குறிப்பு

விரோதி வருஷம் தை மாதம் 25ஆம் தேதி சுக்கிர வாரமும் திரியோதசியும் புனர்பூச நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடின சுபதினத்தில் குடிக் குடியிலிருக்கும் திருமலை ரெட்டியவர்களுக்கு வாசிட்டம் எழுதி நிறைவேறினது. சுபமஸ்து.

இந்த வாசிட்ட மெழுதினது சொக்கய்யா கையெழுத்து.

பின்னிணைப்பு—I

## நூலாசிரியர் அகர வரிசை

(எண் : நூல் வரிசை எண்)


அகத்தியர் 1676, 1690, 1700, 1701. 1732, 1810, 1812, 1820, 1888, 1889, 1890, 1891, 1903, 1910, 1920, 1942, 1944, 1945

அதிவீரராம பாண்டியன் 1770, 1828, 1365

அமிர்தகவி செய்யிது முகமது அண்ணாவியார் 1679

அருணகிரிநாதர் 1510, 1605, 1798

அருணாசலக் கவிராயர்—சீகாழி 1793, 1826

அழுகணிச் சித்தர் 1814, 1961

ஆசுகவிராஜர் 1529

ஆண்டிப் புலவர் 1804

ஆளவந்தார்—வீரை 2000

இடைக்காடர் 1681

இராமதாச உபாத்தியாயர் 1511, 1548, 1612, 1650

இராம தேவர் 1817

உமாபதி சிவாசாரியர் 1792, 1923

உலகநாத பண்டிதர் 1531, 1545, 1602, 1613, 1630, 1952

எல்லப்ப நாவலர் 1771, 1775, 1776, 1777, 1825, 1913, 1936

ஔவையார் 1509, 1514, 1523, 1534, 1537, 1538, 1543, 1544, 1579, 1601, 1611, 1614, 1623, 1805, 1806, 1835, 1907, 1914, 1948, 1951

கச்சியப்ப சிவாசாரியர் 1866, 1872

கச்சியப்ப முனிவர் 1869

கடவுள் மாமுனிவர் 1751

கடுவெளிச் சித்தர் 1956

கணபதி தாசர் 1637

கம்பர் 1574, 1658

கம்பளிச் சட்டை கயிலாசநாதர் 1811

கவிராச பண்டிதர் 1785, 1880

காரைக்காலம்மையார் 1924

கும்பமுனியார் 1819

குமரதாசன் 1688

குருநமச்சிவாயர் 1620, 1645
குலசேகர பாண்டியன் 1508, 1558, 1567, 1965
கோபாலகிருஷ்ண பாரதி 1610, 1993
கோரக்கர் 1808
சட்டைமுனி 1682, 1815, 1943
சமயதிவாகர முனிவர் 1716
சமண முனிவர்கள் 1873, 1915
சாந்தலிங்க சுவாமிகள்—திருமழிசை 1712
சிதம்பர சுவாமிகள் போரூர் 1540
சிவப்பிரகாசர்—துறைமங்கலம் 1864
சிவவாக்கியர் 1542
சீவரத்தினக்கவி முகமது மீரா லெப்பை அண்ணாவியர் 1680
சுந்தரானந்தர் 1686, 1886
சேக்கிழார் 1704, 1800, 1928
தட்சிணாமூர்த்தி 1813, 1938
தன்வந்திரி 1731
தாண்டவராய சுவாமி 1778, 1779
திருஞானசம்பந்தர் முதலியோர் 1714, 1769, 1921, 1925, 1931
திருத்தக்க தேவர் 1933
திருமூலர் 1885
திருவழுந்தூரன் 1621, 1627, 1717
திருவள்ளுவர் 1753, 1780
திவாகரர் 1752
தொல்காப்பியர் 1831
பகழிக் கூத்தர் 1618, 1852
பட்டர் 1773
பட்டினத்தார் 1897
படிக்காசுப் புலவர் 1524, 1536, 1797, 1844, 1856, 1896
பதினெண் சித்தர் 1675
பரஞ்சோதி முனிவர் 1791, 1930, 1932
பரஞ்சோதியார் 1854, 1929
பிள்ளைப் பெருமாளையங்கார் 1713
பீதாம்பர அய்யர் 1580, 1597
பெரியாழ்வார் முதலியோர் 1744
பெரும் பற்றப் புலியூர் நம்பி 1794
பெருவாயின் முள்ளியார் 1803
பொய்யா மொழிப் புலவர் 1867
போகர் 1816, 1887, 1941
மச்சமுனி 1684

மண்டல புருடர் 1596, 1600, 1664, 1840, 1843
மாணிக்க வாசகர் 1795, 1850, 1876, 1899, 1946, 1947
மீனாட்சி சுந்தரம்பிள்ளை 1868, 1871, 1874
முகமது மீரா லெப்பை அண்ணாவியார் 1680
முத்துப் புலவர் 1550
ரோமரிஷி 1733, 1767, 1796, 1818
வரதராஜ அய்யங்கார் 1659
வரதுங்கராம பாண்டியன் 1754
வாலகேசன் 1651
வில்லிபுத்தூரர் 1518, 1575, 1652, 1657, 1706, 1740, 1827
வீரமா முனிவர் 1934
வைத்தியநாத நாவலர் 1861
ஆசிரியர் பெயர் தெரியாத நூல்கள் 1501–1507, 1512, 1513, 1515–1517, 1519–1522, 1525–1528, 1530, 1532, 1533,1535,1539,1541,1546,1547,1549,1551–1557, 1559-1566,1568–1573,1576-1578,1581-1595,1598, 1599,1603,1604,1606–1609,1615–1617,1619,1622, 1624-1626,1628,1629,1631-1636,1638-1644,1646–1649,1653–1656,1660–1663, 1665-1674,1677,1678, 1683,1685,1687.1689,1691–1699, 1702,1703 1705, 1707–1711,1715,1718–1730,1734–1739,1741–1743, 1745–1750,1755–1766,1768, 1772,1774,1781,1784, 1786–1790,1799,1801,1802,1807,1809,1821–1824, 1829,1830,1832-1834,1836-1839,1841,1842,1845-1849,1851,1853,1855,1857–1860, 1862,1863,1870, 1875,1877–1879,1881–1884,1892–1895,1898,1900-1902,1905,1906,1908,1909,1911,1912,1916–1919, 1922,1926,1927,1935,1937,1939,1940,1949,1950, 1953–1955,1957–1960,1962–1964,1966-1992,1994-1999.

*பின்னிணைப்பு — 2*

## நூற்பெயர் அகர வரிசை

*(எண் : நூல் வரிசை எண்)*


அகத்தியர் 50 1944
அகத்தியர் 150 லோக மாரணம் 1910
அகத்தியர் சக்கர விதிச் சுருக்கம் 47 1890
அகத்தியர் சால நிகண்டு 1810
அகத்தியர் சித்தாந்த வேதாந்தம் 1891
அகத்தியர் சூத்திரம் 8 1903
அகத்தியர் சூத்திரம் 16 1820
அகத்தியர் ஞான உலா 1888
அகத்தியர் ஞானம் 1812
அகத்தியர் ஞானம் 6 1701
அகத்தியர் ஞானம் 9 1700
அகத்தியர் ஞானம் 32 1889
அகத்தியர் ஞானம் 100 1690
அகத்தியர் ஞானோதயம் 1920
அகத்தியர் தேவாரத் திரட்டு 1769
அகத்தியர் முப்பூ 30 1732
அகத்தியர் முப்பூ சூத்திரம் 50 1945
அகத்தியர் வைத்திய சூத்திரம் 50 1942
அகத்தியர் வைத்தியம் 1500 1675
அட்சர விதி 1702
அட்சர விளக்கம் 1699
அட்டக வர்க்கம் 1848
அட்டலோகத் திருமந்திரம் 1724
அண்ணன்மார் கதை 1519
அதிசயத் திருமந்திரம் 1726
அநுட்டான விதி 1783, 1917
அப்பைய நாயகர் வளமடல் 1799
அபிமன்னன் சுந்தரி மாலை 1655, 1668, 1908
அமணேச சற்குரு பதிகம் 1972
அமரசிம்மராசன் கதை 1506
அய்யம்பேட்டை பாச்சா ராவுத்தர் பவனி 1680

அரிச்சந்திர புராணம் 1529
அரிச்சந்திர விலாச நாடகம் 1559
அரிச்சுவடி 1665
அருணாசலப் பதிகம் 1892
அருணாசல புராணம் 1771, 1936
அருணாசல புராணம்:மூலமும் உரையும் 1775–1777,1825,1913
அருணாசலேசர் பதம் 1988
அருணாசலேசர் பதிகம் 1979
அருளானந்தர் சரித்திரம் 1902
அல்லி அரசாணி மாலை 1802
அழகரந்தாதி 1919
அழுகணிச் சித்தர் சூத்திரம் 1814
அழுகணிச் சித்தர் பாடல் 1961
அறுபது வருட பலன் 1823
ஆசாரக் கோவை:மூலமும் உரையும் 1803
ஆசிரிய நிகண்டு 1804
ஆண்புத்தி மாலை 1953
ஆத்தி சூடி 1523, 1543, 1611, 1623, 1806, 1948
ஆத்திசூடிப் புராணம்:மூலமும் உரையும் 1882, 1883
ஆரவல்லி கதை 1507, 1649, 1667
ஆரூட நூல் 1822, 1935
ஆனந்த மாலை 1880
இரங்கநாயகி திருவூசல் 1839
இரங்கநாயகி நாச்சியார் வாது 1836
இரத்தின சபாபதி மாலை 1503
இராசகோபால மாலை 1635, 1966
இராமதேவர் சூத்திரம் 1817
இராம நாடகக் கீர்த்தனைகள் 1793, 1826
இராமர் அசுவமேத யாகம் 1707
இராமர் பதிகம் 1970
இராமாயண வசனம் 1678, 1708, 1768
இருநூற்றுத் திருமந்திரம் 1727
இருபத்து நான்கு நாட்டுப் பட்டயம் 1581, 1595
இருவகைக் குருவறி விளக்கம் 1912
இலக்கண சூடாமணி 1801
இலக்கண விளக்கம்:மூலமும் உரையும் 1861
இளம்பிள்ளை செல்லாண்டியம்மன் கப்பல் 1654
இளம்பிள்ளை செல்லாண்டியம்மை பதிகம் 1639
உடல்சக்கரத் திருமந்திரம் 1721
உண்ணாமுலை சதகம் 1546

உண்ணாமுலையம்மன் பதிகம் 1980
உலகநீதி 1531, 1545, 1602, 1613, 1630, 1952
உள்ளமுடையான் : மூலமும் உரையும் 1849
எண் சுவடி 1504, 1636, 1662
எம்பெருமான் சதகம் : மூலமும் உரையும் 1565
ஏகாதசிப் புராணம்:மூலமும் உரையும் 1511, 1548, 1612, 1650
ஒயில் கும்மி 1550
கடலை அவுல் பத்தியம் 1634
கடுவெளிச் சித்தர் பாடல் 1956
கண்ணகையம்மன் பந்தடி 1992
கணித நூல் 1561
கதிர்காம மாலை 1555, 1628
கந்த புராணம் 1872
கந்தபுராணம்; 4வது யுத்த காண்டம்: ஏமகூடப் படலம் முதல் 1866
கந்தரலங்காரம் 1605
கந்தரனுபூதி 1510
கபிலை கதை 1841
கம்பர் வாழி 1574
கம்பராமாயணம்; வீடணன் அடைக்கலப் படலம்: மூலமும் உரையும் 1658
கயிலாசச் சட்டை முனி நிகண்டு 1811
கர்மவநுபோக சூத்திரம் 1809
கருடப் பத்து 1833, 1959
கல்வியொழுக்கம் 1534, 1601, 1614
கவனமணி 108 1674
கஜேந்திர மோட்சக் கீர்த்தனை 1960
காமாட்சியம்மன் விருத்தம் 1987
காசி காண்டம் 1770
கிருட்டிண விலாசம் 1560
கீதாமிர்த சாரம் 1964
குண வாகடம் 1736
கும்பகோணப் புராணம் 1868, 1871
கும்பமுனி 10 1819
குமாரசாமியம் : மூலமும் உரையும் 1851
குருசம்பிரதாயம் 1845
குருசேத்திர நாடகம் 1834
குருநூல் 1200க்குக் கொடுத்த சாற்றுக் கவிகள் 1675
கூர்ம புராணம் 1865
கூளப்ப நாயக்கர் காதல் 1660

கைவல்ய நவநீதம்: மூலமும் உரையும் 1778, 1779
கொங்குப் புலவர் பட்டயம் 1576
கொன்றை வேந்தன் 1538, 1544, 1805, 1907, 1951
கோடி கன்னிகாதானம் ஜீயர் பட்டயம் 1552
கோயிற் புராணம் 1792
கோரக்கர் அட்ட கர்மம் 1808
சட்டைமுனி அட்ட கருமம் 1815
சட்டைமுனி சூத்திரம் 8 1943
சட்டைமுனி நிகண்டு 1682
சடாட்சர விருத்தம் 1998
சடுத்தலாகமம் 1711
சத்துரு சங்கார மாலை 1691
சதுரகராதி 1934
சரசுவதி சிந்தனை 1996
சவுந்தரியந்தாதி 1832
சனியெண்ணெய்ப் பாட்டு 1521, 1527, 1549
சாதக அலங்காரம் 1842
சாதன சதுட்டயம் 1863
சித்தராரூட நொண்டி 1746
சிதம்பரக் கும்மி 1610, 1993
சிதம்பரப் பாட்டியல்: மூலமும் உரையும் 1854
சிதானந்த மாலை 1973
சிராமலை யந்தாதி 1870
சிவகாமியாண்டார் அகவல் 1720
சிவசுப்பிரமணியர் கடவுள் பேரில் உதயராகம் 1957
சிவ வாக்கியர் பாடல் 1542, 1994
சிவன்மலை யாண்டவர் பதிகம் 1638
சீவக சிந்தாமணி: நச்சினார்க்கினியர் உரையுடன் 1933
சுந்தரானந்தர் சூத்திரம் அதிகம் 1686
சுந்தரானந்தர் சூத்திரம்–25 1886
சுப்பிரமணியர் கும்மி 1609
சுப்பிரமணியர் மந்திரம் 1541
சுப்பிரமணியர் வளையலீடு 1975
சுப்பிரமணிய மாலை 1512, 1525, 1586, 1666
சூடாமணி உள்ளமுடையான்: மூலமும் உரையும் 1846
சூடாமணி நிகண்டு 1600, 1840, 1843
சூடாமணி நிகண்டு: 1, 2 தொகுதிகள் 1664
சூடாமணி நிகண்டு: 1, 2, 3 தொகுதிகள் 1596

சூர சம்மாரம் 1985
சூரியன் தோத்திரம் 1976
செல்லாண்டியம்மை கலிவெண்பா 1598
சேத்திரக் கோவை 1926
சோடச விருத்தம் 1999
சோதிட அரிச்சுவடி 1719
சோதிடச் செய்திகள் 1695, 1858, 1859, 1860, 1900
சௌந்தரியலகரி: மூலமும் உரையும் 1785
ஞான உலா 1884
ஞானக் குறள் 1835
ஞான ரத்தினக் குறவஞ்சி 1962
ஞான வாசிட்டம் 2000
ஞான விளக்கம் 1689
தக்கராசன் கதை 1749
தஞ்சை வாணன் கோவை 1867
தட்சிணாமூர்த்தி 1938
தட்சிணாமூர்த்தி வைத்தியம் 1200—1813
தண்டலையார் சதகம் 1524, 1536, 1797, 1844, 1856, 1896
தருமபுரப் புராணம் 1743
தருமர் அசுவமேத யாகம் 1772
தன்வந்திரி குண வாகடம் 1731
தனிப் பாடல்கள் 1517, 1520, 1526, 1551, 1553, 1554, 1557, 1566, 1570, 1588, 1594, 1599, 1615, 1640, 1747, 1789, 1847, 1875, 1911
திரிகடுக வெண்பா 1898
திருக்குறள்: மூலமும் உரையும் 1753, 1780
திருக்குறுக்கைப் புராணம் 1874
திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் 1618, 1852
திருநாமப் பதிகம் 1989
திருப்பதிக் கோவை 1923
திருப்பொற் சுண்ணம் 1947
திருமந்திர பூரண சூத்திரம் 1725
திருமுருகன் பூண்டிப் பட்டயம் 1644
திருமூர்த்தி பதிகம் 1971
திருமூலநகர் சோமேசர் ஊஞ்சல் 1606
திருமூலர் அட்சர நிகண்டு 1885
திருவகுப்பு 1798
திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சதகம் 1641
திருவாசகம் 1795, 1850, 1876, 1899
திருவாதவூரர் புராணம்: மூலமும் உரையும் 1751

திருவிளையாடற் புராணம் 1791, 1794, 1929, 1930, 1932
திருவெம்பாவை 1946
திருவேங்கடந்தாதி 1713
திவாகரம் 1752
தென்கரை நாட்டுப் பட்டயம் 1513, 1619
தேசிங்குராசன் கதை 1573
தேவாரம் 1714, 1921, 1925, 1931
தேவி தியான அகவல் 1881
தொல்காப்பியம்; எழுத்ததிகாரம்—மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் 1831
தோற்றப்பத்து 1894
நஞ்சுண்டர் மாலை 1949
நடராசர் மங்களம் 1922
நடுவணைத் திருமந்திரம் 1722
நவரத்ன சிந்தாமணி—800 1673
நாட்டு வளப்பம் 1633
நாலடியார் 1873, 1915
நாலு மந்திரி கதை 1556
நிகண்டுத் திருமந்திரம் 1729
நீதி சாரம் : மூலமும் உரையும் 1547, 1571, 1577, 1591, 1604, 1617, 1629
நீதியொழுக்கம் 1532, 1661, 1672, 1950
நீதி வெண்பா:மூலமும் உரையும் 1790
நீலகேசி:மூலமும் உரையும் 1716
நூருநாமா 1679
நெஞ்சறி விளக்கம் 1637
நைடதம் 1828
நோய்க்கு மருந்து 1572, 1582, 1647, 1677, 1683, 1685, 1705, 1734, 1735, 1759
பகவத் கீதை 1773
பகவத் கீதை வசனம் 1774
பஞ்சதந்திர வசனம் 1670
பஞ்ச பட்சி சாத்திரம் 1687
பட்டினத்தார் பாடல்:நெஞ்சொடு புலம்பல் 1897
பதினெண் பாசைத் திருப்புகழ் 1984
பரமசிவன் தோத்திரம் 1974
பரமராசிய மாலை 1620, 1645
பராபர உமையவள் கும்மி 1788
பராபரக் கும்மி 1787
பராபரத் தத்துவம் 1918

பரிபாசை:நாலாங் காண்டம் 1742
பரிவிருத்தம் 1906
பழநிக் காவடிப் பாட்டு 1592
பழநிமலைக் கண்ணி 1587
பழநியாண்டவர் ஆனந்தக் களிப்பு 1564, 1590
பழநியாண்டவர் கும்மி 1563, 1983
பழநியாண்டவர் தாய்மகள் ஏசல் 1593, 1622
பழநி வேலவர் ஆனந்தக் களிப்பு 1502
பழநி வேலவர் கும்மி 1501
பழைய கோட்டை சர்க்கரை மன்றாடியார் வம்சாவளி 1569
பவளக்கொடி நாடகம் 1916
பள்ளிப் பிள்ளையார் சிந்தனை 1807
பாகவதம் : குழலூது படலம் : மூலமும் உரையும் 1659
பாகவதம் : மூலமும் உரையும் 1530
பாச்சலூர்ப் பதிகம் 1981
பார்த்தசாரதி பஞ்சரத்தினம் 1838
பார்த்தசாரதி பதிகம் 1837
பாரத அம்மானை 1750
பிரம்மோத்தர காண்டம் 1754
பிள்ளையார் சிந்தனை 1997
பீதாம்பர அய்யர் சாலத் திரட்டு 1580, 1597
புகையிலைக் கும்மி 1539
புதுவை யம்பிகை பிள்ளைத் தமிழ் 1784
புலந்திரன் தூது 1648, 1653
பூசை விதி (சைவம்) 1696
பூவனை ஈஸ்வரி அகவல் 1879
பெண்புத்தி மாலை 1954
பெரிய புராணம் 1704, 1800, 1928
பெருமாளம்மானை 1748
பொன்னிவாடிப் பட்டயம் 1607
போகர் அட்டாங்கம் 1887
போகர் சூத்திர வெண்பா 1941
போகர்–8 1816
போரூர் மீனாட்சியம்மை கலிவெண்பா 1540
மகாநவமி பத்தியம் 1603, 1631
மகாமந்திர விநோத சாத்திரம் 1824
மகாலட்சுமிக்கும் பார்வதிக்கும் தர்க்கம் 1969
மகாவிந்த நாடகம் 1651
மகாவிந்தம் 1516
மங்கல வாழ்த்து 1909

மச்சமுனி–800 1684
மதுராபுரி அம்பிகை மாலை 1508, 1558, 1567, 1965
மநுநீதி சூடாமணி என்னும் அரங்கேச வெண்பா 1830
மயில் பத்து 1893
மருத்துவ அகராதி 1715, 1939
மருத்துவக் குறிப்புகள் 1761, 1763
மருத்துவச் செய்திகள் 1737
மருத்துவ நிகண்டு 1730
மருந்து செய்முறை 1762, 1937
மனையடி சாத்திரம் 1901
மனோன்மணி பூசை அகவல் 1995
மாகமாத புராணம் 1745
மாமியார் மருமகள் சிந்து 1528
மார்க்கண்டேய நாடகம் 1515
மாவிந்தம் 1741
மீனாட்சியம்மை கலிவெண்பா 1540
முத்தாலம்மன் வில்லடிப் பாட்டு 1710
முத்துநாச்சி சண்டை 1646
முத்ரா லட்சணம் 1782
முதலாயிரம் 1744
முந்திரிலக்கம் 1626, 1671
முந்திரி வாய்பாடு 1568, 1583, 1608, 161(
முருகரந்தாதி 1963
முருகன் மாதப் பதிகம் 1895
மூக்கரைக் கிழவி கதை 1643
மூத்த திருப்பதிகம் 1924
மூதுரை 1509, 1514, 1537, 1579, 1914
மோட்ச தர்மம் 1862
யானை விருத்தம் 1904
யோக மாலை 1786
ரோமரிஷி–25 1733
ரோமரிஷி–500 1767
ரோமரிஷி சூத்திரம்–50 1796
ரோமரிஷி வைத்தியம்-25 1818
வடபத்திர காளி மாலை 1688
வடமொழி நீதி சாரம் 1968
வண்ணங்கள் 1505
வராகி அகவல் 1878
வராகி மாலை 1877
வருகைப் பதிகம் 1982

வருடாதி நூல் 1681
வழலைத் திருமந்திரம் 1728
வழலை முறை 1821
வள்ளித் திருமணக் கும்மி 1624
வள்ளி நாயகி மாலை 1958
வாசல் வளப்பம் 1632
வாசித் திருமந்திரம் 1723
வாரக்க நாட்டுப் பட்டயம் 1578
வாள் விருத்தம் 1905
விக்கிரமாதித்தன் கதை 1584, 1589, 1755
விக்கினேசுரன் அகவல் 1978
விக்கினேசுரன் தோத்திரம் 1977, 1991
விக்கினேசுரன் விருத்தம் 1986
விநாயக புராணம் 1869
விநாயக புராண வசனம் 1669
விருத்தாசல புராணம்: மூலமும் உரையும் 1781
வில்லிபாரதம்: கண்ணன் தூது: மூலமும் உரையும் 1652
வில்லிபாரதம்: படையெழுச்சிச் சருக்கம் முதல் 1706
வில்லிபாரதம்: விராட பருவம்: மூலமும் உரையும் 1740
வில்லிபாரதம்: 13 ஆம் நாள் போர்: மூலமும் உரையும் 1575, 1657
வில்லிபாரதம்: 13,14 ஆம் நாள் போர்: மூலமும் உரையும் 1827
வில்லிபாரதம்: 17 ஆம் நாள் போர்ச் சருக்கம்: உரையும் 1518
விவேக சிந்தாமணி 1522, 1625, 1642
வீடணன் அறிவுரை 1621, 1627, 1717, 1967
வீரகுமார நாடகம் 1829
வீரமாறன் நாடகம் 1656
வீராகமம் 1712
வைகுந்தக் கும்மி 1535, 1562
வைப்புத் தலக்கோவை 1927
வேதாந்த சூளாமணி: மூலமும் உரையும் 1864
வேலவர் தாலாட்டு 1955
வேழ முகம் 1585
பெயர் அறியப் பெறாத நூல்கள் : 1533, 1663, 1692, 1693, 1694, 1697, 1698, 1703, 1709, 1718, 1738, 1739, 1756–1758, 1760, 1764–1766, 1853, 1855, 1857, 1940

பின்னிணைப்பு—3

## பொருட் பகுப்பு அகர வரிசை

(எண் : சுவடிகளின் தொடர் எண்)

### இலக்கணம்

(குறிப்பெழுத்து: ச)

1273, 1276, 1334, 1405, 1452, 1455, 1472, 1478, 1481 1492, 1499, 1549 ஆக மொத்தம் 12 சுவடிகள்.

### உரைநடை இலக்கியம்

(குறிப்பெழுத்து: ம)

1193, 1238, 1265, 1268, 1313, 1339, 1340, 1346, 1371, 1372, 1408, 1421, 1425, 1526 ஆக மொத்தம் 14 சுவடிகள்.

### காப்பியம்

(குறிப்பெழுத்து: ந)

1197, 1202, 1204, 1214, 1215, 1230, 1256, 1287, 1296, 1302, 1320, 1322, 1327-1329, 1370, 1379, 1380, 1393, 1394, 1398, 1404, 1407, 1468, 1469, 1479, 1502, 1503, 1506, 1509, 1515, 1516, 1548 ஆக மொத்தம் 33 சுவடிகள்.

### சிற்றிலக்கியம்

(குறிப்பெழுத்து : ய)

1190, 1192, 1195, 1198, 1210, 1211, 1220, 1228, 1237, 1240, 1246, 1248, 1267, 1275, 1280, 1293, 1295, 1297, 1303, 1310, 1311, 1315, 1324, 1330, 1336, 1348, 1355, 1376, 1383, 1436, 1437, 1448–1450, 1477, 1482, 1490, 1494, 1504, 1507, 1519, 1520, 1528, 1540 ஆக மொத்தம் 44 சுவடிகள்.

## சைவத் திருமுறைகள்

(குறிப்பெழுத்து : ண)

*1368, 1377, 1422, 1446, 1451, 1488, 1513, 1523, 1542–1544, 1554* ஆக மொத்தம் *12* சுவடிகள்.

## சோதிடம்

(குறிப்பெழுத்து : வ)

*1349, 1362, 1381, 1382, 1463, 1464, 1480, 1486, 1487, 1489, 1491, 1493, 1495-1498, 1524, 1525, 1550* ஆக மொத்தம் *20* சுவடிகள்.

## தத்துவம்

(குறிப்பெழுத்து : ட)

*1343, 1356, 1357, 1366, 1375, 1426, 1427, 1431, 1432 1438, 1459, 1476, 1500, 1501, 1517, 1518, 1539, 1541, 1556* ஆக மொத்தம் *19* சுவடிகள்.

## தல புராணம்

(குறிப்பெழுத்து : ப)

*1396, 1423, 1424, 1428-1430, 1434, 1442, 1443, 1445, 1466, 1505, 1508, 1511, 1534, 1545–1547, 1551* ஆக மொத்தம் *19* சுவடிகள்.

## திவ்வியப் பிரபந்தம்

(குறிப்பெழுத்து : ன)

*1397* ஒரே ஒரு சுவடி மட்டும்.

## நாட்டுப் பாடல்

(குறிப்பெழுத்து : ர)

*1189, 1194, 1205, 1219, 1223, 1232, 1244, 1245, 1254, 1269, 1271, 1284, 1285, 1299, 1316, 1318, 1319, 1323, 1325, 1337, 1338, 1374, 1401–1403, 1439, 1453, 1530* ஆக மொத்தம் *28* சுவடிகள்.

## நீதிநூல்

(குறிப்பெழுத்து : ள)

1200, 1208, 1209, 1216, 1218, 1221, 1222, 1225-1227, 1229, 1252, 1258, 1260, 1270, 1277, 1279, 1286, 1288, 1289, 1292, 1298, 1300, 1304, 1305, 1307, 1309, 1312, 1331, 1342, 1441, 1456, 1471, 1522, 1529, 1535, 1555 ஆக மொத்தம் 37 சுவடிகள்.

## பதினெண்கீழ்க் கணக்கு

(குறிப்பெழுத்து : ங)

1406, 1433, 1454, 1510, 1536, 1548 ஆக மொத்தம் 6 சுவடிகள்.

## பல்வகை நூல்கள்

(குறிப்பெழுத்து : ற)

1191, 1199, 1201, 1203, 1206, 1207, 1212, 1213, 1231, 1233-1236, 1239, 1241-1243, 1247, 1249-1251, 1255, 1257, 1259, 1261, 1262, 1264, 1266, 1272, 1274, 1278, 1281-1283, 1290, 1291, 1294, 1301, 1306, 1308, 1314, 1321, 1326, 1332, 1335, 1341, 1347, 1363, 1400, 1435, 1440, 1444, 1467, 1470, 1475, 1483, 1485, 1512, 1521, 1531, 1533, 1537, 1538 ஆக மொத்தம் 63 சுவடிகள்.

## பிற தோத்திரங்கள்

(குறிப்பெழுத்து : த)

1196, 1224, 1474 ஆக மொத்தம் 3 சுவடிகள்.

## மருத்துவம்

(குறிப்பெழுத்து : ல)

1253, 1263, 1317, 1344, 1345, 1350-1354, 1367, 1369, 1373, 1378, 1384-1391, 1395, 1399, 1409-1416, 1418, 1420, 1447, 1457, 1458. 1460-1462, 1465, 1532, 1552, 1553 ஆக மொத்தம் 44 சுவடிகள்.

## மாந்திரீகம்

(குறிப்பெழுத்து : ழ)

1217, 1333, 1358-1361, 1364, 1365, 1392, 1417, 1419, 1514, 1527 ஆக மொத்தம் 13 சுவடிகள்.

## தமிழ்ப் பல்கலைக் கழகம்
## தமிழ் ஓலைச் சுவடிகளின் பொருள்வாரி எண்ணிக்கை

| வ. எண் | பொருள் | சுவடி எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | முதல் தொகுதி | இரண்டாம் தொகுதி | மூன்றாம் தொகுதி | நான்காம் தொகுதி | மொத்தம் |
| 1 | இலக்கணம் | 20 | 11 | 2 | 12 | 45 |
| 2 | உரைநடை இலக்கியம் | 5 | 6 | 7 | 14 | 32 |
| 3 | காப்பியம் | 50 | 33 | 22 | 33 | 138 |
| 4 | சிற்றிலக்கியம் | 28 | 22 | 20 | 44 | 114 |
| 5 | சைவத்திருமுறை | 21 | 12 | 13 | 12 | 58 |
| 6 | சோதிடம் | 14 | 27 | 14 | 20 | 75 |
| 7 | தத்துவம் | 64 | 94 | 57 | 19 | 234 |
| 8 | தல புராணம் | 25 | 12 | 7 | 19 | 63 |
| 9 | திவ்வியப்பிரபந்தம் | — | 2 | 92 | 1 | 95 |
| 10 | நாட்டுப் பாடல் | 4 | 4 | 24 | 28 | 60 |
| 11 | நீதிநூல் | 4 | 4 | 27 | 37 | 72 |
| 12 | பதினெண்கீழ்க்கணக்கு | 6 | 7 | 8 | 6 | 27 |
| 13 | பல்வகை நூல்கள் | 16 | 28 | 36 | 63 | 143 |
| 14 | பாட்டும் தொகையும் | 1 | 1 | — | — | 2 |
| 15 | பிற தோத்திரங்கள் | 10 | 12 | 8 | 3 | 33 |
| 16 | மருத்துவம் | 59 | 132 | 62 | 44 | 297 |
| 17 | மாந்திரீகம் | 6 | 19 | 6 | 13 | 44 |
| 18 | மெய்கண்ட சாத்திரம் | 13 | 5 | 6 | — | 24 |
| | மொத்தம் | 346 | 431 | 411 | 368 | 1556 |

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 9 | 37 நீளம் | நீளம் 37 |
| 15 | 13 | 24 | 2.4 |
| 52 | 19 | குறிப்புக | குறிப்புகள் |
| 53 | 18 | இய | இயல் |
| 55 | 3 | 35 நீளம் | நீளம் 35 |
| 59 | 16 | பாதையு | பதையு |
| 66 | 21 | வந்தீர | வந்தீர் |
| 71 | 22 | யறைவில் | யுணர்வில் |
| 80 | 17 | மதுராயுரி | மதுராபுரி |
| 86 | 8 | வித்தையானி | வித்தையாளி |
| 98 | 22 | தாம். பூரசானம் | தாம்பூரசாசனம் |
| 104 | 3 | தண்டா | தண்ட |
| 113 | 1 | எதய்வர் | தெய்வர் |
| 124 | 20 | பேண் | பெண் |
| 126 | 27 | வைத்தார் | வைய்தார் |
| 145 | 27 | 1295 | 1298 |
| 171 | 25 | 1355 | 1315 |
| | 28 | ருகு | குரு |
| 187 | 21 | துரியோதனனடைங்குப் | துரியோதனனண்டைக்குப் |
| 215 | 32 | பிள்னை | பிள்ளை |
| 222 | 17 | யென் குறுணி | யெண் குறுணி |
| 237 | 26 | வழயாகும் | வழியாகும் |
| 239 | 3 | 1365-1 | 1366-1 |
| | 27 | குருவருளாச் | குருவருளால் |
| 246 | 3 | மிகக் | மிகச் |
| 250 | 6 | ராஷதாள் | ராக்ஷதாள் |
| 251 | 26 | விட்டிப் | விட்டுப் |
| 279 | 23 | குடிவாய் | கும்வாய் |
| 286 | 21 | அகத்தியனுக் | அகத்தியனுங் |
| | 28 | உளக்காச்சல் | உள்க்காச்சல் |

| | | | |
|---|---|---|---|
| 288 | 4 | விடாயாசித் | விடாயாகித் |
| 296 | 7 | துயத்திலென் | துய்த்திலென் |
| 297 | 11 | யுடன்றுந்தில் | யுடனருந்தில் |
| 308 | 13 | ரண்டு | ஆண்டு |
| 314 | 12 | கொல்லி | கெல்லி |
| 321 | 25 | 123 | 122 |
| 324 | 21 | சாம்புவரச் | சாம்புவான் |
| 332 | 16 | பரதன | பாதன |
| 341 | 12 | ஏவப் | ஏவற் |
| | 13 | கொளுங் | கோளுங் |
| 343 | 11 | விரண் | விரல் |
| 354 | 7 | சிர்ப்பார | சிறப்பால் |
| | 25 | கிறிய | சிறிய |
| 357 | 27 | கெத்திரவால | கேத்திரவால |
| 360 | 6 | தொட்டப் | தொட்டுப் |
| 361 | 23 | லிருப்பவரே | லிருப்பவரை |
| 362 | 23 | வளமாடல் | வளமடல் |
| 363 | 25 | மயல்செயத் | மயல் செய்ய |
| 367 | 14 | வாளச் சமத்தும்விலச்ச | வாட்சமத்தும்விற் |
| 368 | 11 | 1271 | 981 |
| 369 | 14 | தயாகரம் | கயாதரம் |
| | 32 | பெயருனாற்று | பெயருஞற்று |
| 370 | 5 | புள்ளிக்கிறை | புள்ளிற் கிறை |
| | 6 | வீட்டிற்புடனிருப்பு | வீட்டிறப்புடனிருப்புக் |
| 372 | 20 | தொழுவது | தெழுவது |
| | 22 | மார்க | அமரர்கள் |
| 377 | 18 | மோசற | ஓசர |
| 382 | 10 | யாகுஞ் | யாகுந் |
| | 14 | வந்ததொறுவனிமா | வந்ததொருவணிமா |
| 383 | 18 | வதம் | வாதம் |
| 390 | 16 | மதிரயிரவி | மதியிரவி |
| 395 | 26 | வதறுங்கள் | வந்துள்ளங் |
| 396 | 7 | வடக்குவாதி | வடக்கு வீதி |
| 397 | 6 | மஞ்சண | அஞ்சன |

| | | | |
|---|---|---|---|
| 398 | 4 | பூச்சரித்துள்ளது | பூச்சி அரித்துள்ளது |
| 399 | 29 | போருளே | பொருளே |
| | 30 | சூரியாரும் | சூரியரும் |
| 401 | 4 | மிரங்கேசர் | மிரங்கேசா |
| 412 | 16 | ரிடாயாய | ரிடர்மாய |
| 413 | 8 | முகத்தினாற் | முத்தினாற் |
| | 14 | மாதவான | மாதவனா |
| | 18 | எழிற்காதத்திற் | எழிற்கரத்திற் |
| | 22 | கவுஸ்துவர் பாண | கவுஸ்துவாபரண |
| 414 | 24 | தாளரனெனச் | தாளரணெனச் |
| 417 | 5 | அங்கன் | அங்கண் |
| | 8 | மிம்பா | மிம்பர் |
| 418 | 13 | வேலாவலிய | வேலாவலய |
| | 14 | மேவேவீ | மேவவே |
| 419 | 22 | யெவள் | யெவள |
| 425 | 3 | வரையினில் | வரையினில |
| 432 | 23 | பையில் | சபையில் |
| 452 | 17 | வெள்ளான | வெள்ளான் |
| 454 | 28 | வெருக்கொள் | வெருக்கொள |
| 460 | 28 | குருநக | குருனா |
| 465 | 16 | யெலகை | யெல்கை |
| | 17 | மெய்கை | மேகை |
| 470 | 8 | வுலகமேவ் | வுலகமெவ் |
| 472 | 26 | மேவளவு | மெவ்வளவு |
| 473 | 18 | 1518 | 1518-4 |
| 475 | 17 | பூடி | மூடி |
| | 19 | ணருகே | ளருகே |
| 476 | 16 | யலைமே | மலைமே |
| 477 | 17 | கடப்ப தாகும் | கடப்பந்தாரும் |
| | 22 | வேலையுளக் | வேலையுட் |
| 478 | 22 | வாதமெனது | வாரமென்று |
| 482 | 11 | ளிம்மூன்றும் | னிம்மூன்றும் |
| 496 | 6 | கரம்சூத் | கர்மசூத் |
| 06 | 12 | பாம் | பரம |

| | | | |
|---|---|---|---|
| 507 | 13 | ணிறைந்த | ணிறைந்த |
| 535 | 13 | ஆயிபாதம் | அய்யர்பாதம் |
| | 14 | அய்யர்பாதம் | ஆயிபாதம் |
| | 26 | சொண்டால் | கொண்டால் |
| 536 | 17 | பழுற்ற | பழுதுற்ற |
| 544 | 11 | 13 | 12 |
| 550 | 14 | யைந்திரி | யைங்கிரி |
| 551 | 29 | றுவற்று | றுவற்கு |
| 560 | 25 | மாலை | மாலே |
| 516 | 16 | சிவைுற்ற | சிதைவுற்ற |
| 568 | 27 | பரசருவு | பரசவரு |
| 572 | 15 | முந்தசுரா | முந்தசுரர் |
| 579 | 17 | சன்ன | சொன்ன |
| | 22 | 1555-56 | 1555-36 |
| 584 | 20 | பத்த | பதத் |
| 588 | 15 | பாகவே | யாகவே |
| 591 | 16 | யிட்டு | பிட்டு |
| 595 | 26 | மனோண்மணி | மனோன்மணி |
| 600 | 10 | சப்பிரமண் | சுப்பிரமண் |
| 606 | 21 | சூந்திரம் | சூத்திரம் |
| 614 | 23 | உரையும் | உரையுடன் |
| 616 | 1 | திரூமுறைகள் | திருமுறைகள் |
| 618 | 2 | தமிழ் ஓலைச் | தமிழ் ஓலைச் |